

# வல்லிக்கண்ணன் கடிதங்கள்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வல்லிக்கண்ணன் கடிதங்கள்

வேர்கள் இலக்கிய இயக்கம்

வட்டம்-8, நெய்வேலி-607 801.

வல்லிக்கண்ணன் கடிதங்கள்
வல்லிக்கண்ணன்©

முதற் பதிப்பு: அக்டோபர் 97

முகப்போவியம்: கே. கோவிந்தன்

விலை: ரூ. 50/-

ஒளி அச்சு: வானவில், நெய்வேலி-1.
அச்சு: சந்திரா ஆப்செட், குறிஞ்சிப்பாடி.

Vallikkannan Kadithangal
Collection of letters written by Vallikkannan
Published by: VERGAL LITERARY MOVEMENT,
F-15, T.M..S. Mani Road, Block-8, Neyveli-607 801.

# முன்னுரை

எண்பதுகளின் ஆரம்பத்தில் நெய்வேலியில் பணியில் அமர்ந்திருந்த நேரம். அதுவரை ஜனரஞ்சக எழுத்துக்களில் ஈர்க்கப்பட்டிருந்த எனக்கு புதிய நண்பர்கள் தொடர்பாலும் தீபம், கணையாழி ஆகிய பத்திரிகைகளின் அறிமுகத்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக தமிழின் நவீன இலக்கியத்தின்பால் ஈடுபாடு ஆரம்பித்தது. தீபம் இதழில் அப்போது தமிழில் சிறு பத்திரிகைகள் என்ற தொடரை வல்லிக்கண்ணன் அவர்கள் எழுதிவந்தார். அத்தகைய சிறுபத்திரிகைகள் குறித்தும், தமிழின் நவீன இலக்கியம் குறித்தும் மேலும் விபரமாக அறிந்து கொள்ள அவருடன் தொடர்பு கொண்டேன். அதன் பிறகு கிட்டதட்ட ஐந்து ஆண்டு காலம் வல்லிக்கண்ணன் அவர்களுடன் கடிதத் தொடர்பு வாரம் ஒன்று என்ற அளவில் நீடித்தது.

புதிய இலக்கிய வாசகனுக்கு இலக்கியம் பற்றி தெளிவான புரிதலை ஏற்படுத்தும், அக்கடிதங்களில் பெரும்பாலானவை பாதுகாப்பாக வைத்திருந்தும் கூட இடம் மாறியதில் கண்டுபிடிக்க முடியாமல் போய் இத் தொகுப்பில் சேர்க்க இயலாமல் ஆகிவிட்டது. தமிழகத்தில் இப்படி வல்லிக் கண்ணன் அவர்களால் உருவாக்கப்பட்ட இலக்கிய வாசகர்கள் எத்தனையோபேர் உள்ளனர். எல்லா சிறுபத்திரிகைகளுக்கும், எல்லா படைப்பாளிகளுக்கும் பாராட்டு கடிதம் எழுதுபவராக வல்லிக்கண்ணனை பழிக்கும் இன்றைய நவீன இலக்கியவாதிகள் யாருமே இந்த சேவையை புரிந்து கொள்வதில்லை. புதிய இதழாளர்கள், எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அவசியம் என்பதை கருதியே வல்லிக்கண்ணன் அத்தகைய கடிதங்களை எழுதுகிறார். அக்கடிதங்களினூடே குறைகளும் சொல்லப்படுவதுண்டு. இப்படியாக இலக்கிய உலகில் எனக்கு ஞானத் தந்தையான வல்லிக்கண்ணன் அவர்களின் கடிதங்களை தொகுத்து வெளியிட நண்பர் நாகரத்தினம் அவர்கள் முன்வந்த போது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். பல்வேறு நண்பர்களுடன் தொடர்பு கொண்டு கடிதம் எழுதி, நேரில் சந்தித்து பெறப்பட்ட கடிதங்கள் ஏராளம். கடிதங்கள் அனைத்தும் எண்பதுகளுக்கு பின் எழுதப்பட்டவையாகவே எங்களுக்குக் கிடைத்தன. தமிழகத்தின் நவீன இலக்கியத்தின் தோற்றம் முதல் ஒரு

சகாப்தமாகவே வாழ்ந்து வரும் வல்லிக்கண்ணனின் ஆரம்ப கால கடிதங்களில் இருந்து காலவாரியான தொகுப்பை கொண்டு வர பெரிதும் முயன்றோம். எவ்வளவு முயன்றும் அவரது ஆரம்பகால கடிதங்கள் கிடைக்கவில்லை. தனது அண்ணனுக்கும் அண்ணன் பிள்ளைகளுக்கும் வ.க எழுதிய கடிதங்கள் இத்தொகுப்புக்கு தனிச்சிறப்பை தரும் விதத்தில் அமைந்துள்ளன. நண்பர் நாகரத்தினம் சேகரித்திருந்த சில அரியகடிதங்களும் கிடைக்கவில்லை. இதன் காரணமாகவே கடிதத் தொகுப்பு வெளிவருவது பெரிதும் தாமதமாகியது. இனியும் காத்திருப்பதை விட இதுவரை கிடைத்த கடிதங்களில் இருந்து ஒரு தொகுப்பை கொண்டு வருவோம் என முடிவெடுத்து இத்தொகுப்பை கொண்டு வந்துள்ளோம். 'வல்லிக்கண்ணனின்' முழு பரிணாமத்தையும் காட்டக்கூடிய அவரது மற்றைய கடிதங்களையும் சேகரிப்பதை தொடர்ந்து செய்து வருகிறோம். அத்தகைய கடிதங்களைக் கொண்ட முழு தொகுதி அடுத்ததாக வெளிவரும்.

நெய்வேலி — மு. இராமலிங்கம்
23. 10. 97

# என் கடிதங்கள்

கதை எழுதுவது எனக்குப் பிடிக்கும். அதைவிட அதிகம் பிடிக்கும் கடிதங்கள் எழுதுவது.

கதை எழுதினால், அது அச்சாக பத்திரிகையைத் தேடவேண்டும். அப்படியே கதை அச்சில் வந்தாலும், அதை எத்தனை பேர் படித்து ரசிப்பார்கள் என்று சொல்வதற்கில்லை.

சில கதைகள் எவராலும் படிக்கப்படாமலே கூடப் போகலாம். ஆனால், கடிதம் விஷயம் அப்படி அல்ல. அதை பெறுகிறவர் அதை படித்தே தீர்வார். அவர் அதில் உள்ள விஷயங்களை ரசித்து மகிழ்கிறாரா, படித்து விட்டு வெறுப்போ கோபமோ அல்லது வேறு ஏதோ ஒரு உணர்ச்சி கொள்கிறாரா என்பது வேறு விஷயம். எழுதி அனுப்பப்படுகிற கடிதத்துக்கு நிச்சயமாக ஒரு வாசகர் உண்டு. எனவே நான் கடிதங்கள் எழுதுவதில் மிகு விருப்பமும் ஈடுபாடும் கொண்டேன்.

நான் அதிகம் பேசுகிறவன் அல்லன். ஆனாலும் கடிதங்களில் நான் அதிகம் பேசினேன். நான் கண்டது, கேட்டது, படித்தது, படிக்க விரும்பியது, எனது கனவுகள், ஆசைகள், பயணங்கள், எனக்குப் பிடித்தவர்கள் பிடிக்காதவர்கள், என்னைச் சுற்றிலும் நடந்தவை, நடந்ததாகப் பிறர் சொன்னவை - இப்படி சகல விஷயங்கள் பற்றியும் நான் என் கடிதங்களில் பேசுவது உண்டு. ஆகவே, எனது கடிதங்களை வரப் பெற்றவர்கள் அவற்றை மேலும் எதிர்பார்த்தார்கள்.

நான் என் அண்ணாவுக்கு எழுதினேன். அன்புச் சகோதரர் தி.க.சிவசங்கரனுக்கு நிறைய நிறைய எழுதினேன். நான் வெளி உலகத்தில் திரியத் தொடங்கிய 1943-ம் வருடம் முதலே இவர்களுக்கு எழுதினேன். பிறகு நண்பர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், என்னோடு தொடர்ப்பு கொண்டு பல்வேறு தகவல்கள் - விளக்கங்கள் பெற விரும்பியவர்கள் என்று எண்ணற்ற பேர்களுக்குக் கடிதங்கள் எழுதினேன்.

என் கடிதங்கள் தங்களுக்கு உற்சாகம் ஊட்டுகின்றன என்றார்கள். சந்தோஷமும் நம்பிக்கையும், ஆறுதலும் தருகின்றன என்றார்கள். இலக்கியம், புத்தகம், பத்திரிகைகள், எழுத்தாளர்கள், மனிதர்கள் பற்றி சுவையான விஷயங்களை தெரிந்து கொள்ள அவை உதவுகின்றன என்றார்கள்.

என் மீது அன்பு கொண்டு தங்கள் புத்தகங்களையும், சிறு பத்திரிகைகளையும் தொடர்ந்து பலரும் அனுப்பலானார்கள்.

புத்தகங்களை படித்து விட்டு என் அபிப்பிராயத்தை அவர்களுக்கு எழுதினேன். பத்திரிகைகளைப் பாராட்டியும் வாழ்த்தியும் எழுதினேன். அவை தங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாக அவற்றைப் பெற்றவர்கள் சொன்னார்கள்.

புத்தகம் - பத்திரிகை அனுப்பினால், வரப்பெற்றேன் என்று கடிதம் எழுதித் தெரிவிக்கக் கூட மனமில்லாத எழுத்தாளர்கள் பெருத்த இந்த நாட்டிலே, கிடைத்ததும் படித்து விட்டு கடிதம் எழுதுகிற எனது பண்புக்காக மகிழ்ச்சி அடைந்தவர்கள், கடித வாசகங்களை தங்கள் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் அச்சடித்து மகிழ்ந்தார்கள்.

இவன் எல்லோரையும், எல்லாவற்றையும், எப்பவும் பாராட்டிக் கொண்டிருக்கிறான் என்று எழுத்துலகத்தை சேர்ந்தவர்கள் பரிசசிக்கலானார்கள்; குறை கூறினார்கள். ஆனாலும், என் கடிதங்களை எதிர்பார்த்து எனக்கு வரும் பத்திரிகைகள் புத்தகங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன.

என் கடிதங்கள் தொகுக்கப்பட வேண்டும், புத்தகமாகப் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று என் நண்பர்கள் சிலர் அவ்வப்போது விருப்பம் தெரிவித்தார்கள். அது எளிதான காரியமல்ல என்று நான் சொல்லிவந்தேன்.

என்னிடம் மிகுந்த மதிப்பும் பிரியமும் கொண்டிருந்த அன்புச் சகோதரர் மு. நாகரத்தினம் எப்படியும் என் கடிதங்களை சேகரித்து ஒரு தொகுப்பாக வெளியிட்டே தீருவேன் என்று உறுதி பூண்டார். முயன்றார். காலவேகம் அவர் வாழ்க்கையில் ஏற்படுத்திய பாதிப்புகள், உள்ளத்தில் உண்டாக்கிய காயங்கள் காரணமாக எதிலுமே உற்சாகம் இல்லாதவராக அவர் மாறிப் போக நேர்ந்தது. இருப்பினும் அவர் அந்தப் பொறுப்பை என் இனிய நண்பர், 'வேர்கள்' மு. இராம லிங்கத்திடம் ஒப்படைத்து விட்டு, தான் ஒதுங்கிக் கொண்டார்.

இலக்கிய வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடும், என்னிடம் அதிகமான பிரியமும் நட்புணர்வும் கொண்ட இராமலிங்கம் பெரிதும் முயன்றும், சிறிதளவு கடிதங்களைத் தான் சேகரிக்க முடிந்திருக்கிறது. அவற்றில் புத்தக மதிப்புரைகள், பத்திரிகைப் பாராட்டுகள், இலக்கியப் பிரச்சினைகளுக்கு தெளிவு காண விரும்பிய அன்பர்களுக்கு எழுதப்பட்ட (கட்டுரைத்தன்மை பெற்றுவிட்ட) கடிதங்கள், சொந்த விவகாரங்கள் பற்றிய 'பெர்சனல்' கடிதங்கள், முதலியவற்றை தொகுப்பில் சேர்க்காது ஒதுக்கிவிட்டோம். அத்தகையவை கணிசமான அளவு வந்துள்ளன. அன்புடன் அவற்றை அனுப்பிவைத்த நண்பர்கள் அனைவருக்கும் என் இதயபூர்வ நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சிறு தொகுப்பில் உள்ளவை வல்லிக்கண்ணன் கடிதங்களின் சிறிய 'சாம்பிள்' தான். பல்வேறு ரசங்களையும் சுவைகளையும் குணாம்சங்களையும் கொண்ட எண்ணற்ற கடிதங்கள் - தி.க. சிவசங்கரன், 'முத்தமிழ் கலாவித்வ ரத்ன' அவ்வை டி.கே. சண்முகம், எழுத்தாளர் ஆதவன் (கே. எஸ். சுந்தரம்) வண்ணதாசன், மற்றும் சில நண்பர்களுக்கு, வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டவை - காலவெள்ளத்தோடு அடிபட்டுப் போனவை தான். 'இழப்பு' கணக்கில் எழுதப்பட வேண்டியவை அவை. இக்கடிதங்களை சேகரம் செய்ய வருடக்கணக்கில் தன் காலத்தையும் உழைப்பையும் ஈடுபடுத்தி முயன்று வெற்றி கண்டுள்ள என் இனிய நண்பர் மு. இராமலிங்கத்துக்கும், 'வேர்கள்' இயக்க நண்பர்களுக்கும் என் நன்றி உரியது.

வல்லிக்கண்ணன்.

## வல்லிக் கண்ணன் கடிதங்கள் பற்றி...

## மூ. நாகரத்தினம்

தாம்பரம்
6.8.1991

உயர் மதிப்பிற்குரிய அண்ணன் வல்லிக்கண்ணன் அவர்களுக்கு நாகரத்தினம் வணக்கம். வாழ்த்துக்கள்.

ஒரு நீண்ட இடைவேளைக்குப் பின் இந்தக் கடிதம் எழுதுகிறேன். இதற்கிடையே தாங்கள் எழுதிய பலகடிதங்களையும், தாங்கள் அனுப்பிய தங்களுக்கு வந்த தங்கள் இனிய நண்பர்கள் கடிதங்களையும் ஒன்றுவிடாமல் பெற்றுக்கொண்டேன். நிறைய்ய விஷயங்கள் ஏந்தி வருபவை தங்கள் கடிதங்கள். பல்வேறு இலக்கிய நூல்கள் பற்றிய தங்கள் கருத்துக்கள், படிக்க வேண்டிய அற்புதமான நூல்கள். நூலாசிரியர்கள் தம் நூற்களை பின்னியிருக்கும் அற்புத முறைகள்... இவைதவிர

நிறைய்ய மனிதர்கள் பற்றி, மனித குணம், மனிதநேயம், மாறும் மனித இதயம் பற்றிக் கூறுபவை தங்கள் கடிதங்கள்.

இப்படியெல்லாம் மனிதர்கள் இருக்கிறார்கள், இப்படிப்பட்ட நணாதியங்கள் அவர் தம்மில் காணப்படுகின்றன, இப்படிப்பட்ட அற்புத நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. இப்படிப்பட்ட துயரநிகழ்வுகள், கீழ்த்தர நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன என்றெல்லாம் கூறும்

எல்லாம் கூறி

படைப்பாளி பற்றி கூறிடுங்கால் அவன் படைப்புத் திறன்தான் கூறும் குறைகூறாது. மனிதனின் பல்வேறுபட்ட குணங்கள், அவர்தம் செயல்பற்றி பெருமை கொள்ளும், வருத்தம் கொள்ளும். அவன் சூழல் அப்படி என்று சமாதானம் கூறும். ஆனால் ஒருபோதும் குற்றம் காணது.

நேரில் கூட இப்படி பேசிக் கொள்ள முடியாது. கடிதம் அவ்வளவு கூறும். தங்கள் கடிதங்கள், எல்லாவற்றையும், இனிமையாகவும், கூர்ந்து அலசி, அன்பாகவும், மிகமிக ஆழ்ந்த மனித நேயத்துடனும், காணும்.

இவற்றிற்கு மேல் இயற்கை அழகுகளை எல்லாம் நேரில் காணுவதேபோல் கூறும். இயற்கையை ரசிக்கக் கற்றுக் கொடுக்கும். வாழ்வு இனிமையானது அதன் துயரப் போர்வைக்குள் என்ற புதிய ஆனால் உண்மையான சித்தாந்தம் கூறும்.

தங்கள் கடிதங்கள் யாவுமே பொக்கிஷங்கள். அறிவுரை கூறும் வழிமுறை கூறும். வாழ்வு இத்தகையது தான் கவலைப்படாதே என ஆறுதல் கூறும்.

எனது பாக்கியம்தான் தங்களை உறவாகப் பெற்றிருப்பது. தங்கள் ஒவ்வொரு கடிதத்தையும் படிக்க எடுக்கும் போது ஆர்வம், படிக்கும்போது இதம், படித்த பின்பு இப்படி இருக்க வேண்டும் என்று மனதுள் ஓர் தீர்மானத்தைத் தூண்டும் வண்ணமாகவே இருக்கும்.

தொடர்ந்து கடிதங்களை பொக்கிஷமாய் அனுப்பித்தரும் தங்களுக்கு திருப்பித் திருப்பி நன்றியைத்தான் கூறவேண்டும். எனக்கு மட்டுமின்றி பல நண்பர்களுக்கும் தாங்கள் எழுதும் கடிதங்கள் அவர்களை ஊக்குவிப்பதாய் உறமேற்றுவதாய், ஆறுதல் தருவதாய் வழிகாட்டுவதாய், இப்படி அவர்கள் தங்களுக்கு எழுதும் பதில்கள் மூலம் அறிந்து தங்கள் கடிதங்கள் பற்றிய எனது கருத்து சரிதான் என்றும் உணர்கிறேன்

இப்படி எல்லாருக்கும் கடிதம் எழுதி (அந்தக் கடிதம் அவர்களுக்கு பயனுள்ளவாயாகவே அமைத்து எழுதி) ஆனந்தப்படுத்தி தாங்களும் ஆனந்தப் படுபவர் தென் இந்தியாவில் தாங்கள் ஒருவர்தான் இருக்கக்கூடும் (வட இந்திய மற்றும் பிற பகுதியில் இப்படி கடிதங்கள் எழுதுபவர்கள் பற்றி எனக்கு ஏதும் ஞானம் இல்லை)

இது தங்கள் நிலையில் தாங்கள் புரியும் ஒரு தொண்டு என்று கூடக் கூறுவேன். கடிதம் பெறுவோர் பதில் போடாவிடினும் தொடர்ந்து அவர்களுக்கு கடிதம் போடும் இந்த விசேஷ குணம் யாருக்கு வரும்? நான் கடிதம் போட்டேன். அவன் பதிலே போடவில்லை. பிறகு இனி எதற்கு நான் கடிதம் போட வேண்டும்? என்றுதான் ஒரு சாதாரணன் நினைப்பான். ஒரு கர்ம யோகமாக இதைச் செய்கிறீர்கள். இது உங்கள் ஒருவரால் தான் கூடும்.

அண்ணன் வல்லிக்கண்ணன் பற்றி, அவர்தம் எளிய வாழ்வுபற்றி, இலக்கியத்திற்கு தம்மையே அற்பணித்துக் கொண்டது பற்றி யாவருக்கும் தெரியும். இப்படி தம் நண்பர்களுக்கு அவர் கடிதங்கள் எழுதி சேவை செய்வது பற்றி மிகச் சிலருக்கே தெரியும் இதுபற்றி நான் நிறைய்யவே எழுத விரும்புகிறேன்.

“வல்லிக்கண்ணன் கடிதங்கள் பற்றி அவருக்கே எழுதிய கடிதம்” இது இது முற்றானதல்ல. இன்னும் நிறைய்ய எழுதவேண்டியுள்ளது. அவற்றை பின்னால் தொடர்ந்து எழுதுவேன்.

சரி நான் எழுதுவதுபற்றி எனக்கே எழுதுவதில் என்ன பயன்? எனலாம். தாங்கள் தங்களையறியாது செய்துவரும் இந்தத் தொண்டினை முதற்கண் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளவே விரும்புகிறேன். பின்னர் எழுதுவேன். இதற்கிடையே தங்களுக்கு பதில் எழுதிக் கொண்டிருக்கும் நண்பர்களைப் பார்த்த விபரம் கேட்க்க விருப்பம்.

முன்றில் கருத்தரங்களில் தங்கள் கடிதங்கள் பற்றி திரு நசனும் திரு.ந.க.துறைவனும் என்னிடம் பேச்சிற்கிடையே குறிப்பிட்டனர்.

அமைதியாக, இப்படி தாங்கள் எழுதியிருக்கும் கடிதம் ஆயிரக்கணக்கில் இருக்கும். இதற்கு தபாற்செலவு என எவ்வளவோ செலவழித்து இருப்பீர்கள்! எண்ணிலடங்கா கருத்துப் பரிமாற்றங்கள், விமர்சனங்கள், நூலறிமுகங்கள், நண்பர்கள் அறிமுகங்கள். மனிதகுண நலன்கள். எண்ணிறந்த நிகழ்ச்சிப் பரிமாற்றங்கள், எல்லாவற்றிற்கும் மேலே நிறைய்ய உண்மைகளை அந்தக் கடிதங்கள் ஏந்திச் சென்றிருக்கும். எல்லோரும் தங்கள் கடிதத்தை பொக்கிஷமாகவே போற்றுவர்.

இன்று தங்கள் கடிதங்கள் (-தாங்கள் எனக்கு எழுதிய பல கடிதங்கள்-) தமை படிக்கும்போது. எனக்கு தங்கள் கடிதங்கள் என்னுள் ஏற்படுத்திய சிந்தனை, உணர்வு கிளரப்படுதல், மகிழ்ச்சி, இன்னபலவற்றிற்கும் மேல் ஏற்பட்டது வியப்பு!

பிரியங்களுடன்
நாகரத்னம்

# வல்லிக்கண்ணன் கடிதங்கள்

## தி. க. சிவசங்கரன்

சென்னை.
14-7-93

அன்புச் சகோதர,

வணக்கம், எனது நேற்றையக் கடிதம் கிடைத்திருக்கும்.

நீங்கள் சென்னையை விட்டுப் புறப்பட வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அநேகமாக இதுதான் நான் உங்களுக்கு ஆதம்பாக்கம் முகவரிக்கு இம்முறை எழுதுகிற கடைசிக் கடிதமாக இருக்கும்.

5 மாதங்கள் ஓடியிருக்கின்றன. 5 மாதங்கள் நீங்கள் சென்னையில் தங்கிய போதிலும், 4 மாதங்களில் சென்னையில் இல்லாதது மாதிரித் தான், உங்கள் வீட்டோடு தான் நாட்கள் போயிருக்கின்றன.

உங்களுடைய ஆயுசு பலத்தினாலும், நல்ல காலத்தாலும்,தேர்ந்த மருத்துவ சிகிச்சை-மருந்துகள்-உறவினரின் அன்பான கவனிப்புகள் ஆகியவற்றாலும், பரவலாக நெடுகிலும் உள்ள உங்கள் நண்பர்களின் உளப்பூர்வமான வேண்டுதல் பலத்தாலும்,உங்களுக்கு வந்த பெரும் விபத்து நீங்கி நீங்கள் இயல்புநிலை அடைந்திருக்கிறீர்கள். இது எல்லோருக்கும் சந்தோஷமான விஷயம்.

நீங்கள் நல்லபடியாக பயணம் செய்து, சுகமாக திருநெல்வேலி சேர்ந்து, சொந்த ஊர்- சொந்த வீடு-சொந்தக்காரர்கள் சூழலில் ஆரோக்கிய நிலையை மீண்டும் நன்கு பெற்று, இயல்பானஅலுவல்களில் உங்கள் இயல்புகளின்படி ஈடுபட்டு, சந்தோஷமாக வாழவேண்டும். காலம் அதற்குத் துணை புரியட்டும்.

மனித உடலும் இயந்திரம் தான். ஆனால் உயிருள்ள இயந்திரம். தன்னைத் தற்காத்துக்கொள்ளும் ஆற்றலும், பாதிப்புகளை - தேய்வுகளை தாங்கிக் கொண்டு, பழுதுகளை சீர்செய்து கொள்ளும் சக்தியும் பெற்றிருக்கிறது. இருப்பினும், பல்வேறு காரணங்களால் அது தன்னிலை இழந்து தட்டழிந்து போவதும் நடக்கிறது. ஏதேதோ நோய்கள் என்னென்னவோ காரணங்கள் ஒரு நிலைக்கு மேலே போனால், எந்த மருத்துவமும் எந்த மருந்தும் எதுவும் செய்ய இயலாமல் போகிறது.

'புதிய பார்வை'யில் ஆல்பர்ட் ஃபிராங்க்ளின் பற்றி அசோகமித்திரன் எழுதிய கட்டுரையைப் படித்திருப்பீர்கள். என்னவோ 'அபானியா'வாம். பேசமுடியாது. எழுதமுடியாது.

நினைவுத்திறன் குறைகிறது. ஆயினும் நடக்கலாம், சாப்பிடலாம், படுக்கையில் கிடந்து தூங்கலாம். ஒரு மனிதனுடைய வாழ்க்கை எப்படி ஆகிப்போய்விட்டது! மனித யந்திரம் எவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளது!

என்ன தான் எச்சரிக்கையாக இருந்தாலும், வருவதுவந்தே தீரும் என்கிற தத்துவம் இருக்கவே இருக்கிறது! அதுக்காக நாம் எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டியதில்லை என்றாகி விடாது.

எனக்கு சில நாட்களாக உற்சாகம் குறைந்துபோச்சு. உப்பே சப்பிட்டுப்போனால் அதை எப்பண்டம் கொண்டு சுவையேற்ற முடியும்? (When salt loseth its savour with which it can be salteth?- Bible) அதே போல பலருக்கும் உற்சாகமூட்டி வரும் சக்தியாக மதிக்கப்படுகிற நானே உற்சாகமிழந்து போனால், யார் எனக்கு உற்சாகம் தர இயலும்?

நானே தான் என் உள்ளத்தினுள்ளேயே எனக்குரிய உற்சாகத்தை ஆக்கியே தீரவேண்டும், அதற்காகத் தான் இது மாதிரி கடிதங்கள் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

அன்பு
வ. க.

சென்னை
4-9-93

பிரிய சகோதர,

வணக்கம், வழக்கமாகக் கடிதம் எழுதுகிறவர்கள் எழுதிக்கொண்டு தான் இருக்கிறார்கள். வருகிற பத்திரிகைகள் வந்து கொண்டே இருக்கின்றன. புத்தகங்களும் நிறையவே வருகின்றன. முன்னுரை கோருவோர் 'முன்பதிவு' செய்து கொண்டிருக்கிறார்கள்!

கைவசம் முன்னுரைக்காக இருப்பது 'கவிதையின் பரிமாணங்கள்'- நெல்லை சு. முத்து கட்டுரைகள்.

நானும் வழக்கம்போல் வாழ்கிறேன் - சும்மா, எதுவும் செய்யாமல், எதைப் பற்றியும் கவலைப்படாமல், படுத்துக்கிடப்பது போன்ற சுகம் வேறு எதுவுமே கிடையாது என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தபடி!

வானொலி, டி.வி எல்லாம் 'அதிர்ஷ்டசாலி'கள் வீட்டில் பணமழை பொழிய உதவும் சாதனங்கள். வ.க.வுக்கும் அவற்றுக்கும்

'தோட்டம் தூர'த்தான். அடிக்கடி சம்பந்தப்பட்டவர்களை போய் பார்க்கிறவர்கள் பயனடையக்கூடிய அதிர்ஷ்டசாலிகளில் சேர்வர்.

பத்திரிகைகள் கூட அத்தரத்தவை தான். பத்திரிகை அலுவலகங்களுக்குப் போய் ஆசிரியர்களைப் பார்த்துப் பேசி அவர்களின் Egoவை திருப்திப் படுத்த வேண்டும். புகழ் வெகுவாகக் கிடைக்கப்பெற்ற எழுத்தாளர்கள் கூட அப்படிச் செய்கிறார்கள். நேரில் பார்ப்பது போக, அடிக்கடி ஃபோனில் தொடர்புகொண்டு பேசவேண்டும். வ.க. எந்தக் காலத்திலும் அப்படிச் செய்ததில்லை. ஆகவே, வாய்ப்புகளும் வசதிகளும் அப்பாவி வனா.கனா.வை ஒதுக்கிவிட்டு, ஒதுங்கியபடி ஓடுவதிலும் வியப்பில்லைதான்.

எந்தத் தீபாவளி மலரும் என்னிடம் கதை, கட்டுரை கேட்கவில்லை. ரொம்ப நல்லதாய்ப் போச்சு. கதை எழுதணுமே, கட்டுரை எதைப் பற்றி எழுத என்று கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை என்பதால்.

அன்பு
வ. க.

சென்னை
16-6-94

பிரிய சகோதர,

வணக்கம். நீங்கள் ஏன் திருநெல்வேலியில் சும்மா 15 நாட்கள் இருந்தீர்கள் என்று மு. பரமசிவம் கேட்டார். ஏனோ இருந்தேன்! நண்பர்கள் சந்திப்பால் நானும் நண்பர்களும் சந்தோஷம் அடைய முடிந்தது. படிக்க வேண்டிய புத்தகங்களை படிக்க முடிந்தது. இதெல்லாம் நல்ல காரியங்கள் தானே!

யாரும் நிகழ்காலத்தில் மட்டும் வசிப்பதில்லை. நிகழில் நின்றபடி, நினைவுகள் வளர்த்து இறந்த காலத்திலும், கனவுகள் கற்பனைகள் வளர்த்து எதிர்காலத்திலும் வசிக்கிறார்கள் மனிதர்கள். நான் முக்காணி போன பஸ்சில் போகிற போதே கடந்த காலத்திலும் வாழ்ந்தேன்.

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து பெருங்குளம் போகும் ரோடு-ஓரத்துப் பெரிய பெரிய குளங்கள்-சிவகளை (சிவளை), பெருங்குளம் ஊர்கள்-பெருங்குளத்திலிருந்து ஆற்றுக்குப் போகும் மங்கலக் குறிச்சிப் பாதை-ஏரல்போகும் ரோடு-ஏரல்.... இவை எல்லாம் எனது ஆறாவது ஏழாவது வயது (1926-27) நினைவுகளை கொண்டு தந்தன.

பெருங்குளத்தில் மீண்டும் 1974 ஆகஸ்டில் ஒருநாள் சி.சு. செல்லப்பாவுடன் நின்றதும் நினைவில் வந்தது. அங்கு உள்ள 'செங்போல் மடம்' இப்போது வெளிச்சுவர்கள் நன்றாக இருக்க, உள்ளே மேல்தளம் இடிந்து பாழ்பட்டுக் கிடப்பதைக் காண முடிந்தது.

அன்பு
வ. க.

சென்னை
11-6-94

பிரிய சகோதர.

வணக்கம், மீண்டும் சென்னை வந்தாச்சு. மங்களகரமான வெள்ளியன்று! 9-ம் தேதி நயினார் ஸ்டேஷனுக்கு வந்தார். மாடர்ன்பிரெடும், சாந்தி ஸ்வீட் ஸ்டால் மிக்ஸ்சரும் வாங்கி வந்து அன்புடன் அளித்தார். 2-30க்கு விடைபெற்றுச் சென்றார். ரயில் 2-40க்கு புறப்பட்டது.

சுற்றிச் செல்கிற பயணப் பாதை பற்றி அலுத்துக் கொள்கிறவர்கள் அலுத்துக்கொண்டிருக்கட்டும். எனக்கு இதுவும் மனோகரமான உல்லாச உலாதான். தமிழ்த் திருநாட்டின் பன்முகத் தோற்றங்களைக் கண்டு மகிழவும்,பரிதாபப்படவும் இத்தகைய பயணங்கள் வாய்ப்பு அளிக்கின்றன. திருநெல்வேலியிலிருந்து மதுரை போகிற பாதையில் நெடுகக் காட்சி அளிக்கிற வறண்ட பிரதேசங்களுக்கு மாறாக, தென்காசி போகிற வழியெல்லாம் குளுகுளு இனிமைகளும் மலைத் தோற்றங்களும் நல்ல விருந்தாகின்றன. வறண்ட வெறும் நிலப்பரப்புகளும் உண்டு.

பிறகு சிவகாசிப் பாதையில் நெடிய மலைகள், கூடவே வருவது போலவும், ஒரு இடத்தில் மலைகள் நோக்கி ரயில் ஓடிக்கொண்டிருப்பது போலவும் தோற்றங்கள்.

தென்காசி ஸ்டேஷனில் வீணாக 45 நிமிடங்கள் நிற்பாட்டப்படுகிறது வண்டி. விருதுநகரில் 30 நிமிடங்கள். அப்புறம், அங்கங்கே 'கிராசிங்' என்று அடிக்கடி நிற்பாட்டல்கள். ஆக, எழும்பூருக்கு 8-30க்கு வரவேண்டிய வண்டி 9-15க்கு வந்து சேர்ந்தது. எப்ப வந்தால் என்ன! நலமாக வந்ததே என்ற சந்தோஷம். ஆட்டோவில் வீடு சேர்ந்தேன் 9-40க்கு.

20 நாட்களுக்குப் பிறகு வந்து சேர்ந்தாச்சு. உற்சாகத்துக்குக் குறைவில்லை.

அன்பு
வ. க.

## கே.பி. கணபதி

சென்னை
25-1-93

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு, வணக்கம்.

உங்கள் 20-ம் தேதிக் கடிதம் ரசமான தகவல்களைக் கொண்டுள்ளது. மறதி மனித இயல்பு. முதுமையில் அது அதிகரிப்பது இயற்கை நியதி. சிலர் நல்ல நினைவாற்றல் பெற்றிருக்கிறார்கள். அது நற்பேறு என்பதில் சந்தேகமில்லை. நீங்கள் குறிப்பிட்டுள்ளது போல, முக்கிய விஷயங்கள் மறந்துபோவதும், தேவையில்லாத சின்ன விஷயங்கள் மனசில் ஆழமாகப் பதிந்து கிடந்து, அடிக்கடி நினைவு வட்டத்தில் குமிழிகளாக மேலே எழுவதும் சகஜமாகத் தான் இருக்கிறது.

நினைவுகள் இனியவை. நிலாச்சோறு சாப்பிடுவது பற்றி நான் ஒரு கட்டுரையில் ('நினைவு தந்த நினைப்பு') எழுதினேன். (ஜனவரி 'அமுத சுரபி') ஒரு நண்பர் ரசித்து நினைவுகூர்கிறார்: மரவையில் (இப்போது இல்லாது போன பொருள்) பழையச் சோறு வைத்துப் பிசைந்து, சுண்டக்கறி தொட்டுச் சாப்பிட்டது, ஆச்சி உருட்டித் தந்தது, இப்ப நினைத்தாலும் நாவில் நீர் ஊறுகிறது என்று. நினைவுகளும் நினைப்புகளும் வாழ்க்கையை இனிமையாக்குபவை.

அன்பு
வ. க.

சென்னை
12-7-93

அன்புமிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம். இந்த நூற்றாண்டின் முப்பதுகள் நாற்பதுகளில் வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே. ஆர். ரங்கராஜு, வை. மு. கோதைநாயகி அம்மாள், செய்யூர் சாரநாயகி ஆகியோர் நாவல் உலகில் பெயர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். புத்தகம் படிப்பதில் ஆர்வம் உடையவர்கள் எல்லோரும் அந்நாட்களில் இவர்களது நாவல்களையும், மற்றும் எஸ்.எஸ். அருணகிரிநாதர், தனசிங் என்றொருவர் எழுதிய 'கருங்குயில் குன்றத்துக்கொலை'யையும் படித்தே இருப்பார்கள்.

எழுதத் துடித்த பலரும் கூட. க. நா. சு. இது பற்றி ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். 60களுக்குப் பிறகு வடுவூரார் எல்லாம் 'அவுட் ஆஃப் ஃபாஷன்' ஆகிப் போனார்கள்.

அவர்கள் ஆங்கில நாவல்களைத் தழுவித்தான் எழுதினார்கள். இருப்பினும் விறுவிறுப்பும், கதைச் சுவையும், அப்புறம் என என்று தூண்டுகிற ஒரு தன்மையும், ஒரு நாவலை எடுத்தால் முடிக்காமல் கீழே வைக்க முடியாத ஒரு தவிப்பை வாசகரிடம் ஏற்படுத்தின. முக்கியமாக வடுவூரார் நாவல்கள். அப்படி எழுதவும் ஒரு தனித்தன்மை வேண்டும் தான்.

அன்பு
வ. க.

சென்னை
13-7-93

அன்புமிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம். வடுவூர் வகையரா பற்றி நேற்று கொஞ்சம் எழுதினேன். இன்று மேலும் கொஞ்சம். நீங்கள் நினைவு கூர்வது போல, 'சட்டநாத பிள்ளைக்கும் பட்டை நாமம் சாத்தினார்' என்ற ரீதியில், கவர்ச்சிகரமான - மனசில் எளிதில் பதிந்துவிடுகிற - சொற்கோவைகள், வரிகள் வடுவூரார் கையாண்ட உத்திகளில் ஒன்று என்று சொல்லலாம்.

'கல்லுக் கிணற்றுக்கு ஏற்ற இரும்புத் தோண்டி' 'கடப்பாரையை ஜீரணிக்க சுக்குக் கஷாயமா?' 'சாக்கடைப் புழுவுக்கு போக்கிடம் ஏது?' இவை போன்ற பழமொழிகளை வடுவூரார் நாவல்களில் - அத்தியாயம் மற்றும் பக்கங்களின் தலைப்புகளாக - காணமுடியும்.

வாழ்க்கை நிலைமைகளை அவர் கிண்டல் பண்ணினார். 'காலம் ஓடியது. அடுத்த வீட்டு அலமேலு எண்ணிக்கோ என்று பத்து மாதத்துக்கு ஒரு குழந்தை பெறுவதும்' என்று ஆரம்பித்து தெரு, ஊர், தேச விவகாரங்களை அடுக்கி, 'இப்படி அடுக்கடுக்கான சம்வங்களோடு மாதங்கள் பல ஓடின' என்று எழுதுவார். வெறும் உயர்வு நவிற்சியும் பக்கங்களை வளர்ப்பதற்கான உத்தியும் தான். ஆனால் வாசகருக்கு கிளுகிளுப்பு ஊட்டும் சுவையான அளப்புகள் அவை.

அன்பு
வ. க.

சென்னை
14-7-93

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு, வணக்கம்.

வழுவூரார் பற்றிய மூன்றாவது கடிதம் இது. வடுவூர் துரைசாமி ஐயங்கார் பல துறைகளிலும் நிலவிய குறைபாடுகளை மறைமுகமாக நையாண்டி செய்தார் என்று சொல்லவேண்டும். சர்க்கார் ஆபீஸ்களில் - முக்கியமாக சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் முக்கிய தாள்களில் அடிக்கப்படுகிற முத்திரைகள் தெளிவாகவே இருந்ததில்லை. கறுப்பு மை பூசி, மொத்தையாய், ஏதோ ஒரு வட்டம் தென்படும். வடுவூராரின் திவான்பகதூர் லொடபடசிங் சர்க்காருக்குப் போட்டியாக ஆபீஸ் அமைத்து, திருட்டுத்தனமாகக் காரியங்கள், செய்து லாபம் பெறுகிறான். ஆபீஸ் ஜபர்தஸ்து எல்லாம் உண்டு. ஆபீசில் பத்திரங்களில் முத்திரை இடப்பட்டது. எப்படி? ஒரு கத்திரிக்காயை பாதியாக வெட்டி, அந்தப் பகுதியில் வண்டிமையைப் பூசி, தாள்களில் பதிக்கப்பட்டு வந்தது. அந்த முத்திரையை கடைசிவரை எவரும் சந்தேகித்ததில்லை.

வடுவூராரின் மூளை விசேஷமானது தான்.

அன்பு
வ. க.

சென்னை
31-7-93

அன்புமிக்க நண்பர் அவர்களுக்கு, வணக்கம்.

உங்கள் 26, 28 தேதிக் கடிதங்கள் மூலம் பல விஷயங்கள் தெரிந்து கொண்டேன். கொள்ளை அடிப்பது, சுரண்டிக் கொழுப்பது போன்ற வேலைகளில் திருநெல்வேலி மாவட்டம் போட்டி போட்டுக்கொண்டு முனைப்பாக இருப்பது அவ்வப்போது தெரிய வருகிறது. தமிழ்நாடே இத்திருப்பணிகளை திருப்திகரமாகச் செய்து புகழ்க்கொடி பறக்கவிடுகிறது. இந்தியா ரொம்ப ரொம்ப. ஆகவே இது யுகதர்மம் என்றாகியுள்ளது.

வடுவூரார் நாவல்கள் ‘கும்பகோணம் வக்கீல்’ ‘திகம்பரசாமியார் துப்பறியும் வேலைகள்’ படித்து ரசித்தது உண்டு. 1930களில் தான். ஆரணி குப்புசாமியின் ‘மோகனசுந்தரம்’ ‘கற்கோட்டை ரகசியம்’ இரண்டு தான் படித்திருக்கிறேன். க. ரகசியத்தில் ஜெனரல் உக்கிரசேனர் மறக்கமுடியாத பாத்திரம். ரங்கராஜுவின் ‘ராஜாம்பாள்’ ‘சந்திரகாந்தா’ படித்தது உண்டு. படமும் பார்த்தேன். பல பெண்களை நிறுத்தி ‘சுவாமிகாள், இந்த ரகங்களில் எந்த ரகம் தேவை?’ என்று கேட்பது, படத்தில் ஒரு கவர்ச்சி அம்சம். அந்நாட்களில் நெடுக அடிபட்ட விஷயம். ‘ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி’ என்று ஒன்று படித்தேன். அது நீங்கள் குறிப்பிடும் சிந்தாமணி இல்லை என்று தோன்றுகிறது.

அன்பு
வ. க.

சென்னை
12-7-94

அன்பு நண்பர் அவர்களுக்கு, வணக்கம்.

நான் ஜுன் 13ல் சென்னையில் இருந்து தான் உங்களுக்குக் கடிதம் எழுதினேன். புன்னைக் காயல் பயணம் பற்றி எழுதியது அதில் தான்.

கடலில் கதிரவன் காட்சி, முத்துக்குளிப்பு பற்றி எல்லாம் ரசமாக எழுதியிருக்கிறீர்கள். அந்த அனுபவம் எனக்குக் கிட்டாது தான். எத்தனையோ அனுபவங்கள் கிடைக்காமலே போய்விட்டன! இனி எங்கே கிடைக்கும்!

இந்தியாவின் முக்கிய இடங்களை எல்லாம் பார்த்துவிட வேண்டும்; தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அதெல்லாம் கனவுகளாகவே நின்று போயின. அதற்காக வருத்தப்படு வதற்குமில்லை.

இப்படி அனுபவங்களுக்காக - பார்க்க முடிந்த இடங்களுக்காக -அவற்றின் மூலம் பெற்ற சந்தோஷங்களுக்காக மனநிறைவு அடைகிறேன்.

அன்பு
வ. க.

## வண்ணதாசன்

சென்னை
20-1-83

அன்பு மிக்க கல்யாணி,

வணக்கம். உங்கள் 8-1-83 கடிதம் (கிடைத்த தேதி 11-1-83) அருமையானது. இனியது. சுவை மிகுந்தது. கலைநயம் உடையது. இலக்கியத் தரமானது. வாழ்க உங்கள் மனோபாவம்! வளர்க உங்கள் எழுத்தாற்றல்!

பொங்கல் வந்தது. விடுமுறை நாட்கள். ஊரிலே கல்யாணம். நீங்கள் போகலாம் - வரலாம் என்பதால், நான் கடிதம் எழுதுவதை தாமதப்படுத்தி வந்தேன்.

டிசம்பர் 26 முதல் ஜனவரி 6 முடிய எனக்கு மிக மனோகர நாட்கள். புதிய அனுபவங்கள். மாறுபட்ட வாழ்க்கை முறைகள். திக்குமுக்காட வேண்டிய அளவுக்கு அன்பு உபசரணைகள்.

நெய்வேலியில் ஒரு நண்பர் - ராமலிங்கம். (23 வயது). டிஎம்.ஈ., என்.எல்.சியில் என்ஜினீர் வேலை. நெய்வேலியை பார்க்கலாமே, வருக என்றார். போனேன். திருமலையும் உடன் வந்தார். பஸ் பயணம். சென்னையிலிருந்து 5 மணிநேரப் பிரயாணம்.

1955க்கு முன்னே முந்திரிக்காடாகவும் சிறுசிறு கிராமங்களாகவும் இருந்த பிரதேசம் அழித்துத் திருத்தி மாற்றப்பட்டு, சுரங்கப்பகுதியாகவும் புறநகரமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. அமைதி, அழகு, இனிமை, புதுமை நிறைந்த குட்டிநகரம் - 'டவுன்ஷிப்' - நெய்வேலி. கண்ணுக்கு இனிமை தருவது. மனசுக்கு இதம் தருவது. நெருக்கடி இல்லை. பரபரப்பு இல்லை. டவுண் பஸ் உண்டு. ரொம்ப நேரத்துக்கு ஒரு தடவைதான் ஓடும். தூரங்கள் அதிகம். எனவே, சைக்கிள்கள் சகஜமாக உபயோகிக்கப்படுகின்றன - சிறுமியர், பெண்கள், ஒல்லியர், தடிச்சிகள் - சகல ரகத்தினராலும்.

கேரளா மாதிரி, வீட்டுக்கு வீடு தோட்டங்கள், முருங்கை, பலா, வாழை, எலுமிச்சை, நெல்லி, மற்றும் பூச்செடி வகைகள். வளமான மண். ஆகவே, காய்ப்பு அதிகம். பூப்பும் மிகுதி. நிலம் சுற்றி வளைக்கப்பட்ட காலத்தில் ஏராள இடம் இருந்தது. ஒவ்வொரு வீட்டுக்கும் (மாடி கிடையாது) நிறையத் தோட்ட இடம் இருந்தது. குடி இருப்பவர் (மிகக் குறைந்த வாடகை) இஷ்டம் போல் மரங்கள், செடிகள், காய்கறிப் பயிர்கள் நட்டு அனுபவிக்கலாம்... வளர்த்தார்கள். இருக்கிறவரை அனுபவிக்கலாம். அனுபவித்தார்கள். அனுபவிக்கிறார்கள். காலி பண்ணிப் போகிற போது, அப்படியே விட்டுவிட்டுப் போகவேண்டும் என்பது விதி. மண் மத்திய அரசுக்கச் சொந்தம்.

அப்படி விட்டுப் போக மனம் வருவதில்லைசிலருக்கு. மரங்களை வெட்டி விற்பதும், முறித்துப் போடுவதும் அவர்களுக்கு உவப்பான காரியங்களாயின.

மின்சாரம் தாராளம். கட்டுப்பாடு, தட்டுப்பாடு கிடையாது.

தண்ணீர் குமிழியிட்டுக் கும்மாளி போடுகிறது. ஓடுகிறது. புரள்கிறது. வீணாகப் போகிறது.

'தண்ணீரை வீணாக்காதீர்கள். ஒவ்வொரு துளித் தண்ணீரும் மதிப்பு வாய்ந்தது' என்று தமிழ் நாட்டில் ரேடியோ அலறிக் கொண்டிருக்கிறது. நெய்வேலியில் வாஷ்பேசின் குழாயில், பாத்ரூமில், லேவட்டரியில் தண்ணீர் எப்பவும் ஓடி வீணாகிக் கொண்டிருக்கிறது - குழாய்களில் சரியான மூடிகள்-திறுக்குகள் இல்லாததால்.

சுரங்கத்தில் தண்ணீர் சுரந்து கொண்டேயிருக்கிறது. நீரை இறைந்து வெளியேற்ற மோட்டார்கள் ஓடிக்கொண்டேயிருக்கின்றன. பள்ளத்தை நோக்கி நீர்பாயும் - இயற்கை விதி. மோட்டார்பவர் இயக்கம் காரணமாக வெகு ஆழப் பள்ளத்திலிருந்து தண்ணீர் மிக உயரஉயரத்துக்கு குழாய்கள் மூலம் மேலேறி வந்து தரையில் ஆறாக ஓடுவது சாத்தியமாகியிருக்கிறது.

மனித உழைப்பு, அறிவின் வலிமை, விஞ்ஞான சக்திகள், இயந்திர இயக்கங்கள், அபாரசாதனை - இவற்றின் கூட்டு வேலைப்பாடு தான் நெய்வேலிச் சுரங்கம்.

அன்பு
வ. க.

சென்னை
21-1-83

அன்புமிக்க கல்யாணி, வணக்கம்.

எனது நேற்றையக் கடிதம் கிடைத்திருக்கும்.

நெய்வேலி இப்போது இளமையாக இருக்கிறது. வளர்ந்து கொண்டே இருக்கிறது. விஸ்தரித்து வருகிறது.

அதன் விஸ்தரிப்புக்கு ஈடுகொடுப்பதற்காக, புறநகர்ப்பகுதிகள் போல், நெருக்கமான சதுரக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. இரண்டு அடுக்கு 'ஃபிளாட்' முறைக் கட்டிடங்கள் தோன்றுகின்றன. இனி மூன்றடுக்கு, பலமாடிக் கட்டிங்கள் வளரக்கூடும்.

இன்னும் பத்து வருடங்களுக்குப் பிறகு போய் பார்த்தால், குட்டி நகரமான நெய்வேலி ஒரு பக்கா நகரமாக - அதன் சகல வசதிகளோடும் குறைபாடுகளோடும் - மாறியிருப்பதைக் காண நேரிடும்.

புதுநகரமான நெய்வேலியில் தெருக்களுக்கு பழமைத்தனமாகவும் பாடாவதித் தனமாகவும் பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏதாவது பெயர் வேண்டும்; வை சும்மா எதையாவது! - திருச்சி ரோடு, ராமநாதபுரம் ரஸ்தா, கோதாவரி சாலை, கங்கா சாலை, காவேரி சாலை... இப்படி பொருத்தம் இல்லாத விசித்திரப் பெயர்கள். இதைவிட அமெரிக்கர்கள் செய்தது போல, 1வது தெரு, 2வது தெரு, 10வது தெரு என்ற தன்மையில் வரிசைப்படுத்தி எண்களை தெருக்களின் பெயராக வைத்திருக்கலாம். வசதியாக இருந்திருக்கும்.

இந்தத் தெருக்கள் அமைதியானவை. அழகிய ஓரங்களைக் கொண்டவை. இவற்றில் நடந்து போய்வருவது இனிமையான விஷயம்.

'மெயின் பஜார்' என்று ஒன்று இருக்கிறது. ஒரே பஜார் தான். வேறு எங்கும் கடைகளும் இல்லை. அப்புறம் என்னத்துக்காக 'மெயின்' சேர்க்கணுமோ, தெரியவில்லை. சத்திரவளைவு மாதிரி வளைந்த அமைப்பில் கட்டிடங்கள். சுமார் 20 கடைகள். சகல வகையானவையும். ஜவுளிக் கடைகள் அதிகம். ஒரே ஒரு 'புக் ஷாப்' ஒரு 'காஃபி ஹவுஸ்' - இந்தியா காஃபி ஹவுஸ்.

இங்கே நல்ல காப்பி, ருசியான கார வகைகள், அருமையான 'ஸ்வீட்' தினுசுகள் கிடைக்கின்றன. 'இந்தியா காஃபி ஹவுஸ்' என்பதனால், அதுக்குரிய பெரியதனத் தோற்றம். பெரிய தோரணைவாலாக்கள், 'வாலி'களும்கூட வருகை போகை எல்லாம் உண்டு.

புதுமைப்பித்தன் ஒரு மொழிபெயர்ப்புக் கதையில் 'சூரியன் குஞ்சு போன்ற டோனா ஸெல்' என்று எழுதியிருக்கிறார். உலகத்தில் 'சூரியன் குஞ்சு'களுக்குப் பஞ்சமில்லை. சந்திரன் குஞ்சுகளுக்குக் கூட. 'நீலக்குயில்' என்ற மலையாளப் படத்தில் 'கோமளத்திங்களின் கிடாவே' என்று ஒரு பெண் விளிக்கப்படுகிறதாக ஜெயகாந்தன் சொல்லிக் கொண்டிருந்தார். 'கிடா' என்பதற்கு பதில் 'கோமளத் திங்கள் குட்டி' என்று இருந்திருக்கலாம்! கோ.தி. குட்டிகளுக்கும் குறைவில்லை இந்த நாட்டிலே.

காஃபி ஹவுசில் சூரியன்குஞ்சு போன்ற மடோன்னா ஒருத்தி காட்சி அளித்தாள். அவளே கோமளத்திங்கள் ஆகவும் இருந்தாள். அவளுக்கு ஏற்ற "Made to each other" ஜோடியும் வந்திருந்தான். நல்ல

காட்சி இனிமை.

சூரிய அஸ்தமனம் நகரின் மேலும், நகரத் தெருக்களிலும் பரப்பிய காட்சிகள் மோகனமானவை.

அன்பு
வ. க.

மதுரை
20-3-93

அன்புமிக்க கல்யாண்ஜி,

வணக்கம். மீண்டும் கல்யாண முருங்கை பூக்க ஆரம்பித்து ஒரு மாதத்துக்கு மேலாகிறது. வழக்கம்போல் பிப்ரவரியில் செக்கச் சிவந்த முருக்க மலர்கள் காட்சி தந்தன. சில நாட்களுக்கு முன்பு சென்னையின் மிகப் பரபரப்பான பெரிய ரோடின் ஓரத்திலே ஓங்கி வளர்ந்து நின்ற முள்ளு முரங்கை மரங்கள் மலர்க்கொத்துகளை சூடி நிற்பதையும், ரோடில் மலரிதழ்களை தெளித்திருந்ததையும், காணநேர்கையில் சந்தோஷமும் வியப்பும் ஏற்பட்டது. இந்த இடத்திலே இந்த மரங்களும் பூக்களுமா என்று.

வெயில் கடுமைதான்.

கடிதம் எழுதவேண்டும் என்ற நினைப்புக்குக் குறைவில்லை. கடிதம் எழுதுவதில, தான் ரொம்ப தாமதம்.

நீங்கள் தந்த 'கனிவு' தொகுதியை மெது மெதுவாகப் படிக்கிறேன். போன வாரம் ஆத்மன் கொண்டு தந்த 'மனுஷா மனுஷா' கதைத் தொகுப்பை படித்தேன்.

வாழ்க்கையின், சுற்றுப்புறங்களின், சின்னச்சின்ன இனிமைகளை, சந்தோஷங்களை எல்லாம் கண்டு கண்டு ரசித்து இன்புற வேண்டும் என்று எப்பவுமே நான் சொல்லி வந்திருக்கிறேன். ஆனாலும் மிக நுட்பமான, மனோகரமான, சந்தோஷ இனிமைகளை நான் கண்டு வியந்து ரசித்து மகிழ்ந்ததாகச் சொல்வதற்கில்லை உங்கள் பார்வையும் மனமும் மிகமிக நுண்மையான, சிறுசிறு அதிசய இனிய சந்தோஷ-சாதாரண-விஷயங்களை பதிவு செய்துள்ளன. இவற்றை உங்கள் எழுத்துக்களில் படிக்கிற போது வியப்பும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன.

நான் தினசரி ஒரு புதுப்புத்தகம் படிக்கிறேன். அப்படியும் படிக்க வேண்டிய புத்தகங்கள் இன்னும் அதிகம் சேர்ந்துள்ளன. அந்த வேகத்துக்கு புத்தகங்கள் வருகின்றன. எனக்கு வந்து சேர்பவையே இவ்வளவு! புத்தகச் சந்தைக்கு வந்து கொண்டிருப்பவை எவ்வளவெவ்வளவோ!

நண்பர்களின் கதைத் தொகுப்புக்கள் தொடர்ந்து வருகின்றன. சுப்ரபாரதிமணியன் கதைகள் 'நவீனம்' (அன்னம்) வந்தது. இப்ப 'நாதம்' (திருப்பத்தூர் பதிப்பகம் ஒன்று) வந்துள்ளது. பாவண்ணன் புதிய கதைத் தொகுதி 'நேற்று வாழ்ந்தவர்கள்' (காவ்யா), சங்கரநாராயணன் கதைகள் 'சராசரி இந்தியன்' (அட்சரா), செ. யோகநாதன் 'ஒரு சொல்'-இப்படிப் பலபல.

யோகநாதன் வேகமாகவே எழுதுகிறார். தொடர்ந்து புதிய வெளியீடுகள் வந்தவாறு இருக்கின்றன. நாவல் 'தனியாக ஒருத்தி'; குறுநாவல் தொகுப்பு 'காற்றின் சுழிப்பு'; இன்னொரு நாவல் 'வனமலர்' ('கிட்டி' என்ற நாவலுக்கு இரண்டாம் பாகம் மாதிரி) வந்துள்ளன.

தமிழ் வாசகர்கள் இவற்றை எல்லாம் படித்துப் பார்க்கிறார்களா? சந்தேகமாகத்தான் இருக்கிறது.

அன்பு
வ. க.

சென்னை
1-4-93

அன்புமிக்க கல்யாண்ஜி,

வணக்கம். உங்கள் 23-3-93 கடிதம், உங்களது எல்லா எழுத்துக்களையும்போல, இனிமையாக இருந்தது. சந்தோஷம்.

ஒரு விஷயம் தெளிவு படுத்தவேண்டும். லாயிட்ஸ் ரோடில் எங்கள் பகுதியில் லாரிலாரியாக வந்து, பாதை ஓரம் நெடுகிலும் 'மலைமலையாக' குவிக்கப்பட்டிருப்பது கிருணிப்பழம் இல்லை. 'தர்பூஸ்' என்று சொல்லப்படுகிற தர்பூசணி - 'வாட்டர் மெலன்'. பச்சை-வெளிர் மஞ்சள் பட்டைகளோடு-வெளிப்புறமும், வெட்டினால் பளீரென்று 'பிங்க்' நிறத்தில் குளுமையாய் சிரிக்கும் சதைப்பகுதியும், பெரிய கறுப்பு விதைகளும், 'தடியங்காய்' (சாம்பல் பூசணி) தன்மையிவ் வெள்ளைப் பகுதியும் கொண்ட காய். நீர்ச்சத்து

அதிகம். இனிப்பாக இருக்கும். கோடை காலத்தில் பெரும்பாலோரால் விரும்பி உண்ணப்படுகிறது.

கிருணிப்பழம்-அளவில் சிறியது. உருண்டை வடிவம் தான். அசட்டு மஞ்சள் நிறத் தோல். சிலவற்றில் 'வங்கு வத்தின மாதிரி' வெண்மை படிந்திருக்கும். இது வெள்ளரிப் பழத்துக்குத் தம்பி-நிறம், குணம், ருசி, விதைகளின் அமைப்பு அனைத்திலும். இதை தனியாகத் தின்னும்போது சுவையாக இராது. சீனி கலந்து சாப்பிட்டால் நன்றாக இருக்கும். தோல் சீவிவிட்டு, துண்டுதுண்டாக நறுக்கி, ஒரு பாத்திரத்தில் போட்டு, தாராளமாக சீனி கலந்து, மூடி வைத்து, இரண்டு மணி நேரம் கழித்து எடுத்துப் பார்த்தால் சாறு நிறைய சேர்ந்திருக்கும். சாறுடன் சதையை சேர்த்துத் தின்ன ரொம்ப ஜோராக இருக்கும்.

கோடை காலத்தில் சென்னையில் மிக அதிகமாக தர்பூசணி, இளநி, ஐஸ்க்ரீம், கிருணிப்பழம் விற்பனையாகின்றன. லாயிட்ஸ் ரோடுப் பகுதியில் மட்டுமே மலைக்க-வியக்க வைக்கிற அளவுக்கு தர்பூசணி வந்து குவிந்து, விலைபோகிறது. மயிலாப்பூர், மாம்பலம் பகுதிகளிலும் நிறையக் காணப்படும். மொத்த சென்னை மாநகரத்திலும் எவ்வளவு வந்து குவிந்து விலைபோகும்! ஒவ்வொரு வருடமும் என் மனசின் ஆச்சர்யம் இது. இவ்வளவும் எங்கே உற்பத்தியாகும் என்ற திகைப்பும் கூட.

லாயிட்ஸ் ரோடு வட்டாரத்தில் கான்ட்ராக்ட் முறையில் வரவழைத்து, ரோடு ஓரங்களில் ஸ்டாக் செய்து, விற்பவர்கள் பலப்பலர் இருக்கிறார்கள். தர்பூசணியை அடுத்து கிருணிப்பழம் வரும். பிறகு மாம்பழங்கள் குவியல்குவியலாகக் காணப்படும். மூன்று மூன்றரை மாத காலம் லாயிட்ஸ் ரோடுப் பகுதி பழக்கடை 'அட்மாஸ்பியரோடு' விளங்கும்.

அழுகிப் போகிறவை (தர்பூசணி, கிருணி, மாம்பழம்) அப்படி அப்படியே ரோடில் வீசி எறியப்பட்டிருக்கும். அவற்றை தின்ன தடிதடி மாடுகள் வரும். அவற்றை தடிகொண்டு விரட்டுவர் தடியர். மிரண்டு திரும்பும் மாடுகள் ரோடு வழி நடக்கும் அப்பாவி நடையர்களை மோத-முட்ட வருவது போல் ஓடும். ஆகவே, ரோடில் நடப்போருக்கு எந்த நேரம் என்ன விபத்து நேரும் என்று சொல்ல முடியாது.

அன்பு
வ. க.

சென்னை
14-6-93

அன்புமிக்க கல்யாண்ஜி,

வணக்கம்.

ராஜவல்லிபுரத்திலிருந்து 2-ம் தேதி புறப்பட்டு, திருவள்ளுவர் பஸ்சில் பயணம் செய்து, 3-ம் தேதி காலையில் சென்னை சேர்ந்தேன்.

இரவு எந்த ஊர், என்ன நகரம் என்று எதுவுமே தெரியவில்லை. சில பஸ் நிலையங்களில் - முக்கியமாக திருச்சி - பஸ் புகுகிற போது, எங்கும் நிறுத்தப்பட்டுள்ள சென்னை போகிற பஸ்கள் எண்ணிக்கை அதிகம் இருந்தது. விழுப்புரம் கடந்ததும், ரோடில் ஒருபுறமாக வரிசையாக லாரிகள் - போக்குவரத்துக்கு இடைஞ்சலாக - ஒரு மைல் நீளத்துக்கு லாரிகளும் இதர வாகனங்களுமாக.

தினசரி ஏகப்பட்ட பெட்ரோல் தேவைப்படும். இந்தியா பூராவுக்கும் எவ்வளவு எவ்வளவு பெட்ரோல் தினசரி காலியாகிறது! உலக நாடுகள் நெடுக... யேங்கப்பங்கப்பா! அரபு நாடுகள் இவ்வளவு பெட்ரோலையும் உற்பத்தி செய்து, சப்ளை பண்ணிக் கொண்டுதானே இருக்கின்றன!

ஒவ்வொரு நாளும் ரோடில் ஓடுகிற இருசக்கர-நான்கு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது (பெட்ரோலின் தேவையும் அதிகரிக்கிறது). நடப்பவர்கள் பாடு திண்டாட்டமாகிறது.

இப்ப நீங்கள் லாயிட்ஸ் ரோடில் எங்கள் பகுதியில் நடந்தால், மாம்பழக் குவியல்களை மிக நிறைய ரொம்ப அதிகம் காணமுடியும். பலரக-பலசைஸ் பல நிறப் பழங்கள். ஏயம்மா, எவ்வளவு பழங்கள் நகரத்துக்கு சப்ளை ஆகி, நெடுக விநியோகிக்கப்பட்டு, பப்பல பலராலும் தின்று தீர்க்கப்படுகின்றன! 'அலைஸ் (அல்லது ஆலிஸ்) இன் ஒண்டர்லேண்ட்' டைப் மனம் பெற்றவர்களுக்கு விஷயங்கள் மிக நிறைய உள்ளன. இந்த ஆதம்பாக்கம்-அயக்ரீவ நகர்தான் - எப்படி மாறுதல்கள் பெற்றிருக்கிறது! சென்னையின் ஒவ்வொரு பகுதியும் தான்.

நான் சென்னை சேர்ந்த ஐம்பதாவது வருடம் இது.

ராஜவல்லிபுரத்தில் நான் விசேஷமாக எதுவும் செய்யவில்லை. இரண்டு நாட்களுக்கு ஒருமுறை திருநெல்வேலி போய் திரும்புவது. ஏதேதோ படிப்பது, கடிதங்கள் எழுதுவது

இவைதான் நான் செய்த வேலைகள்.

அன்பு
வ. க.

## சு. சமுத்திரம்

சென்னை.
12-10-79

அருமை நண்பருக்கு,

வணக்கம்,

உங்கள் 'சோற்றுப் பட்டாளம்' குறுநாவலையும், 'ஒரு கோட்டுக்கு வெளியே' நாவலையும் படித்து ரசித்தேன்.

குடும்ப நாவல் என்றும், சமூக நாவல் என்றும் பலரும் என்ன என்னத்தையோ எழுதிக்கொண்டிருக்கிற காலத்தில், நீங்கள் உண்மையான சமூக எதார்த்தச் சித்திரங்களை உருவாக்கி வருகிறீர்கள். இதற்காக உங்களை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

சமூக எதார்த்தப் படைப்புகள் என்று அநேகர் லட்சிய-கொள்கை-அரசியல் தத்துவ வெறியோடு, வாழ்க்கையோடு ஒட்டாத, இயல்புக்கு மீறிய நிகழ்ச்சிகளை அடுக்கிக் கதை பண்ணிக் கொண்டிருக்கிற நாட்களில், நீங்கள் வாழ்க்கையில் சகஜமாக நடக்கிற விஷயங்களையும், மனிதர்களின் இயல்பான தன்மைகளையும் போக்குகளையும், உயிருள்ள நடையில் நாவல்களாக உருவாக்கியிருக்கிறீர்கள். இது மகிழ்ச்சி தருகிறது.

'சோற்றுப் பட்டாளம்' கச்சிதமாக அமைந்துள்ளது. தன்னலத்தோடும், ஏதாவது உள்நோக்கங்களை கருத்தில்கொண்டும், செயல்புரிந்து வயிறு வளர்த்து சந்தோஷப்படுகிற சராசரி மனிதர்களின் இயல்புகளை நன்கு சித்திரித்திருக்கிறீர்கள். சுந்தரியின் உணர்ச்சிகளும் உளப் போராட்டங்களும் கதை நெடுகிலும் நன்றாகப் படம் பிடிக்கப்பட்டுள்ளன. அழுது குமையும் அபலை போலிருந்த சுந்தரி, முடிவில் தனக்குத் தானே துணை என்று தைரியம் கொண்டு, துணிந்து தலைநிமிர்ந்து, சாப்பாட்டு மாடன்களை எதிர்த்து விலக்கிவிட்டு வெற்றிகரமாக விலகிப் போவதும், உதவக் கூடியவர்களிடம் சேர்ந்து கொள்வதும் அருமையான முடிவு. 'சோற்றுப்பட்டாளம்' ரசிகனுக்கு மனநிறைவு தருகின்ற தரமான படைப்பு.

'ஒரு கோட்டுக்கு வெளியே' நல்ல நாவல். கிராம சமுதாயத்தில் நிலவுகிற சின்னத்தனங்களையும், மனித உருவில் நடமாடுகிற சுயநலமிகளின் - கோழைகளின் - சுயமைத்தனங்களையும், பணமும் செல்வாக்கும் பெற்ற ஒரு சிலரின் அடாவடித்தனங்களையும் அழகாக எழுதியிருக்கிறீர்கள். அவற்றை எதிர்த்துப் போராடத் துணிந்த

உலகம்மை நல்ல கேரக்டர். அவளுடைய வளர்ச்சி திறமையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. முடிவில் அவள் மனிதாபிமானம் நிறைந்த சேரிமக்களுடன் சேர்ந்து கொள்வது இயல்பாக - யதார்த்தத் தன்மையோடு - எழுதப்பட்டுள்ளது.

குறை என்று சொல்லவேண்டுமானால், உலகம்மை, கணக்குப் பிள்ளை வீட்டின் முன் நின்று பேசுவது 'ஓவர்' ஆகப்படுகிறது. அவள் திமிர் பிடித்த பொம்பிளை என்று எண்ணத் தூண்டுகிறது. ரொம்பவும் இடைஞ்சல்படுத்தப்பட்ட - தொல்லைகளுக்கு ஆட்பட்ட - ஒரு நபரின் ஆத்திரம் இப்படிப் பேசத் தூண்டியது என்று சமாதானம் கூறிக் கொள்ளலாம். வட்டார வழக்குகளை - பேச்சுத் தமிழை, 'சொலவடை'களையும் பழமொழிகளையும், விசேஷமான பிரயோகங்களையும் - திறமையாகக் கையாண்டிருக்கிறீர்கள். உள்ளார்ந்த ஒரு கிண்டல் ('நக்கல்' கேலி) உங்கள் எழுத்துக்களில் தொனிக்கிறது. இது சுவை சேர்க்கிறது.

எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
8-11-79

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

அக்.31ம் தேதி இங்கு வந்து சேர்ந்தேன். நலமாக இருக்கிறேன். நீங்களும் நலம் தானே?

இப்போது சில தினங்களாக இங்கு நல்ல மழை. இன்று தான் விட்டிருக்கிறது. தாமிரவர்ணியில் பெரும் வெள்ளம் ஓடுகிறது.

உங்கள் 'ஊருக்குள் ஒரு புரட்சி' தொடர்கதை - 12 பகுதிகள் - படித்துவிட்டேன். சந்தோஷம்.

நன்றாக எழுதியிருக்கிறீர்கள். எடுத்துக்கொண்ட விஷயத்தை, தக்கபடி விவரித்திருக்கிறீர்கள். வசதி படைத்தவர்கள் சலுகைகள் வாய்ப்புகள் பலவற்றையும் பயன்படுத்தி மேலும் மேலும் வசதிகளை பெருக்கிக் கொண்டு கொழுப்பேறி வருவதை - வறுமைப் பட்டவர்களை சுரண்டிக் கொழுப்பதை - சந்தர்ப்பவாதிகளும் சுயநல அரசுப்பணியாளர்களும் பிறரும் அவர்களுடைய ஏவல் நாய்களாகத்

தொண்டுபுரிவதை - நேர்மை, நீதி, உரிமை, சத்திய உணர்வு பெற்றவர்கள் சமூகத்தில் (உயர்வது கிடக்கட்டும்) உயிர் வாழ்வதற்கே சிரமப்பட வேண்டியிருப்பதை எல்லாம் அருமையாக, உள்ளது உள்ளபடி உங்கள் நாவல்களில் சித்திரிக்கிறீர்கள். 'ஊருக்குள் ஒரு புரட்சி'யிலும் இது வெளிப்படுகிறது.

'ஒரு கோட்டுக்கு வெளியே' விரிவாக எழுதப்பட்டிருப்பதால் நயங்கள் பல கலந்து அதிகச் சுவை உடையதாக அமைந்துள்ளது. 'ஊருக்குள் ஒரு புரட்சி' சில இடங்களில் 'கதைச் சுருக்கம்' மாதிரி - தேவைப்படுகிற சம்பவங்களை நேரடியாகச் சொல்லி விடுகிற வெறும் 'நேரேஷன்' ஆகக் காணப்படுகிறது.

இருப்பினும் ரசம் குறையவில்லை. நன்றாக இருக்கிறது. இதை புத்தகமாக வெளியிடலாம். வெளியிட வேண்டியது தான். திரைமறைவு நிகழ்ச்சிகளை - சகல மட்டங்களிலும் நிகழ்கிற சிறுமைகளை - அம்பலப்படுத்துகிற காரியம், துணிச்சலானது. வரவேற்கப்பட வேண்டியது.

நான் சந்திக்கிற இலக்கிய நண்பர்களிடமெல்லாம உங்கள் நாவல்கள், கதைகள் பற்றி சொல்லிவருகிறேன். 'ஒரு கோட்டுக்கு வெளியே' பற்றி முக்கியமாக.

தச்சநல்லூரில் ஒரு ஹெட்மாஸ்டர். 'ஒரு கோட்டுக்கு வெளியே' ரேடியோ நாடகத்தை கேட்டு ரசித்தது பற்றி மகிழ்வோடு சொன்னார். அதன் கரு, அது எடுத்துச் சொன்ன செய்தி அவருக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. நாடகம் நன்றாக இருந்தது என்று பாராட்டினார்.

எனது வாழ்த்துக்கள்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
13-10-80

அருமை நண்பர் சமுத்திரம் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் 5/6.10.80 கடிதம் 8-ம் தேதி கிடைத்தது. திருவனந்தபுரத்துக்குப் போன கடிதமும் முன்பே வந்துவிட்டது.

செய்திகள் அறிந்து மகிழ்கிறேன். உங்கள் கதை விகடன் பொன்விழா மலரில் வெளிவருவதை அறிய ரொம்ப சந்தோஷம்.

'மங்கை' பத்திரிகை மலரில் 'என் படைப்புகளில் நான் விரும்பும் பெண்பாத்திரம்' என்றொரு கட்டுரை வர இருப்பதும் மகிழ்ச்சி தருகிறது. 'அலை ஓசை' 'நாகமணி' மலர்களுக்கும் கதைகள் எழுதிக் கொடுத்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

நான் இங்கே வந்த பிறகு 'தினமணிகதிர்', 'அலைஓசை', 'சௌராஷ்டிரமணி' 'நாகமணி' தீபாவளி மலர்களுக்குக் கதைகள் அனுப்பியிருக்கிறேன்.

'சௌராஷ்டிரமணி' என்பது கும்பகோணத்திலிருந்து வருகிறது. போன வருஷம் வெள்ளி விழா கொண்டாடியது. இது வருஷம் தோறும் தீபாவளி மலர், பொங்கல்மலர் வெளியிடும். பல வருஷங்களாக அவற்றில் நான் எழுதிவருகிறேன்.

'திட்டம்' பத்திரிகைக்காக வ.ரா.பற்றிய கட்டுரை எழுதிவிட்டேன். கு. அழகிரிசாமி பற்றியும் எழுதி, சேர்த்து அனுப்பலாமே என்றிருந்ததால், தாமதம் ஏற்பட்டுவிட்டது.

அ. இ. எழுத்தாளர் மாநாடு பற்றிய தகவலுக்கு நன்றி. மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபோது சென்னைக்கு வரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு சங்கத்தை ஆரம்பித்தார்கள். இந்திராகாந்தி பிரதமர் ஆகி சென்னை வருவதைப் பயன்படுத்தி, ஒரு மாநாடு நடத்திவிட்டார்கள்.

எழுத்தாளர்கள் அரசியல் பெரியவர்கள் புகழ் வெளிச்சத்தில் மயங்கி, அவர்களது விளம்பரப் பெருமையை பயன்படுத்திக்கொண்டு தாங்களும் இரவல்புகழ் அடைய ஆசைப்படுவது அவர்களுடைய அடிமைப் புத்தியைத்தான் காட்டுகிறது. டொமினிக் ஜீவா, சிவத்தம்பி போன்ற எழுத்தாளர்கள் இங்கே வருகிற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி இந்தச் சங்கம் அவர்களை கவுரவிக்க எப்பவாவது விரும்பியது உண்டா? அ.இ.எ.சங்கம், அதன் தலைவர், துணைத் தலைவர், செயலாளர் என்று சொல்லிக்கொண்டு, அரசியல்வாதிகளின் தயவோடு, அவர்கள் ஏதேனும் சலுகைகள் அடைய வாய்ப்பும், வசதியும் கிட்டக்கூடும். சாதாரண எழுத்தாளனுக்கு இத்தகைய சங்கங்களினால் எவ்விதமான பயனும் ஏற்படுவதில்லை.

உங்கள் டால்ஸ்டாய் நாடகம் பெங்களூரில் மேடையேற இருப்பதை அறிய சந்தோஷம்.

நாவல் எழுத ஆரம்பியுங்கள், வெற்றி நிச்சயம் வந்து சேரும்.

இந்தப் பக்கத்தில் இப்போது தொடர்ந்து மழை பெய்கிறது. ஆனால் மேற்கே, அணைக்கட்டுப் பகுதியில், பலத்த மழை இல்லை என்றே தெரிகிறது. ஆற்றில் சிறிதளவே தண்ணீர் போகிறது.

நான் இங்கே வந்த பிறகு, பத்திரிகைகள் பார்க்கக் கிடைப்பதில்லை. பல புத்தகங்கள் படித்தேன். 'திட்டம்' மதிப்புரை எழுத வேண்டும். வேலைகள் நிறையச் சேர்ந்துவிட்டன. செய்யச் செய்ய, முடிந்த பாடாக இல்லை.

'தாமரை' அக்டோபர் இதழ் வந்தது. இளையபாரதியின் "பொதுமைப் பூங்கா" பற்றிய கட்டுரையைப் படித்தேன்.

தி.க.சி வாரம் தோறும் கடிதம் எழுதுகிறார்.

நலம். நாடுவதும் அதுவே.

வ.ரா. பற்றிய கட்டுரையை மட்டும் இன்று ஆபீசுக்கு அனுப்பியிருக்கிறேன். ரூ 93.45க்கு மணியார்டர் இன்று கிடைத்தது.

நன்றி.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
30-10-80

அருமை நண்பர் சமுத்திரம் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் கடிதம் 27-ம் தேதி கிடைத்தது. நீங்கள் பல பத்திரிகைகளுக்கும் கதைகள் எழுதி உதவியிருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

நண்பர் சிவபாதசுந்தரம் மகள் திடீர் மரணம் எய்தியது பெரும் அதிர்ச்சிதான். வாழ்க்கையும் மரணமும் எப்படி எப்படியோ அமைந்துவிடுகின்றன மனிதர்களுக்கு.

நண்பர் பாக்கியமுத்து ஹார்ட் அட்டாக்கினால் சிரமப்பட்ட செய்தி வருத்தம் தருகிறது. இதற்குள் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குப் போயிருப்பார், நல்ல சுகம் அடைந்திருப்பார் என்று எண்ணுகிறேன்.

கதைகள் எழுதுவதோடு, சமூகப்பணியிலும் அக்கறை காட்டி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல உதவி செய்வதிலும் நீங்கள் ஈடுபட்டு, சுமுகமான ஏற்பாடுகளை செய்து முடித்ததை அறிய சந்தோஷம். பாராட்டுதல்கள்.

நண்பர் தி.க.சி 15 நாட்கள் விடுமுறையில் இருந்தாராம். எழுத்து வேலைகள் சிலவற்றை முடிப்பதற்காக. நவம்பர் 1 முதல் வேலைக்குப் போவார் என்று நினைக்கிறேன்.

ராஜவல்லிபுரம் ஊர் நிலவரம் பற்றி விசாரித்திருந்தீர்கள். ராஜவல்லிபுரம் என்ற அழகான பெயரைக் கொண்டிருந்தாலும், ராசல்யாரம், ராசலியவரம், ராசல்லிபுரம், லாயில்யாபுரம், லாயிலாவரம் என்றெல்லாம் பலராலும் பலவிதமாகவும் குறிப்பிடப்படுகிற இந்த ஊர் தலைமுறை தலைமுறையாக லா-யிலா-புரம் (சட்டம் இல்லாத ஊர்) ஆகவும் இருந்து வருகிறது. தடலடிக்காரர்கள், குடித்துவிட்டு முரட்டுத்தனமாகச் செயல்புரிகிறவர்கள் இஷ்டம்போல் நடக்க உதவுகிற இடமாக இருக்கிறது.

ஒருவன் குடித்துவிட்டு, பஸ் டிரைவரை அடித்து விட்டான். அதனால் பஸ் போக்குவரத்து நின்றது. ஏழுநாட்களுக்குப் பிறகு மீண்டும் தொடங்கி, பஸ்கள் ஓடுகின்றன.

இந்த ஊரிலும் சுற்றுப்பக்க ஊர்களிலும் இது அவ்வப்போது நிகழ்கிற நிகழ்ச்சி ஆகிவிட்டது.

தெருக்குழாயில் ஒருத்திக்கு தண்ணீர்விட இதர பெண்கள் மறுத்தார்களாம். அவள் புருஷன் ஆத்திரம் அடைந்து, தெருக்குழாய்கள் பலவற்றையும் தகர்த்து எறிந்து போட்டான். தரைக்குள் இருக்கிற பைப்புகளையும்உடைத்து சேதப்படுத்தினான். 'எனக்கும் என் பெண்டாட்டிக்கும் இல்லாத தண்ணீர் ஊர்காரர்களுக்கு வேண்டியதில்லை' என்பது அவன் வாதம். 3 மாதங்களாக தண்ணீர் ரோடில் ஓடிக்கொண்டிருக்கிறது வீணாக. தண்ணீர் பிடிக்கிறவர்கள் ரப்பர் டியூபை உடைந்த குழாயில் பொருத்தி, குடங்களில் பிடிக்கிறார்கள். குழாய்களை சீர்படுத்தவோ, தெருவை அசிங்கமாக்கி ஓடுகிற தண்ணீரை கட்டுப்படுத்தவோ எவ்விதமான முயற்சியும் நடைபெறவில்லை. சில சாம்பிள்கள்.

நான் வழக்கம்போல் படிப்பு-எழுத்து வேலைகளை கவனித்துக் கொண்டிருக்கிறேன். இங்கிருந்து செய்ய வேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. ஆகவே, நவம்பரிலும், நான் இங்கு தான் இருப்பேன்.

நீங்கள் அங்கே வீட்டுக்குப் போய் பார்த்ததை அறிய சந்தோஷம். அண்ணாவும், நீங்கள் வந்தது குறித்து எழுதியிருந்தார்.

'திட்டம்' இதழில் தெ.பொ.மீ பற்றிய கட்டுரையில் என் பெயர் விடுபட்டுப் போனது குறித்து நீங்கள் எழுதிய ஆபீஸ் கடிதம் முன்பே கிடைத்தது. நன்றி

நலம். நாடுவதும் அதுவே.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
29-12-80

அருமை நண்பர் சமுத்திரம் அவர்களுக்கு,

வணக்கம், நலம். நீங்களும் உங்கள் குடும்பத்தில் அனைவரும் நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். உங்கள் 19ஆம் தேதிக் கடிதம் கண்டு மகிழ்ந்தேன்.

நான் ஜனவரி 6ம் தேதி இங்கிருந்து புறப்படுவேன். 7ல் சென்னையில் இருப்பேன்.

செப்டம்பர் 7ல் சென்னையை விட்டு நீங்கினேன். ரயில் போக்குவரத்தில் 8-ஆம் தேதி திண்டுக்கல்லில் இறங்கி, நண்பர் கமலவேலன் வீட்டில் ஒருநாள் தங்கிவிட்டு, 9ல் பஸ் மூலம் ஊர் வந்து சேர்ந்தேன்.

4 மாதங்கள் ஆச்சு.

நான் செய்ய விரும்பியது வேறு. செய்ய நேரிட்டது வேறுவேறு. செய்யவேண்டும் என்று எண்ணியதில் எதையுமே செய்யவில்லை - செய்யமுடியவில்லை. வாழ்க்கை இப்படித் தான் போய்க் கொண்டிருக்கிறது.

இதுக்காக வருத்தப்படுவதிலும் அர்த்தம் இல்லை. எதுக்காக வருத்தப்படுவதிலும் எவ்விதமான அர்த்தமும் கிடையாது. அதனால், நான் வருத்தம் கொள்வதே இல்லை.

எல்லாமே அனுபவங்கள். புதிய புதிய அனுபவங்கள். அவையே சந்தோஷங்கள்.

சந்தோஷங்களே வாழ்க்கையின் பயன்கள்-இனிமைகள்-செல்வங்கள்.

சந்தோஷங்கள் பணத்தினால், எதிர்செக்ஸ் தொடர்புகளினால், வேறு எது எதினால் மட்டுமே கிடைப்பதில்லை. அவற்றாலும் கிடைக்கும். அவை இல்லாமலும் கிடைக்க முடியும்.

உண்மையான சந்தோஷங்கள் அவரவர் உள்ளத்திலேயே முகிழ்க்கின்றன. மலர்கின்றன. மணம் பரப்புகின்றன.

அவரவர் சந்தோஷங்களை அவரவரே உண்டாக்கிக் கொள்ள வேண்டிய வாழ்க்கை நிலை - சமூக நிலையே நீடித்து வருகிறது.

அவரவர் மனசுக்குத் தக்கபடி, அவரவர் இயல்புகளுக்கு ஏற்ப, அவரவர் உணர்வுகளுக்கும் ஆற்றலுக்கும் தகுந்தபடி, சந்தோஷங்கள் புஷ்பிக்கும்.

வாழ்க்கையில் ஏமாற்றம், தோல்வி என்று எதுவுமே கிடையாது. அவைகள் கூட அனுபவங்களே. அறிவை விசாலப்படுத்தும் நிகழ்ச்சிகள் தான்.

உங்கள் முப்பத்தொன்பது வருஷங்களும் வீணடிப்பு அல்ல. அத்தகைய சோர்வு நினைப்பு மனசில் தோன்றியதே தப்பு.

அவரவர் உயிரோடிருக்க, முண்டியடித்து முன்னேற, எடுப்பாக, வாழப் பலரும் போராடிக் கொண்டிருக்கிற ஒரு போராட்டமே வாழ்க்கை என்றால், அதில் நீங்கள் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு சமாளித்து நின்று தலைநிமிர்ந்து, முன்னேற்றமே காட்டியிருக்கிறீர்கள். அந்த பலத்தில் மீது மேலும் மேலும் முன்னேறுவதில் - வளர்வதில் தான் உங்கள் வருங்காலமும் உழைப்பும் ஆற்றல்களும் ஈடுபடத்தப்பட வேண்டும். நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

"உள்ளம் தேறிச் செய்வினையில்
ஊக்கம் பெருக உழைப்போமேல்
பள்ளம் உயர் மேடாகாதோ?
பாறை பொடியாய் போகாதோ?"

புது வருஷ வாழ்த்துக்கள்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
22-11-80

அருமை நண்பர் சமுத்திரம் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் நீண்ட கடிதம் பெற்று மகிழ்ந்தேன். எழுதுவதில் தாமதம் ஏற்பட்டுவிட்ட போதிலும், விஷயங்களை ரசமாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

'சரஸ்வதி காலம்', 'மணிக்கொடி காலம்' முதலியவைகளை படித்து ரசித்ததை அறிய சந்தோஷம். சிறுகதை பற்றி ஒரு கட்டுரை எழுதியிருப்பது அதைவிட சந்தோஷம் தருகிறது.

உலகத் தமிழ் மாநாடு என்கிற 'கும்பல் மேளா'வை ஒட்டி, தி.கதிர் மலர் தயாரிக்கிறதா? 'தாமரை' ஒரு மலர் தயாரிப்பதாகக் கடிதம் வந்திருக்கிறது.

தினமணிக்கதிர் மலரில் உங்கள் 'விளையாத பயிர்' கதை

படித்தேன். நல்லகுணசித்திரப் படைப்பு. பொம்பிளைகளை கேலி செய்து பொழுதுபோக்கும் நாலு வீணர்களின் போக்கு அப்பாவியான ஒருவனை ஞானவானாக மாற்றி விடுவதை அழகாகச் சித்திரித்திரக்கிறீர்கள். விகடன் பொன்விழா மலரில், 'சிநேகித ஜாதி' படித்தேன். அருமையான கதை. நல்ல கருத்து. ஜாதியின் பெயரை சொல்லிக் கொண்டே, பணத்திமிருடன் மற்றவர்களை - சுயஜாதியினரையே - அவமதிக்கும் கொழுப்பர்களுக்கு நல்ல சூடு கொடுத்திருக்கிறீர்கள். நயமான சிந்தனைகள் பல இக்கதைக்கு ஜீவன் ஊட்டுகின்றன.

பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி, சுவையான அனுபவங்கள் பெற்று வருவது பாராட்டுதலுக்கு உரியது.

நான் அறுபதாண்டு நிறைவுக்குப் பாராட்டு விழா எதுவும் தேவையில்லை என்று கருதினாலும், நண்பர்கள் சும்மாவிடவில்லை.

11-ம் தேதி இரவு திருநெல்வேலி பாங்கு ஊழியர்கள் யூனியனை சேர்ந்த பர்வானா இளைஞர் மன்றம் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. 'தமிழில் சிறுகதைகள்' பற்றி ஒரு மணிநேரம் பேசினேன்.

நாளை (23 ஞாயிறு) முற்பகல் 10 முதல் 1 முடிய திருநெல்வேலி ஜங்ஷனில் ஒரு இலக்கிய நிகழ்ச்சி. நெல்லை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கூட்டுகிறது. 'வல்லிக்கண்ணன் படைப்புகள்' பற்றி 4 பேர் பேசுவர். நான் முடிவில் பேசவேண்டும். 2 மணிக்கு ஓட்டப்பிடாரம் போகவேண்டும். அங்கே, ஒரு பாராட்டுவிழா. ஏகப்பட்ட பேர் பட்டியல் போட்டிருக்கிறது. யார் யார் வருவார்களோ, தெரியாது.

'திட்டம்' இதழ் வந்தது. நாரணதுரைக் கண்ணன் பற்றி அசோகமித்திரன் நன்றாக எழுதியிருக்கிறார்.

தினமணிக்கதிர் மலரில் பிரசுரமான எனது 'பெண்' கதையை நண்பர்கள் பலரும் ரசித்துப் பாராட்டி எழுதியுள்ளனர். நீங்களும் சுவைத்து மகிழ்ந்ததை அறிய மகிழ்ச்சி.

உலகம் பலவிதம். மனிதர்கள் ரகம்ரகம். அவரவர் மனசுக்குப் பிடித்த வழிகளில் சந்தோஷமாக வாழத்தான் எல்லோரும் ஆசைப்படுகிறார்கள். ஆனால் சந்தோஷங்கள் எல்லோருக்கும் எப்போதும் சித்திப்பதில்லை. நான் எப்போதும் சந்தோஷமாக இருக்க விரும்பினேன். துணை என்று ஒன்று சேர்ந்தால் அது வினையாகத்தான் அமையும் என்று கருதினேன். எல்லோரும் அப்படி எண்ணவேண்டும் என்கிற கட்டாயம் எதுவுமில்லைதான்.

அன்பு
வ. க.

சென்னை.
21-11-88

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம். நலம். நலம்தானே?

ஒரு வேண்டுதல் விண்ணப்பமாக இக்கடிதம் எழுதுகிறேன்.

வேண்டுகோள்: ரேடியோ நியூஸ் வேலைக்கு இனிமேல் என்னை கூப்பிட வேண்டாம். டிசம்பர் 1,2,3....16,17,18 தேதிகளில் வேலை செய்ய ஒப்புக்கொண்டு விட்டேன். ஜனவரியிலிருந்து எனக்கு விடுதலை அளிக்கும்படி வேண்டுகிறேன்.

இரண்டு மாதங்களாகவே உங்களிடம் இதை சொல்லிவிட வேண்டும் அல்லது கடிதம் எழுதவேண்டும் என்று எண்ணம். ஆனால், நான் என் எண்ணத்தை செயல்படுத்துவதற்கு முந்தியே, அடுத்த மாதம் வேலை செய்ய வேண்டிய தேதிகள் பற்றிய அறிவிப்பு தரப்பட்டுவிடும். திட்டமிட்டு, தேதிகள் ஒதுக்கிவிட்ட பிறகு, நான் மறுப்பது வீண் சிரமங்களுக்கு இடம் தருமே என்று மவுனமாக ஏற்றுக்கொண்டேன். இம்மாதம் 12-ம் தேதி முதல் எனது 69-வது வயது ஆரம்பமாகிறது. அது முதல் என் இஷ்டம் போல் சுதந்திரமாக இயங்குவதற்கு வசதியாக, நியூஸ் வேலையிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று விரும்பினேன். முடியாமல் போச்சு. 15-ம் தேதி, எனக்கு டிசம்பர் மாத வேலை நாட்கள் குறித்துக் கொடுக்கும்படி நீங்கள் அன்புடன் தெரிவித்து விட்டீர்கள். உடனடியாகவே திரு. ஜெயராமன் திட்டமிட்டு தேதிகளை என்னிடம் கூறிவிட்டார். ஆகவே, டிசம்பரிலும் வேலை செய்ய வேண்டியதாகி விட்டது.

உங்கள் அன்பும் நட்பும், உதவும் பண்பும் என் உள்ளத்தில் நெகிழ்வு ஏற்படுத்தி என்னை கட்டுப்படுத்துகின்றன. மே மாத இறுதியில், நான் உங்கள் விருப்பத்தைப் புறக்கணித்தேன். என் இஷ்டம் போல் ஊருக்குப் போனேன். நீங்கள் அன்புடன் எவ்வளவோ சொல்லியும் நான் கேட்கவில்லை. இன்னொருவராக இருந்தால், அதை எல்லாம் நினைவில் கொண்டு, மீண்டும் என்னைக் கூப்பிட்டு உதவி இருக்கமாட்டார். ஜூலையில் நான் வந்து உங்களைப் பாராமல் இருந்தபோது, நீங்கள் அன்புடன் உதவ முன்வந்தது உங்களது பெரிய மனதை, உயர்ந்த உளப் பண்பை காட்டுகிறது. அதனாலேயே நான் தொடர்ந்து நியூஸ் வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

எனக்கு 68 வயது முடிந்துவிட்டது. (காதுகளும் கண்களும் செயல்திறம் குறைந்து வருகின்றன). 'போங்காலம்' நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதுக்கு முன் பல பணிகளை நான் முடித்தாக

வேண்டியிருக்கிறது. தங்கள் தங்கள் ஊருக்கு வந்து, சில தினங்கள் தங்களோடு தங்கவேண்டும் என்று கோருகிற-திரும்பத் திரும்ப எழுதுகிற-நண்பர்களின் ஊர்களுக்குப் போகவேண்டும். ராஜவல்லி புரத்தில் சில மாதங்கள் தங்கி சில முக்கிய வேலைகளை முடிக்க வேண்டியிருக்கிறது. எனவே, ஜனவரியிலிருந்து என்னை நியூஸ் வேலைக்குக் கூப்பிடாது எனக்கு விடுதலை தந்து உதவும் படி கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
2-3-89.

அருமை நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

பிப்ரவரி 10 இரவில் நான் சென்னையைப் பிரிந்தேன். 11-12 சிவகாசியில். அங்கே சிறுபத்திரிகையாளர் சங்கம் ஆண்டு விழா நடந்தது. ராஜநாராயணனும் வந்திருந்தார். 13ல் நானும் ஞானன் என்ற எழுத்தாளரும் கழுகுமலை போய், அங்கே மலைக்குள் வெட்டப்பட்டிருக்கும் சிறு கோயிலையும் சிற்பங்களையும் பார்த்தோம். சமணர் காலத்தியவை என்ற வரலாற்றுப் பெருமை தவிர, சிறப்பு அம்சம் எதுவும் இல்லை. 14 முதல் 17 முடிய விருதுநகரில் நண்பர்களோடு. 18-19 மறுபடி சிவகாசி. கலை இலக்கியப் பெருமன்றத்தின் சிறுகூட்டம் 19அன்று. 20ல் விருதுநகர். 21ல் ராஜவல்லிபுரம் சேர்ந்தேன். உடனேயே திருநெல்வேலி போனேன். அன்று தான் தி.க.சி. சென்னைக்கு புறப்பட்டார். ரயிலில் அவரை வழி அனுப்பினேன். பின்னரும், பாளையங்கோட்டை-திருநெல்வேலி என்று போய் வர நேரிட்டது. பாக்கியமுத்து வீட்டில் சனிக்கிழமை 'நண்பர் வட்டம்' கூட்டம் நடந்தது. ரகுநாதன் கவிதை பற்றி ஆழ்ந்த, இனிய, சொற்பொழிவு நிகழ்த்தினார். சுவாரஸ்யமாக 2 மணி நேரம் பேசினார். கேட்டவர்கள் 15 பேர்தான்.

21 முதல் இவ்வூரில். மார்ச் பூராவும் இங்கே தான். தாமிரவர்ணியில் தண்ணீர் குறைவாகத் தான் போகிறது. ஆனாலும் குளிப்பதற்கு ரொம்ப சுகம். காலையிலும் மாலையிலும் ஆற்றுக்குப் போய் வருகிறேன்.

தி.க.சி கடிதம் எழுதியிருந்தார். உங்களுக்கு 'டயபடீஸ்' நோய் இருப்பதாக தெரிவித்தீர்கள் என்று. வருத்தம். எனினும், மருத்துவ வசதிகள் முன்னேறியுள்ள நாட்களில் நோய் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை தான். கொஞ்சம் கட்டுப்பாடுகளை அனுஷ்டிக்க வேண்டியிருக்கும்.

நெடுகிலும் நண்பர்களை சந்தித்துப் பேசியது மிகுந்த உற்சாகம் தந்தது. நல்ல இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட ரசிகர்கள் ஒன்றிரண்டு பேர் எங்கும் இருக்கிறார்கள். படித்து, ரசித்து, நினைவு வைத்து, சமயம் கிடைக்கிற போது நயங்களை எடுத்துச் சொல்லி மகிழ்கிற இயல்பினர். உங்கள் நாவல்கள் பற்றியும், சினிமா உலக அனுபவங்கள் குறித்து நீங்கள் எழுதிய கட்டுரைகள் குறித்தும் சொன்னார்கள்.

ராஜநாராயணனுக்கு இப்போது பிரகாசமான காலம். ஜூனியர் விகடனில் அவர் எழுதிய கட்டுரைகளுக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்து, 'ஆனந்தவிகடன்' அவருடைய 'கோபல்லபுரத்து மக்கள்' கதையை தொடராக வெளியிட்டு வருகிறது. டி.வியில் ஒளிபரப்புவதற்காக யார் யாரோ அவரை அணுகி, 13 கதைகள் வாங்கிப் போனார்களாம். 13,000 ரூபாய் கிடைத்தது. இப்போது பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், தனியாக 'நாடோடி இலக்கியம்-மக்கள் கலைத்துறை' என்று ஒரு பிரிவு ஏற்படுத்தி, இவரை தலைவராக்க முன் வந்துள்ளது. மாதம் 4000 ரூபாய் சம்பளம். ஜூன் மாதம் முதல் அவர் பொறுப்பு ஏற்பார். ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு இப்படி எல்லாம் வாய்ப்புகள் தாமாகவே தேடி வருவது என்பது சந்தோஷமான விஷயம் தான்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
18-5-92

அன்புமிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

நான் 8-ம் தேதி திருநெல்வேலி சேர்ந்தேன். தி.க.சி. வீட்டில் தங்கியிருந்த போது, தற்செயலாக திரு. பாக்கியமுத்துவும் திருமதி. சரோஜினி பாக்கியமுத்துவும் வந்தார்கள். மேலரதவீதியில் தான் 'நண்பர் வட்டம்' அச்சாகும் பிரஸ் இருக்கிறது. அங்கே வந்தவர்கள் தி.க.சியைப் பார்க்க வந்தார்கள். என்னையும் கண்டு பேச ஒரு வாய்ப்பு

கிட்டியது. நீங்கள் போனில் பேசியபோது, நான் திருநெல்வேலிக்கு வந்திருக்கிற தகவலை கூறியதாகவும் பாக்கியமுத்து சொன்னார்.

மறுநாள் பெருமாள்புரத்துக்கு அவர்கள் வீட்டுக்குப் போனேன். ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

நான் நலம். தி.க.சி. உடல்நிலை சீராக இல்லை. இருமல் இருக்கிறது பல நாட்களாக. பல்வலி என்று பற்களை பல் டாக்டரிடம் காட்டி முக்கால்வாசிப் பற்களை எடுத்தாச்சு. இன்னும் 5 பற்கள் இருக்கின்றன. இந்த வாரம் அவையும் நீக்கப்பட்டு விடும். பிறகு பல் செட் மாட்டிக்கொள்ளவேண்டும்.

நான் ராஜவல்லிபுரத்திலும் திருநெல்வேலியிலுமாக பத்து நாட்களை கொலை பண்ணியாச்சு. உருப்படியாக எதுவும் செய்யவில்லை. மகள்கள் இரண்டுபேர் என்கூட வந்திருந்தார்கள். 16-ம் தேதி மாலை சம்மர் ஸ்பெஷல் ரயிலில் அவர்கள் சென்னை திரும்பினார்கள்.

நான் 21-ம் தேதி கோயமுத்தூர் போவேன். 24 ஞாயிறு அங்கே ஹோட்டல் அலங்காரில் ஒரு இலக்கிய நிகழ்ச்சி. பிறகு என்ன புரோகிராம் என்பது இப்பவே தெரியாது! மே இறுதிக்குள் சென்னை சேரவேண்டும் என்று எண்ணம். அது நடக்குமா, திட்டம் மாறிப்போகுமா என்பதும் தெரியாது. நடப்பவை அவை பாட்டுக்கு நடக்கும். வருவனவற்றை இயல்பாக ஏற்று நடந்து சந்தோஷமாக இருக்க வேண்டியது. அவ்வளவுதான்.

சம்புலிங்கம் கட்டுரை வரிசையில் முதல் கட்டுரைக்குப் பிறகு, 'ஜே.ஜே சில குறிப்புகள்' பற்றியதையும், 'குருதிப்புனல்' பற்றியதையும் படித்தேன்.

'குருதிப்புனல்' பற்றி இரண்டே காலம் தான்-கதைச் சுருக்கம் மட்டுமே - இந்த வாரம் வந்துள்ளது. விமர்சனம் அடுத்த வாரம் என்று காணப்படுகிறது.

போனவாரம், சுந்தர ராமசாமியின் சீடர்கள் போக்கு பற்றி அடுத்தவாரம் கவனிப்போம் என்பது கடைசி வரியாக இருந்தது. அது அத்தோடு சரி போலும். இ.பா., சு.ரா.வின் சீடர் இல்லை.

சென்னை சேர்ந்த பிறகு கடிதம் எழுதுவேன்.

நலம். நாடுவதும் அதுவே.

அன்பு
வ. க.

சென்னை.
21-10-92

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

முதலிலேயே, உங்களுக்குப் பிடிக்காத செய்தியை சொல்லி விடுகிறேன். நேற்று நான் விழுப்புரம் போகவில்லை. கலந்து கொள்வதாகச் சொல்லிவிட்டு, குறிப்பிட்டபடி போகாமல் இருப்பது தப்புதான். என்ன செய்வது! அவ்வப்போது நான் இப்படி நடந்து கொள்வது தவிர்க்க இயலாதது ஆகிவிடுகிறது.

விழுப்புரத்துக்கு என்.பி.டி நிகழ்ச்சிக்கு போகத்தான் வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் உடல்நிலை ஒத்துவரவில்லை. 18 நாட்கள் வெளியூர் பயணத்தின் போது வயிறு பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கமான பசிஇன்மை - வாந்தி வருதல் முதலியன. அதனால் அநாவசியமான சோர்வு. (உடல்+உள்ளம்) ஸோி, நான் போகலேன்னாத் தான் என்ன! ஒண்ணும் கெட்டுப்போகாது என்று மனம் முடிவு செய்தது.

போய், திரும்பினால் சோர்வு அதிகமாகும். மேலும் இரண்டு மூன்று நாட்களுக்கு உழைக்க உற்சாகமே இராது. வேலை ரொம்ப நிறையச் சேர்ந்து போச்சு. அன்பும் அனுதாபமும் கொண்டவர்கள் எனக்கு உதவ வேணும் என்ற நல்லெண்ணத்தில் வேலைகள் தருகிறார்கள். அவை அதிக உழைப்புக்கே வழி செய்கின்றன. இதே ரீதியில் வண்டி ரொம்ப நாள் ஓடாது என்பது எனக்கே தெரிகிறது. அட, ஓடுகிற வரை ஓடட்டும்; ஒருநாள் டபக்குனு ஒடிஞ்சு விழுந்தா ஒழிஞ்சு போகட்டும் என்ற மனநிலை.... சுயஅளப்புகள் போதுமே!

‘சாணக்கியன்’ (16-10-92) வாங்கிப் படித்தேன். அதில் உள்ள விஷயங்களை நீங்கள் அப்படியே சொல்லி விட்டீர்கள். அதனால், படித்ததையே திரும்பவும் படித்த மாதிரித் தோன்றியது. சொல்லி யிருப்பதையும், சொல்லியிருக்கிற முறையும் சரிதான்.

உங்கள் கடிதம் கிடைத்ததாக தி.க.சி எழுதியிருக்கிறார். ‘சாணக்கியன்’ வாங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அன்பு
வ. க.

சென்னை.
10-10-95

அருமை நண்பர் அவர்களுக்கு,

வணக்கம். எனது சந்தோஷங்களை அதிகப்படுத்தும் விஷயம் ஒன்று இன்று சேர்ந்தது. 'வாசுகி' 1992 ஆகஸ்ட் 21-22 இதழில் 'திப்பணம்பட்டி சம்புலிங்கம்' எழுதிய 'இலக்கியசர்ச்சை' கட்டுரை இன்று எனக்குப் படிக்கக் கிடைத்தது.

உலகத்தில் எத்தனையோ விசித்திரங்கள், விநோதங்கள், வக்கிரங்கள் - என்னையும் சேர்த்து! இப்படியாப்பட்டவர்களில் ராம்குமார் என்கிற இளைஞரும் ஒருவர். பழைய பத்திரிகைகளில் கண்டெடுத்த நறுக்குகளை (கட்டுரைகள், கதைகள், துணுக்குகள், விவகார விஷயங்கள் போன்ற பலவற்றையும்) சம்பந்தப்பட்டவர்களிடம் கொண்டு தருவது அவருடைய வாழ்க்கை நடவடிக்கைகளில் ஒன்று. எனக்கும் அவ்வப்போது உதவுவார். இன்று அவர் கொண்டு தந்த 'கட்டிங்கு'களில் மேற்படி சமாச்சாரமும் இருந்தது. தமிழ் தாத்தா தி செகண்டாக வனா. கனா.வை விவரித்திருப்பது. அத்துடன் வ.க.வின் 'பெண்' எனும் சிறுகதையை சிலாகித்து, 'இது தான் சிறுகதை. இதுதான் வல்லிக்கண்ணன்' என்று முடித்திருப்பது. ஆகா, பிரமாதம்!

'பெண்' என்கிற நல்ல கதையை படிக்கிறவர்கள் ரசிப்பார்கள். அதை பார்க்கிறவர்களும் ரசிக்கும் படியாக 'ஜேடி-ஜெர்ரி' படமாக்கியிருந்தார்கள். தங்கர்பச்சான் காமிராத்திறத்தில் அது குளுகுளு இனிமை பெற்று விளங்கியது. 1995 ஜனவரி 1-ம் தேதியும் 8-ம் தேதியும் அதை சென்னை தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அருமையான டிவி படம் அது. 'பெண்' என்ற பெயரில் சுகாசினி ஒரு தொடரை ஏற்கனவே தயாரித்து ஒளிபரப்பியிருந்ததால், இந்தப் 'பெண்' டிவிக்காக 'தேவகி ' என்று பெயர் மாற்றம் பெற்றிருந்தாள்.

'தாமரை' ஆகஸ்ட் இதழ் எனக்கும், தி.க.சி.க்கும் இன்றுவரை கிடைக்கவேயில்லை. மகேந்திரனுக்கு ஒரு கடிதம், யோகநாதனுக்கு ஒரு கடிதம் எழுதினேன்... எழுதினேன், அவ்வளவுதான்!... எதிரொலி இல்லை.

நலம். நாடுவதும் அதுவே.

அன்பு
வ. க.

## எழிலமுதன்

சென்னை-14
27-1-83

பிரிய நண்ப, வணக்கம்.

உங்கள் 21-1-83 கடிதம்... மகிழ்ச்சி.

நீங்கள் புதுமைப்பித்தன் பற்றி திருநெல்வேலி வானொலியில் உரை நிகழ்த்தியதை அறிய சந்தோஷம்.

'தீபம்' பொறுப்பாசிரியராக இல்லை நான். இடைக்காலத்தில் சில மாதங்கள் 'ஆசிரியர் குழு' என்று மூவரில் ஒருவனாய் என் பெயரும் அச்சிடப்பட்டு வந்தது. அக்காலகட்டத்தில் கூட 'தீபம்' பத்திரிகையில் பொறுப்பு எதுவும் எனக்கு இருந்ததில்லை. கதை, கட்டுரை, தேர்ந்தெடுப்பது, பிரசுரிப்பது, அல்லது பிரசுரிக்காமலே வைத்திருப்பது எல்லாம் எஸ். திருமலையின் பொறுப்பு தான். இவர் நா.பாவின் உறவினர். நா.பா. மேற்பார்வையும் உண்டு.

'தீபம்' வந்துகொண்டு தான் இருக்கிறது. ஆனாலும் அது வருவது தெரியாமலே உயிர் வாழ்கிறது. ஸர்குலேஷன் மிகமிகக் குறைவு.

திருவாதிரை நாளில் நீங்கள் செப்பறைக்கும், ராஜவல்லிபுரம், சீவலப்பேரிக்கும் போயிருந்ததை அறிய மகிழ்ச்சி.

பாரதி பிறந்த இடம் பற்றி நீங்கள் குறித்திருக்கிற அளவுக்குத் தான் எனக்கும் தெரியும். வேறு விவரம் தெரியாது.

1982ல் எட்டயபுரத்தில் பாரதி விழா கொண்டாடப்பட்ட சமயம், 'விழிகள்' என்ற சிறு பத்திரிகையில் ஒரு கட்டுரை வந்தது. எட்டயபுரத்தில் பலபேரை பேட்டி கண்டு எழுதப்பட்டிருந்தது. அதில், பாரதி எட்டயபுரத்தில் 'பிறந்த வீடு' என்று காட்டப்படுவது உண்மையில் பாரதி பிறந்த வீடு அல்ல; இது அவர் மாமா வீடு. இந்த வீட்டுக்கு சிறிது தள்ளி உள்ள ஒரு வீட்டில் பாரதி பிறந்தார் என்று எட்டயபுரம் நபர் ஒருவர் சொன்னதாக எழுதப்பட்டிருந்தது.

கோபால்ஜீ (சொற்பொழிவாளர்) பாரதி எட்டயபுரத்தில் பிறக்கவில்லை, சீவலப்பேரியில் தான் பிறந்தார் என்று சொன்னதாக ஒரு பத்திரிகைத் துணுக்கு பார்த்தேன்.

இதுக்கெல்லாம் எவரும், ஆதாரம் என்று எதையும் காட்ட முடியவில்லை.

ஆதாரம் எதுவும் இல்லை என்பதுதான் காரணம்.

இச்சர்ச்சைகளினால் உருப்படியான பயன் ஏதாவது உண்டா

என்ன? மகாகவி பாரதி வாழ்ந்து காட்டிய, வாழ்க்கை நெறிகள் என எடுத்துக் கூறிய, நல்ல கருத்துக்களை கடைப்பிடிப்பவர்கள் நாட்டிலே பெருகினால் நல்லது.

அன்பு
வ. க.

சென்னை-14
25-3-85

பிரிய நண்ப,

வணக்கம்.

நீங்கள் அன்புடன் அனுப்பிவைத்த ஆங்கிலக் கட்டுரை கிடைத்தது. படித்து ரசித்தேன்.

நீங்கள் ஸ்ரீவைகுண்டத்திலேயே இருப்பதாக எண்ணியிருந்தேன். இக் கட்டுரை மூலம் உங்கள் விலாச மாறுதல் அறிந்தேன். இப்போது தூத்துக்குடிக் கல்லூரியில் பணி புரிகிறீர்களா?

பாரதி கவிதைகளிலிருந்து பாரதியின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஆய்வு செய்து முடிவுகட்டி, நல்லதொரு ஆங்கிலக் கட்டுரையை எழுதியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

இதை தமிழில் எழுதியிருந்தால், சொல்லப்பட்டுள்ள விஷயங்களில் புதுமை இராது. ஏனெனில் இதுபோன்ற கருத்துக்கள் அவ்வப்போது அறிவிக்கப்பட்டுள்ளன.

'பாரதி-சில யதார்த்தப் பார்வைகள்' என்றொரு புத்தகம். புதுக்கோட்டைக் கல்லூரியில் பணிபுரியும் நாலு பேர் எழுதிய கட்டுரைகளைக் கொண்டது. அவற்றில் ஒரு கட்டுரை. பாரதியின் கண்ணம்மா பற்றியது தான். கண்ணம்மா காதல் பாடல்கள் உயிருடனிருந்த ஒரு பெண்ணை நினைத்து ஏங்கிப் பாடப்பட்டவை தான் என்றும், கண்ணனை எண்ணிப் பாடிய ஆத்மீகக்காதல் கவிதைகள் இல்லை என்றும் மங்களா என்பவர் நிரூபிக்க முயன்றிருக்கிறார்.

புலன்இன்ப ரீதியான காதல் பிதற்றல்களே பாரதியின் கண்ணம்மா பாட்டுகள் என்று கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. அவருக்குப் பரிச்சயமான ஒரு பெண்ணை நினைத்துப் பாடிய காதல் பாடல்கள் தான் என்று கருதி அப்படி அவற்றை ரசிப்பவர்கள்

ரசிக்கட்டும். உயிருடன் இருந்த (இருக்கிற) ஒரு பெண்ணை நினைத்து ஏங்கிப் புலம்புகிற காதல் மொழிகளைத் தான் எல்லோருமே எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டாள், ஆழ்வார்கள் காதல்மய கீதங்களைக் கூட ஆசை நிறைவேறாத உள்ளத்தின் காதல் ஏக்கப் புலம்பல்களே என்றும் சொல்லமுடியும். அப்படிச் சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்.

ஒரு மனித உள்ளம் கடவுள் என்கிற கற்பனை உருவைக் காதல் பண்ணி ஏக்கத்தோடு பாடிய உணர்ச்சிப் பாடல்கள் (கற்பனைக் காதல் புலம்பல்கள்) என்று கருதுவதில் தனிநயமும் இலக்கிய அழகும் இருக்கிறது. அப்படி எண்ணி ரசிக்கிறவர்கள் ரசித்துவிட்டுப் போகட்டுமே!

இப்படித் தான் மங்களாவுக்கும் எழுதினேன். இவ்வாறெல்லாம் ஆய்வு செய்வது விமர்சன நியதிகளில் ஒன்று தான்; இலக்கிய மரபு தான் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அது சரிதான்.

எனவே இந்த விதமான ஆய்வுகளில் ஈடுபடுகிறவர்கள் உற்சாகமாக இப்படி எல்லாம் எழுதிக்கொண்டு தான் இருப்பார்கள்.

வள்ளிக் கண்ணம்மா என்ற தாசிகுலப்பெண்ணை மனசில் வைத்துக் கொண்டு பாரதி பாடினார் என்று மங்களா சொல்லவில்லை.

ஆனால் அப்படி ஒரு தாசிப்பெண் பாரதி வாழ்வில் குறுக்கிட்டிருந்தாள்; அவளை தாசித் தொழிலில் ஈடுபடாதபடி பாரதி தடுத்தார் என்ற தகவலை அடிப்படையாகக் கொண்டு ராஜம் கிருஷ்ணன் 'மானுடத்தின் மகரந்தங்கள்' என்று ஒரு நாவல் எழுதியிருக்கிறார். சமீபத்திய வெளியீடு. அந்தப் பெண்ணின் பிற்கால சமூக வாழ்வு எப்படி எப்படி அமைந்தது, அவளைச் சேர்ந்தவர்கள் எப்படி எல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பது தான் கதை. கற்பனை நிகழ்ச்சிகள் நிறைந்தது தான்.

பாரதியின் 'வள்ளிப்பாட்டு' சதை இன்பத்தைப் பிரதானப்படுத்தி எழுதப்பட்டதுதான். நீங்கள் குறிப்பிட்டுள்ளது போல, புதுமைப்பித்தன் இதை அழுத்தமாகச் சுட்டியிருக்கிறார்.

அந்தப் பாடல் வள்ளிக் கண்ணம்மா என்ற தாசிகுலப் பெண்ணை கருத்தில் கொண்டு பாடப்பட்டிருக்கலாம் என்று நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். அப்படியே இருக்கக்கூடும்.

'குயில்பாட்டு'கூட அந்தப்பெண்ணை மனசில் கொண்டு பாடப்பட்டதாக இருக்கும் என்று குறிப்பிடுகிறீர்கள். இருக்கலாம். மனித உள்ளத்தின் மர்மங்களை, செயல்களை, வக்கிரங்களை,

துடிப்புகளை, தவிப்புகளை, கனவுகளை, ஏக்கங்களை எல்லாம் எவரும் அளவிட்டுவிட இயலாது.

கவிதை அருமையான படைப்பாக இருக்கிறது. ரசிகர்கள் பலவிதம். அவரவர் மனப்பண்புக்கும் ஆற்றலுக்கும் ஏற்றபடி ரசித்து மகிழ்வார்கள்; ஆராய்ச்சி செய்வார்கள்.

அத்தகைய ஆய்வுகளும் திறமையோடும் நயத்தோடும் எழுதப்படுமானால், அவையும் இலக்கியப் பிரியர்களுக்கு நல்ல விருந்தாக அமையும்.

'The `Puppy-Love' of Bharati; Kannamma, The `Dark"Lady' என்ற கட்டுரை நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. எனது பாராட்டுக்கள்.

அதை எனக்கு அனுப்பியதற்காக நன்றி.

அன்பு
வ. க.

சென்னை.
15-11-88

அன்பு மிக்க நண்ப,

வணக்கம்.

உங்கள் 7-11-88 கடிதம் சந்தோஷம் அளித்தது.

'புதுமைப்பித்தன்' புத்தகத்தைப் படித்து ரசித்ததை அறிய மகிழ்ச்சி.

'கப்சிப் தர்பார்' - நாஜி ஜெர்மனியின் ஹிட்லர் வரலாறு சொ.வி.+ந. ராமரத்னம் எழுதியது. இருவரும் 'தினமணி'யில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது. அதில் எந்தப் பகுதியை பு.பி எழுதினார் என்பது புத்தகத்தைப் பார்த்தால் தான். சொல்லமுடியும்.

'கப்சிப் தர்பார்'ருக்கு முன்னதாக இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி பற்றி 'பாசிஸ்ட் ஜடாமுனி' என்ற புத்தகத்தை 'சொ. விருத்தாசலம் பி.ஏ.' எழுதினார். இரண்டும் நவயுகப் பிரசுராலய வெளியீடுகள் தான்.

சாகித்திய அகாடமி, இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் வெளியிடும் நூல்களைப் பல இந்திய மொழிகளிலும் பிரசுரிப்பது வழக்கம். புதுடில்லியில் இருப்பவர்கள் முடிவு செய்வார்கள்.

'புதுமைப்பித்தன்' வரலாற்றை இந்தியிலும் இங்கிலீஷிலும் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன என்பது தகவல்.

முந்திய கடிதத்தில், 'வாசகர்களும் விமர்சகர்களும்' புத்தகத்தில், மேலட்டையில் ஆசிரியர் பெயர் அச்சிடப்படவில்லையே என்று கேட்டிருந்தீர்கள்.

பலரும் அதை குறையாகச் சுட்டிக்காட்டி எழுதுவது சகஜமாகிவிட்டது.

'எழுத்தாளர்கள்-பத்திரிகைகள்' புத்தகத்திலும் இதே குறைதான்.

ஆனால், 'சோலைத்தேனீ' பொறுப்பாளர் அதை குறைபாடாகக் கருதவில்லை. அவர்கள் வெளியீடுகளில் ஆசிரியர் பெயரை அட்டையில் அச்சிடாமல் இருப்பதை ஒரு 'பிரின்சிப்பிள்' ஆகக் கொண்டிருக்கிறார்கள்.

12-11-88 சனியன்று நண்பர் கல்யாண சுந்தரம் இங்கே வீட்டுக்கு வந்து, பேசிக்கொண்டிருந்தார். அன்று இரவே தஞ்சாவூர் போவதாகச் சொன்னார். இதற்குள் ஸ்ரீவைகுண்டம் வந்திருக்கலாம்.

நான், என் அண்ணா, மற்றும் குடும்பத்தினர் அனைவரும் சுகம்.

நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் நலம் தானே?

தீபாவளி வாரத்தில், ஆறேழு நாட்கள் தொடர்ந்து நல்ல மழை.

இப்பவும் 3 நாட்களாக அடிக்கடி மழை பெய்கிறது.

அன்பு
வ. க.

சென்னை.
1-2-93

அன்பு நண்பர் எழிலமுதன் அவர்களுக்கு,

வணக்கம்.

நலம் தானே?

'அகத்தியர் முதல் அப்புசுவாமி வரை' நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றதை அறிந்து மகிழ்கிறேன்.

விழா அழைப்பிதழ் வந்தது. விழா நிகழ்வு பற்றி தி.க.சி. எழுதியிருந்தார். நண்பர் கழனியூரனும் எழுதினார்.

எனக்கு புத்தகம் வந்திருக்கும் என்று இரண்டு பேரும் நம்பிக்கையுடன் குறிப்பிட்டிருந்தார்கள். புத்தகம் வரவில்லை, நான் அதை பார்க்கவில்லை என்று இருவருக்கும் தெரிவித்தேன்.

நேற்று மாலை உங்கள் தம்பி திரு. ராமலிங்கம் அந்த நூலை கொண்டு தந்தார். நன்றி. சந்தோஷம்.

புத்தகம் வெகு அழகாக, வசீகரமாக அமைந்துள்ளது.

இப்போதெல்லாம் தமிழ் புத்தகங்கள் அழகான அட்டைப்படம், வர்ணங்கள், வசீகரத் தோற்றத்துடன் வெளிவருவது மிகுந்த சந்தோஷம் அளிக்கிறது.

முன்னுரையையும் முதல் கட்டுரையையும் படித்தேன்.

'அகத்தியர் முதல் அப்புசுவாமிவரை' கட்டுரை ஆழ்ந்து அகன்ற நோக்குடன் எழுதப்பட்டிருக்கிறது. மிகநிறைந்த தகவல்கள். உங்கள் இலக்கிய ஈடுபாட்டையும், ஆழ்ந்த படிப்பையும், தகவல்கள் சேகரிக்கும் முயற்சியையும் அந்தக் கட்டுரை நன்கு புலப்படுத்துகிறது. உங்களுடைய திருநெல்வேலிப் பற்றுதலையும். திருநெல்வேலி க்காரர்கள் பற்றி விரிவான தகவல்கள் தரப்பட்டுள்ளன. 'குமுதம்' சிறுகதைப் போட்டியைக் கூடச் சேர்த்து 'ரொம்ப அப்-டு-டேட்' ஆக்கியிருக்கிறீர்கள் கட்டுரையை. பாராட்டுகிறேன். என்னைப் பற்றி அதிகம் குறிப்பிட்டிருப்பதற்காகவும், நூலை எனக்கும் சமர்ப்பித்துள்ளற்காகவும் என் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1940-41-2 வருடங்கள் நான் ஸ்ரீவைகுண்டத்தில் வசித்தேன். 'சர்க்கார் விவசாய ஆபீஸ்' குமாஸ்தாவாக. நான் சென்னைக்கு நடந்தே போவது என்று 1942 மே 25-ம் தேதி அதிகாலையில் துணிச்சலோடு புறப்பட்டது திருநெல்வேலி டவுண், அரசடிப் பாலத் தெரு வீட்டிலிருந்துதான்.

கட்டுரையில் 2 பேர்களை சேர்த்திருக்கலாம் என்று நினைக்கிறேன். கவிதை ரசனையை வளர்த்த டி.கே.சி போல, கலைரசனையை (சிற்பங்களை ரசிக்கும் ஆசையை) தொடர் கட்டுரைகள் மூலம் வளர்த்த தொ.மு. பாஸ்கரத் தொண்டமான். இன்னொரு பெயர் மீ.ப. சோமசுந்தரம். இவ்விரண்டு பேர்களையும் பின்குறிப்பில் டி.கே.சி. பக்தர்கள் கணக்கெடுப்பில்தான் சேர்த்திருக்கிறீர்கள். கட்டுரையிலேயே இடம் அளித்திருக்கலாம்.

அன்பு
வ. க.

## கருமலைப்பழம்நீ

சென்னை.
22-8-88

அன்பு நண்ப, வணக்கம்.

'அழகி' கவிதைத் தொகுதி கிடைத்தது. மகிழ்ச்சி.

அனுப்பியதற்கு நன்றி.

கவிதைகளைப் படித்து ரசித்தேன். இனிமையாய், எளிமையாய், இயல்பான ஓட்டத்துடன் கவிதைகள் அமைந்துள்ளன. சிந்து, அகவல், சாயல் வரி, வெண்பா, விருத்தம், புதுக்கவிதை எனப் பல வடிவங்களிலும் நல்ல கவிதைகள் எழுதியிருக்கிறீர்கள். அதே போல் பல்வேறு பொருள்கள் குறித்தும் இனிமையாகப் பாடியிருக்கிறீர்கள்.

கலையை, கவிதையை, அன்பை, அழகை - இப்படிப் பலப்பலவற்றையும் பெண்ணென உருவகித்து, அருள் புரிய வரும்படி கவிதை எழுதுவது இயல்பு. துயிலையும் சாவையும் கூடவா என வரவேற்று எழுதுவதும் சகஜம் தான். நீங்கள் கவலையை சுடர்விளக்கு என்றும், பெண் எனவும் விளித்து, "என்னைத் தழுவிட வா" என அழைத்துப் பாடுவது வித்தியாசமான கற்பனை தான்.

பனியைப் பாவையாக்கிப் பாடியிருப்பதும் அப்படிப்பட்டது தான்.

உங்கள் தமிழ்ப் பற்றும் வித்தியாசமானதாகத் தான் வெளிப்பட்டிருக்கிறது. 'தமிழ் நாட்டில் தமிழாளவில்லை என்றால் - தமிழ் பேசும் நாவினிலே ஏற்றுவாளை' என்றும், 'தமிழ்க்குறளை தீயிட்டுக் கொளுத்து' - 'சங்கப்பா முழுவதையும் சாம்பலாக்கு' என்றும் முழக்கமிட்டிருக்கிறீர்கள்.

'தமிழ்வாழ முழங்கு'வது சரிதான். அதுக்காக தமிழ் இலக்கியச் செல்வங்களை நாசமாக்கு என்று முழக்கமிடுவது தான் விபரீத ஆசையாக இருக்கிறது.

'அழகி' குறுங்காவியம் கதையில் புதுமையில்லை. கவிதைகள் நன்றாக, இனியனவாய், உள்ளன.

'கழுதைக்கு ஒரு பாமாலை' பாடியிருப்பதும் உங்களை ஒரு வித்தியாசமான கவிஞராகக் காட்டுகிறது.

சங்ககாலக் காதல் காட்சிகளை எளிய நடையில் தந்திருப்பது பாராட்டத் தகுந்த முயற்சி.

உங்கள் தமிழ் காதலும், கவிதை ஆற்றலும் வாழ்க; வளர்க!

அன்பு
வ. க.

சென்னை.
12-1-94

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

உங்கள் 4-1-94 கடிதம் கண்டு, நிலைமைகள் அறிந்தேன். எண்ணங்கள், விருப்பங்கள், ஆசைகள், திட்டங்கள் நிறைவேறுவதற்கு எவ்வளவோ தடங்கல்கள் குறுக்கிடுகின்றன. பணம் பெரிய தடங்கல்தான். பொருளாதார பலம் இல்லாத போது, பிறர் உதவியை, தயவை எதிர்பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது. காலம் கனியும் வரை காத்திருப்பது தவிர வேறு வழியில்லை. புது வருடம், உங்கள் முயற்சிகள் வெற்றி பெறுவதற்குத் துணைபுரியட்டும். 8-ம் தேதி, நண்பர் விக்கிரமன் அவர்களுடன் நீங்களும் பிறரும் பாண்டிச்சேரி போய், அங்கு கிளைச்சங்கம் துவக்கவிழாவை சிறப்பாக நடத்திமுடித்து மகிழ்ச்சியோடு சென்னை திரும்பியிருப்பீர்கள் என நம்புகிறேன். வாழ்த்துக்கள். இனிய நண்பர் எம். எஸ். தியாகராஜனுக்கு அன்பு வணக்கம். தி. க. சி அடிக்கடி கடிதம் எழுதுகிறார். நலமாக இருக்கிறார். சமீபத்தில் டாக்டரிடம் பரிசோதித்துக்கொண்டார். 'நார்மல்' ஆக இருப்பதாக டாக்டர் கூறினாராம். உங்கள் அன்பு விசாரிப்பை அவருக்குத் தெரிவிப்பேன்.

அன்பு
வ. க.

## முஸ்தபா

சென்னை.
1-12-93

அன்பு மிக்க முஸ்தபா,

வணக்கம்.

உங்கள் 13-11-93 நீண்ட கடிதத்துக்கு நன்றி. 26-ம் தேதிக் கடிதம் நேற்று கிடைத்தது. சந்தோஷம்.

முதல் கடிதத்தில் உங்களைப் பற்றி விரிவாக எழுதியிருந்தது மகிழ்ச்சி தந்தது. அதைப்படித்ததும் உங்களைப் பற்றி கெட்ட அபிப்ராயம் ஏற்படலாம் என்று நீங்கள் சந்தேகப்பட்டிருந்தீர்கள்.

அப்படி ஏன் மாறான அபிப்பிராயம் உண்டாக வேண்டும்? நண்பர்கள் சந்தித்தால், புதிதாக அறிமுகமானால், ஒருவருக்கொருவர் தங்களைப் பற்றி சொல்லிக் கொள்வது இயல்பான காரியம் தான். என்னைப் பற்றி புத்தகங்களில் வந்த விஷயங்களால் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களைப் பற்றி நீங்கள் சொல்லித்தானே நான் தெரிந்து கொள்ள இயலும்? மனம் விட்டு எழுதியதற்காக நன்றி.

வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் எப்படி எப்படியோ அமைந்துவிடுகிறது. எவரும் அவரவர் விருப்பப்படி, மனநிறைவுடன், அமைதியாகவும், சந்தோஷமாகவும் வாழ்வதற்கு குடும்பம், சமூகம், உறவுமுறைகள், இதர தொடர்புகள், நாட்டு நிலைமை, கால நிலைமைகள் முதலியன உதவுவதாக இல்லை.

ஒருவன் ஓரளவுக்காவது சந்தோஷமாக வாழ விரும்பினால், அதற்காக அவன் இதர பல விஷயங்களை இழக்க வேண்டித்தான் ஏற்படும். உள்ளதை (கிடைப்பதை) கொண்டு திருப்தி அடைகிற மனம் அந்த சந்தோஷத்துக்கு வகை செய்யக்கூடும்.

இப்படி சொல்லிவிடுவது கூட எளிது. ஆனால் நடைமுறையில் இதற்கும் எவ்வளவோ சிக்கல்கள், சிரமங்கள் ஏற்படத்தான் செய்யும். வாழ்க்கை ஒரு சமுத்திரம். சக்தி மிக்க பலவகையான அலைகள் எழுந்துகொண்டே இருக்கின்றன. அவற்றால் தாக்குண்டும், தள்ளுண்டும், அவற்றோடு சமாளித்தும், அமுங்கியும் எழுந்தும், தலையை தூக்கியும், அனுசரித்தும் மனிதர்கள் அல்லாட வேண்டியிருக்கிறது. அவை அனுபவங்கள் ஆகின்றன. அப்படி பலவகையான, பல்வேறுபட்ட மனித அனுபவங்களைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் உண்டாகிறது. அதற்கு பலரும் எழுதுகிற கதைகள், நாவல்கள் முதலியன உதவுகின்றன. கடிதங்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

உங்கள் வாழ்க்கையின் சோகங்களை புரிந்துகொள்ளமுடிகிறது. திருமணமாகி, மனைவி, குடும்பம் என்று இருந்தும், தூரா தொலையில் அயல் மனிதர்கள் மத்தியில் தனிநபராய் வாழ நேரிட்டிருக்கிற சோகம் கனமான சுமைதான். எண்ணற்ற பேருக்கு வாழ்க்கையே ஒரு சிலுவையாக அமைந்து விடுகிறது. அந்தச் சிலுவையை சுமந்தே தீரவேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கிறது.

அமைதி வளருங்கள். விரக்தி எண்ணங்களுக்கு இடம் தரக்கூடாது. கவிதை உள்ளம் பெற்றிருப்பது ஒரு நற்பேறு. கவிதைகளை படித்து ரசிக்க முடிவது ஒரு பாக்கியம். நல்ல புத்தகங்களை படிப்பது மனோகரமான சந்தோஷ அனுபவம்.

நீங்கள் குறுநாவல்கள் எழுதியுள்ளதை அறிந்து மகிழ்கிறேன். இப்பவும் புதிதாக ஒன்று எழுதிக் கொண்டிருப்பதும் சந்தோஷம் தருகிறது. இளம் வயசிலேயே விதம்விதமான அனுபவங்களை பெற்றிருக்கிறீர்கள். பலப்பல இடங்களை பார்த்திருப்பீர்கள். இவை உங்கள் உள்ளத்தின் சிறகுகள் விசாலித்து, விசிறிச் சிலிர்த்து புதிய புதிய எண்ண உலகங்களிலே சஞ்சரிக்க உதவட்டும். வாழ்த்துக்கள்.

அன்பு
வ. க.

சென்னை.
18-1-94

அன்பு நண்பர் முஸ்தபா,

வணக்கம்.

பொங்கல் வாழ்த்துக்களுக்கு நன்றி. மகிழ்ச்சி.

பொங்கல் நாள் மகிழ்ச்சியோடு கொண்டாடப்பட்டது.

புதுவருட வாழ்த்துக்கள். உங்கள் முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு புதுவருடம் துணைபுரியட்டும்.

முன்பே உங்களுக்குக் கடிதம் எழுதவேண்டும் என்று எண்ணினேன். 'நண்பர் வட்டம்' டிசம்பர் இதழில் 'மிட்டு' என்று நீங்கள் எழுதியிருந்த கதையைப் படித்து ரசித்தேன்.

நல்ல கதை. உயிர்களிடத்து அன்பு காட்டும் மென்மையான உள்ளத்தின் தவிப்பை அழகாக விவரிக்கிறது. பாராட்டுக்கள்.

இதழ் கிடைத்த சில நாட்களில் நான் வெளியூர் போக நேரிட்டது. தஞ்சாவூர். மன்னார்குடி என்று பத்து நாட்கள் போனேன். குடும்ப சம்பந்தமான வேலை.

எப்படி இருக்கிறீர்கள்? வழக்கம் போல் தான் என்கிறீர்களோ? பரவால்லே. சிரமங்கள், சிக்கல்கள் இல்லாமல் சீராக வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தால் சரிதான்.

இங்கு மழை வெளுத்து வாங்கியது. பிறகு குளிர் வந்தது. திடீரென்று குளிர் குறைந்து, வெயில் கடுமை பெற்று வருகிறது. இயற்கை அதன் போக்கில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

நீங்கள் புத்தகங்கள், பத்திரிகைகள் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா? நல்ல புத்தகங்கள் கிடைக்கின்றனவா?

இதுவரை எத்தனை கதைகள் எழுதியிருப்பீர்கள்? தொடர்ந்து எழுதுங்கள். எழுத எழுத வளர்ச்சி பெறமுடியும்.

சுப்ரபாரதி மணியனோடு தொடர்பு உண்டா? நீங்கள் அங்கு தனியாக ஏதாவது அறையில் இருக்கிறீர்களா? அல்லது வேறு நண்பர்களுடன் சேர்ந்து கூட்டு வாழ்க்கையா?

எப்படி இருந்தாலும் மனம் உற்சாகமாக இருக்கவேண்டும். கிட்டாத இன்பங்களை எண்ணி ஆசைகளை வளர்ப்பதை விட, அன்றாடம் எதிர்ப்படுகிற-சுலபமாக சித்திக்கிற - சின்னச் சின்ன சந்தோஷங்களை ரசித்து மகிழக் கூடிய மனம் வேண்டும். என் கவிதைகளில் ஒன்று இது-

நண்பரற்றுத் தனியனாய்
இருப்பதில்லை என்றும் நான்
இருளும் ஒளியும்
விண்ணும் வெளியும்
இரவின் வானத்துச் சுடர்களும்
பகலின் பற்பல வனப்புகளும்
மரங்களும் மலர்களும்
செடிகளும் இலைகளும்
புல்லும் பாதையும்
பறவைகள் ஒலியும்
தெருக்களும் ஊரும்
ஓடும் நதியும்
அலையெறி கடலும்,
புத்தகம் பலவும்,
பேனாவும் தாளும்-

இப்படி எல்லாம் எல்லாம் என்னுடன் பேசும் சிரிக்கும் கதைகள் சொல்லும். தனிமை கூட என் இனிய நண்பனேயாகும்.

அன்பு
வ. க.

சென்னை.
5-2-94

அன்பு மிக்க முஸ்தபா,

வணக்கம். உங்கள் 1-ம் தேதிக் கடிதம் நேற்று வந்தது. 'விழுது' 2 இதழ்கள் கிடைத்துவிட்டதை அறிய மகிழ்ச்சி. ஜனவரி-31ல் ஒரு கார்டு அனுப்பினேன். வந்திருக்கும். எனக்கு வருகிற பத்திரிகைகளை நான் படித்து, அனுப்பியவர்களுக்குக் கடிதம் எழுதிய பிறகு, தரமான இதழ்களை இலக்கிய ஈடுபாடு உள்ள நண்பர்களுக்கு அனுப்பிவிடுவது என் வழக்கம். அவற்றை சேர்த்துவைப்பதில்லை. அப்படி சேர்த்து வைக்க இடவசதியும் இல்லை. இன்று புக்போஸ்டில், விழி. இதயவேந்தன் சிறுகதைத் தொகுப்பு 'நந்தனார் தெரு' அனுப்பியிருக்கிறேன். நான் நலம். எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன். செம்மலர், கவிதாசரண், சிற்றிதழ் செய்தி ஆகியவற்றில் கட்டுரைகள் வருகின்றன. 'புதியபாதை'யில் எம்.வி. வெங்கட்ராமன் பற்றி ஒர கட்டுரை எழுதியுள்ளேன். சமீப நாட்களில் கதைகள் எழுதவில்லை. எழுதவேண்டும். சென்னையில் வெயில் கடுமை பெற்று வருகிறது. விரைவில் கோடைகாலம் வந்துவிடும். எழுத்தாளர் என். ஆர். தாசன் இறந்து போனார். நல்ல நண்பர். திறமையான படைப்பாளி.

அன்பு
வ. க.

## இரெத்தினசுவாமி

சென்னை-14.
6-7-87

அன்பு மிக்க நண்பர்,

வணக்கம். உங்கள் 3-7-87 கடிதம் கிடைத்தது. ஜூன் மாதம் எழுதிய கடிதமும் வந்தது.

விருதுநகரின் தண்ணீர் வறட்சி, கலாசார-இலக்கிய வறட்சி, நூலக வறட்சி பற்றி எல்லாம் எழுதியிருந்தீர்கள். விருதுநகர் பணம் பண்ணுகிறவர்களை-வணிக மனம் படைத்தவர்களையே - உருவாக்கி வந்திருக்கிறது. அரசியலில் 'பெரும் தலைவர் காமராஜ்' அவர் வழியில் பிறகு எவரும் வரவில்லை.

சாத்தூர், சிவகாசி, ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் பெயர் சொல்லும் எழுத்தாளர்கள் வந்திருக்கிறார்கள். விருதுநகர் பற்றிக் கூறும் எழுத்தாளர் எவரும் இல்லை. முன்பு ஆசைத்தம்பி என்பவர் இருந்தார். அப்புறம் எவரும் வரவில்லை என்றே நினைக்கிறேன்.

நீங்கள் சொல்வது போல, அங்கிருந்து ஒரு சிறுபத்திரிகை கூட வரவில்லை தான். ஆகவே, 'அண்ணன்' திருவள்ளுவர் சொன்னது மெத்தச் சரி: 'இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு, தெள்ளியராதல் வேறு'. வியாபாரம் மூலம் பணம் மிகுதியாகப் பண்ணக் கூடிய நபர்களை விருதுநகர் நெடுக அனுப்பிவைத்திருக்கிறது. அது போதும் என்று அவ்வூர்க்காரர்கள் கருதியிருக்கலாம்.

நீங்கள் படிப்பில் நாட்டம் கொள்ளாது, பத்திரிகைகளைப் புரட்டுவதிலும், அரட்டை அடிப்பதிலும் சுற்றுவதிலும நாட்களைக் கழிப்பதாக இரண்டு கடிதங்களிலும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

சுயகட்டுப்பாட்டுடன், உங்கள் போக்கை நீங்களே மாற்றிக் கொள்ளவேண்டிய விஷயத்தில் நான் என்ன அறிவுரை கூறமுடியும்?

பத்திரிகைகள் படிப்பதோடு, வேறு விஷயங்களும் படிக்கவேண்டும் என்கிற ஒரு தாகம்-ஒரு பசி-உள்ளத்தில் ஏற்படவேண்டும். அரட்டை மனமகிழ்வையும் சுலபப்பொழுதுபோக்கையும் தரும். கிடைக்கிற ஓய்வு நேரம் முழுவதையும் அதில் ஈடுபடுத்துவது சோம்பல்சுகவாச மோகமேயாகும். நண்பர்களோடு சிறிது நேரம் உரையாடி மகிழ வேண்டியதுதான். ஊர்சுற்றுவதும் தப்பு இல்லைதான். ஆனால் படிப்பிலும் மனசை செலுத்துவது நல்லது. படிப்பதற்குப் புத்தகங்கள் இல்லை என்கிறீர்கள்.

உங்கள் பள்ளிக்கூட லைபிரரியில் பொது நூல்களும் வாங்கி வைக்கப்பட்டிருக்கும் தானே? அநேக உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் புத்தகங்களை வாங்கிப் பாதுகாப்பில் வைக்கிறார். ஆசிரியர்கள் விரும்பிப் படிப்பதில்லை; மாணவர்களுக்கு நாங்கள் கொடுப்பதில்லை என்றும் சொல்கிறார்கள். உங்கள் பள்ளி நிலைமை எப்படியோ! ராஜபாளையத்தில் பல எழுத்தாளர்கள் (கொ.மா. கோதண்டம், ஜகந்நாத ராஜா போன்றவர்கள்) உண்டு. அவர்களை அறிமுகம் செய்துகொண்டு புத்தகங்கள் இரவல் பெறலாம்.

அன்பு
வ. க.

சென்னை.
9-11-87

அன்பு மிக்க நண்பர்,

வணக்கம். உங்கள் 22-10-87 கடிதம் அப்பவே கிடைத்துவிட்டது.

எங்கும் நல்ல மழை பெய்து, வறட்சி நீங்கிவிட்டதை அறிந்து மகிழ்கிறேன்.

சென்னையிலும் மழை பெய்தது. பெய்கிறது. ஒன்றிரு நாட்கள் கனத்தமழை. பிறகு தூறல்தான். ஆயினும், ஏரிகள் இருக்கிற பக்கம் மழை பெய்வதில்லை ஆகையால் குடிதண்ணீர் பிரச்னை இன்னும் நீடிக்கிறது.

நான் நலம். அக்டோபர் கடைசி வாரம் நான் ராஜவல்லிபுரம் போக எண்ணியிருப்பதாக முன்பு தெரிவித்தேன். அது நடைபெறுவதில் தடை ஏற்பட்டுவிட்டது.

நவம்பர் இறுதியில் புதுடில்லியில் சாகித்திய அகாடமி, புதுமைப்பித்தன் நினைவாக ஒரு கருத்தரங்கமும் சிறுவிழாவும் ஏற்பாடு செய்கிறது. க.நா.சு. தலைமை. சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், நா.பா. மற்றும் சிலர் கலந்துகொள்வர். நானும் கலந்துகொண்டு, ஒரு கட்டுரை படிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்

டில்லி போக வேண்டியிருப்பதால், இப்போது திருநெல்வேலி செல்ல இயலவில்லை. பின்னர் தான் பார்க்கவேண்டும்.

சாகித்திய அகாடமியின் 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' நூல் வரிசையில் நான் எழுதிக்கொடுத்த 'புதுமைப் பித்தன்' இம்மாதம் வெளிவந்து விடும்.

புதுமைப்பித்தன் கதைகள் 96ஐயும் (மொழிபெயர்ப்புக் கதைகள் கிடையா) ஒரே புத்தகமாக 'புதுமைப்பித்தன் படைப்புகள்' என்று ஐந்திணைப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. க.நா.சு ஆய்வுரை, ஜெயகாந்தன் அணிந்துரை. பழைய ரா. ஸ்ரீ. தேசிகன் முன்னுரை ஆகியவற்றுடன் விலை ரூ. 85/-. நான் பார்க்கவில்லை.

'தீபம்' பத்திரிகையில் நான் மாதம் தோறும் தனித் தனிக் கட்டுரை எழுதி வருகிறேன்.

'சோலைத்தேனீ' வெளியீடு (காட்பாடி) முன்பு பிரசுரித்த 'எழுத்தாளர்கள் - பத்திரிகைகள்' புத்தகம் போல 'வாசகர்களும்-விமர்சகர்களும்' என்றொரு புத்தகம் எழுதித் தரும்படி கேட்டார்கள். எழுதிக்கொடுத்திருக்கிறேன்.

நண்பர் ஜெயபால் நலம் தானே? அவருக்கு என் அன்பு வணக்கம்.

ஜெயடேவி போனவாரம் சென்னை வந்து நாலைந்து நாட்கள் தங்கி, பலரையும் பார்த்து விட்டுப் போனார். உங்களை நாகர்கோவிலில் கண்டு பேசியது பற்றியும் சொன்னார்.

அன்பு
வ. க.

சென்னை.
10-12-87

அன்பு மிக்க நண்பர்,

வணக்கம். நவம்பர் 25லிருந்து நான் சென்னையில் இல்லை. புதுடில்லி போயிருந்தேன். டிச. 5ம் தேதிதான் உங்கள் கடிதத்தைப் பார்த்தேன்.

உங்களுக்குப் பெண்குழந்தை பிறந்திருப்பதை அறிந்து மகிழ்கிறேன். தாயும் மகளும் நலமாக இருப்பார்கள் என நம்புகிறேன். என் வாழ்த்துக்கள்.

புதுடில்லியில் சாகித்திய அகாடமி நவ.28-29 தேதிகளில் 'புதுமைப்பித்தன் நினைவுக்கருத்தரங்கு' கூட்டியது. 25 மாலை கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரசில் போனேன். அசோகமித்திரனும், 'சாயாவனம்' சா. சந்தசாமியும் அதே ரயிலில் வந்தார்கள். 27 காலை டில்லி சேர்ந்தோம்.

28ல் வலம்புரிஜான் தலைமையில், க.நா.சு. சிறப்புரை(இங்கிலீஷ்). நான் சாகித்திய அகாடமிக்காக எழுதிய 'புதுமைப்பித்தன்' புத்தகம் அங்கு வெளியிடப்பட்டது. முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டு, ஜான் இங்கிலீஷில் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார். அசோகமித்திரன், வெங்கட்சாமிநாதன் இங்கிலீஷில் கட்டுரை படித்தார்கள். பிற்பகலில், நான் தமிழில் 'புதுமைப்பித்தன் விமர்சனக் கொள்கைகள்' பற்றி கட்டுரை வாசித்தேன். சி.ரவீந்திரன் பு.பி. கவிதைகள் பற்றி இங்கிலீஷில். சா. கந்தசாமி தமிழில்.

பல மொழிகளின் வாசகர்களும் வந்திருந்தார்கள். இரண்டாம் நாள், எனது தலைமையில், க.நா.சு., பு.பி. பற்றிப் பேசிய பிறகு, டில்லி ரசிகர்கள் பலர் அவரவர் எண்ணங்களை தமிழிலும் இங்கிலீஷிலும் வெளியிட்டார்கள்.

கருத்தரங்கு சிறப்பாக நடந்தது. ஒரு தமிழ் எழுத்தாளருக்கு,

அகில இந்திய நோக்கில், இப்படி ஒரு கருத்தரங்கு நடந்தது இது தான் முதல் தடவை. க.நா. சுப்ரமண்யம் தான் அதற்குத் தூண்டுதல். டில்லி தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் ஒரு கூட்டத்தில் எங்களைப் பாராட்டி கவுரவித்தது. -டிச. 1-ம் தேதி. 2-ம் தேதி இரவு நான், கந்தசாமி, அசோகமித்திரன் தமிழ்நாடு எக்ஸ்பிரசில் பிரயாணமானோம். 4ல் சென்னை சேர்ந்தோம்.

நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. தொடர்ந்து மழை தான்.

ஆனாலும், நகரப் பகுதிகளில் பெய்து ரோடுகளையும் பள்ளப் பகுதிகளையும் ஆறுகளாகவும் குளங்களாகவும் மாற்றுகிற மழை ரெட்ஹில்ஸ், பூண்டி, சோழவரம் ஏரிகள் பக்கம் பெய்யவில்லை. ஏரிகள் நிரம்ப வழியில்லை. இதுவரை கால்வாசி ஏரிகூட தண்ணீர் சேரவில்லை. எனவே, 2 நாட்களுக்கு ஒரு தடவை தான் 'வாட்டர் சப்ளை'. சிறிது நேரம் அதுவும் எல்லாப் பகுதிகளுக்கும் சீராக வருவதில்லை. 1987ஐ சென்னை ஒரு மாதிரி சமாளித்து விட்டது. 1988ல் வறட்சியும் தண்ணீர்த் தட்டுப்பாடும் படுமோசமாகத் தான் இருக்கும்.

நலம். நலம் தானே?

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
21-6-88

அன்பு மிக்க நண்பர்,

வணக்கம். ஞாயிறு மாலை நீங்கள் இவ்வூருக்கு வந்து, உரையாடிச் சென்றது சந்தோஷம் நிறைந்த மனோகரமான அனுபவம்-இரண்டு பேருக்குமே.

நீங்கள் மட்டும் அல்ல, பலரும் என்னிடம் அவ்வப்போது கேட்கிற கேள்வி தான் - சென்னையில் வசித்துவிட்டு ராஜவல்லி புரத்தில் எப்படி நாளோட்ட முடிகிறது என்று.

நான் சின்ன வயசிலிருந்தே ஒதுங்கி வாழப் பழகிவிட்டவன். விலகி இருந்து வேடிக்கை பார்த்து மகிழும் இயல்பினன். கனவுகளிலும் கற்பனைகளிலும், அவற்றிலேயே வளர்ந்த (வளர்க்கப்படுகிற) புத்தகங்களிலும் ஆழ்ந்து போகிறவன். மனிதர்களோடு நெருங்கிப் பழகாதவன்.

அதனால் நான் நாகரிகமும் பரபரப்பும் மிகுந்த சென்னையில்

இருப்பதும், அமைதியும் வசதிக்குறைவுகளும் நிறைந்த ராஜவல்லி புரத்தில் இருப்பதும் ஒன்றுபோல் தான். எங்கிருந்தாலும் எவரும் என்னுடன் பேசிப்பழகுவதில்லை. நானும் படிப்பது-எழுதுவது-சும்மா அங்கும் இங்கும் போவது ஆகியவற்றிலேயே ஈடுபட்டு, நேரம் போதவில்லையே என்று உணர்வதுதான் நியதியாக இருக்கிறது.

இந்தப் பெரிய வீடு சில வருடங்களுக்கு முன்பு மிகத் தனிமை உடையதாக இருந்தது. பின்பகுதியில் யாரும் வாடகைக்கு இருக்கவில்லை. வேலை செய்கிற முதியவளும் பெரும்பாலும் வீட்டில் இருக்கமாட்டாள்.. மகள் இருக்கிற ஊருக்குப் போய்விடுவாள். அல்லது எங்காவது போய் பொம்பிளைகளோடு பேசிப் பொழுது போக்கிக் கொண்டிருப்பாள். யாருமே இல்லாத அமைதியும் தனிமையும் எனக்கு வெகுவாகப் பிடித்திருக்கும். சமீப வருடங்களில் அவள் தன் இஷ்டத்துக்கு வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டிருப்பதால், அந்தப் பக்கம் ஆட்கள் பழக்கம் இருக்கிறது. இந்தப் பக்கம் அவளுடைய மகள், பேரன் பேத்திகள், பூட்டன் பூட்டி என்று அடிக்கடி கும்பல் மிகுந்து, அமைதி போய் விடுகிறது. வசதிக் குறைவுகளும் ஏற்படுகிறது. இது எனக்கு சங்கடமாக இருக்கிறது.

'பிணையல்' கதைத் தொகுதியைப் படித்துவிட்டேன்.

மலர் அமுதன் கதைகள் நடைச்செறிவுடன் எழுதப்பட்டுள்ளன. முதல் கதை 'பிணையல்' மட்டுமே நாஞ்சில்நாட்டு பேச்சுத் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. மற்றவை கலப்படமான நடையிலேயே உள்ளன. பல வெறும் 'ஸ்கெட்ச்சஸ்' ஆக உள்ளன. கதைகளாக அமையவில்லை. ஆனாலும், நல்ல முயற்சிகள் தான்.

தீஸ்மாஸ் டி செல்வா கதைகள் கதைகளாக அமைந்துள்ளன. 'ஸட்டயர்'(அங்கதம் அல்லது நையாண்டி) கலந்து ரசமாக இருக்கின்றன.

மலர் அமுதனுக்கும் இன்று கடிதம் எழுதியிருக்கிறேன். நண்பர் ஜெயபாலனுக்கு என் வணக்கம்.

அன்பு
வ. க

சென்னை.
26-11-88

அன்புமிக்க நண்பர்,

வணக்கம். உங்கள் 19-11-88 கடிதம் 21-ம் தேதி கிடைத்தது.

நான் சென்னையில் தான் இருக்கிறேன். எங்கும் போகவில்லை.

தீபாவளி வாரத்தில் சில தினங்கள் நல்ல மழை பெய்தது. பின்னரும் சில நாட்கள் அவ்வப்போது மழை வந்து போனது. இதனால் எல்லாம் ஏரிகளில் ஓரளவுக்குத் தண்ணீர் பெருகியுள்ளது. குடிதண்ணீர் பிரச்னை குறைந்திருக்கிறதே தவிர, தட்டுப்பாடு முழுதாக நீங்கிவிடவில்லை. ஒருநாள் விட்டு ஒருநாள் தான் குடிதண்ணீர் சப்ளை. தண்ணீருக்காகப் பலரும் அலைகிற அலைச்சல்கள், இப்பவும் எங்கும் காணமுடிகிறது.

தீபாவளி வந்துபோனது. வழக்கம் போல் ஜனங்கள் கொண்டாடிக் களித்தார்கள். 'கலைமகள்', 'கல்கி', 'அமுதசுரபி', 'இதயம் பேசுகிறது' பெரிய அளவில் தீபாவளி மலர்களை வெளியிட்டுள்ளன. பார்த்தேன். படிக்கவில்லை. எல்லா வருடங்களையும் போல் தான் இருக்கிறது. புதுமை இல்லை.

'காலச்சுவடு' நாலாவது இதழ் தரமாக அமைந்துள்ளது. நீங்கள் குறிப்பிட்டிருப்பது சரிதான். நண்பர் சுரா. ஒரு வருடம் பத்திரிகையை வெற்றிகரமாக நடத்திவிட்டார். தொடர்ந்து நடத்தப் போதுமான ஆதரவு அவருக்கு கிடைத்துக் கொண்டுதானிருக்கும்.

'இளமை காலம்' என்றொரு புதிய வாரப்பத்திரிகை வருகிறது. 3 இதழ்கள் வந்துவிட்டன. மேத்தா ஒரு பக்கக் கட்டுரை. 'தராசு' 'ஜுனியர்விகடன்' போல் மற்றுமொரு பத்திரிகை. ஏகப்பட்ட படங்கள். செக்ஸை அதிகமாகக் கொண்ட கதைகள், கட்டுரைகள். விற்பனை அதிகம் இருக்கும் என்று சொல்வதற்கில்லை. தீபாவளி நாளில் வந்துவிடும் என்று விளம்பரப்படுத்தப்பட்ட 'மங்களம்' வாரஇதழ் இன்னும் வரவில்லை. மலையாள வாரப் பத்திரிகை நடத்துகிறவர்கள், விநியோக ஆபீசை கோவையிலும், ஆசிரியர் குழு அலுவலகத்தை சென்னை மவுண்ட் ரோடிலும் கொண்டு செயல்படுகிறார்கள். பத்திரிகை கண்டிப்பாக வந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. மேலும் எத்தனையோ புது வாரப் பத்திரிகைகள், நாளேடுகள்.

நீங்களும் உங்கள் துணைவியும் நலம்தானே? நான், என் அண்ணா, அண்ணி, பிள்ளைகள் எல்லோரும் நலம்.

நண்பர் ஜெயபால் நலமாக இருப்பதை அறிய மகிழ்ச்சி.

அன்பு

வ. க.

சென்னை.
6-2-89

அன்பு மிக்க நண்பர், வணக்கம்.

பொங்கல் விடுமுறையில் சொந்த ஊருக்குப் போவதாக நீங்கள் எழுதிய கடிதம் முன்பு கிடைத்தது. திட்டமிட்டபடி ஊர் போய்விட்டு, உரிய நாளில் விருதுநகர் வந்து வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருப்பீர்கள் என நம்புகிறேன்.

நீங்களும் ட னைவியும் நலம் தானே? நான் நலமாக இருக்கிறேன்.

சிறுபத்திரிகைகள் சங்கம் முதலாம் ஆண்டுவிழா சிவகாசியில் வரும் 12-ம் தேதி நடைபெறுகிறது. அதற்கு நான் வருவேன். 11-ம் தேதியே சிவகாசி வந்துவிடுவேன். நிகழ்ச்சி முடிந்தபின் விருதுநகர் வந்து உங்களை சந்திப்பேன். 13 செவ்வாயன்று வரமுடியும் என எண்ணுகிறேன்.

நண்பர் ஜெயபாலனுக்கு கடிதம் எழுதீயிருக்கிறேன்.

சிவகாசி நிகழ்ச்சிக்கு இடைசெவலிலிருந்து ராஜநாராயணனும் வருவார்.

'காலச்சுவடு' 5-வது இதழ் இன்னும் வரவில்லை. இம்மாதம் வந்துவிடும் என்று நினைக்கிறேன்.

நான் ஜனவரி 15ல் மயிலாடுதுறை போயிருந்தேன். அங்கே தெய்வத் தமிழ் மன்றம், தமிழ்நாவல் விழாவைக் கொண்டாடியது. தமிழ் நாவல்கள் பற்றிப் பேசினேன். பேராசிரியர் எழில்முதல்வன் தலைமை நாஞ்சில்நாடன் நாவல் 'மிதவை'க்கு விருது வழங்கப்பட்டது. நாஞ்சில்நாடன் பம்பாயிலிருந்து வந்திருந்தார். புதுக்கோட்டை பேராசிரியர் 'மிதவை' பற்றிப் பேசினார்.

சென்னையில் ஜனவரியில் பொங்கலுக்கு முன்னர் 10 நாட்கள் புத்தகக் கண்காட்சி நடந்தது. அனைத்து பிரசுரகர்த்தர்களும் ஸ்டால்கள் வைத்திருந்தார்கள். புத்தகங்கள் நிறைய விற்பனை ஆயின.

இங்கு இரவில் பனியும் குளிரும் அதிகம். பகலில் வெயில் கடுமை. இப்பவே கோடை காலம் மாதிரி வெயில் காய்கிறது.

பத்திரிகை உலகம் வழக்கம்போல் இருக்கிறது. புதியபுதிய பத்திரிகைகள் வந்துகொண்டு தான் இருக்கின்றன. சிறு பத்திரிகைகள் தரமானவை மிகச் சிலவே. பழவந்தாங்கல் (சென்னை) ஆர். மகாதேவன் வெளியிடும் 'முன்றில்' நன்றாக இருக்கிறது செகந்தராபாத், சுப்ரபாரதிமணியன் 'கனவு' காலாண்டு இதழை விடாது நடத்திக்கொண்டிருக்கிறார். 8 இதழ்கள் வந்துள்ளன.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
1-6-89

அன்பு மிக்க நண்பர்,

வணக்கம். மே 16 முதல் நான் இந்த ஊரில் இருக்கிறேன்.

உங்களிடமிருந்து கடிதம் வராததாலும், நண்பர் ஜெயபாலனிடமிருந்து எவ்விதமான தகவலும் இல்லாததாலும், நான் யாருக்கும் எழுதவில்லை.

நீங்களும் மனைவியும் நலம்தானே? ஜெயபாலன் இப்போது எப்படி இருக்கிறார்? நடக்க, வழக்கமான அலுவல்களை செய்ய முடிகிறதா?

நண்பர் பாரதிசங்கருக்கு மே 15ல் திருமணம் என அழைப்பு வந்தது. வாழ்த்து அனுப்பினேன். அவரிடமிருந்தும் கடிதம் இல்லை. அவர் கல்லுப்பட்டியில் இருப்பார் என்று எண்ணுகிறேன்.

இவ்வூரில் முக்கிய வேலை முடிந்தது. எங்கள் வயல்கள் விற்பனை முடிந்து, மே 25ல் ரிஜிஸ்ட்ரேஷனும் நடந்துமுடிந்தது.

இந்தப் பக்கமெல்லாம் பெருங்காற்று. எப்பவும் காற்று சுழன்று, புழுதியை அள்ளி வீசுகிறது. வெயிலும் அதிகம் தான்.

ஆற்றில் தண்ணீர் நிலைமை மகாமோசம். அசைவதில்லை. அங்கங்கே சிறிது சிறிது தேங்கிக் கிடக்கிறது. சுத்தமாகவும் இல்லை.

'குங்குமம்' இதழில் வந்த 'அமுக்கான் பிசாசு' கட்டுரையைப் படித்துவிட்டு நீங்கள் எழுதிய 24-5-89 கடிதம், சென்னை சென்று திரும்பி, நேற்று இங்கு வந்தது. சந்தோஷம்.

'சீன எழுத்தாளர் லூசுன் சிறுகதைகள்' மதிப்புரை 27-5-89 'தினமணி'யில் வந்தது. லூசுன் கதைகள் நன்றாக இருக்கும்.

இன்று முதல் பள்ளிக்கூடம் திறந்து வழக்கமான பணிகள் தொடரும் என எழுதியிருந்தீர்கள். இம்முறை லீவு நாட்களில் சுந்தர ராமசாமியை சந்தித்தீர்களா? ஜெயதேவி சந்திப்பு உண்டா?

நான் 10ம் தேதி வாக்கில் இங்கிருந்து புறப்பட எண்ணியிருக்கிறேன். உடுமலைப்பேட்டை போகவேண்டும். பெரிய அண்ணாச்சியின் மகள், மருமகன், பேரன்கள் அங்கே இருக்கிறார்கள். போனால், 15 நாட்களாவது தங்க வேண்டியிருக்கும். அதன் பிறகு தான் சென்னை போக முடியும்.

நலமாக இருக்கிறேன். சில சிறு பத்திரிகைகளில் கட்டுரைகள் வந்தன. (தாமரை, முன்றில், புதிய பாசறை) பெரிதாக எதுவும் எழுதவில்லை.

அன்பு
வ. க.

சென்னை.
31-10-89

அன்புமிக்க நண்பர்,

வணக்கம். உங்கள் 26-10-89 கடிதம் 30ம் தேதிதான் வந்த சேர்ந்தது. ஏதோ தாமதமாகவாவது கிடைத்ததே என்று சந்தோஷப்பட வேண்டியதுதான். இப்போதெல்லாம் தபால்கள் தட்டுக்கெடுவதும், தவறிப்போவதும் சகஜ நிகழ்வுகள் ஆகிவிட்டன.

போனவாரம் உங்களுக்குக் கடிதம் எழுதலாம் என்று நினைத்தேன். ஒருவேளை பள்ளி விடுமுறையில் ஊருக்குப் போயிருக்கலாம் என்று எண்ணி சும்மா இருந்துவிட்டேன்.

ஆகஸ்ட் 11முதல் செப்டம்பர் 21 முடிய தான் கோயமுத்தூரில் தங்கியிருந்தேன். ஆகஸ்ட் 12 அன்று 'கம்பராயன்' என்ற எழுத்தாளரின் கதைப் புத்தகம் வெளியீட்டு விழா. 15ல் வேறொரு புத்தக வெளியீடு. செப். 10ல் 'தாராமதி' என்ற சிறுபத்திரிகை நடத்தும் ராமரத்நம் (இவர் தமிழ்நாடு எழுத்தாளர் உறவு மாநிலப் பொருளாளர்) மணிவிழா. இடையில், செப். 6ம் தேதி ராமரத்நமும் நானும் அரக்கோணம் போனோம். பஸ்ஸில், 'வண்டு' என்ற சிறுபத்திரிகை நடத்தும் ்னிவாசனுக்கு திருமணம். அதை ஒட்டி இலக்கிய நிகழ்ச்சிகளும் ற்பாடு செய்திருந்தார். வேலூர் வரை பஸ் வசதி இருந்தது. இரவு ) மணிக்கு மேல் ஆகிவிட்டதால், அரக்கோணத்துக்கு பஸ் இல்லை. பாலாஜா ரோடு போய், லாரியில் போகமுயன்றோம். லாரியில் ஏறியபோது நான் தவறி விழுந்தேன். நல்லவேளையாக பின் நின்ற நண்பர் தாங்கிப் பிடித்துக்கொண்டார். இல்லையேல் மண்டையில், முதுகெலும்பில், அடிபட்டிருக்கக்கூடும். இப்போது, இடது கால் பாதத்தில் மட்டும் வெட்டுக்காயம் ஏற்பட்டது. கால் சக்கரத்தில் சிக்கியதால். உடனேயே (மணி இரவு 1) ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றேன். பிறகு, அரக்கோணத்துக்கு ரயிலில் போனோம். 8-ம் தேதி கோவை சேர்ந்து, சிகிச்சையை தொடர்ந்து பெற்றேன். கால்காயம் ஆறிவிட்டது. மெதுமெதுவாகக் குணம் கண்டது. ஒன்றரை மாத காலம் வீட்டுக்குள்ளேயே முடங்கிப் போனேன். சரியாக நடக்கமுடியாததால். இப்பவும் காலில் சிறிது வீக்கம் இருக்கிறது. சகஜமாக நடப்பதற்கு இன்னும் சில நாட்கள் பிடிக்கும். என் அண்ணாவும் குடும்பத்தாரும் சுகம். நீங்கள், மனைவி, குழந்தை நலமாக இருப்பதை அறிய மகிழ்ச்சி. நண்பர் ஜெயபாலுக்கு என் அன்பு. திரு. பாரதிசங்கர் ஒருநாள் இங்கே வந்துபோனார். பத்திரிகை புத்தக உலகம் வழக்கம்போல் இருக்கிறது. 'காலச்சுவடு'-7 படித்தேன்.

அன்பு
வ. க.

சென்னை.
27-11-89

அன்பு மிக்க நண்பர், வணக்கம்.

உங்கள் 18-11-89 கடிதம் கிடைத்தது. அதுக்கு முன்பு எழுதிய கார்டும் வந்து சேர்ந்தது. தகவல்கள் அறிய மகிழ்ச்சி.

நான் நலம். என் அண்ணாவும் குடும்பத்தினரும் சுகம்.

மழை சில நாட்கள் பெய்த போதிலும், போதுமான அளவு பெய்யவில்லை. 'ஐப்பசி மாதம் - அடைமழைக்காலம்' என்பது பொய்த்துப் போச்சு.

சென்னை நகருக்குக் குடிதண்ணீர் சப்ளை பண்ணுகிற ஏரிகளில் தண்ணீர் குறைந்த அளவு தான் சேர்ந்துள்ளது. ஒரு நாள் விட்டு ஒருநாள், குறிப்பிட்ட சில மணி நேரம், தண்ணீர் சப்ளை பண்ணுவதற்கு பிப்ரவரி இறுதி வரை தாக்குப் பிடிக்கும். தண்ணீர் பெருகியுள்ளது. ஆகவே, கோடையில் 'தண்ணீர் கஷ்டம்' அதிகமாகத் தான் இருக்கும்.

நவம்பர் 12-ம் தேதி எனது பிறந்தநாள். 69 வயது முடிந்து 70 பிறந்துள்ளது. நண்பர்கள் தி.க. சிவசங்கரன், சு. சமுத்திரம், செந்தில்நாதன், என். ஆர். தாசன், மற்றும் சிலர் கூடி வாழ்த்து தெரிவித்தார்கள்.

எனது வாழ்க்கை அனுபவங்களை, நினைவுகளை எழுதவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். பல நண்பர்கள், வாசகர்கள் கூட அவ்வப்போது இப்படிக் கோருகிறார்கள். நினைவுகளை புத்தகமாக எழுதலாம் என்றிருக்கிறேன். இன்னும் எழுத ஆரம்பிக்கவில்லை.

சமீபத்தில் எதுவும் எழுதவில்லை.

கடிதங்கள் எழுதுவதிலேயே பெரும் பகுதி நேரம் போய்விடுகிறது. அப்புறம், படிப்பதில்.

படிப்பதற்குப் புதிய புத்தகங்கள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இல.செ. கந்தசாமி, உதயமூர்த்தி பாணியில், தன் முன்னேற்ற நூல்கள் (Self-improvement Books) பல எழுதியிருக்கிறார். அவற்றை படித்தேன்.

பல சிறுகதைத் தொகுப்புகள்.

பாலகுமாரன் 'முன்கதைச் சுருக்கம்' என்று தன் வரலாற்றை

எழுதியிருக்கிறார். 'தாய்' வார இதழில் பிரசுரமான இக்கட்டுரைகளை நர்மதா பதிப்பகம் புத்தகமாக வெளியிட்டிருக்கிறது. ஒளிவு மறைவு இல்லாமல் தனது அனுபவங்களையும் எண்ணங்களையும் பாலகுமாரன் எழுதியுள்ளார். சுவாரஸ்யமாக இருக்கிறது.

நண்பர் ஜெயபாலுக்கு வணக்கம். அவரது நலம் அறிய மகிழ்வு.

ராஜவல்லிபுரத்துக்கு இப்போது போகவில்லை. ஜனவரி-பிப்ரவரியில் தான் போக இயலும்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
19-7-90

அன்பு மிக்க நண்பர்,

வணக்கம், உங்கள் 3-7-90 கடிதம்... மகிழ்ச்சி.

நான் ஜுன் 25ல் இவ்வூர் சேர்ந்தேன். நலமாக இருக்கிறேன்.

ஜுலை 7ம்தேதி ராஜபாளையம் போனேன். கொ. மா. கோதண்டம், ராஜபாளையம் எழுத்தாளர்கள் 23 பேரின் சிறுகதைகளை தொகுத்து 'புதிய முகில்கள்' என்ற புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். அதன் வெளியீட்டு விழாவுக்கு என்னை அழைத்திருந்தார். கே. சி. எஸ். அருணாசலமும், டாக்டர் சி. கனகசபாபதியும் வந்திருந்தார்கள். நல்ல இலக்கிய நிகழ்ச்சி.

சென்னையில் சோவியத் செய்தித் துறையில் 25 வருடங்கள் பணிபுரிந்த தி.க. சிவசங்கரன் திருநெல்வேலிக்கே வந்துவிட்டார்-ஓய்வு பெற்று.

தோப்பில் முகம்மது மீரான் என்றொரு புதிய நண்பர். குமரி மாவட்டம் தேங்காபட்டணத்தை சேர்ந்தவர். 'ஒரு கடலோர கிராமத்தின் கதை' என்ற அருமையான நாவலின் ஆசிரியர்.

நாங்கள் மூன்று பேரும் 14ம் தேதி திருச்செந்தூர் போனோம். களந்தை பீர்முகம்மது என்ற எழுத்தாளர் அங்கு இருக்கிறார். வேறு சில இளம் எழுத்தாளர்களும். அவர்களை சந்தித்து உரையாடினோம். மறுநாள், பக்கத்தில் உள்ள ஆறுமுகனேரி-செல்வராஜபுரம் போனோம். அன்று இரவே திருநெல்வேலி வந்து சேர்ந்தோம்

நலமாக இருக்கிறேன். ஆகஸ்ட் மாதமும் இவ்வூரில் தான்.

விசேஷம் ஒன்றும் இல்லை. சும்மா ஒரு மாறுதல். அவ்வளவு தான்.

நண்பர் ஜெயபாலன் கடிதம் எழுதியிருந்தார். அவருக்கும் இன்றுதான் எழுதுகிறேன்.

'காவச்கவடு' 1990ல் ஒரு இதழ் கூட வரவில்லை. எப்போது வரும் என்றும் தெரியவில்லை. கடிதம் எழுதுகிறவர்களுக்கு 'இதழ் வரும்' என்றுதான் சுந்தர ராமசாமி பதில் எழுதிக்கொண்டிருக்கிறார்.

செகந்தராபாத்திலிருந்து சுப்ரபாரதிமணியன் நடத்தும் காலாண்டிதழ் 'கனவு' ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது.

பாளையங்கோட்டையில் பாக்கியமுத்து நடத்துகிற 'நண்பர் வட்டம்' மாத இதழுக்கு மூன்றாண்டுகள் முடிந்துவிட்டன. தொடர்ந்து வரும்.

விருதுநகருக்கு ஒருமுறை வரவேண்டும் நான். எப்போது சவுகரியப்படும் என்று தெரியவில்லை.

அன்பு
வ. க.

சென்னை.
4-2-91

அன்பு மிக்க நண்பர்,

வணக்கம், உங்கள் 22-1-91 கடிதம் பெற்று மகிழ்ச்சி அடைந்தேன். நீங்கள் அனைவரும் நலமாக இருப்பதை அறிய சந்தோஷம்.

நானும், என் அண்ணாவும், குடும்பத்தில் அனைவரும் சுகம்.

RMS ஊழியர்கள் வேலை நிறுத்தம் தபால் போக்குவரத்தை வெகுவாக பாதித்தது. அதனால் ஜனவரியில் நான் கடிதம் எழுதவில்லை.

தினமணி-தமிழ் மணியில் தொடர்ந்து சில புத்தக மதிப்புரைகள் (நான் எழுதியவை) வந்தன. அவற்றை நீங்கள் படித்ததை அறிந்தேன். இன்னும் இரண்டு மூன்று புத்தகங்களுக்கு மதிப்புரை வரவேண்டும்.

'தீபம்' நா. பார்த்தசாரதி அஞ்சலிக்கூட்டம் டிசம்பரில் சிறு அளவில் நடைபெற்றது.

சு. சமுத்திரம் நாவல் "வேரில் பழுத்த பலா' சாகித்திய அகாடமிப்

பரிசை பெற்றதைப் பாராட்டி ஜனவரி 22ம் தேதி மயிலாப்பூரில் ஒரு கூட்டம் நடந்தது.

இவ் இரண்டிலும் நான் கலந்துகொண்டேன். ஜனவரி 7,8,9 தேதிகளில் சென்னை பல்கலைக்கழகம் இலக்கியப் பிரிவில் ஒரு அறக்கட்டளை சொற்பொழிவு நிகழ்த்தும் வாய்ப்பு கிட்டியது.

'50 வருடங்களில் தமிழ் புத்தக வெளியீட்டின் வளர்ச்சி' என்பது பொருள். 1. 1940களிலும் அதுக்கு முன்னரும் 2. 1950முதல் 1970கள் முடிய. 3. 1980களில் புத்தக வெளியீட்டு நிலை.

மூன்று கட்டுரைகள் எழுதிப் படித்தேன். 120 பக்கங்கள் கொண்ட புத்தகமாக வரும். புத்தகமாக வெளியிட முயலவேண்டும்.

'கணையாழி' வடிவ மாற்றம் பெற்றுள்ளது. வண்ணநிலவன் 'குங்குமம்' இதழில், 4 கதைகள் எழுதினார். பிறகு 'தாய்' இதழில் 4 கதைகள். அவர் மீண்டும் சுறுசுறுப்பாக எழுதுகிறார். நன்றாகவும் எழுதுகிறார்.

இந்த வருடம் அகிலன் நினைவுப்பரிசு ஜெயமோகன் எழுதிய 'ரப்பர்' என்ற நாவலுக்கு அளிக்கப்பட்டது. ஜெயமோகன் நன்றாக எழுதக்கூடியவர். அழகான -செறிவான தமிழ்நடை அவருடையது. 'ரப்பர்' நல்ல நாவல்தான்.

நண்பர் ஜெயபாலுக்கு என் அன்பு வணக்கம்.

அன்பு
வ. க.

சென்னை.
18-11-93

அன்பு மிக்க நண்பர் ரெத்தினசுவாமி அவர்களுக்கு,

வணக்கம். நீண்ட இடைவேளைக்குப் பிறகு வந்த உங்கள் 12ம் தேதிக்கடிதம் (நேற்று கிடைத்தது) ரொம்ப சந்தோஷம் தந்தது. உங்கள் நினைவு என்றும் உண்டு. கடிதம் எழுதலாம் என்று நினைப்பேன்; நீங்கள் விருதுநகரில் இருப்பீர்களோ இல்லையோ என்ற எண்ணம் எழும். எழுதாமலே இருந்துவிட்டேன். நலம்தானே? மனைவியும் குழந்தைகளும் சுகமா? நான் நலம். அண்ணியும் பிள்ளைகளும் நலமாக இருக்கிறார்கள். சென்னையிலும் தொடர்ந்து நல்ல மழைதான். தீபாவளியன்றும் மறுநாளும் மழை விட்டிருந்தது. தீபாவளியை கொண்டாடியவர்களுக்கு உற்சாகம் தான். பிறகு மீண்டும்

மழை தொடர்ந்தது. இப்ப இரண்டு நாட்களாக மழை இல்லை. வெயில் சுகமாக இருக்கிறது.

'சுபமங்களா'வில் எனது 'பெரிய மனுஷி' பற்றிய செய்தி இப்போது எப்படி இடம் பெற்றதோ தெரியவில்லை. இது ரொம்பப் பழைய சமாச்சாரம். அந்தப் புத்தகம் (யுனெஸ்கோ வெளியீடு) ஜப்பானில் அச்சடிக்கப்பட்டு 1979லேயே வெளிவந்துவிட்டது. இப்ப கண்டா மறுபதிப்புவந்துள்ளதோ என்னவோ! எனக்கு தகவல் எதுவும் இல்லை. 'சுபமங்களா'வில் இச்செய்தியை வாசிப்பவர்கள் புதிய முயற்சி என்று தான் நினைப்பார்கள். உங்களைப் போலவே இன்னும் சில நண்பர்களும் சந்தோஷமும் வாழ்த்தும் தெரிவித்திருக்கிறார்கள். புத்தகங்கள் படிக்க நேரம் கிடைக்கிறதா?

பொன்னீலன் நாவல் 'புதிய தரிசனங்கள்' (3 பாகங்கள்) படித்தீர்களா? நாஞ்சில்நாடன் 'சதுரங்கக்குதிரை' என்றொரு நாவலை சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார். (கோவை விஜயா பதிப்பகம் வெளியீடு). நான்படிக்கவில்லை. நன்றாக இருக்கிறது என்று தி.க.சி எழுதியிருந்தார். நான் சென்னையில் தான் இருக்கிறேன். திருநெல்வேலி க்கோ, வேறு எங்குமோ போகவில்லை.

நண்பர் ஜெயபாலன் எப்படி இருக்கிறார்? தல்லாகுளம் போஸ்ட் ஆபீசில் தான் வேலையா? வீட்டு விலாசம் C.R.O காலனி ஆலங்குளம், அனையூர் P.O. என்று முன்பு தெரிவித்திருந்தார். இப்போதும் அதே முகவரிதானா? தெரிந்தால், எழுதுக.

அன்பு
வ. க.

## ஆதவன் (கே.எஸ்.சுந்தரம்)

5-6-84

அன்பு மிக்க ஆதவன்,

வணக்கம். மே மாதம் நான் உங்களுக்குக் கடிதம் எழுதவேயில்லை. விஷயங்கள் இல்லாமல் இல்லை. ஏனோ ஒரு சோர்வு. சும்மா கண்களை மூடிக்கொண்டு படுத்துக் கிடப்பதே - எதையும் படிக்காது, எதையும் எழுதாது, எதுவுமே எண்ணாது 'சவாசனம்' பயில்வதே - சுகானுபவமாகத் தோன்றும் ஒரு மனநிலை. எழுதிப் படித்து எண்ணிஎண்ணி என்ன ஆகப்போகிறது; 'தூங்காமல்

தூங்கி சுகம் பெறுவதே' அருமையான ஆனந்தம் என்று மனம் ஒரு மிதப்பிலே சொக்கிக் கிடந்தது!

சி.சு. செல்லப்பாவை போற்றிப்' புகழ வேண்டும். வியந்து துதி பாடலாம் 74 வயசிலும் விடாது ஏதாவது பண்ணிக்கொண்டு இருக்க வேண்டும் எனும் துடிப்பு இருக்கிறது அவருக்கு. சென்னையில் தங்கி, அலைந்து நிதி வசூல் பண்ணி, வத்தலக்குண்டில் மே 17ல் பி.எஸ். ராமையா நினைவு நாளை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்து முடித்தார்.

'ராமையா வளர்ந்த வீடு' என்று ஒரு வீட்டில் கல் பதித்து, அதை நடிகர் எஸ்.வி. சகஸ்ரநாமம் திறந்து வைத்துப் பேசினார். பி.எஸ். ராமையா படத்தை நா.பா. திறந்து வைத்தார்; பேசினார். மற்றும் சிட்டி, வ.க. கோமதி சாமிநாதன், கோமல்சுவாமிநாதன், தி.க.சி., டி. செல்வராஜ், எஸ்.வி.எஸ். பேசினார்கள். விழா இனிது நிகழ்ந்தது. கல்யாண வீட்டு விருந்தை நினைவுபடுத்தும் சாப்பாடு உண்டு.

விழாவுக்குப் பிறகு, 18லும் நான் வத்தலக்குண்டில் இருந்தேன் பிறகு ஒரு வாரம் திண்டுகல்லில். கமலவேலன் வீட்டில் பள்ளி ஆசிரியர் கதைகள் எழுதுவார். நல்ல நண்பர்.

வெயில் மிக்க கடுமைதான்.

செல்லப்பா திரும்பவும் சென்னை வந்துவிட்டார். இனி இங்கேயே தங்கி, 'சுவை' என்றொரு காலாண்டு ஏடு நடத்துவதில் தீவிர எண்ணம் கொண்டிருக்கிறார்.

நா. பா. 'ஃபாரின் டூர்' போய்விட்டார். மேற்கு ஜெர்மனி, மற்றும் பல நகரங்கள், நாடுகள் சுற்றி விட்டு, துபாய் போய், ஜூலை கடைசியில் சென்னை திரும்புவார்.

ஏப்ரல் இறுதியில் கௌசாத்தி பாக்கியமுத்து தமிழ்நாடு வந்து போனார். நானும் தி.க.சி.யும் அவரை கண்டு பேசினோம். அவர் புதுடில்லி வந்த சமயம், உங்களுடைய பாரதி நாடகத்தை படித்ததாகவும், ரொம்ப நன்றாக அதை நீங்கள் எழுதியிருக்கிறீர்கள் என்றும் சொன்னார்.

வெளியூர் நண்பர்கள் அவ்வப்போது சென்னை வந்து போகிறார்கள். என்னை அவர்களோ, அவர்களை நானோ பார்ப்பதில்லை. அவர்கள் உலகம் வேறு. சுயம்பிரகாசச் சொள்ளமுத்து ஆன என்னுடைய உலகம் வேறு. எனது உலகம் ரொம்பக் குறுகியது. அதைக் கூட நான், ஆரம்பத்திலேயே குறிப்பிட்டது போல, ஒரு சவாசன வட்டத்துக்குள் குறுக்கி விடுவதில் ஆர்வம் உடையவனாக இருக்கிறேன்.

மனிதர்கள் இருந்தவாறு - இருக்கும் வாறு- என்னே என்னே!

நீங்கள் பெங்களூரில் தென்பிராந்திய அலுவலகத்துக்கு வந்து செயல்புரிந்து கொண்டிருக்கிறீர்களோ என்னவோ! நான் 'தூங்கி முழிச்சு' புதுடில்லிக்குக் கடிதம் எழுதுகிறேன். கடிதம் எப்படியும் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில்.

அன்பு
வ. க.

## பாரதிசங்கர்

சென்னை-14.
3-12-85

பிரிய பாரதிசங்கர்,

வணக்கம். உங்கள் 25-11-85 கடிதம். கிடைத்து ஒரு மாதத்துக்கு மேலாகிறது. இன்றுதான் உங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன்.

உங்கள் வாழ்க்கை மாற்றங்களையும் சூழ்நிலை பற்றியும் விரிவாக எழுதியதற்கு நன்றி. வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் எப்படி எப்படியோ அமைந்துவிடுகிறது. எண்ணங்களுக்கும் ஆசைகளுக்கும் திட்டங்களுக்கும் குறை இருப்பதில்லை.

ஆனால் அவற்றை செயல்படுத்துவதில் தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அபூர்வமாக ஒரு சிலருக்கு, எண்ணியவற்றை எண்ணியவாறு செய்துமுடிக்க வாய்ப்புகளும் வசதிகளும் கிட்டுகின்றன. பலருக்கு அவை கிடைப்பதில்லை.

திறமையும், உழைப்பும், திட்டமும் லட்சியக் கனவுகளும், செயல்ஊக்கமும் மட்டும் இருந்தால் போதாது. இவை உரியமுறையில் பலன் அளிப்பதற்கு பணபலமும், சக, காலத்தின் துணையும் கட்டாயம் வேண்டும். இவை கிடைப்பது தான் சிரமமாகி விடுகிறது, வாழ்க்கையில், தற்கால சமூக அமைப்பில்.

அதற்காக மனம் சோர்ந்து போகவேண்டியதில்லை. உற்சாகமாக உழைத்துக்கொண்டிருப்பதில் ஒரு சந்தோஷம் உண்டு.

நீங்கள் சந்தோஷமாக, இஷ்டப்படி இஷ்டப்பட்டதை செய்துகொண்டு, காலம் கழித்து வருவதை அறிய மகிழ்ச்சி.

நான் பிப்ரவரி 7ல் ராஜவல்லிபுரத்திலிருந்து சென்னை வந்தேன். அதன் பிறகு அங்கே போகவில்லை. ஆகஸ்டு முதல், இந்த மாதம்

போகலாம்-அடுத்த மாதம் போகலாம் என்று காலத்தை ஏலத்தில் விட்டபடி இருக்கிறேன். பொங்கலுக்குப் பிறகு தான் இனிமேல் போகவேண்டும்.

நண்பர் இராமகிருஷ்ணன் வழக்கம் போல் உற்சாகமாகத் தான் இருப்பார். அவருக்கு மூன்று கடிதங்கள் எழுதினேன். அவர் பதில் எழுதுவதில்லை, கடிதங்களுக்கு.

22-12-85ல் அவர் மகள் லதாவுக்கு 'பூப்புனித நன்னீராட்டு விழா' என்று தடபுடலாக அச்சிடப்பட்டிருந்த அழைப்பு இதழ் வந்தது. விசேஷம் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கும என்பதில் சந்தேகம் இல்லை. ராஜவல்லிபுரத்திலிருந்தோ, திருநெல்வேலியிலிருந்தோ கடிதம் எதுவும் வருவதில்லை. எழுதுவதற்கு யாரும் இல்லை.

நவம்பர் 28-ம் தேதி புதுக்கோட்டை போனேன். 29,30களில் 'எழுத்தாளர் உறவுக்கூட்டம்' என்றொரு நிகழ்ச்சி. அங்கிருந்து அறந்தாங்கி போய் ஒரு வாரம் போக்கினேன். ஆவுடையார்கோவில், சித்தன்னவாசல் போய் சிற்பங்கள், குகைக்கோயில் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது.

1985 போகிறது. காலம் ஓடுகிறது. ஓடிக்கொண்டேயிருக்கிறது. வயது அதிகரிக்கிறது. பல்லிளித்துக்கொண்டு பதுங்கி பதுங்கி வரும் சாவின் காலடி ஓசை மெதுமெதுவாகக் கேட்கத் தொடங்குகிறது. யோசிக்கும்போது, வாழ்க்கை அர்த்தமற்றதாகவே படுகிறது. அவரவர் அவரவரது இயல்புகள், சூழல்கள், வாழ்க்கை வசதிகளுக்கு ஏற்றபடி சந்தோஷமாக நாட்களை கழிக்க முடிந்தாலே போதும் தான். இன்றைய உலகத்தில் அதுவே பெரிய காரியம் தானே.

நலம். நாடுவதும் அதுவே. புதுவருஷ வாழ்த்துக்கள்.

அன்பு
வ. க.

## 'கவிப்பிள்ளை' ந.சு. காந்திமதிநாதன்

சென்னை.
17-11-90

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

அக்டோபர் மாத இறுதியோடு வியாபாரத்தை முடித்துவிட நேரும் என எழுதியிருந்தபடியால், உங்களிடமிருந்து கடிதம் வந்த

பிறகு எழுதலாம் என்றிருந்தேன். உங்கள் 13ம் தேதிக் கடிதம் 15ல் கிடைத்தது. வாழ்க்கையில் பெரும்பகுதிக்காலம் ஈடுபட்டிருந்த ஒரு தொழில், பழகிவிட்ட ஒரு வாழ்வுமுறை, கடைசிக் கட்டத்தில் மாறிப்போவது என்பது மனசுக்கு கஷ்டம் அளிக்கும் காரியம் தான். என்றாலும், காலத்தின் கட்டாயத்தை யாரும் தவிர்த்து விட இயலாது. அவ்வப்போது வருவதை எதிர் ஏற்று, நம்மால் முடிந்ததை, நமது ஆற்றலுக்கும் சக்திக்கும் ஏற்ப செய்துகொண்டே இருக்கவேண்டியதுதான். எவருக்கும் கேடு நினையாமல், நம் மனசுக்கு சரி என்று பட்டதை நாம் செய்துவருவது நமக்கு ஒரு நிம்மதியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும். அதிலும் சோதனைகள் வரக்கூடும் தான். அவற்றை தாங்கிக்கொள்ள வேண்டும்.

அன்பு
வ. க.

சென்னை.
3-12-90

அருமை நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

22-11-90 கடிதத்தில் உங்கள் வாழ்க்கைக்குறிப்பை எழுதி அனுப்பியதுக்காக நன்றி. மருமகப் பிள்ளையின் வாழ்த்தும் படித்தேன். சந்தோஷம். ஓய்வு நிறைய இருக்கும். பழைய, புதிய, புத்தகங்களைப் படித்துச் சுவைத்து மகிழலாம். மனசுக்குப் பிடித்த காரியம். கடிதங்கள் எழுதுவதும் திருப்தி தரும். நான் நலம். அண்ணா, அண்ணி, பிள்ளைகள் எல்லோரும் சுகம். அடிக்கடி மழை பெய்கிறது. அதனால் ரோடுகள், சுற்றுச்சூழல், எல்லாம் அசிங்கமாகின்றன. திருநெல்வேலியில் மழை பெய்கிறதா? எனது நாட்கள் வழக்கம் போல் ஓடுகின்றன. நவம்பர் 12 முதல் எனக்கு 71 வயது ஆரம்பம். என் இஷ்டம் போல், நினைத்ததை செய்துகொண்டு, விருப்பம்போல் படித்தும் எழுதியும் ஊர்சுற்றியும் வாழ முடிந்ததுக்காக மகிழ்கிறேன். எஞ்சியிருக்கும் சிறிது காலமும் இப்படியே ஓடிப்போகும். மனதிருப்தி தான் முக்கியம். பேராசைகள் வளர்த்து, கவலைப்பட்டு, நாளோட்டுவது நல்லது செய்யாது.

அன்பு
வ. க.

சென்னை.
27-6-91

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

உங்கள் 21ம் தேதிக் கடிதத்துக்கு நன்றி. 'இந்தியா டுடே'யில் வந்த எனது 'பேரிழப்பு' கதையைப் படித்து ரசித்து பலபேர் பாராட்டி எனக்கு கடிதங்கள் எழுதியிருந்தார்கள். கடந்துபோன இனிய நாட்கள் என்றும் மனோகரமானவை தான். இளம் பருவ அனுபவங்கள்-சூழல்கள் என்றும் பசுமையான தடங்களாக மனசில் பதிந்து கிடப்பது இயல்பு. அவற்றை வெகு காலத்துக்குப் பிறகு, அப்படி அப்படியே கண்டுவிடலாம் என்று ஆசைப்பட்டு, தேடிப்போனால் ஏமாற்றம் தான் கிட்டும். காலம் மாற்றங்களைச் செய்தபடி ஓடுகிறது. இடங்களும், மனித மதிப்புகளும், வாழ்க்கை நிலைகளும் வெகுவாக மாறித்தான் போகின்றன. உங்கள் கண் பார்வை இழப்பும், அதனால் நீங்கள் அனுபவிக்கிற மனவேதனையும், அனுபவக் கஷ்டங்களும் வருத்தம் தருகின்றன. உங்கள் உள்ளத்தின் நம்பிக்கை பலன் அளித்து ஒளி கிட்டுமாயின் அது பெரும் நற்பேறு ஆகவே அமையும். திருவருள் பாலிக்கட்டும்.

அன்பு
வ. க.

சென்னை.
12-9-92

அருமை நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

உங்கள் 7ம் தேதிக்கடிதம் மூலம் உள்ள நிலைமை அறிந்தேன். வருத்தமாகத் தான் இருக்கிறது. வருவதை ஏற்று, தாங்கிக்கொள்கிற சக்தி மனசுக்கு வேண்டும். அதற்கு பக்தி உதவுகிறது. தெய்வ நம்பிக்கை தெம்பு தரும். தன்னம்பிக்கை வலிமையூட்டும். பிறந்தநாள்-வயது பற்றி அறிந்தேன். சந்தோஷம். 68 ஆண்டுகள் நிறைவுற்றது பெரிய விஷயம்தான். ஓடுகிற காலம் அனுபவங்களைத் தருகிறது. அனுபவங்களினால் துக்கமும் சந்தோஷங்களும் கலந்தோ, மாறிமாறியோ கிடைக்கின்றன. அனுபவங்கள் ஒரு சிலருக்கே ஞானம்

புகட்டுகிறது. ஞானத்தை, ஆனந்தத்தை, உள அமைதியைப் பெறுகிறவர்கள் பாக்கியவான்கள். வாழ்த்துகிறேன். வாழ்க வாழ்க.

அன்பு
வ. க.

சென்னை.
14-5-91

அன்பு மிக்க நண்பர், வணக்கம்.

உங்கள் 8-5-91 கடிதம் மூலம் உங்கள் உடல்நிலை பற்றி தெரிந்துகொண்டேன். உடல்நலம் கூடிவருகிறது என்ற செய்தி சந்தோஷம் தருகிறது. 'சுபமங்களா'வில் வந்த எனது கதையை ரசித்து எழுதியிருப்பதற்காக நன்றி. 'இண்டியா டுடே'யில் என் கதை ஒன்று வர இருக்கிறது. அதுவேறு மாதிரிக் கதை. 'சோவியத் நாடு' ஏப்ரல் இதழில் 'உதவாக்கரை' என்ற கதை வந்தது. அது தனிரகமானது. வாழ்க்கையில் இறப்புகளும் இழப்புகளும் தவிர்க்கமுடியாதவை. அவற்றால் துயரம் எழுவதும் இயல்பு. அத்துயரமே பெரும் சுமையாய் என்றும் அழுத்திக்கொண்டிருக்கும்படி விடுவது சரியல்ல. வாழ்க்கை சகஜ நியதியில் முன்சென்று கொண்டிருக்கவேண்டும். இங்கு அண்ணியும், பிள்ளைகளும் இயல்பான அலுவல்களில் தங்கள் பேரிழப்பை தாங்கிக் கொள்ளப் பழகிவிட்டார்கள். எல்லோரும் நலம்.

அன்பு
வ. க.

## அ. பசுபதி

சென்னை.
18-11-91

அன்பு மிக்க பசுபதி,

வணக்கம். பிறந்தநாள் வாழ்த்து கிடைத்தது. நன்றி. மகிழ்ச்சி.

நீங்களும் துணைவியும் வேங்கை, மங்கை இருவரும் நலமாக இருப்பீர்கள் என எண்ணுகிறேன். நான் நலம். அண்ணியும் பிள்ளைகளும் சுகம்.

12ம்தேதி மயிலை சீனிவாச சாஸ்திரி ஹாலில் எனது பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்று எனது புத்தகங்கள் மூன்று வெளியிடப்பட்டன. நிதி வழங்கப்பட்டது.

தமிழகம் நெடுகிலும் உள்ள எழுத்தாளர்களும் இலக்கிய அபிமானிகளும் அன்போடும் அனுதாபத்துடனும் மனமுவந்து நிதி வழங்கியிருக்கிறார்கள். எதிர்பாராதபடி ரூபாய் இருபத்தைந்தாயிரம் சேர்ந்துவிட்டது.

ஐந்திணைப் பதிப்பம் வெளியீடான 'தமிழில் சிறுபத்திரிகைகள்' (டிம்மி அளவு 340 பக்கங்கள்) விலை ரூ. 55/- வைக்கப்பட்டுள்ளது. இது நியாயமான விலை என்றே படுகிறது. CLS வெளியிட்டுள்ள புத்தகங்களின் விலை அதிகம் என்றே தோன்றுகிறது. குறுநாவல்கள் தொகுப்பு 'மன்னிக்கத் தெரியாதவர்'-ரூ. 30. சிறுகதைகள் - 'அருமையான துணை'-ரூ. 25. (முன்பு CLS பிரசுரித்துள்ள 'எழுத்துச் செல்வர் வல்லிக்கண்ணன்'-ரூ. 45/- என்பதும் அதிகம்தான்.)

13-ம் தேதி முதல் பெரும் மழை தான். சென்னையை விட புதுச்சேரியிலும் காரைக்காலிலும் மழையும் அதன் பாதிப்புகளும் வெகு அதிகம் என்று செய்திகள் மூலம் தெரிய வருகிறது. அங்கு புயலின் வேகமும் சேர்ந்திருந்தது அல்லவா?

அக்டோபர் 24 முதல் நவம்பர் 5முடிய நான் சென்னையில் இல்லாதிருந்தேன். 25ம் தேதி சிவகாசி சேர்ந்தேன். 27ல் அங்கு ஒரு புத்தக வெளியீட்டு விழா. இ. எஸ். தேவசிகாமணி என்பவர் முன்னாளைய - 'My Magazine' என்ற பத்திரிகையில் எழுதிய ஆங்கிலக் கதைகளின் தொகுப்பு. 'Unexpected Guests'. 29ம் தேதி திருநெல்வேலி போனேன். தி.க.சியுடன் ஒருவாரம் தங்கினேன். திருநெல்வேலி நண்பர்களை சந்தித்தேன். ஒருநாள் ராஜவல்லிபுரம் போய்வந்தேன். நவம்பர் 5 இரவில் நெல்லை எக்ஸ்பிரசில் பயணம் செய்து, 6 காலை சென்னை சேர்ந்தேன்.

தி.க.சி. விழாவுக்காக 7-ம் தேதி சென்னை வந்தார்.

பத்திரிகைகள் உலகம் வழக்கம்போல் தான் இருக்கிறது. புதுமை எதுவும் இல்லை.1991லும் 11 மாதங்கள் போய்விட்டன. டிசம்பரும் வேகமாக ஓடிவிடும்!

அன்பு
வ. க.

சென்னை.
9-3-95

அன்பு மிக்க நண்பர் பசுபதி, வணக்கம்.

உங்கள் 5ம் தேதிக் கடிதம் நேற்று வந்தது. மகிழ்ச்சி. நீங்களும் வீட்டில் எல்லோரும் நலம் என அறிய சந்தோஷம். நானும் மற்றும் அனைவரும் நலமாக இருக்கிறோம். 'தினமணி'கதிரில் வந்த 'பிடித்தவை பத்து' என்பதை படித்துவிட்டு எழுதியது சந்தோஷம் தருகிறது. மறுபடியும் சுடரும் கதிரும் தரமும் கனமும் புதுமைப் பண்பும் பெற்றுத் திகழும் என்று தோன்றுகிறது. நீங்கள் நல்ல புத்தகங்களை படித்து ரசிப்பது பாராட்டுதலுக்குரியது. நான் தமிழ் புததகங்கள் தான் படிக்கிறேன். படித்து முடிக்க இயலாத அளவுக்கு தமிழ் புத்தகங்கள் - முக்கியமாக சிறுகதைத் தொகுப்புகள் - வந்து சேர்கின்றன. தமிழ் சிறுகதை விதம்விதமான தன்மைகளுடன் வளர்ந்துள்ளது. ஆயினும் சமீபகாலத்து வக்கிரவளர்ச்சி - போஸ்ட் மாடர்னிசம், மேஜிக்கல் ரியலிசம் பாணி எழுத்துக்கள் - வரவேற்கக் கூடியதாக இல்லை. அர்த்தமில்லாக் குழப்ப அபத்தங்கள் அவை.

அன்பு
வ. க.

## கவித்துவன்

சென்னை.
28-11-94

அன்பு நண்பர் கவித்துவன்,

வணக்கம்.

உங்கள் 22ம் தேதிக் கடிதம் கிடைத்தது. இளைய கவிஞர்களின் முயற்சிகள் பற்றிய உங்கள் கருத்து சரிதான். நீங்கள் கவிதைகளை ரசித்து, மேலும் கவிதை நூல்களை படிக்க ஆர்வம் கொண்டிருப்பது வரவேற்புக்கு உரியது. எவ்வளவு தேர்ந்த படைப்பாளியாக இருந்தாலும், பிறரது எண்ணங்களை, பிறரது இதயஒலிகளை, பிறரது கற்பனை ஆக்கங்களை அறிந்து கொள்வதே நல்லது. தமிழ் மொழிப் படைப்புகளை மட்டுமல்லாது இதர மொழிகளின் கவிதைகள் இலக்கியங்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். இதனால் எல்லாம் விசாலப் பார்வையும், தெளிந்த சிந்தனையும், ஆழ்ந்த மனோதர்மங்களும் வளம்பெற வாய்ப்பு ஏற்படும். பேரறிஞர்கள்

பலரும் படிப்பதை இறுதிவரை கைக்கொண்டிருந்தார்கள். மாமேதை லெனின், மரணப் படுக்கையில் கிடந்தபோதுகூட, நல்ல நாவலை இன்னொருவரை விட்டு வாசிக்கச் சொல்லிக் கேட்டு ரசித்ததாக வரலாறு கூறுகிறது. படிப்பதற்கு மனம் வேண்டும். நேரமும் வேண்டும். இவை உங்களுக்கு சித்திப்பதாக.

அன்பு
வ. க.

அன்புமிக்க கவித்துவன்,

வணக்கம்.

உங்கள் 2-12-94 6-12-94 கடிதங்கள் மகிழ்ச்சி தந்தன. நான் நலம். நீங்களும் நண்பர்களும் நலமாக இருப்பதை அறிந்து சந்தோஷப்படுகிறேன். காலம் இறக்கை கட்டிக்கொள்ளாமலே பறந்தோடுகிறது. இதோ 1994 செத்துக்கொண்டிருக்கிறது. 'புது வருஷம்' வருகிறது. உண்மையில், புதுவருஷம் என்பதும், மாதம் தேதி கிழமைகள் என்பதும் மனிதர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிற விவகாரம் தான். இரவு-பகல் இவைதான் நிசமாகத் தெரிகின்றன. மனிதர்கள் சவுகரியத்துக்காகக் கணக்குகள் சொல்கிறார்கள். 1994 வருடங்களுக்கு முன்பும் காலம் இருந்தது. இப்பவும் திருவள்ளுவர் ஆண்டு, கொல்லம் ஆண்டு, சாலிவாகன சகாப்தம் என்று எத்தனையோ கணக்குகள்! அர்த்தமற்றவை. ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்கிற நாட்கள் தான் நிஜமானவை. அவற்றை எப்படி எப்படியோ கழிக்கிறார்கள் பலரும். நல்லவனாய் காலம் கழிப்பதே போற்றுதலுக்குரியது. கூடியவரை நல்லனவே எண்ணி, நல்லனவே செய்து ஒவ்வொரு நாளையும் நல்லநாள் ஆக்கவேண்டும். காலம் அந்த வல்லமையை உங்களுக்குத் தரட்டும்.

அன்பு
வ. க.

சென்னை.
20-3-95

அன்பு மிக்க கவித்துவன்,

வணக்கம்.

உங்கள் 6-3-95 கடிதம் மூலம் நிலைமைகள் உணர்ந்தேன். வாழ்க்கை அப்படித்தான் இருக்கிறது. எத்தர்கள் அதிகம்தான்.

ஏமாற்றுவோர் அதிகமாக உள்ள சூழ்நிலையில் எவரும் ஏமாந்துபோகாமல் இருக்க முடியாது ஏமாற்றங்களும் அனுபவங்களே. அனுபவங்கள் அறிவு விழிப்பு ஏற்படுத்துவனவாக இருக்கவேண்டும். பொதுவாக மக்கள் அனுபவங்கள் மூலம் ஞானம் பெற்று விடுவதில்லை. அதனாலேயே ஏமாற்றுக்காரர்கள் வெற்றி வாழ்வு வாழ்கிறார்கள். பலரை சிலகாலம் ஏமாற்றலாம்; சிலரை பலகாலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்றமுடியாது என்று ஒரு அறிஞர் சொல்லியிருக்கிறார். ஆனாலும், பாருங்கள். வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு சிலசில பேரை ஏமாற்றுவதன் மூலம், ஏமாற்று வித்தகர்கள் தங்கள் எல்லாக்காலத்தையும் கோலாகலமாகக் கழிக்கமுடிகிறது. இதுயுக தர்மம்-இன்றைய உலக நியதி. எழு-விழி-உணர்-ஒளிர் என்றார் விவேகானந்தர். விழிப்புற்றிருக்கவேண்டும்.

அன்பு
வ. க.

சென்னை.
23-7-95

அன்பு மிக்க நண்பர்,

வணக்கம்.

ஒரு மாத காலம் நான் சென்னையில் இல்லை. உடுமலைப்பேட்டையில் 4 நாட்கள்; பிறகு, திருநெல்வேலியில், தி.க.சியுடன் தங்கியிருந்தேன். புதிய புத்தகங்கள் படிப்பது, பலப்பல நண்பர்களோடும் பேசி மகிழ்வது என்று நாட்கள் இனிது போயின. அங்கிருந்து 20-ம் தேதி நெல்லை எக்ஸ்பிரசில் பயணம் செய்து 21 காலை இங்கு வந்து சேர்ந்தேன். நலமாக இருக்கிறேன். நீங்களும் நலம்தானே? திருநெல்வேலியிலிருந்து ஒரு நண்பருடன், ஒருநாள், உவரி என்ற இடம் போய் வந்தேன். கடலோரச் சிற்றூர். முதன்முதலில் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்ட மீனவ மக்கள் வசிக்கிற ஊர்களில் அதுவும் ஒன்று. கால்டுவெல் தொழில் புரிந்த இடையன் குடியும் அருகில்தான் இருக்கிறது. கடல் ஒரு அற்புதம். எத்தனை நேரம் பார்த்துக்கொண்டிருந்தாலும் அலுப்புத் தராத ஒரு அதிசயம். உவரியில் கடலை ஒட்டி அந்தோணியார் கோயில் என்ற பெரிய சர்ச் இருக்கிறது. வேறு 2 சர்ச்சுகளும் உண்டு. நலம்தானே?

அன்பு
வ. க.

சென்னை.
6-12-95

அன்பு மிக்க கவித்துவன்,

வணக்கம்.

நலம்தானே?

இன்று புக்போஸ்டில் 'சோலைக்குயில் 3 மாத இதழ்கள் அனுப்பியிருக்கிறேன். நல்ல கவிதை இதழ். ஒருவேளை இது உங்களுக்கு வந்தாலும் வந்தகொண்டிருக்கலாம். பாட்டாளிக்கு வந்தது. பலமாதங்களுக்கு முன்பு. தொடர்ந்து வருகிறதோ என்னவோ. மரபுக் கவிதைகளுக்கான இதழ். நல்ல கவிதைகள் வருகின்றன. நீங்கள் தொடர்ந்து கவிதை எழுதிக்கொண்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

வாழ்க்கை மனவறட்சி, நம்பிக்கை வறட்சி ஏற்படுத்தக் கூடியது. எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் என்று சொல்லமுடியாது. நான் எதையும் எதிர்பார்ப்பதில்லை. எனவே என் வாழ்க்கையில் ஏமாற்றங்கள் இல்லை. எதிர்ப்படுவன சந்தோஷங்களே. என்னைப் பொறுத்தமட்டில், போன வருடத்தை விட இந்த வருடம் ரொம்ப நல்ல வருடம். இப்படியே ஒவ்வொரு வருடமும் இருந்து வந்திருக்கிறது. உழைப்பதே ஒரு சந்தோஷம்தான்.

நாம் தேர்ந்து கொண்ட துறையில் ஊக்கத்தோடு உழைப்பதனால் கிடைக்கக் கூடிய சந்தோஷத்துக்கு ஈடுஇணை கிடையாது.

அன்பு
வ. க.

சென்னை.
21-12-95

அன்பு மிக்க கவித்துவன்,

வணக்கம்.

உங்கள் 13ம் தேதிக் கடிதம் மிகுந்த மகிழ்ச்சி தந்தது. 'நெசவு' இதழில் வந்த உங்கள் 'காணிக்கை' என் மனசை தொட்டது. உங்கள் உள்ளத்து உணர்வுகளை அழகாகப் பதிவு பண்ணியிருக்கிறீர்கள்.

நன்றி. 15ம் தேதி நான் நெய்வேலி போனேன். 'வேர்கள் இலக்கிய சங்கம்' மு. ராமலிங்கம் நெடுநாளைய நண்பர். முன்பு, இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை போய் சில நாட்கள் அவர் வீட்டில் தங்கி வருவேன். இடையில் ஒன்பது வருடங்கள் ஓடிவிட்டன, போய் வந்தபிறகு. இம்முறை அவசியம் போவது என்று தீர்மானம். நண்பர்கள் ஒரு வாய்ப்பு ஏற்படுத்தினார்கள். தேவதாஸ் என்ற நண்பர் 15 இந்திய மொழிச் சிறுகதைகளை தமிழாக்கினார், நெய்வேலி நண்பர் ஒருவர் அவற்றை 'புன்னகை புரியும் இளவரசி' என்று புத்தகமாக்கினார். 16ம் தேதி அதன் வெளியீட்டு விழா. ஒரு அன்பர் வந்து என்னை அழைத்துப்போனார். விழா நன்கு நடந்தது. 16,17 தேதிகளில் நெய்வேலியில் தங்கினேன். 18ல் சென்னை வந்து சேர்ந்தேன்.

நலமாக இருக்கிறேன். அண்ணியும் பிள்ளைகளும் நலம். நீங்களும் குடும்பத்தினரும் நலம்தானே? எதிர்பார்ப்பதுமில்லை; அதனால் ஏமாற்றமும் இல்லை என்பது எதிர்வினா எழுப்பக்கூடியதுதான். எதுதான் எதிர்க்கேள்வி எழுப்பாத ஒன்றாக இருக்கிறது? பார்க்கப் போனால், பகவத் கீதையில் கண்ணன் வலியுறுத்துவதும் இதே தான். பலனை எதிர்பாராதே; கடமைகளை செய்துகொண்டே இரு என்கிறது கீதை. இதெல்லாம் மனநிலையை பொறுத்து அமைவதுதான். மனசை அமைதிநிலைக்கு பண்படுத்தும் முயற்சிகள் தான். வாழ்க்கையில் ஏமாற்றங்கள் எதிர்ப்படுவது இயல்பு. ஆனால், இது ஏமாற்றம் இல்லை; இதுவும் ஒரு அனுபவம்தான் என்று ஏற்றுக்கொள்ள மனம் பண்பட்டுவிட்டால், ஏமாற்றம் வலி தராது. இவ்வளவு எழுதிவிட்டேன்; எனக்கு உரிய கவனிப்பு கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும் பொறுமலும் பொறாமயும் தான் சில எழுத்தாளர்களை பலரையும் தாக்குகிறவர்களாக மாற்றியிருக்கிறது. எனக்கு ஞானபீடப் பரிசு கிடைக்கவில்லையே என்ற எதிர்பார்ப்பு எவன் எவனுக்கோ அது தரப்படுகிறது என்று கரித்துப் பேசும்படி பலரைத் தூண்டுகிறது. எதிர்பார்ப்பதனால், தானே இந்த மனக் கசப்பு? 'புத்தகப் பூங்கா'ஆசாமி புத்தகம் போடவில்லை; பணத்தையும் தரவில்லை. 'இது ஏமாற்றம். போறான் போ; மனித இயல்பு இப்படி இருக்கிறது! என்று எண்ணினீர்களே அது அனுபவ ஞானம். இப்படி பண்பட்டு வளர்வது மனிதம்.

அன்பு
வ. க.

# இராமலிங்கம்

சென்னை.
19-9-90

அன்ப மிக்க இராமலிங்கம்,

வணக்கம்.

எனது 15-ம் தேதிக் கடிதம் (கார்டு) கிடைத்திருக்கும். அதன்பிறகு, அதிசயம் போல், உங்கள் 1-9-90 கடிதமும் அறிக்கையும் கொண்ட கவர் (17ம் தேதி) ராஜவல்லிபுரத்திலிருந்து இங்கு வந்து சேர்ந்தது. விவரங்கள் அறிந்தேன்.

'கல்குதிரை' ஒவ்வொரு இதழும் ஒரு சிறப்பு மலராகத் தான் இருக்கிறது. 6வது ஆப்பிரிக்க படைப்பிலக்கியத்தையும், அரசியல் நிலைகளையும் அறிமுகம் செய்கிறது. 7வது இதழ்-அக்ஞேயா சிறப்பிதழ் - அவரது கவிதைகள், கதை, நாவலை தெரிந்துகொள்ள உதவுகிறது. இந்த நாவல் எத்தனை பேரால் விரும்பிப் படிக்கப்பட்டு, ரசிக்கப்படும் என்பது வேறு விஷயம். மாறுபட்ட நிலைமைகளில் வாழ நேர்கிற இரண்டு பெண்களின் உள இயலை விவரமாகக் கூறும் வித்தியாசமான படைப்பு. நன்றாக, திறமையாக, எழுதப்பட்டிருக்கிறது. மணிமேகலை என்ற பெயரில் எழுதுகிறவர் ('நம் காலத்தின் குரல்') பெரிய இன்டலெக்சுவல் என்பதை வெளிப்படுத்த ரொம்பவும் ஆசை உடையவராக இருக்கிறார். இதன் வெளிப்பாடாக அமைந்துள்ளது 7வது இதழ்.

அரவிந்தரின் 'சாவித்திரி' காவியம் என்று ஆரம்பித்து, அநுபூதியாளர்கள் அனுபவப் பாடல்கள், விவிலியம் பழைய ஏற்பாடு, சித்தர் பாடல்கள் என்று மிக நீளமாக எழுதியிருக்கிறார். பூராவையும் படித்தேன். நல்ல ஆய்வுதான். இதுமாதிரி விஷயங்களை எத்தனை பேர் படிக்கச் சித்தமாக இருப்பார்கள் என்பதை ஒரு ஆய்வு நடத்தித் தான் தெரிந்துகொள்ள வேண்டும்!

அடுத்த இதழ் டாஸ்டாவ்ஸ்கி சிறப்பிதழ் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாராட்டவேண்டியது தான்.

உங்கள் அறிக்கை: தற்கால நிலைமையை உள்ளது உள்ளபடி சொல்கிறது. நீங்களே உணர்ந்து குறிப்பிட்டுள்ள 'குழு மனோபாவம், கசப்புணர்வு, தனிநபர் அகங்காரம், போட்டா போட்டி, ஒத்துழைப்பு இன்மை' முதலியன வளர்ந்து வருகிறதே தவிர, குறைவதாகக் காணோம். உங்கள் நோக்கங்கள் உயர்ந்தவை. செயலில் எவ்வளவுக்கு வெற்றி பெறும்?.... வெளிச்சம் தெரியவில்லை! இருண்ட சூழ்நிலைதான்.

நெய்வேலியில் பணிபுரியும் கி. அ. சச்சிதானந்தம் செல்லப்பாவுக்கு வேண்டிய நெருங்கிய நண்பர். 'எழுத்து' காலத்திலேயே பொருளாதார உதவி செய்தவர். 'பீக்காக் பப்ளிகேஷன்ஸ்' என்று மௌனி கதைகளை வெளியிட்டவர். சி. சு. செ.யின் ஜீவனாம்சம், தமிழ் சிறுகதை பிறக்கிறது இவற்றை இரண்டாம் பதிப்பாக 1988ல் வெளியிட்டார். இப்போது 'மணிக்கொடி சிறுகதை முதல்வர்கள்' (சி.சு.செ) சீதை-(ராஜம் அய்யர் எழுதியது) என்ற 2 புத்தகங்களை பிரசுரித்திருக்கிறார். வாங்கியிருப்பீர்கள் என எண்ணுகிறேன்.

சிறுபத்திரிகைகள் புதுசுபுதுசாகத் தோன்றுகின்றன. எண்ணிக்கை மிகுதிதான். தரம், புதிய விஷயங்கள், புதிய பார்வை புதிய சிந்தனை பற்றி யாரும் அக்கறை கொள்வதில்லை.

அன்பு
வ. க.

சென்னை.
10-12-90

அன்பு மிக்க இராமலிங்கம்,

வணக்கம். உங்கள் 30-11-90 கடிதம் கிடைத்தது. காலம் பயங்கர வேகத்தில் ஓடுகிறது! நினைத்ததை நினைத்த தருணத்தில் செய்ய முடியாமல் போகிறது. நான் நலம். என் அண்ணாவும் குடும்பத்தாரும் சுகம். தி.க.சி திருநெல்வேலியில் நலமாக இருக்கிறார். பத்திரிகைகள், புத்தகங்கள் படிப்பது, கடிதங்கள் எழுதுவது; நண்பர்களை சந்தித்துப் பேசவது ஆகிய வழக்கமான காரியங்களை செய்து கொண்டிருக்கிறார். வண்ணதாசன், தூத்துக்குடியில், வழக்கம்போல் வேலை பார்த்து வருகிறார். உடல்நிலை நன்றாக இருக்கிறது. நீங்களும் மனைவியும் மகனும் நலம் என அறிந்து மகிழ்கிறேன். 'கல்குதிரை' விநியோகப் பொறுப்பை மட்டுமல்லாது, அதன் தயாரிப்புச் செலவையே நீங்களும் 'வேர்கள்' நண்பர்களும் தான் ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. நல்ல காரியத்துக்கு-உருப்படியான பணிக்கு-ஏதோ சொல்வார்களே, 'உடல்-பொருள்-ஆவியை செலவளித்து' என்று - அப்படி பலவகையிலும் உற்சாகத்தோடு ஒத்துழைப்பதை வாழ்த்துகிறேன்.

படித்த புத்தகங்கள் பற்றி கேட்டிருக்கிறீர்கள். தமிழ் நாட்டில், தினசரி, ஏகப்பட்ட புத்தகங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றில்

ஒருசில எனக்கு படிக்கக் கிடைக்கின்றன. அப்படி கிடைப்பவையே அதிகம் என்று சொல்லப்பட வேண்டிய அளவினதான்.

சென்ற ஒரு மாத காலத்தில் நான் படித்தவை- 'கி. ராஜநாராயணன் கடிதங்கள்'- சுவாரஸ்யமான கடிதங்களின் தொகுப்பு. கோணங்கியின் 'கொல்லனின் ஆறு பெண்மக்கள்'. புதுமையான முறையில் எழுதப்பட்ட கதைகள். பல கதையில்லா அளப்புகள். கோணங்கியிடம் நல்ல திறமை இருக்கிறது. அழகிய தமிழ் நடையில் எழுதுகிறார். புதுமை பண்ண வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. ஆனாலும், என்ன எழுதுவது என்று விளங்கிக் கொள்ளாது என்னென்னவோ எழுதிக்கொண்டிருக்கிறார்.

'ஆத்மாநாம் கவிதைகள்' படித்தேன். "காகித அகலிகைகள்" - கருமலைப்பழம்நீ. (வசனகவிதைகள்)...'வீரமணியின் சொற்பொழிவு உத்திகள்' - நம். சீனிவாசன். M. Phil ஆய்வு.... 'சங்க இலக்கியம்'- (அகம்) - சரளா ராசகோபாலன். 'ஏது பதி, ஏது பெயர்?' (சொற்கோலம்)- என். ஆர். தாசன். 'அழுக்கு' (சமூக நாவல்) - ராஜம் கிருஷ்ணன். இயற்கைச் சூழலில் படிந்து வரும் அழுக்கை அகற்ற ஏற்பட்டுள்ள மத்திய அரசு அமைச்சுப் பிரிவிலேயே, அழுக்கு நிறைந்துள்ளது; ஆறு, நகரம், சுற்றுப்புறச் சூழலில் மட்டுமல்ல, மனிதர்களின் உள்ளத்திலும் செயல்களிலும் அழுக்கு மண்டி வளர்கிறது - இது நாவலின் மையக் கருத்து... லா. ச. ரா.வின் 'புத்ர' (நாவல்); 'கங்கா' (சிறுகதைகள்)...'எனக்குள் இருப்பவள்' - பிரபஞ்சன் (குறுநாவல்கள் 2); அனுக்கிரகா - நா.பா. (நாவல்)... 'மண்ணை மீறிய விதைகள்'-வேலாராமமூர்த்தி. சிறுகதைகள்.

அன்பு
வ. க.

சென்னை.
3-7-91

அன்பு மிக்க இராமலிங்கம்,

வணக்கம். நீங்கள் அன்புடன் அனுப்பிவைத்த 'கல்குதிரை' - தாஸ்தாயேவ்ஸ்கி சிறப்பிதழ் (ரிக்கார்டு டெலிவரியில்) 1-ம் தேதி கிடைத்தது. நன்றி. மிக்க மகிழ்ச்சி. வெகு சிரத்தையோடும் சிறப்பாகவும் இதழ் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதானமாகப் படித்துக் கொண்டிருக்கிறேன். படித்து முடித்ததும் எழுதுவேன். தமிழ் வாசகர்களுக்கு (இலக்கியப் பிரியர்களில் பெரும்பாலோருக்குக் கூட) தாஸ்தாயேவ்ஸ்கி அறிமுகமானவர் அல்லர். இந்தப் புத்தகம் அவரைப்

பற்றித் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவும். உங்களுக்கும், கோணங்கிக்கும், 'வேர்கள்' நண்பர்களுக்கும் என் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

என் கதைகள், கட்டுரைகளைப் படித்து தேர்வு செய்யும் வேலையை கவனித்துவருகிறேன். நீங்களும் நண்பர்களும் விரும்புவது போல், கதைகள், கட்டுரைகள், கவிதைகள் கொண்ட தொகுப்பாகவே வெளியிடலாம்.

நண்பர் திருமலை 1-ம் தேதி வந்தார். நீங்கள் அவருக்குக் கடிதம் எழுதியிருப்பது பற்றிச் சொன்னார். வெறும் கட்டுரைகளை மட்டுமே தொகுத்து வெளியிடுவது உசிதமாக இருக்கும் என்பது அவர் அபிப்பிராயம். உங்களுக்கும் எழுதியிருப்பதாகத் தெரிவித்தார். ('ஆனந்த விகடன்' வேலை - ஒன்றரை வருடப் பணி - ஜுன் இறுதியுடன் முடிந்து விட்டது அவருக்கு. இனி பணி தேவையில்லை என்று நிர்வாகம் கூறிவிட்டது.)

நானும் அண்ணா குடும்பத்தினரும் நலம். பெரிய பையன் சுப்ரமணியன் +2ல், 1200க்கு 1057 மார்க்குகள் பெற்று பாஸ் பண்ணியிருக்கிறான். அதனாலேயே காலேஜ்களில் இடம் கிடைக்கவில்லை 80%க்கு மேல் மார்க்குகள் வாங்கியுள்ள மாணவர்களுக்கு காலேஜ்களில் இடம் கொடுப்பதில்லை என்று பிரின்ஸ்பால்கள் உறுதியாக இருக்கிறார்கள். உயர் மதிப்பெண்கள் பெற்றவர்கள் ஆர்ட்ஸ் காலேஜ்களில் சேர்ந்துவிட்டு, பிறகு என்ஜினீரிங், மெடிக்கல் ஆகிய புரபஷனல் கோர்ஸ் காலேஜ்களுக்குப் போய்விடுகிறார்கள்: அதனால் நிர்வாக சிரமம் ஏற்படுகிறது என்பது அவர்கள் வாதம். லயோலா, நியூகாலேஜ், விவேகானந்தா, பிரசிடென்சி, ஜெயின் காலேஜ்களுக்கு அப்ளை பண்ணியும், ஒரு கல்லூரியிலும் இடம் கிடைப்பதாயில்லை.

சின்னவன் கணேசன் '10' பாஸ் பண்ணிவிட்டான். நல்ல மார்க்குகள் தான். +1ல் சேர வேண்டும். இதுக்கும் அலைச்சலும் சிரமங்களும். ராமகிருஷ்ணா மிஷன் ஸ்கூல் போன்றவற்றில் சேர்ந்தால், சம்பளம் குறைவாக இருக்கும் என முயன்றும் பயனில்லை. முடிவாக, கில் ஆதர்ஷ் ஹையர் செகண்டரி ஸ்கூலி லேயே இன்று சேர்த்தாச்சு. இங்கு அட்மிஷன் ஃபீசும், சம்பளமும் சேர்ந்து 1485 ரூபாய் ஆச்சு. ராமகிருஷ்ணாவில் ரூ. 450/- தான் ஆகியிருக்கும். டெர்ம்ஃபீஸ் இங்கு ரூ. 850/-. ராமகிருஷ்ணாவில் ரூ. 325/-. ஆனால் அங்கு இடம் கிடைக்கவில்லை. உங்கள் 1-7-91 கடிதம் இன்று வந்தது.

அன்பு
வ. க.

சென்னை.
27-7-91

அன்பு மிக்க இராமலிங்கம்,

வணக்கம். நலம் தானே?

12-14 தேதிகளில் ஜீரண சக்தி பாதிப்பினால் சோர்வு மிகுதியாக இருந்ததால், 'முன்றில்' கருத்தரங்கில் முழுமையாக ஈடுபட முடியாமல் போய்விட்டது. உங்கள் சந்திப்பு மகிழ்ச்சி தந்தது. சில நாட்களிலே உடல்நிலை சரியாகி விட்டது.

நீங்களும் 'வேர்கள்' நண்பர்களும் என் எழுத்துக்களை புத்தகமாக உருவாக்குவதில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டிருப்பது உளம் நெகிழச் செய்கிறது. சந்தோஷம். நன்றி.

கதைகள், கட்டுரைகள் தொகுத்துவிட்டேன். அருமையான விஷயங்கள். கவிதைகள் எடுக்க வேண்டும். இரண்டொரு தினங்களில் சேகரித்துவிடலாம்.

நீங்கள் உங்களுக்கு வசதிப்படுகிற நாளில் இங்கு வரலாம்.

நானே அவற்றை கொண்டு வந்து தரலாம் தான். நான் நெய்வேலி வந்தும் பல வருடங்கள் (5) ஆகிவிட்டன. வரவேண்டும். இன்னும் ஒரு மாசத்துக்கு அது சாத்தியம் இல்லை.

அண்ணன் மகன் பெரியவன் - சுப்ரமணியன் - காலேஜில் சேருவதே பெரும் பிரச்னையாக இருக்கிறது. தினசரி ஏதாவது ஒரு காலேஜுக்கு போய் காத்திருப்பதே சில நாட்களாக முக்கிய வேலை ஆகிவிட்டது. 'இல்லை - கிடையாது' என்று திட்டமாகச் சொல்வதுமில்லை. 'வெயிட் பண்ணுங்க' 'வெயிட் பண்ணுங்க' என்று மணிக்கணக்கில் காத்திருக்க வைத்து, அப்புறம் சனிக்கிழமை வாங்க - திங்கள் கிழமை வாங்க என்று காலத்தை ஏலத்தில் விடுவதே கல்லூரிகளின் மரபாக இருக்கிறது. மிகப் பல மாணவர்கள் - பெற்றோர் காலம் இந்த ரீதியில் வீணாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் சில தினங்களில் இது தீர்ந்துவிடும்.

வேறு சில அலுவல்களும். சிறப்பு மலர் முழுமையும் படித்துவிட்டேன். நல்ல கட்டுரைகள். ஆழ்ந்து படித்தவர்களின் ஆய்வுகள். தாஸ்தாயேவ்ஸ்கியின் நாவல் ஒன்று. நல்ல, அருமையான, தயாரிப்பு. எல்லாமும் தாஸ்தயேவ்ஸ்கியை ஓரளவு அறிந்தவர்களுக்கு சிந்திக்க தூண்டும் அறிவு விருந்தாக அமைந்துள்ளன. பொதுப்படையான ஒரு கட்டுரை - தா...யின் அனைத்து நாவல்களையும் பொதுவான முறையில் அறிமுகம் செய்கிற ஒரு கட்டுரை இருந்தால் புதிதாகத் தெரிந்து கொள்ள முயல்கிற

வாசகர்களுக்கு தா- பற்றி அறிய உதவும் என்று கருதுகிறேன். பலரும் பிரதர்ஸ் காரமஸாவ் பற்றி ஆழ்ந்த சிந்தனைகளை முன்வைத்திருக்கிறார்கள். க்ரைம் அன்ட் பனிஷ்மெண்ட், இடியட் நாவல்கள் பற்றி (அவற்றின் சிறப்பான பாத்திரங்கள் - மனப்போராட்டம் - கதை விஷயம் பற்றி) தமிழ் வாசகர்கள் புரிந்து கொள்ளக்கூடியவாறு யாரும் எழுதலில்லை.

அன்பு
வ. க.

சென்னை.
19-10-91

அருமை நண்ப,

வணக்கம். உங்கள் 12-10-91 கடிதம்... சந்தோஷம்.

நீங்கள் எழுதவில்லை என்றாலும், நான் அவ்வப்போது கடிதம் எழுதியிருந்திருக்கலாம். நானும் எழுதவில்லை. உண்மையிலேயே வேலைகள் மிக அதிகம். சமாளிக்க முடியாத அளவு வேலைகள். பலவிதமானவை. அவற்றினூடும் புதிய புதிய புத்தகங்களை படிக்க முடிந்திருப்பது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம். அந்தப் புத்தகங்கள் பற்றி உங்களுக்கு எழுதியிருக்கலாம். சரி. போகிறது.

தாஸ்தயேவ்ஸ்கியின் 'கரமசவ்' நாவலை வெளியிடுவதில் ஆர்வமாக இருப்பது பாராட்டுதலுக்கு உரியது. 'கல்குதிரை'யை பொறுப்பேற்று, தொடர்ந்து நடத்துவதும் நல்ல காரியம் தான்.

என் எழுத்துக்களை இப்போது புத்தகமான வெளியிட இயலாதிருப்பதுக்காக வருத்தப்பட வேண்டியதில்லை. இத்தனை காலம் காத்திருந்தவை இனியும் காத்திருப்பதனால் எதுவும் கெட்டுவிடாது.

மேலும், நான் 'தீபம்' இதழில் எழுதிய கட்டுரைத் தொடர் 'தமிழில் சிறுபத்திரிகைகள்' ஐந்திணைப் பதிப்பகம் வெளியீடாக அச்சாகிவிட்டது. புத்தகமாக நவம்பரில் காணமுடியும் என நம்புகிறேன். 'தீபம்' இதழ்களில் அவ்வப்போது வெளியான 3 குறுநாவல்கள் 'மன்னிக்கத் தெரியாதவர்' என்ற தொகுப்பாகவும், 12 கதைகள் 'அருமையான துணை' என்ற தொகுப்பாகவும் CLS ஆல் பதிப்பிக்கப்படுகின்றன. இவை நவம்பரில் வந்துவிடும்.

இவை சந்தோஷமான சமாச்சாரங்கள் தானே! 'வேர்கள்'

'மௌனி' பற்றிய கருத்தரங்கு நிகழ்த்தத் திட்டமிட்டிருப்பது வரவேற்புக்கு உரியது. வேதசகாய குமார், பூரணசந்திரன், ராஜநாயஹம், ஞானி, ஆல்பர்ட் ஆகியோருடன் திலீப் குமாரிடமும் கட்டுரை வாங்கலாம். இவர் மௌனி பற்றி ஆழ்ந்த கட்டுரைகள் எழுதியவர். 1992 எப்ரலில் 'இலக்கியச் சிந்தனை' வெளியிட இருக்கிற (எழுத்தாளர் பற்றிய நூல் வரிசையில்) 'மௌனி' பற்றிய நூலை திலீப்குமார் தான் எழுதுகிறார்.

நான் இந்த 22ம் தேதி (செவ்வாய்) சிவகாசி போகிறேன். செ. ஞானன் எனும் நண்பர், அவருடைய நண்பர் ஒருவர் முன்பு `My Magazine'ல் எழுதிய இங்கிலீஷ் கதைகளை தொகுத்து புத்தகமாக வெளியிடுகிறார். அந்த வெளியீட்டு விழா 27 ஞாயிறு அன்று சிவகாசியில் நிகழும். நான் 5 நாட்கள் ஞானனின் விருந்தாளி. பிறகு திருநெல்வேலி போவேன். தி.க.சியையும் மற்ற நண்பர்களையும் சந்திப்பேன். சில மாதங்கள், அல்லது பல வாரங்கள், தங்குவது சாத்தியமில்லை. சில நாட்கள் இருந்துவிட்டு, சென்னை திரும்புவேன். எனது பிறந்தநாள் நவம்பர் 12, நண்பர்களால் கொண்டாடப்படுகிறது. 'நிதி அளிப்பு' தரத் திட்டமிட்டிருக்கிறார்கள். மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி ஹாலில். நலம் நாடுவதும் அதுவே.

அன்பு
வ. க.

சென்னை.
20-11-91

அன்பு மிக்க இராமலிங்கம்,

வணக்கம். நலம்.

ஒரு வாரம் அடைமழை வெளுத்து வாங்கிவிட்டது. நெய்வேலியும் மழையினாலும் காற்றினாலும் பாதிக்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

மௌனி பற்றிய கருத்தரங்கு எந்நிலையில் இருக்கிறது? மௌனி கதைகள் புத்தகம் வெளிவந்துவிட்டதா?

அசோகமித்திரனின் 'ஒற்றன்' நாவலை இப்ப தான் படித்தேன். பலரும் குறிப்பிட்டுச் சொல்வது. 1985ல் வெளிவந்தது. வித்தியாசமான முறையில் எழுதப்பட்டுள்ள (நாவல் இல்லாத) நாவல். 'A-Novel'. அவர் அயோவா யுனிவர்சிட்டியில் கழித்த சில மாதங்களில் நடந்த

(நடந்ததாக அளக்கப்படுகிற) சம்பவங்கள் அங்கே கண்டு பழகிய மனிதர்கள் - பல நாட்டு எழுத்தாளர்கள்- கவிஞர்கள் - பற்றி சொல்கிற புத்தகம். ஒவ்வொரு பகுதியும் ஒரு தனிச் சிறுகதை மாதிரி. இதில் 'ஒற்றன்' எவனும் வரவில்லை. ஒற்று வேலையும் கிடையாது. ஆப்பிரிக்க நாட்டு எழுத்தாளன் ஒருவன் 'ஒற்றன்' என்றொரு நாவல் எழுதியிருக்கிறான் என்ற தகவல்-அதை இவர் இன்னும் படிக்கவில்லை என்ற வரி வருகிறது. அதை வைத்துத்தான் தலைப்பு 'ஒற்றன்'.

நீங்களும் குடும்பத்தினரும் நண்பர்களும் நலம் தானே?

அன்பு
வ. க.

சென்னை.
16-1-92

அன்பு மிக்க இராமலிங்கம்,

வணக்கம். நலம்.

நீங்களும் மனைவியும் ஜீவபாரதியும் நலம் தானே?

நேற்று பொங்கல் திருநாளை சந்தோஷமாகக் கொண்டாடியிருப்பீர்களென எண்ணுகிறேன்.

அண்ணியும் பிள்ளைகளும் நலமாக இருக்கிறார்கள். சமீப நாட்களில் எனக்கு பப்ளிசிட்டி அதிகம்!

ஜனவரி 4ல் புக்ஃபேர் துவங்கியது. தென்னிந்திய புத்தக விற்பனையாளர்-பதிப்பாளர் சங்கம், துவக்க விழாவில் என்னை கவுரவித்தது. பாராட்டிதழ் வழங்கி, 2001/-க்கு 'செக்'கும் தந்தது.

இந்நிகழ்ச்சிக்கு முன்பே தினமணி டிசம்பர் 31ம் தேதி இதழில் இது பற்றி செய்தி எடுப்பாகப் பிரசுரமாயிற்று. நிகழ்ச்சி பற்றிய செய்தி பத்திரிகைகள், டிவி., வானொலியில் இடம் பெற்றது. அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கான ஓய்வு ஊதியத்துக்கு நானும் தெரிவு செய்யப் பட்டிருக்கிறேன். அரசு மாதம் ரூ. 400/- வழங்கும். இது பற்றிய செய்தியும் பல பத்திரிகைகளிலும் வந்தது. இதற்கான விழா இன்று மாலை கலைவாணர் அரங்கத்தில் நிகழும்.

'கல்குதிரை-9' கிடைத்தது. நன்றி. இந்த இதழ் நகுலன் சிறப்பிதழாக விளங்குகிறது. சந்தோஷம். நகுலன்பேட்டி, அவரது குறிப்புகள், எம்டிஎம் விமர்சனம் எல்லாம் அருமை. நகுலன்

சம்பந்தமான கோணங்கி கற்பனைச் சித்திரமும், ஸில்வியா கதையும் Post Modern Writing பாணியில் எழுதப்பட்டிருக்கின்றன. சுவாரஸ்யமாகத் தான் இருக்கின்றன. இதர விஷயங்களும் நன்று.

குறிஞ்சிப்பாடி மணியன் பதிப்பகம் நண்பர், 'வல்லிக்கண்ணன் கதைகள்' தொகுப்பை பொன்விஜயன் ('புதிய நம்பிக்கை') பிரஸ்ஸில் தான் அச்சிடுகிறார். இம்மாத இறுதியில் புத்தகம் தயாராகிவிடும் என்றார். நண்பர் குறிஞ்சிவேலனும் இது பற்றி கடிதம் எழுதியிருந்தார். திரு. சம்பந்தன் முன்பணமாக ரூ. 700/- தந்தார்.

நண்பர் தி.க.சி. இம்மாதம் 3ம் தேதி கடும் மார்புவலியால் பாதிக்கப்பட்டு ஒரு ஆஸ்பத்திரியில் சேர்ந்து சிகிச்சை பெற்றார். Mild Attack தான். இனி மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்.

தோப்பில் முகம்மது மீரான் தனது இரண்டாவது நாவல் 'துறைமுகம்' புத்தகத்தை வெளியிட்டு விட்டார். நாவல் நன்றாக இருக்கிறது.

'சுபமங்களா'வில் வண்ணநிலவன் நேர்காணல் படித்திருப்பீர்கள். ரொம்ப விரக்தி நிலையில் இருக்கிறார் நண்பர்.

வாழ்த்துக்கள்.

அன்பு
வ. க.

சென்னை.
29-1-92

அன்பு மிக்க இராமலிங்கம்,

வணக்கம்.

உங்கள் 21-1-92 கடிதம் கண்டேன்.

'கல்குதிரை' 9-ல், காலச்சுவடு மலர் வெளியிடுவதற்காக சுந்தரராமசாமியை வீணாகச் சாடியிருக்கிறாரே; இது தேவையற்றது என்று எண்ணினேன். தி.க.சியும் இது 'வேண்டாத வேலை' என்று எழுதியிருந்தார். நீங்கள் குறிப்பிடுவது போல, சிறு பத்திரிகைக்காரர்கள் இப்படிப்பட்ட போட்டி உணர்வுகள்,

தாக்குதல்கள், வசைபாடல்களை வளர்த்துக்கொண்டு அவதிப்படுகிறார்கள். தாங்களும் வளராமல் போகிறார்கள்.

21-ம் தேதி சென்னையில் 'கமல்ஹாசன் நற்பணி மன்றம்' ஆண்டு விழா நடைபெற்றது. அச்சமயம் கமல்ஹாசன் அவரது தாயாரின் நினைவாக 'அன்னை ராஜலட்சுமி நினைவுப் பரிசு' என்று - 'இலக்கியவாதிக்கு' என்று, எனக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் அளித்தார். கி. ராஜநாராயணனை கௌரவித்தல் என்று அவருக்கும் ஒரு செக் வழங்கப்பட்டது. அந்த விழாவுக்கு அவர் வரவில்லை.

மணியன் பதிப்பகம் நண்பர் சம்பந்தன் அதன் பிறகும் வந்தார். ஜனவரி 31க்குள் புத்தகம் தயாராகிவிடும் என்றார். பிப்ரவரி முதல் வாரம் வருவதாகச் சொல்லிப் போனார்.

தோப்பில் முகம்மது மீரானின் இரண்டாவது நாவல் 'துறைமுகம்' வந்துவிட்டது. இந்த நாவலையும் அவர் நன்றாகவே எழுதியிருக்கிறார்.

மா. அரங்கநாதன் நாவல் 'பறளியாற்று மாந்தர்' வந்தவிட்டது. அவருடைய சிறுகதைகள் 'ஞானக்கூத்து' தொகுப்பும். இரண்டும் அழகாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

'பறளியாற்று மாந்தர்' நாவலை வித்தியாசமான முறையில் எழுதவேண்டும் என்ற அரங்கநாதன் முயன்றிருக்கிறார். சுமார் ரகமான படைப்பு தான்.

க்ரியா தயாரித்துள்ள தமிழ் அகராதி உயர்ந்த முறையில் அமைந்துள்ளது. பயனுள்ள அகராதிதான். புக் ஃபேர் போது புரட்டிப் பார்த்தேன்.

கி. ராஜநாராயணன் 'தாய்' பத்திரிகையில் எழுதி வருகிற 'அடல்ட்ஸ் ஒன்லி' கதைகள் அவரது பெயரைக் கெடுக்கின்றன. பலரும் அவரை குறைகூறுவது இயல்பாகிவிட்டது. அவர் வேண்டுமென்றே, உற்சாகத்தோடு, இந்த ரகக் கதைகளை எழுதிக்கொண்டிருக்கிறார்.

நான் நலம். அண்ணியும் பிள்ளைகளும் சுகம்.

நீங்களும் வீட்டில் அனைவரும் நலம் தானே?

அன்பு
வ. க.

சென்னை.
29-2-92

அன்பு மிக்க இராமலிங்கம்,

வணக்கம். நலம். நீங்களும் வீட்டில் அனைவரும் நலம் தானே?

இதற்குள் 'வல்லிக்கண்ணன் கதைகள்' புத்தகம் குறிஞ்சிப்பாடி சம்பந்தனிடமிருந்து - அல்லது, குறிஞ்சிவேலன் வழியாக - பெற்றிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

நண்பர் 20-ம் தேதிக்குள் புத்தகத்தை தயாரித்து முடித்துவிட்டார். குறிஞ்சிவேலன் புத்தகம் ஒன்றும் (மலையாற்றூர் நாவல் மொழிபெயர்ப்பு) வேறு சில புத்தகங்களும் வெளியிட்டிருக்கிறார் அவர். எனக்கு 'வ.க. கதைகள்' மட்டும் 10 பிரதிகள் தந்தார்.

புத்தகம் அச்சும் அமைப்பும் அழகாக அமைந்துள்ளன. 20 கதைகள். 23 பக்கங்கள். 30 ரூ. விலை.

நீங்கள் தஸ்தயேவ்ஸ்கி நாவல் வெளியீட்டு வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருப்பீர்கள் என எண்ணுகிறேன்.

'காலச்சுவடு' சிறப்பு மலர் நண்பர் சுந்தர ராமசாமி அனுப்பியிருந்தார். பார்ப்பதற்கு மிக வசீகரமாக இருக்கிறது. படித்து முடித்தேன். நல்ல தயாரிப்பு தான். கனமான கட்டுரைகள், நல்ல கவிதைகள், கதைகள், புத்தக மதிப்புரைகள் என்று பயனுள்ள விஷயங்கள். அப்படிச் செய்திருக்கலாம், இதைச் சேர்த்திருக்கலாமே என்ற தன்மையில் யோசனைகளும் விமர்சனங்களும் சொல்லலாம் தான். சொல்கிறார்கள். செய்யப்பட்டிருப்பது பற்றி அபிப்பிராயம் சொல்வது தான் சரி; மற்றபடி ஆலோசனைகள், கூறிக்கொண்டிருப்பது வேண்டாத வேலையே என்பதுதான் என் எண்ணம். மலர், சு.ரா. எதிர்பார்த்தபடி வரவேற்பும் விற்பனையும் பெறவில்லை என்று தோன்றுகிறது. விலை 100 ரூபாய் என்றிருந்ததை ரூ. 80/- ஆக்கினார். வாசகர்களுக்கு 15% கழிவு தரலாம்: ரூ. 68 அனுப்பினால் 'காலச்சுவடு' செலவிலேயே மலர் வாங்கக்கூடிய நண்பர்கள் முகவரி சில தெரிவியுங்கள் என்று சு.ரா. எனக்கு எழுதியிருக்கிறார்.

புத்தகங்கள், பத்திரிகைகள், விசேஷமலர்கள் வெளியிடுவது என்பது 'கையைக் கடிக்கிற' காரியமாகவே இருக்கிறது தமிழ் நாட்டில். பிசினஸ் ரீதியாக புத்தகங்கள் வெளியிடுவோர் தொடர்ந்து ஏகப்பட்ட புத்தகங்களை பிரசுரித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

அன்பு
வ. க.

சென்னை.
6-4-92

அன்பு மிக்க இராமலிங்கம்,

வணக்கம். நலமாக இருக்கிறேன். அண்ணியும் பிள்ளைகளும் சுகம்.

நீங்களும் மற்றும் அனைவரும் நலம்தானே?

'புதிய நம்பிக்கை', 'நவீன கவிதை' இதழ்கள் கிடைத்தன. மிக்க நன்றி.

உங்களுடைய, 'வேர்கள்' நண்பர்களுடைய இலக்கியப் பாதுகாப்பு + 'புரவல்' பணி விஸ்தாரம் அடைந்துள்ளது சந்தோஷம் தருகிறது.

'புதிய நம்பிக்கை' ஊட்டச்சத்து பெறும் உற்சாகத்தில் புதிய வேகமும் புதிய தெம்பும் பெற்று இயங்கும் என நம்பலாம். இந்த இதழும் நல்ல கட்டுரைகள், கதைகள், கவிதைகளை கொண்டிருக்கிறது. படித்து ரசித்தேன்.

'நவீன கவிதை'யும் தரமாக இருக்கிறது. உங்கள் ஆர்வமும் ஒத்துழைப்பும் நற்பலன்களை உண்டாக்கக் காலம் துணைபுரியட்டும்.

இந்த வருடம் இலக்கியச் சிந்தனையின் நாவலுக்கான பரிசை தோப்பில் முகம்மது மீரானின் 'துறைமுகம்' பெற்றிருக்கிறது. திறமை நிறைந்த எழுத்தாளரின் தகுதியான படைப்புக்கு பரிசு கிடைத்திருப்பது மகிழ்ச்சியான விஷயம்தான்.

ஆண்டின் சிறந்த சிறுகதையை தேர்வு செய்தவர் தி.க.சி. ஆயினும் அவர் விழாவுக்கு வர இயலவில்லை. உடல்நிலை காரணம்.

கவிஞர் மீரா 'கவி' - 5வது இதழை கொண்டு வந்துவிட்டார். பாராட்டப்பட வேண்டிய விதத்தில் இருக்கிறது.

'சுபமங்களா' நல்லமுறையில் வளர்ந்து வருகிறது. புதிதாக 'வாசுகி' என்ற வாரப் பத்திரிகை, 'தினகரன்' நிறுவனத்திலிருந்து வர இருக்கிறது. பாவை சந்திரன் அதன் ஆசிரியராகச் சேர்ந்து, ஆரம்ப வேலைகளில் முனைந்தார். சீக்கிரமே வெளியேற்றப்பட்டார். தாமரைமணாளன் புகுந்துகொண்டார்! பத்திரிகை எப்படி இருக்குமோ - வந்தால்தான் தெரியும்.

அ.தி.மு.க. சார்பில் 'தமிழரசி' என்ற வாரஏடு வரப்போகிறதாம். பாவை சந்திரன் இதில் சேர்ந்திருக்கிறாராம்.

பெ முருகன் என்ற ஆராய்ச்சி மாணவர் 'ஏறு வெயில்' எனும்

நாவலை வெளியிட்டிருக்கிறார். கொங்கு நாட்டு மக்களின் வாழ்க்கையை எடுத்துச் சொல்லும் நல்ல நாவல். வட்டார வழக்கை அதிகம் பயன்படுத்தியிருக்கிறார்.

கதைத் தொகுப்புகள் பல வந்துள்ளன. எம். வி. வெங்கட்ராம், ஆர். சூடாமணி, என். ஆர். தாசன், மா. அரங்கநாதன் தொகுப்புகள் படித்தேன். நல்ல புத்தகங்கள்.

அன்பு
வ. க.

## ரவி கே. தாஸ்

சென்னை.
29-4-93

அன்பு நண்ப,

வணக்கம். வாழ்க்கையில் சந்தோஷங்களுக்குக் குறைவு இல்லை. சிறுசிறு சந்தோஷங்கள் என்றும் எங்கும் எப்போதும் உண்டு. அருமையான காபி சாப்பிடுவது இனிய சந்தோஷம். சிரிக்கும் முகத்தைப் பார்ப்பது, பிடித்த நண்பர்களோடு பேசுவது, நல்ல கவிதைகளை ரசிப்பது, சுவாரஸ்யமான புத்தகங்கள் படிப்பது - இப்படி எத்தனை எத்தனையோ.

நம்மை சுற்றிலும் அற்புதங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. மரங்கள் - அரசமரம் போன்றவை - இலைகளை உதிர்த்துவிட்டு புதுப்புதுக் கனவுகளாய், கலைத்துகள்களாய், அழகுகளாய் துளிர்கள் விட்டு தினந்தோறும் அவை மாற்றங்கள் பெறுவது முதல், கல் போன்ற விதைகளிலிருந்து சிறுமுளைகள் வெளிவந்து செடியாவது ஈறாக, அவை வகைவகையாய் வளர்ந்து விதம் விதமான மலர்கள் பூப்பது வரை எல்லாமே அற்புதங்கள் தான்.

மனசில் எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருப்பதும் அதிசயமேயாகும்.

எண்ணங்களை அழகு அழகாக எழுத்தில் பதிவு செய்யமுடிவதும் அதிசயம் தான்.

மனித உழைப்பு விதம்விதமான உற்பத்திகளை செய்துகுவிப்பதும், அறிவும் ஆராய்ச்சியும் புதிய புதிய

கண்டுபிடிப்புகளை வழங்குவதும் அற்புதம்தான்.

பிறப்பு ஒரு அற்புதம். இறப்பு? அதுகூட அற்புதமானது தான். யாருக்கு, எப்ப, எப்படி அது நிகழும் என்று தெரியமுடியாமல் இருப்பதால். மரணத்துக்குப் பிறகு என்ன என்று புரிந்துகொள்ள இயலாமல் இருப்பதாலும்.

அன்பு
வ. க.

## முனைவர் ச. முத்துக்குமரன்

24. 7-7-93

அன்புடையீர்,

வணக்கம். நீங்கள் எனக்கு ராஜவல்லிபுரம் முகவரிக்கு அனுப்பிவைத்த 'தமிழில் எழுதுவோம்' எனும் சிற்றேடும் கடிதமும் 5ம் தேதி திங்கள் அன்று இங்கு வந்து சேர்ந்தன. மகிழ்ச்சி. பயனுள்ள சிற்றேட்டை அனுப்பி உதவியதற்காக நன்றி.

படித்தேன். ஆங்கிலச் சொற்களுக்கு பொருத்தமான-யாரும் எளிதில் கையாளக்கூடிய தமிழ் சொற்களை தந்திருக்கிறீர்கள். உங்கள் நோக்கமும் முயற்சியும் வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியவை.

'தமிழில் ஒலிபெயர்க்கும் முறைகள்' பற்றிய இலக்கண விதிகளும் பலருக்கு பயன்படக்கூடும்.

நாளேடுகளில் அவசரம் அவசரமாக செய்திகளை எழுதிக்கொடுக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால், அங்கு பணி புரிகிறவர்கள் பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தேடி சிரமப்படமாட்டார்கள். தோன்றுவதை அப்படி அப்படியே எழுதிவிடுவார்கள்.

சில தமிழாக்க சொற்கள் பழகு தமிழாக அமைவதுமில்லை. எனவே மக்கள் ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்துவதை எளிதென உணர்கிறார்கள்.

ஐஸ்கிரீம் என்று சாதாரணமாக வழங்கிவருவதை நீங்கள் எழுதுவது போல் 'குளிர்பாற்குழம்பு' என்றோ, புதுச்சேரி அன்பர்கள் தமிழாக்கி தந்திருப்பது போல் 'பனிக்கூழ்' எனவோ சொல்வது

எளிதாக இருப்பதில்லை உரிய பொருளை உணர்த்துவதாகவும் இல்லை.

ரயில் என்பது வெகுகாலமாக 'புகைவண்டி' என்று தமிழில் குறிக்கப்படுகிறது. (நீராவித் தொடர்வண்டி எனவும் எழுதப்பட்டுள்ளது) ஆனால் புகைவிடாத டீசல் என்ஜின் மாட்டிய தொடர்வண்டிக்கு (மின்சாரத்தால் இயங்கும் என்ஜின் உடையதற்கும்) 'புகை வண்டி' என்ற சொல் பொருந்திவராது.

ஹீரோ - கதாநாயகன் என்பது சரியே. ஆயினும், அது ஒரு பொருளே ஆகும். Hero of our Times, Hero-Worship என்றெல்லாம் வருகிற போது, ஹீரோ 'கதாநாயகன்'இல்லை. நம்கால நாயகன், வீரநாயகன், வீரவணக்கம் என்றே தமிழாக்கப்படும். இப்பொருளையும் நீங்கள் குறித்திருக்கலாம்.

ஸ்கூட்டர் என்பதற்கு 'பாயும் உந்து' அல்லது 'பாயும் வண்டி' என்பதை விட, உள்ளதை எளிதில் உணர்த்தக்கூடிய வேறு சொல் தேவை என்று கருதுகிறேன்.

உங்களைப் போன்ற அறிஞர்கள் பலரது ஆர்வம் நிறைந்த முயற்சி தமிழுக்கு வளம் சேர்க்கும் என்பது உறுதி. வாழ்த்துக்கள்.

அன்பு
வ. க.

## மா. கமலவேலன்

14-10-93

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

நான் முக்கியமானதான எதுவும் எழுதவில்லை. அன்புத் தொல்லைகள் தொடர்ந்து செயல்புரிகின்றன. பல புத்தகங்களுக்கு முன்னுரை, அணிந்துரை எழுதிக்கொடுக்கிற வேலையே பெரியதாக இருக்கிறது. ஒரு புத்தகத்தை படித்து முன்னுரை எழுதி முடித்தால், அடுத்து இன்னொன்று வந்துவிடுகிறது. இப்படி தொடர்வேலையான இது இருந்துகொண்டே வருகிறது.

நான் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களுக்கு 'அணிந்துரை'

எழுதிக்கொடுத்திருப்பேன். முந்தாநாள் ஒரு நண்பரின் சிறுகதைத் தொகுப்புக்கு எழுதி அனுப்பினேன். அடுத்து ஒரு நாடகத்துக்கு எழுதும்படி ஒருவரின் கோரிக்கை.

இவை போக பலரும் சிறுபத்திரிகைகள், புத்தகங்கள் அன்புடன் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றைப் படித்துவிட்டு அவர்களுக்குக் கடிதங்கள் எழுதவேண்டி நேரிடுகிறது. இதுவும் அதிகமான காலத்தை எடுத்துக்கொள்கிறது. அன்பும் மதிப்பும் வைத்து யார்யாரோ அனுப்புகிறார்கள். படித்துப் பார்த்து கருத்து தெரிவிக்காமல் இருப்பது முறையல்ல என்பதால் எழுதுகிறேன்.

'அன்பர் பணி செய்ய' ஆளாக்கிவிட்டுவிட்ட' கதைதான். 'பராபர'த்துக்காவது 'இன்பநிலை தானே வந்தெய்'திய திருப்தி இருந்தது! எனக்கு காலம் எப்படி எப்படியோ போய்க் கொண்டிருக்கிறதே என்ற மனக்குறைதான் வளர்கிறது.

1993லும் பத்தாவது மாதம் பறந்து ஓடுகிறது! இன்னும் 6 வருடம் 2 மாதங்கள் தான். 'சூ மந்திரக்காளி!' என்பது போல் ஓடிவிடாதா என்ன! அப்புறம் தொட்டாச்சு 2000த்தை! 1-1-2000 என்று தேதியிட்டு எழுதக்கூடிய நன்னாள் வந்துவிடும். அன்று நான் இருப்பேனா? யார் கண்டது!

வாழ்க, வாழ்க என வாழ்த்திக்கொள்வோம்.

அன்பு
வ. க.

## மு. நாகரத்தினம்

சென்னை
13-4-89

அன்பு சகோதர,

வணக்கம். திடீரென்று நான் சென்னை வர நேர்ந்தது. நேற்று காலை வந்து சேர்ந்தேன். நலம்.

என் உள்ளம் வேதனையால் கனத்து வருகிறது. பொதுவாக உலகத்துத் துயரங்களை எண்ணி. மனிதர்களின் குறைபாடுகளை, அவலங்களை எண்ணி. வாழ்க்கையின் தன்மைகளை எண்ணி. ஒரு புத்தனின் துயரச்சுமை அது. ஏசுவின் இதயகனம் அது.

வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது? மனிதர்கள் ஏன் இவ்வாறெல்லாம் கஷ்டப்படுகிறார்கள்? இதெல்லாம் புரியாத வேதனை.

நான் செவ்வாய் பிற்பகல் 1-30 மணிக்கு திருநெல்வேலி ஜங்ஷனில் ரயிலேறினேன். அந்த எக்ஸ்பிரஸ் விருதுநகரிலிருந்து திரும்பி, அருப்புக்கோட்டை மார்க்கமாக மானாமதுரை வந்து, பின் காரைக்குடி - திருச்சி போய், வழக்கமான பாதையில் வருவது. விருதுநகர் - மானாமதுரை வழியில் இப்பதான் முதல்முறையாகப் பயணம் செய்தேன். புதிய காட்சிகள். புதிய அனுபவம்.

புதிய காட்சிகள் என்று சொல்வது தப்பு. புதிய சூழல் என்று சொல்லலாம். ஏனெனில், இதர பகுதிகளைப் போலவே வறண்ட காட்சிகள். தண்ணீர் இல்லாத பெரிய ஆறுகள்-பெரும் ஓடைகள்.... குளப் பரப்புகள். உயர் படிக்கட்டுகளைக் கொண்ட, ஆழமான ஆனால் நீரே இல்லாத, தெப்பக்குளங்கள். இந்த வெறுமை கண்டு என் மனம் வேதனைப்படுகிறது.

தமிழ்நாட்டின் வளங்கள் குறித்து பலரும் பாடியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் பாலாற்றிலும், பெண்ணையிலும், வையையிலும் நீர் ஓடிக்கொண்டு தான் இருந்திருக்கும். இல்லையெனில் இவ்வளவு விரிந்து பரந்த படுகைகள் தோன்றியிரா. இது பற்றி எல்லாம் நான் ஏற்கனவே எழுதி வைத்திருக்கிறேன்.

இப்போது நீரே இல்லாத குளங்கள், ஓடைகள், ஆறுகள் மேலும் அதிகமாகப் பார்வையில் பட்ட போது என் உள்ளம் கனத்தது. எந்தக் காலத்திலோ நீர் நிறைந்து இருந்திருக்கக் கூடிய இவை எல்லாம் வரலாற்றுச் சின்னங்கள் போல் கிடக்கின்றன.

'விதியே, விதியே, இந்தத் தமிழச் சாதியை என்ன செய்ய எண்ணியிருக்கிறாய்?' - பாரதி.

அன்பு
வ. க.

சென்னை
19-4-89

பிரிய சகோதர,

சனிக்கிழமை நான் சேலம் போகவில்லை. போகாமல் இருந்தால் என்ன கெட்டுவிடப் போகிறது என்று நினைத்தேன். போகவில்லை. பயணச் செலவுக்கு என்று அவர்கள் அனுப்பியிருந்த ரூபாய் நூறை திருப்பி அனுப்பிவிட்டேன்.

பயணம் செய்யமுடியாதபடி ஆகிவிட்டது. என் உள்ளம்

உணர்வோடு இருக்கிற அளவுக்கு உடல் ஒத்துழைப்பதில்லை. வண்டி ரொம்ப நாள் ஓடாது போலிருக்கு என்று எழுதிவைத்தேன்.

என் உள்ளத்து வேதனை பற்றி முன் கடிதத்தில் எழுதினேன். வேதனை புதிதாக முளைத்ததில்லை. என்றும் உள்ளேயே மொக்கு விட்டுக் கொண்டிருப்பது தான். அமர வேதனை அது.

கோடை காலத்தில், கொதிக்கும் வெயிலில், கால்களில் செருப்பு இல்லாது நடக்கிறவர்களைப் பார்த்து என் வேதனை பெருகுகிறது. குளிர் காலத்தில், இரவுகளில், பனியிலும் குளிரிலும், ரோடோரத்தில் படுத்து முடங்கிக் கிடக்கும் ஆண்கள்-பெண்கள்-குழந்தைகளைப் பார்த்து நாள்தோறும் வேதனையால் கனத்தது உள்ளம்.

திருமணம் ஆகாது வாடுகிற பெண்களுக்காகவும், திருமணம் ஆகியும் புகுந்த வீட்டின் கொடுமைகளுக்கு உள்ளாகி வதைபடுகிற பெண்களுக்காகவும், இல்லறத்தில் குணக்கேடர்களான கணவர்களால் துயரங்களுக்குள்ளாகி சோகத்துடன் வாழும் பெண்களுக்காகவும் உள்ளம் வேதனைப்படுகிறது.

அப்படி எல்லாம் இருந்தாலும், உலகத்து இன்பங்களைக் கண்டு மகிழத் தவறுவதில்லை மனசு. சின்னச் சின்ன இனிமைகளை ரசித்து சந்தோஷப்படாமல் இல்லை. காலம் தோறும் இனிமைகளுக்குக் குறைவு இல்லை.

பிப்ரவரியில் நான் பயணம் செய்த ஊர்களில் எங்கும், போகும் வழிகளில் எல்லாம், முருங்கை மரங்களில் அடர்த்தி அடர்த்தியாய் பூங்கொத்துகள் சிரித்துக் குலுங்கின. ரொம்ப மனோகரமாக இருந்தது அக் காட்சி.

'வேலிக்காத்தான்' செடிகள், பழங்கால கிராமபோன் பெட்டியின் குழல் போன்ற அமைப்பை உடைய பூக்களை காலைவேளையில் அழகாக காட்சிப் படுத்தின.

பங்குனி மாதமே வேப்பமரங்கள் பச்சைப் பசுமையாய் புதுக்கோலம் பூண்டுவிட்டன. சித்திரையில், ஒவ்வொரு வேப்பமரமும் தனித்தனிக் குளுகுளு! வழிநெடுக வேப்பமரங்கள் மோகனத் தோற்றம் காட்டி மகிழ்வித்தன.

பொகெய்ன்வில்லா பூக்கள் கலர்கலராய் கொத்து கொத்தாய்.

மஞ்சள் நிற புஷ்பங்கள் விதம்விதமாய்.

அரச மரங்களின் புதிய மினுமினுப்பு.

பச்சை நிறத்தில் தான் எத்தனை வர்ண பேதங்கள்!

பூக்களில்தான் எத்தனை எத்தனை வடிவங்கள், வனப்புகள்!

பார்க்கப் பார்க்கத் திகட்டாத புதுமைகள், இனிமைகள் இவை எல்லாம். இவற்றை காணமுடிந்திருப்பதே பெரும்பேறு அல்லவா என்று மகிழ்ந்துபோகிறது மனசு.

அன்பு
வ. க.

அன்பு சகோதர,

வணக்கம். நலம் தானே?

சனி, ஞாயிறு தொடர் மழைக்குப் பிறகு, திங்கள் அன்று வெயில் வந்தது. அன்று வெயில் ரொம்ப அழகாக இருந்ததாகத் தோன்றியது. மரங்களும் வானமும் புதிய வசீகரத்துடன் சிரித்தன. அவை எல்லாமே கவிதைகளாகத் தோன்றின.

கவிதை பற்றிப் பலரும் பெரிதாக எழுதுவது சகஜமாகிவிட்டது. என்றாலும், கவிதை என்பது என்ன என்று இதுவரை எவரும் தெளிவாகச் சொல்லிவிடவில்லை. பலப்பல கூறிவிட்டு, "கவிதை கவிதையாக இருக்க வேண்டும்" என்று ஏதோ மகத்தான உண்மையை விளக்குவது போல் எழுதிவைக்கிறார்கள்-சாதாரண வாசகனுக்கு கவிதை என்பது என்ன என்று தெளிவுபடுத்த முடியாத அறிவாளிகள்.

ஆகவே, "கவிதை" என்பது விளக்கப்பட முடியாத ஒன்று என்றாகிறது. பயிற்சியால், தேர்ச்சியால், அனுபவத்தால், ஈடுபாட்டால், உள்ளுணர்வால் உணரப்பட வேண்டிய ஒரு உன்னதம் என்றாகிறது. "அழகு" மாதிரி.

சிலருடைய வாழ்க்கையே கவிதையாக அமைந்து விடுவதும் உண்டு.

அன்பு
வ. க.

அன்பு சகோதர,

வணக்கம்.

நீங்கள் 22.9.89ல் கோவைக்கு என் பெயருக்கு அனுப்பிய கடிதம் நேற்று (3.10.89) தான் இங்கே வந்து சேர்ந்தது.

விசாரிப்புகளுக்காக நன்றி.

எல்லாம் மனசைப் பொறுத்தது தான். "தீக்"குள் விரலை வைத்தால் உன்னை தீண்டும் இன்பம் தோன்றுவதையே நந்தலாலா"என்று சொல்லக்கூடிய மனப்பக்குவம் ரொம்ப உயர்ந்தது. அது சாமான்யர்களுக்கு சித்திக்க முடியாத ஒன்று.

நான் சாதாரணன் வலிகள், வேதனைகள், துயரங்களை உணரக்கூடிய சாமான்யனே. ஆனாலும், இடது பாதத்தில் நான் பட்ட காயம் என்னை பெரிதாக பாதிக்கவில்லை என்பது உண்மை. அதை கோவை டாக்டர் கூட நம்ப மிகவும் சிரமப்பட்டார். நம்பவில்லை என்றே சொல்லலாம். வலியை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தி இருப்பதை காட்டுவதற்காக, நான் பொய் சொல்வதாக அவர் எண்ணினார் என்றே எனக்குப் பட்டது.

இது போன்ற சமாச்சாரத்தில் நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்?

எல்லாம் மனநிலையைப் பொறுத்தது தான்.

செப்டம்பர் 6-ம் தேதி ஒரு அற்புத நாள். அன்று ஆறு மாவட்டங்கள் வழியாக (கோவை, ஈரோடு, சேலம், தர்மபுரி, தென் ஆற்காடு, வட ஆற்காடு) பயண வாகனம் (பஸ்) மாற்றங்கள். எனது அருமை திருநெல்வேலி மாவட்டத்தை விடப் பசுமையான, குளுமையான, சூழ்வெளிகள். அங்கங்கே பெரிசு பெரிசாய்-வர்ண மயமாய்-ஐயனார் சிலைகள். ஒரு இடத்தில் பூதவடிவ, தொந்தி வாலாக்களே கூட்டம் போட்டிருப்பது போல், பல ஐயனார் சிலைகள்-சதுர அமைப்பில்-உட்கார்ந்திருந்தன. வேடிக்கையாக இருந்தது.

தர்மபுரி மாவட்டம்-சேர்வராயன் மலைப் பகுதியினூடே பயணம் மனோகரமாக இருந்தது. மலைப்பாதை. அங்கங்கே ஒரு சில குடிசைகள் கொண்ட குடியிருப்புகள். ஒன்றிரண்டு தங்குமிடங்கள் மட்டுமே சில "ஊர்" இல். இப்படிப்பட்ட இடம் ஒன்றில் சிறிது காலம் வசிக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் எனக்குக் கிட்டுமானால், எவ்வளவு புதுமையாக, இனிமையாக, பயங்கரமாகக் கூட, அற்புதமாக, தனிக் காவியமாக அமையும் என் வாழ்க்கை! இப்படி ஆசைப்பட்டது என் மனம்.

அன்றையத் தொடர்ச்சி தான் இரவு 12.30மணிக்கு, வாலாஜாவில் ஒரு லாரியில் ஏற முயன்று வழுக்கி விழுந்து, இடது கால் பாதத்தில் சக்கரம் அமுக்கி, பாதத்தில் காயம் பட்ட விபத்து! என் மனம் அதனால் பாதிக்கப்படவில்லை.

அவ்வளவு தான்!

அன்பு
வ. க.

அன்பு சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம்.

அடிக்கடி லீவ் எடுக்கும்படி உங்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுக் கொண்டிருப்பது வருத்தத்துக்கு உரிய விஷயம் தான்.

உடல் நலம் அடிக்கடி குன்றிப் போவதற்கு உள்ளமும் முக்கிய காரணம். உள்ளத்தை அமைதியும் சந்தோஷமும் நிறைந்ததாக வைத்துக் கொள்ள வேண்டும்.சந்தோஷம் தரக்கூடிய புத்தகங்களைத் தான் படிக்கிறீர்கள். நல்ல நண்பர்கள் இருக்கிறார்கள். பின்னே என்ன?

கவலைகள் இருந்தால் அவற்றை கொல்க. கவலைப்பட்டுக் கொண்டிருப்பதால் மட்டுமே காரியங்கள் நடந்துவிட மாட்டா.

அன்பு
வ. க.

அன்பு சகோதர, வணக்கம்.

வாழ்க்கை சோகங்களை வைத்துக் கொண்டு சாம்பிக் குவிதற்காக மட்டுமே இல்லை. ஆபீஸ் கட்டிடம், பைல்கள், அழுது வழியும் மனிதர்களோடு மட்டும் அது அடங்கி விடுவதில்லை. கஷ்டங்கள், தொல்லைகள், சிக்கல்கள்-அலைகள், அலை மேல் அலைகள், அலையின் பின் அலைகள் அவற்றுக்கும் மேலே, மேலே, மேலே எழுந்து பிரகாசிக்கக் கூடிய சூரியன் ஆதல் வேண்டும் மனித உள்ளம்.

அன்பு
வ. க.

26-7-93

அன்பு சகோதர, வணக்கம்.

என் கடிதங்களை தொகுத்து வெளியிடுவதில் நீங்கள் தீவிர ஆர்வம் கொண்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. நன்றி. என் இசைவு என்றும் உண்டு. தாராளமாக வெளியிடுங்கள், கடிதத்தொகுப்பை. கடிதங்கள் கிடைக்கவேண்டும். அதுதான் முதலாவது பெரிய சிரமம்.

நான் ஏகப்பட்ட பேர்களுக்குக் கடிதங்கள் எழுதினேன். எழுதிக்

கொண்டிருக்கிறேன். எத்தனை பேர் என் கடிதங்களை பாதுகாத்து வருகிறார்கள்? - சிலபேர்களுக்கு மிக நிறையவே எழுதினேன். புதுடில்லி ஆதவனுக்கும்.

-உங்கள் கடிதங்கள் மிக சுவாரஸ்யமாக இருக்கின்றன. எவ்வளவோ விஷயங்கள் பற்றி ரசமாக எழுதுகிறீர்கள்.எங்கள் வீட்டில் எல்லோருமே உங்கள் கடிதங்களை ரசித்து மகிழ்கிறோம். எனக்கு வருகிற கடிதங்களை உடனுக்குடன் நான் கிழித்துப் போட்டுவிடுவேன். ஆனால் உங்கள் கடிதங்களை அப்படிச் செய்வதில்லை. சேர்த்துவைக்கிறேன்.

இப்படி ஆதவன் ஒரு சமயம் எழுதினார். அவர் இறந்துபோனார். என் கடிதங்களும் போயிருக்கும்.

உங்களுக்கு நான் எழுதிய கடிதங்கள் இருக்கும். நெய்வேலி இராமலிங்கம் கொஞ்சமாவது வைத்திருப்பார். வண்ணதாசன் பற்றி சொல்வதற்கில்லை. தி.க.சியிடமிருந்து ஏதோ கொஞ்சம் கிடைக்கலாம்.

ஆழ்கடலில் தூண்டில் போட்டு மீண்பிடிப்பது போல-விரிந்த வானவீதியிலே நட்சத்திரங்களை அறுவடை செய்ய முயல்வது போல, சிரமமான காரியமாகத்தான் இருக்கும். பார்க்க எளிதானது போல் தோன்றலாம்.

வாரி இறைக்கப்பட்டிருக்கின்றன கடிதங்கள். ஓரளவாவது சேகரிக்கலாம் என முயற்சி பண்ணுவதில் நஷ்டமில்லை.

அன்பு
வ. க.

18-10-93

அன்பு நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

காலவேகம் சகலவிஷயங்களிலும் குழப்பங்களையும் சிக்கல்களையும் விதைத்துச் செல்கிறது. வாழ்க்கையின் சகல கோணங்களிலும் மாற்றங்கள் ஏற்பட, சுழல்களும் உள்ஓட்டங்களும் நிகழ்கின்றன. மதிப்புகள் (Values) பற்றிய கண்ணோட்டங்கள் மாறுகின்றன.

மாறுதல் வளர்ச்சியின் அறிகுறி என்று சொல்லப்படுவது உண்டு.

ஆனால் அனைத்து மாற்றங்களும் வளர்ச்சித் திக்கில் செல்வதில்லை என்பதை வாழ்க்கையும் மனித இயல்புகளும் உணர்த்திக்கொண்டே இருக்கின்றன.

குடும்பம், குழந்தைப் பேறு, ஆண்பெண் உறவுகள் பற்றிய சிந்தனைக் குழப்பங்களும் உரிமைக்குரல்களும் சமூக நிலைகளை கலங்கலாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆழ்ந்த சிந்தனைகளும் அனுபவங்களினால் பட்டுத்தேறலும் காலமும் தான் தெளிவு ஏற்படுத்த வேண்டும்.

அன்பு
வ.. க.

## ஏ. தர்மராஜ் (த. ராசு)

20-10-93

அன்பு நண்ப,

வணக்கம்,

உங்கள் 16ம் தேதிக் கடிதம் நேற்று வந்தது.

இடைக்காலத்தில் உங்கள் முகவரியில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை தெரிந்துகொண்டேன். அடிக்கடி வீடு மாற்றுவது சிரமமான காரியம் தான். என்றாலும், சில சிரமங்களை வாழ்க்கையில் விரும்பியோ விரும்பாமலோ எதிர்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

நான் நலம். சென்னையில் தான். வெளியூர் போகிற எண்ணம் இப்போதைக்கு இல்லை மழை தொடர்ந்து அருள்புரிந்து கொண்டிருக்கிறது. அதனாலும் சங்கடங்கள் தான்.

மழை பெய்யாவிட்டாலும் சங்கடம் தான். காலம் ஓடுகிறது. இன்னும் ஆறு வருடங்கள் இரண்டு மாதங்களில் '2000' என்பதை எட்டிவிடலாம். நம்முடன் பழகிய 'நூற்றாண்டு' போய்விடும்! ஊரும் உலகமும் வழக்கம் போல் தான் இருக்கும் - மனிதர்களின் நோக்கும் போக்கும் மாறாமல் இருப்பதால்.

அன்பு
வ. க.

26-10-93

அன்பு நண்ப,

வணக்கம். சந்தோஷமாக வாழ்க்கையை நடத்த முடிந்திருப்பதே - நடத்த முடிவதே - மனநிறைவு தரும் நற்பேறுதான்.

வாழ்க்கை ஒவ்வொருவருக்கும்- ஒவ்வொரு குடும்பத்துக்கும் - எப்படி எப்படியோ அமைந்து போகிறது. ஏன் இப்படி எல்லாம் இருக்கிறது என்று புரிவதில்லை.

என்னைப் பொறுத்தவரையில், படிப்பது-எழுதுவது-ஊர்சுற்றுவது-கனவு காண்பது என்பதை ஒரு வாழ்க்கை முறையாக வரித்துக்கொண்டேன். இப்போது சில காலமாக ஊர்சுற்றுவது அதிகம் இல்லை.

போட்டிகள் மிகுந்த இந்தக் காலத்தில், சூழ்நிலையில், முண்டி அடித்து முன்னேறுவதற்குத் தேவையான ஆற்றலும் இயல் பூக்கங்களும் இல்லாதவர்கள் ஒதுக்கித் தள்ளப்படுவதே சமூக (வாழ்க்கை) நியதி. ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பதை சுபாவமாகக் கொண்டு விடுகிறவர்களை, வாழ்க்கையும் காலமும் மனித சமூகமும் சுலபமாக ஒதுக்கி விடுகின்றன. அப்படிப் பட்டவர்களில் நானும் ஒருவன் தான்.

அன்பு
வ. க.

## க. சுப்ரமணியன்

18-1-94

அன்பு நண்பர் அவர்களுக்கு,

வணக்கம். 'வெளிச்சத்தில் உதயம் முயல்வோம்', 'தெளிவில் ஞானம் பெறுவோம்'- நல்ல குறிக்கோள்கள். வாழ்க்கைக்கு ஒளிஊட்டக்கூடிய சுடர்ப் பொறிகள்.

'எங்கும் என்றும் எப்போதும் இன்களி மகிழ் நகை' விளங்க வேண்டும் என்று விரும்புவது நல்ல எண்ணம்.

சந்தோஷங்கள் பூத்துக் குலுங்க வேண்டும். அங்கங்கே பூத்துச் சிரிக்கிற சிறுசிறு சந்தோஷங்களைக் கண்டு ரசித்து மகிழக் ...ய மனப்பக்குவம் வேண்டும்.

வாழ்க்கை இனியது. அதை நேசிப்போம். அன்பும் நட்பும் வாழ்க்கைக்கு மாண்பு அளிப்பவை. அவற்றைப் போற்றி வளர்ப்போம்.

வாழ்த்துவோம். வாழ்வோம்.

வாழ்வோம். வளர்வோம்.

வளர்வோம். வெல்வோம்.

அன்பு
வ. க.

## கி. ஸ்ரீதர்

14-5-94

அன்பு மிக்க ஸ்ரீதர், வணக்கம்.

நீங்கள் கூரியர் மூலம் அனுப்பிய 'கவிதை பற்றி' புத்தகம் உரிய நாளில் கிடைத்தது. நன்றி. மகிழ்ச்சி.

'காஞ்சனை' அறிக்கையும் உங்கள் கடிதமும் படித்து சந்தோஷம் அடைந்தேன்.

திருநெல்வேலியில் இருந்துகொண்டே மிகச் சிறந்த சினிமாப் படங்களைக் கண்டுகளிக்கும் வாய்ப்பையும் வசதியையும் 'காஞ்சனை' ஏற்படுத்தித் தருவது அருமையான பணியேயாகும். 'இதுவரை திரையிட்ட படங்கள்' பலவற்றையும் நீங்கள் பார்த்து ரசித்திருப்பீர்கள். பாக்கியசாலி நீங்கள்.

எனது 11-4-94 கடிதத்தை அடுத்து ஒரு கடிதம் உங்களுக்கு எழுதவேண்டும் என்று எண்ணியிருந்தேன். அந்த சந்தர்ப்பத்தில் 'சினிமாவுக்கு வயது நூறு' என்று பல பத்திரிகைகளிலும், திருவனந்தபுரம் பட விழா பற்றிய கட்டுரைகள் வந்திருந்தன. சில முக்கியப் படங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தன. லூமியர் சகோதரர்களின் முதன்முதலான துண்டுப்படங்கள், மிகப்பிரசித்தி பெற்ற ஐசன்ஸ்டீனின் 'பேட்டில்ஷிப் பாட்டம்கின்', டி சிக்காவின் 'பைசைக்கிள் தீஃப்' பற்றி எல்லாம் எழுதியிருந்தார்கள். இவற்றை எல்லாம் நீங்களும் பார்த்திருப்பீர்கள். இவற்றை எல்லாம் 'பார்க்கக் கொடுத்து வைத்த' நீங்கள் அதிர்ஷ்டசாலிதான் என்று எழுத விரும்பினேன். ஆனாலும் எழுதவில்லை.

தொடர்ந்து பத்திரிகை பின் பத்திரிகையாக பிரமாதப்படுத்தி

எழுதுகிற 'ஸிராசிக் பார்க்' படம் பார்த்தீர்களா? அற்புதமான திகில் அனுபவமாகத் தான் இருக்கும் அந்தப் படத்தைப் பார்ப்பது.

'காஞ்சனை' என்றொரு சினிமா சஞ்சிகை தயாராகி வருவதும் பாராட்டவும் வரவேற்கவும்படவேண்டிய நற்செயல்தான்.

'காஞ்சனை பதிப்பகம்' பிச்சுமணிகைவல்யத்தின் 'கவிதை பற்றி'ய நூலை வெளியிட்டிருப்பது துணிச்சலான காரியம் தான். புத்தகம் நன்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கவிதை பற்றி இப்படி மேதாவித்தனமாக சர்ச்சை செய்வதன் மூலம் ஒரு நபருக்குக் கூட கவிதை பற்றிய தெளிவோ, ரசனையோ, ஈடுபாடோ உண்டாக்கிவிட முடியாது.

கவிதைகளையும் இலக்கியங்களையும் பற்றி பெரும் பேச்சு பேசுகிறவர்களும், ஆழ்ந்த-சீரிய-'இஸம்' சார்ந்த விமர்சனங்கள் எழுதுகிறவர்களும் அவரவர் மேதமையை, அறிவுப் பிரகாசத்தை, வாக்குவன்மையை, ஆய்ந்து சொல்லும் ஆற்றலை வெளிப்படுத்த ஆசைப்படுகிறார்களே தவிர, கவிதையை நல்இலக்கியத்தை சாமான்யனும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு விளக்குகிறார்களில்லை. விஷயத்தை குழப்புகிறார்கள் என்று சொல்லவேண்டும்.

பிச்சுமணி கைவல்யத்தின் கவிதை விளக்கச் சொற்பொழிவும் அப்படிப்பட்டது தான்.

உண்மையில், கவிதையை அது என்ன என்று இதுவரை எவரும் சரியானபடி விளக்கியதில்லை. விளக்கமுடிவதில்லை. அவனவனே படித்துப் புரிந்து கொள்ளவேண்டியது தான். கவிதையை உணரும் பக்குவம் கவிதைகளை ஈடுபாட்டுடன் படித்துப் படித்துப் பெறவேண்டிய ஒன்று. இத்தகைய மேதாவித்தனமான வாதங்களையும் விமர்சனங்களையும் படித்துத் தெரிந்துகொள்ளக் கூடிய விஷயமல்ல அது.

அன்பு
வ. க.

12-6-94

அன்பு மிக்க ஸ்ரீதர்,

வணக்கம். 10ம் தேதி காலை நலமாக சென்னை வந்து சேர்ந்தேன். 18 மணி நேரம் ரயில் வண்டியில் உட்கார்ந்தபடி வருவது

என்பதே ஒரு சாதனை தானே! பயணங்களில் நான் தூங்குவதில்லை. 'பெர்த்' டிக்கட் எடுத்து, படுத்துக்கொண்டு வந்தாலும் தூக்கம் வருவதில்லை. பின்னே தெண்டத்துக்கு எதுக்காக அதிகப் பணம் கொடுத்து 'பெர்த்' டிக்கட் வாங்க வேணும்? ஆகவே, நான் 'சீட்' தான் விரும்புவது.

உட்கார்ந்தபடி, முழித்துக் கொண்டு, அப்பப்ப கண்களை மூடிக்கொண்டு, இடைக்கிடை திறந்து வழியிலே தெரிகிற இருட்டையும் வெளிச்சப் புள்ளிகளையும் பிரகாசங்களையும் பிறவற்றையும் பார்த்து வியந்தபடி, இஷ்டம்போல் கற்பனை பண்ணியவாறு பயணம் செய்வது 'இன்ட்ரஸ்டிங்' சமாச்சாரம் - என்னைப் பொறுத்த வரை.

நான் அப்படி உட்கார்ந்தவாறு பயணம் செய்வது மற்றவர்களுக்குத் தான் கஷ்டமாக இருக்கும்! என்ன இப்படி உட்கார்ந்துகிட்டே....? கொஞ்சம் படுக்கலாமே?- என்று உபசரிப்பார்கள். வசதி இல்லாத இடத்தில் முடக்கிக் கொண்டு, உடல் வளைத்து ஒடுக்கி சிரமப்படுவார்கள். சிலர் எந்தச் சூழ்நிலையிலும் எப்படியோ நிம்மதியாகத் தூங்கிவிடுகிறார்கள். பாக்கியவான்கள்!

இம்முறை 20 நாட்கள் நான் சென்னையில் இல்லை. முன்பெல்லாம் மாசக் கணக்கில் இல்லாமல் போவேன். ராஜவல்லி புரத்திலேயே, ஒவ்வொரு வருடமும், இரண்டு மூன்று மாதங்கள் தங்குவது உண்டு. சிலசமயம் அஞ்சாறு மாதங்கள் கூட. இப்ப ஒரு சில நாட்கள் தங்கக் கூட வசதிகள் இல்லாமல் போயின.

திருநெல்வேலியில் தி.க.சி.யுடன் தங்கிய 15நாட்கள் மனோகரமான நாட்கள். அவருக்கும், எனக்கும், நண்பர்களுக்கும் சந்தோஷம் தந்த இனிய காலம்.

இம்முறை புன்னைக்காயல் போனது ஒரு புதுஅனுபவம் தான். நயினார் மற்றுமொரு நல்ல மனிதர். இனிய நண்பர். அவர் தூண்டியிராவிட்டால் புன்னைக்காயல் போய், தாமிரவர்ணியின் கடைசிப் பகுதியை நானாகப் பார்க்க முன்வந்திருக்க மாட்டேன். ஜங்ஷனில், புன்னைக்காயல் என்று போர்டு மாட்டி, புறப்பட்டுச் சென்ற ஒற்றை பஸ்ஸை எத்தனையோ வருட காலம் பார்த்து இதில் எப்பவாவது போய் ஆற்றின் முடிவை பார்க்கவேண்டும் என்று எண்ணம் வளர்த்த பெருமை எனக்கு உண்டு. செயலூக்கம் இல்லாச் கனவுப் பிரகிருதி தான் நான்.

அன்பு
வ. க.

## க. ராசேந்திரன்
(சின்னஞ்சிறு கோபு)

29-7-85

பிரிய நண்ப,

வணக்கம். உங்கள் 12-7-85 கடிதம்.... மகிழ்ச்சி.

'வடுக விருட்சியூர் அமுதாவின் கடிதங்கள்' நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பது சந்தோஷம் தருகிறது. பல பத்திரிகைகளும் அதை நல்ல முறையில் விமர்சித்திருப்பதும் மகிழ்ச்சிக்கு உரிய விஷயம் தான். 'தீபம்' ஆகஸ்ட் இதழில் மதிப்புரை. வரலாம்.

கும்பகோணத்தில் நீங்கள் நண்பர் கரிச்சான்குஞ்சுவை சந்தித்துப் பேசியது அறிந்தேன். உங்கள் கடிதம் மூலம் தான். அவர் சிரமமான வாழ்க்கை நடத்த நேர்ந்திருப்பது பற்றி அவ்வப்போது தகவல்கள் கிடைக்கின்றன.

கரிச்சான்குஞ்சு திறமையுள்ள நல்ல எழுத்தாளர். நல்ல சிறுகதைகள் பல எழுதியிருக்கிறார். அவருடைய நாவல் 'பசித்த மானுடம்' அருமையான படைப்பு. அது இங்கு பத்திரிகைகளாலும் எழுத்தாளர்களாலும் வாசகர்களாலும் உரியமுறையில் கவனிக்கப்படவே இல்லை. இது வேதனைக்கு உரியது.

தமிழ்நாட்டில் பதிப்பகத் துறைமட்டுமல்ல. சகல துறைகளுமே மோசமாகத் தான் இருக்கின்றன. எந்தத்துறையிலும் உண்மையான திறமையும் உழைப்பும் உரிய கவனிப்பையும், பாராட்டுதலையும் பெற முடிவதில்லை.

'அன்னம் விடு தூது' கடைசி இதழ் இம்மாதம் வந்தது. உங்களுக்கும் பிரதி வந்திருக்கலாம் அது ஒரு சிறப்பு இதழாகவே அமைந்திருக்கிறது.

அ.வி. தூது நல்ல பத்திரிகை. தொடர்ந்து வாழ்ந்திருக்க வேண்டும். தமிழ் பத்திரிகை உலக வாசகர்களின் ருசி எப்படி எப்படியோ இருக்கிறது. 'அன்னம்' போன்ற தரமான பத்திரிகையை அவர்கள் வாங்கத் தயாராக இல்லை.

அடுத்து, ஏஜண்டுகள். இவர்கள் பெரும் அளவில் விற்கிற வணிகப் பத்திரிகைகளுக்குப் பணம் அனுப்பி விடுவார்கள். பாக்கி வைக்க மாட்டார்கள். ஆனால், சிறு பத்திரிகைகளுக்கு, பத்திரிகை விற்ற பணத்தை மாதாமாதம் அனுப்பிவைக்க இவர்களுக்குக் கைவராது. மனசும் இராது. இவர்களை நம்பித்தான் பத்திரிகைகள் வரவேண்டியிருக்கிறது.

பூம்புகார் பிரசுரம், மணிவாசகர் நூலகம் இரண்டிலுமிருந்து உங்களுக்கு பதில் வந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

புது டில்லியில் "தலைநகரில் தமிழர்கள்" என்று ஒரு மாதப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சும்மா தகவல் பத்திரிகை. தலைநகரில் வசிக்கிற பிரமுகர்கள், நடைபெறுகிற நிகழ்ச்சிகள் பற்றிய விஷயங்களை வெளியிடுகிறது. உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

'மீட்சி' பிரம்மராஜன் (கல்லூரிப் பேராசிரியர்) முயற்சியால் வந்தது. அவர்தான் எவ்வளவு நஷ்டப்படுவார்? புத்தகங்கள் பிரசுரிப்பதில் அவர் கவனம் திரும்பிவிட்டது என்று தோன்றுகிறது.

உங்கள் பக்கம் மழை உண்டா? சென்னையில் மழை என்று சொல்லும்படியாக பெரியதாக எதுவும் இல்லை. பொசுபொசு தூற்றல் தினம் தண்ணீர் தெளித்துவிட்டுப் போகிறது.

அன்பு
வ. க.

## இரா. நாகசுந்தரம்

சென்னை.
11-10-93

அன்பு நண்ப,

வணக்கம். உங்கள் கடிதமும், 'சங்கு' கதைத்தொகுப்பும் கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி.

புத்தகத்துக்கு நன்றி.

பரந்துபட்ட வாழ்க்கை அனுபவங்கள் சித்திக்கப் பெற்ற நீங்கள். அவ்வனுபவங்களில் சிலவற்றையும், சில அனுபவங்கள் உங்களில் ஏற்படுத்திய மனப்பதிவுகளையும் எழுத்தில், சிறுகதை வடிவத்தில், பதிவு செய்திருப்பது நல்ல காரியம். இவை வாழ்க்கையையும் மனிதர்களையும் மேலும் கொஞ்சம் புரிந்துகொள்வதற்கு உதவக்கூடும்.

உங்கள் அனுபவங்களை எளிய, இனிய முறையில் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அவை படிப்பதற்கு சுகமாக இருக்கின்றன.

இவற்றில் பல கதைகள் இல்லை என்று நண்பர் பாவண்ணன் குறிப்பிட்டிருக்கிறார். அதனால் என்ன?

'வாழ்க்கைச் சித்திரம்' 'நடைச்சித்திரம்' என்று சொன்னால் சரியாக இருக்கும். SKIT, SKETCHES என்ற தன்மையிலும் கதைகள் எழுதப்படலாம். எழுதப்படுவதுண்டு. நீங்கள் எழுதியிருப்பவற்றில் அநேகம் `Skits' தான்.

'சட்டை', 'நாய்க் குட்டிகளும் எங்கள் சிம்மாசனமும்', 'ஒரு கோட்டுப் புள்ளிகள்' போன்றவை இந்த ரகத்தில் சேரும்.

ந. பிச்சமூர்த்தி 'மனநிழல்' என்று எழுதிக்கொண்டிருந்தார். அப்படி எழுதப்பட்டவை கட்டுரைகளுமில்லை; கதைகளும் இல்லை. ஆயினும் கதைத்தன்மையும், கட்டுரையின் சாயலும் அவற்றில் கலந்திருக்கும். அவற்றை SKETCHES, IMPRESSIONS என்று கூறலாம். உங்களுடைய 'கிராமாத்மா' 'அனுதாபம் மட்டுமல்ல' 'சங்கு', போன்றவை அப்படிப்பட்டவை.

'அவளுக்காக ஒருவன்', 'விதை', 'ஒரு முகாரி மோகனமாகிறது', 'கல்யாணத்துக்குப் போகலையா?' போன்றவை வாழ்க்கை யதார்த்தங்களையும், மனித இயல்புகளையும் நன்கு பதிவு செய்துள்ள ரசமான கதைகள்.

இத்தொகுப்புக்கு மேலாகவும் நீங்கள் கதைகள் எழுதியிருப்பீர்கள் - இப்பவும் எழுதிக் கொண்டிருப்பீர்கள் - என்று நினைக்கிறேன்.

எழுதுங்கள். உங்கள் இயல்பின்படி, உங்கள் வாழ்க்கை அனுபவங்களை எழுத்தில் பதிவு செய்க. எல்லோரும் ஒரே மாதிரித்தான் எழுதவேண்டும் என்பதில்லை. சிறுகதைத் துறை இனிய பூங்கா. அதில் பலப்பல வகையான மலர்களும் பூக்க வேண்டியதுதான்.

என் வாழ்த்துக்கள்.<br>
பாராட்டுகளும் கூட

அன்பு<br>
வ. க.

## ந. க. துறைவன்

ராஜவல்லிபுரம்
24-7-90

அன்பு மிக்க துறைவன், வணக்கம்.

உங்கள் 15-7-90 கடிதம் கண்டு மகிழ்ந்தேன். வேலூர் சிற்றிதழ்கள் கண்காட்சி சிறப்பாக நடைபெற்றதை அறிய சந்தோஷம். நான் சென்னையை விட்டு வந்து ஒரு மாதம் ஆகிறது. 7ம் தேதி ராஜபாளையம் போனதுக்குப் பிறகு, 14, 15ல் நான், தி.க.சி., தோப்பில் முகம்மது மீரான் மூவரும் திருச்செந்தூர் போனோம். அங்குள்ள இளம் எழுத்தாளர்களை கண்டு பேச. பிறகு அருகில் உள்ள ஆறுமுகநேரி போய் வந்தோம். இந்த ஞாயிறு (22) பாப்பாங்குளம் என்ற கிராமத்துக்கு தி.க.சி.யுடன் போய்வந்தேன். நாட்கள் சந்தோஷமாகக் கழிகின்றன. தி.க.சி.க்கும் எனக்கும் 1941 ஜூன் மாதம் நட்பு ஏற்பட்டது. ஆகவே இப்ப ஐம்பதாவது வருடம் நடக்கிறது. பொன்விழா ஆண்டு. 1991 ஜூனுடன் முடிவுறும். பொன்விழா ஆண்டில் நாங்கள் இருவரும் திருநெல்வேலி வட்டாரத்தில் சுற்றுலா செய்ய நேர்ந்திருப்பதே எங்கள் நட்பின் பொன்விழாவை இனிது கொண்டாடுவது போல் தான். நாங்கள் நலம். நீங்களும் மனைவியும் மக்களும் நலம்தானே?

அன்பு
வ. க.

## இளசை அருணா

ராஜவல்லிபுரம்.
29-11-71

அருமை நண்ப,

வணக்கம். உங்கள் கடிதம்... திரு. ஆ. குருசாமி அவர்களை அறிமுகம் செய்திருப்பதற்காக நன்றி. மகிழ்ச்சி.

வருஷத்துக்கு ஒரு தடவை, சென்னையில் ரயிலேறினால் தாழையூத்தில் வந்த இறங்குவது - அப்புறம் வேறு எங்கும் போவது இல்லை என்பதை ஒரு கட்டாய வழக்கம் ஆக்கிவிட்டது பொருளாதாரம். ஒவ்வொரு தடவையும் தென்காசி, மதுரை, இடைசெவல், ராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் என்று வருமாறு அங்கங்கே உள்ள நண்பர்கள் அன்போடு அழைப்பதும், நான் போக இயலாது இருப்பதும் ஒரு கால நியதி ஆகவே வளர்ந்து வருகிறது. இம்முறை என்னை எப்படியும் தங்கள் ஊருக்கு வரவழைத்து, தங்கள் அதிதியாக உபசரிக்க வேண்டும் என்ற ஆசை மிகுதியால்,

அக்டோபரில் ராஜபாளையம் நண்பர்களும், நவம்பரில் ஸ்ரீவில்லிப்புத்தூர் நண்பர்களும், ஏதோ நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, எனக்கு பணம் அனுப்பி வைத்தார்கள். போனேன். சில தினங்கள் தங்கினேன். வந்தேன்.

மற்றப்படி, நான் பிரசங்கியும் அல்ல. அச்சடித்த நிரல்கள், மாலை மரியாதைகள், வரவேற்புரைகள் வேண்டும் என எதிர்பார்ப்பவனும் இல்லை.

நீங்களும் நண்பர் குருசாமியும் அன்போடு அழைக்கிறீர்கள். ஓட்டப்பிடாரம் வந்து, இரண்டு மூன்று நாட்கள் தங்கித் திரும்புவதில் எனக்குச் சிரமம் ஒன்றும் இல்லை தான். ஆனால் 'வசதி இல்லை' என்று நான் போன கடிதத்திலேயே குறிப்பிட்டது, பொருளாதார வசதியைத் தான். சில சமயங்களில், பக்கத்தில் உள்ள டவுனுக்கும், ஜங்ஷனுக்கும், அல்லது பாளையங்கோட்டைக்கு, போய்வரவே பைசாக்கள் இல்லாத வறட்சி நிலை நீடிக்கும். இந்நிலையில் வேறெங்கும் பயணம் போக ரூபாய்களை நான் எங்கே புரட்டுவது!

இதுதான் விஷயம்.

நலம். நாடுவதும் அதுவே.

அன்பு
வ. க.

சென்னை
6-12-82

அன்பு மிக்க நண்ப,

வணக்கம்.

எட்டயபுரம் (மகாகவி பாரதி நூற்றாண்டு விழா) மாதர் கருத்தரங்கு சம்பந்தமான கடிதமும் அறிக்கைகளும் சனி (4-12-82) அன்று கிடைத்தன. அதனால் வாழ்த்து அனுப்ப இயலவில்லை.

நூற்றாண்டு ஆரம்பத்தில் 100 கவிஞர்களை எட்டயபுரத்தில் கூட்டி கவிதை வேள்வி நடத்தியது போல, நூற்றாண்டு விழா இறுதிக்கட்டத்தில் 100 மகளிர் எட்டயபுரத்தில் கூடவும், ஊர்வலம் வரவும், கருத்தரங்கு நடத்தவும் ஏற்பாடு செய்தது புதுமையானது; பாராட்டுதலுக்கு உரியது. வரலாற்றுப் புகழ் பெற வேண்டியது. ரொம்ப சந்தோஷம்.

பட்டியலில் பெயர் காணப்படுகிற நூறு மகளிரும் எட்டயபுரத்தில் 5-12-82 ஞாயிறு அன்று 'பொம்மெனப் புகுந்து மொய்த்து', கண்களுக்கும் காதுகளுக்கும் சிந்தனைக்கும் விருந்து அளித்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

பெண்கள் பெயர்களில் முற்றிலும் புதுமையானதாக இருக்கிறது 'பசுவை' என்பது (எண்:79) பெண்ணை பசுப்போல இருக்கிறாள் என்று பாராட்டாகச் சொல்வதும் உண்டு. அவளது மந்தகுணத்துக்காகவும் அசட்டுத்தனத்துக்காகவும் "she is a cow'' என்று மட்டமாகக் குறிப்பிடுவதும் உண்டு. 'பசுவை' என ஒரு பெண் பெயர் பெற்றிருப்பது ரசமான விஷயமாகத் தோன்றுகிறது.

குழல்வாய் மொழி, மட்டுவார்குழலி, மங்கையர்க்கரசி என்ற இனிய பெயர் கொண்டிருப்பவர்கள் போல ஒருத்தி 'கரும்படுசொல்லி ' என்ற இனிய அழகு தமிழ்ப்பெயர் பெற்றிருப்பது மனசில் 'இன்பத் தேன் வந்து பாய'ச் செய்கிறது!

ராஜன் கிருஷ்ணன், அனுராதாரமணன், சௌந்தரா கைலாசம் ஆகியோர் எட்டயபுரம் வந்திருந்து விழாவை சிறப்பித்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். வாழ்க மகளிர்! வாழ்க எட்டயபுரம்! வாழ்க பாரதி நாமம்!

உங்கள் முயற்சிகள் வெல்க.

பாரதி நூற்றாண்டை வெகு மும்முரமாகக் கொண்டாடி மகிழ்ந்து போன 'தமிழ் கூறு நல்லுலகம்' தொடர்ந்து பாரதி வழியைக் கையாண்டு முன்னேறுவதற்கு பாரதியின் ஆத்மா அருள் புரியட்டும்.

அன்பு
வ. க.

## பொதியவெற்பன்

சென்னை-14
7-3-85

அன்பு நண்ப,

வணக்கம். உங்கள் கடிதம்..... விளக்கங்களுக்காக நன்றி.

மணிக்கொடி பொன்விழா மலர் தயாரிப்பது-அதுவும் தனியாக, சகலபொறுப்புகளையும் தானே ஏற்றுக்கொண்டு உருவாக்குவது- மிகவும் சிரமமான காரியம் தான். அதை திறமையாகவும்

வெற்றிகரமாகவும் செய்து முடித்திருக்கிறீர்கள். இது பாராட்டப்பட வேண்டிய சாதனையேதான். எனது வாழ்த்துக்கள்.

ஓகோ என்று 'மணிக்கொடி'யை ஒரே அடியாகப் புகழ்ந்து, மணிக்கொடிக்கு கோபுரம் கட்டும் முயற்சியில் ஈடுபடாது, காலத்தோடு ஒட்டிய விமர்சன நோக்குடன் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். சிவத்தம்பி, மார்க்ஸ், கனகசபாபதி ஆகியோர்.

சிவத்தம்பி கட்டுரையில் அச்சுப் பிழைகள் நிறைய. இவை விஷயம் அறியாத (பிற்கால) ஆய்வாளர்களுக்கு நிச்சயம் குழப்பம் ஏற்படுத்தக் கூடியவை. 'மணிக்கொடி' மூன்றாவது கட்ட ஆசிரியர் ப.ரா. (ப. ராமஸ்வாமி). இக்கட்டுரையில் வ.ரா. என்று அச்சாகியிருக்கிறது. டி.கே.சிதம்பரநாத முதலியார், டி.கே. சிரம்பரநாத செட்டியார் ஆகியிருக்கிறார். வருடங்கள் தவறாக அச்சாகியிருக்கின்றன.

'மணிக்கொடி' முதல்கட்ட இதழ்களை நான் கூட வரிசை தவறாது பார்த்தது கிடையாது. மார்க்ஸ் அவற்றை ஆராய்ந்து தொகுத்து கொடுத்திருக்கிறார். இதன் மூலம் நிறைய தகவல்கள் தெரிந்து கொள்ளமுடிந்தது.

கனகசபாபதி தீவிர விமர்சகராகும் உற்சாகத்தில் என்னென்னவோ பேசிவருகிறார்; எதுஎதையோ 'கண்டுபிடிப்புகள்' என்று எழுதுகிறார். இக்கட்டுரையிலும் இத்தன்மை மேலோங்கி நிற்கிறது.

எம்.வி.வி. கட்டுரைமூலம் அவருடைய ஆரம்பகால அனுபவங்களை தெரிந்துகொள்ள முடிகிறது. கரிச்சான்குஞ்சு கட்டுரை கு.ப.ரா. பற்றிய அவர் உணர்ச்சிகளை நன்கு தெரிவிக்கிறது.

கு.ப.ரா. 'ஆற்றாமை' கதைக்கு 'பொறாமை' என்று தலைப்பு கொடுத்திருந்தார்; பிறகு 'ஆற்றாமை' என்ற தலைப்புத் தோன்றவும், துறையூருக்கு தந்தி அடிக்கப்பட்டதாக ஞாபகம். தந்தி கொடுக்கப்பட்டதா என்பதை வல்லிக்கண்ணன் தான் சொல்லமுடியும் என்று கரிச்சான்குஞ்சு எழுதியிருக்கிறார்.

இவ்விஷயத்தை வனா.கனா.வும் தெளிவு படுத்தமுடியாது. ஏனெனில் அந்த சந்தப்பத்தில் அவன் கிராமஊழியனில் சேர்ந்திருக்கவில்லை. திருலோக சீதாராம் தான் பத்திரிகையை கவனித்துக் கொண்டிருந்தார். வ.க. சென்னையில் சக்திதாசன் - ராதாமணி நடத்தி வந்த 'நவசக்தி' மாத இதழில் இருந்தான். 1944 பிப்ரவரி கடைசியில் தான் துறையூர் கிராம ஊழியனில் சேர்ந்தான். அதன் பிறகு ஒரு மாதத்தில் கு.ப.ரா. இறந்து போனார். மலருக்காகக் கும்பகோணம் நண்பர்கள் துறையூரில் தங்கியிருந்த போதும் வ.க.

அங்கு இல்லை. நண்பர் கரிச்சான்குஞ்சுவின் நினைவுகள் இக்காலகட்டம் பற்றி சரியாக இயங்கவில்லை. முடிந்தால், அவருடைய விலாசத்தை எனக்கு எழுதுக.

நலம். நலம் தானே?

அன்பு
வ. க.

## வெ. கலியாணசுந்தரம்,

29-11-82

அன்புள்ள கலியாணசுந்தரம்,

உனது 19-11-82 கடிதம் மகிழ்ச்சி தந்தது. ஒரிசாவில் சாந்திப்பூரில் கடல்நீர் ஆறு கிலோமீட்டர் உள்ளே சென்று, மெதுவாகத் திரும்பி வருவது பற்றியும், வேடிக்கையாக ஜனங்கள் கடலினுள் நடந்துபோய் திரும்புவது பற்றியும் எழுதியிருந்தாய். வியப்பு தரும்விஷயம்.

கடல் வற்றி தண்ணீர் உள்ளே உள்ளே போய் விடுகிறது. தரையில் என்னென்னவோ கிடக்கின்றன. அவற்றை வேடிக்கை பார்க்கவும், எடுத்துக் கொள்ளவும ஜனங்கள் கூடுகிறார்கள். கடலுக்குள் நடந்து போகிறார்கள். நானும் போகிறேன். வேடிக்கையாக இப்படிப் போகிற போதே, கடல் திடீரென்று பொங்கி, பெரியபெரிய அலைகள் கரைநோக்கி வருகின்றன. ஜனங்கள் பயந்து அலறிக் கொண்டு திரும்பி ஓடி வருகிறார்கள். நானும் ஓட முயல்கிறேன். கால்கள் நகரும் சக்தியை இழந்து விடுகின்றன. அலை பெரிசாய், மிகப் பெரிசாய், வந்து சீறி எழுகிறது. பயங்கரம். நான் அலறிக் கொண்டு விழிக்கிறேன்.

இந்தக் கனவை நான் மூன்று நான்கு தடவை-வெவ்வேறு சமயங்களில்-கண்டிருக்கிறேன். இந்தக் காட்சியை ‘சும்மா இருப்பவனின் வெட்டி நினைப்புகள்’ என்ற கதையில் எழுதியிருக்கிறேன்.

இது கூட இயற்கையில் நிகழும் உண்மை நிகழ்ச்சியாக உள்ளது என்பதை உன் கடிதம் மூலம் தெரிந்து கொண்டேன். சாந்திப்பூர் பீச்சில் கடல் ஆறு கிலோமீட்டர் தூரம் உள்ளே போவதும், ஆட்கள் கடலினுள் சாவகாசமாக நடந்து திரும்புவதும் சகஜமாக

நடந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் இயற்கையின் விசித்திரத் தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

நீயும் உன் நண்பரும் கடலுக்குள் 2 கி.மீ. தூரம் நடந்துபோய் திரும்பியது புதுமையான அனுபவம் தான்.

அன்பு
வ. க.

## ம.ந. ராமசாமி

சென்னை
6-12-1982

பிரிய நண்ப,

வணக்கம். உங்கள் நவம்பர் 8 கடிதம் மூலம் உங்களுடைய பிரயாண அனுபவங்களை அறிந்துகொண்டேன்.

'அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும்' என்று பழங்காலத்து நாடக நோட்டீஸ்களில் அச்சிட்டிருப்பார்கள். அது மாதிரி, அடாது மழை பெய்த போதிலும் விடாது சுற்றுப் பயணத்தை நடத்தி முடித்து விட்டீர்கள். ரொம்ப சந்தோஷம்.

எட்டயபுரத்தில் 'காபி கிளப்' இல்லாதது பற்றி குறைப்பட்டிருந்தீர்கள். திருநெல்வேலி ஜில்லாவின் பெரும்பாலான கிராமங்களில் நல்ல காபிகிளப் கிடையாது. பல ஊர்களில் டீக்கடை இருக்கும். அதுகூட தேவர் எவராவது நடத்துவதாக இருக்கும். சரிவர பெஞ்சு மேசை ஏற்பாடுகள் கூட இரா. ராஜவல்லிபுரத்திலும் அப்படித்தான். நம் போலியர் உள்ளே சென்று உட்கார்ந்து சாப்பிடமுடியாத சூழலாக இருக்கும்.

ஆனால், பாரதியார் இதுபோன்ற விஷயங்கள் பற்றி கவலைப்பட்டிருக்கமாட்டார். (ம.ந.ரா)

-எந்த சாதிக்காரர் நடத்துகிற டீக்கடையாக இருந்தாலும் சரி. பாரதியார் கடையின் முன்னால் நின்று, டீ கிளாசை உயர்த்திப் பிடித்தபடி, தெருவில் போவோரெல்லாம் பார்க்கட்டுமென்று, 'பாண்டியா! டீ அருமை. இன்னொரு டீ போடு இவருக்காக' என்று வீதி வழியே போகிறவரையும் அழைத்து டீ குடிக்கும்படி செய்வார். தான் மட்டும் தனியாக நின்று டீ குடிப்பதில் அவருக்கு சந்தோஷம்

ஏற்படாது. நாலைந்து பேராக நின்று, பேசியபடி டீ குடிப்பதில் அவருக்கு உற்சாகம் அதிகம். புதுச்சேரியில் அவர் பெருமையாக டீ குடிக்காத டீக்கடை எதுவுமே கிடையாது.

இப்படி பாரதிதாசன் 1945ல் ஒருமுறை துறையூர் 'கிராம ஊழியன்' அலுவலகத்துக்கு வந்திருந்த போது சொன்னதை நான் மறக்க முடிந்ததில்லை.

பாரதியார் மிகப்பெரிய ஆத்மா. அவரை எதுவும் பாதித்ததில்லை.

அன்பு
வ. க.

## ஆ. குருசுவாமி

சென்னை
21-12-82

அன்பு மிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்.

நான் 'ஆதர்ஸ் கில்டு' மெம்பர் இல்லை. சேரும்படி பலர் பல சமயங்களில் சொன்னார்கள். நான் சேரவில்லை. உருப்படியாக எதையும் செய்ய இயலாத நிறுவனங்களில் தெண்டத்துக்கு ஒரு தீவட்டியாக இணைந்து என்ன பிரயோசனம்? எந்த அமைப்பிலுமே நான் உறுப்பினனாகச் சேர்ந்ததில்லை. சேர ஆசைப்படுவதுமில்லை.

ஜானகிராமன் செத்துப்போனார். கைலாசபதி செத்துப்போனார். ஐயாவாளும் ஒருநாள் போகவேண்டியதுதான். இது தான் வாழ்க்கை!

பாளையங்கோட்டை மாணவர் ராமசாமி எழுதியிருந்தார், 'மஞ்சரி'யில் என் மொழிபெயர்ப்புக் கட்டுரை படித்ததாக. ஏதோ தப்பாகச் சொல்கிறார் என்று எண்ணினேன். என் கட்டுரை 'மஞ்சரி'யில் வர வாய்ப்பே இல்லையே என்ற நினைப்பு.

அப்புறம், உங்கள் கடிதமும் அதே விஷயத்தை சொல்லவே, கடையில் 'மஞ்சரி' வாங்கிப் பார்த்தேன். கார்க்கி கட்டுரை மொழிபெயர்ப்பு இருந்தது. அந்தப் பழைய புத்தகம் மஞ்சரிக்காரர்களுக்கு இப்போ எப்படிக் கிடைத்ததோ தெரியவில்லை. கார்க்கி காலத்துப் பத்திரிகைகள் மாதிரி தான் இப்பவும் பத்திரிகைகள் இருக்கின்றன. உலகம் உருப்படியாக

உயர்ந்துவிட்டது - வளர்ந்து விட்டது - முன்னேறிவிட்டது என்று யார்யாரோ சொல்கிறார்களே!

கீதைக் கண்ணன் சொன்னான், 'மாதங்களில் நான் மார்கழி' என்று. அவன் ஏன் அப்படிச் சொன்னான் என்று இன்னமும் எனக்குப் புரியவில்லை. 'பீடை மாசம் மார்கழி' என்று நம்மவர்கள் சொல்கிறார்கள். பனி, குளிர், நோய்கள் நிறைந்த மாதம் மார்கழி. விஷம் கொண்ட பாம்பை 'நல்ல பாம்பு' என்று சொல்வது போல்தான், கண்ணன் சொன்னதும் இருக்குமோ என்னமோ!

அன்பு
வ. க.

## இல. இராமகிருஷ்ணன்

திருநெல்வேலி.
16-12-82

அன்புமிக்க நண்ப,

வணக்கம். 1982 முடியப் போகிறது. என்னை பொறுத்தமட்டில், ஒவ்வொரு வருடமும் முந்திய வருடத்தை விட, புதிய அனுபவங்கள் சித்திக்கவும், சந்தோஷங்கள் அதிகரிக்கவும் உதவுகிற காலகட்டமாகவே அமையும். 1982ம் அப்படித்தான்.

1982ன் முதல் பாதியில், எதிர்பார்த்திராத சந்தோஷங்கள் வந்து சேர்வதற்கு நீங்கள் முக்கிய காரணகர்த்தாவாக இருந்தீர்கள். அதற்காக என் நன்றி உரியது.

பாரதி நூற்றாண்டு என்று தடபுடலாக நாடுநெடுகிலும் விழாக்கள் கொண்டாடப்பட்டு, நிறைவு விழாவும் நடத்தியாச்சு. பெருமைப்பட வேண்டிய விஷயம்தான்.

ஆனால், பாரதி கூறிய நல்ல கருத்துக்களை செயல்படுத்தும் முயற்சி இதுவரை நடந்ததில்லை. இனியும் நடைபெறாது.

பாரதி காலத்தில் தனிமனிதர் பண்புகளும் சமூக நிலைமைகளும் எப்படி இருந்தனவோ, அப்படியேதான் - அதைவிட மோசமாகக் கூட-இப்போதும் இருக்கின்றன. இனியும் விரைவில் மாற்றங்கள் ஏற்பட்டுவிடும் என்று சொல்வதற்கில்லை.

விழாக்கள், விசேஷங்கள் கொண்டாடுவதில் நம்மவர்க்கு எப்பவுமே உற்சாகம் அதிகம். அதுக்கு ஏகப்பட்ட சந்தர்ப்பங்கள்

வந்து கொண்டேயிருக்கின்றன.

திரு.வி.க. நூற்றாண்டு, பாரதி நூற்றாண்டு - இவை 1982ல் கிடைத்த வாய்ப்புகள்.

1983லும் ஏதாவது எதிர்ப்படாமலா போகும்!

சென்னை நகரை பொறுத்தவரை, 1982 மோசமான வருடம் தான். தண்ணீர் தட்டுப்பாடும் சிரமங்களும் வளர்ந்தன. மழை காலம் என்று சொல்லப்படும் மாதங்களிலே கூட நல்லபடியாக மழை பெய்யவில்லை. ஆகவே, பயங்கரமான வறட்சி வருகின்ற கோடையில் சென்னையை ஆட்கொள்ளக் காத்திருக்கிறது. தண்ணீர் பஞ்சத்துடன், கரண்ட் பற்றாக்குறையும் நகர வாழ்க்கையை மோசமானதாக ஆக்கிவிடும் என எதிர்பார்க்கலாம்.

விழாக்கள், தனிப்பட்ட அமைப்புகளின் மாநாடுகள், கருத்தரங்குகள், தனிநபர்களைப் பாராட்டுவது என்றெல்லாம் பணம் தண்ணீர் மாதிரி தாராளமாகச் செலவு செய்யப்படும் காரியங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. ஆரவாரமாக வளர்கின்றன.

ஒருபுறம், வளர்கின்ற தரித்திர நிலைமைகள். அதே சமயம், இன்னொரு புறம் வீணத்தன-வெத்துவேட்டு-மத்தாப்பூ பகட்டு ஆரவாரங்கள்!

'இருவேறு உலகத்து இயற்கை'

'நேற்று இருந்தவன் இன்று இல்லை என்கிற பெருமையை உடைய இந்த உலகம்' தனது பெருமையை சதா வெளிச்சப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது. அதனால் அறிவு கொளுத்தப் பெறுபவர் தொகை தான் அதிகமாக இல்லை.

அன்பு
வ. க.

## டிடி. திருமலை

13-6-83
சென்னை.

அன்பு நண்பர் அவர்களுக்கு,

வணக்கம். பேராசிரியர் அ.சீ.ரா. நினைவு அறக்கட்டளை அமைப்பு பற்றிய ஆலோசனைக் கூட்டம் சம்பந்தமான கடிதம் கிடைத்தது.

நீங்கள் என்னிடம் அதிகம் எதிர்பார்க்கிறீர்கள். ஆகவே, என்னைப் பற்றி நானே சொல்லவேண்டியது அவசியம் ஆகிறது.

இயல்பால், நான் ஒதுங்கி வாழும் பிராணி. கூட்டங்கள், கல்யாணம் போன்ற விசேஷங்கள், மாநாடுகள் போன்ற நிகழ்ச்சிகள் எதிலும் நான் கலந்துகொள்ள விரும்புவதில்லை. இவற்றை எல்லாம் தவிர்த்தே வந்திருக்கிறேன்.

சிலர் இயல்பினால், துடிப்பால், செயல்வேகத்தால் பலப்பலரை பின்பற்றி வரச்செய்யும் தலைமைப் பொறுப்பில் நாட்டமும் ஆற்றலும் உடையவர்களாக இருக்கிறார்கள். தனக்குப் பின் ஏகப்பட்ட (அல்லது ஒரு சில) வண்டிகளை இழுத்துச் செல்லும் என்ஜின் போல் திகழ்கிறார்கள்.

மிகப் பலர், ஒரு என்ஜினுக்குப் பின்னால் போகிற தொடர்வண்டிகள் போல் இயங்குகிறார்கள்.

நான் என்ஜின் சக்தி பெற்றிருக்கவில்லை. எந்த என்ஜினுக்கும் பின்னால் செல்ல ஆசைப்பட்டதும் இல்லை.

அதனால் தனியன் ஆகவே இருக்கிறேன்.

என்னிடம் படிந்துள்ள கோளாறான நோக்குகளும் போக்குகளுமே என்னை முன்னேற விடாதபடி, தடுத்த-இருந்த இடத்திலேயே இருக்கும்படி-செய்துவிட்டன என்று என் நலனில் அக்கறை கொண்ட நண்பர்கள் சொன்னது உண்டு.

அதற்காக வருத்தமோ கவலையே கொண்டதில்லை நான்.

பலப்பலருடைய போக்குகளையும் வாழ்க்கைமுறைகளையும் எண்ணங்களையும் ஆசைகளையும் அறிந்த நான், மற்றவர்களிடம் தொடர்பு கொண்டு, ஒத்துழைப்பு பெறமுடியும் என்று எண்ணுவதில்லை. அதிலும், எழுத்தாளர்கள் மனமுவந்து ஒத்துழைப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. துணைவர மாட்டார்கள் -அவரவர் போக்கிலேயே போக ஆசைப்படுவார்கள் - என்று உறுதியாகச் சொல்லலாம்.

'உலக இதய ஒலி'க்கு என்னால் இயன்ற அளவு கதை, கட்டுரை எழுதி அனுப்புவேன். அதுதான் என்னால் செய்யக் கூடியது.

அன்பு
வ. க.

## திருப்பூர் கிருஷ்ணன்

அன்பு நண்பர் கிருஷ்ணன்,

வணக்கம்.

உங்களை அடிக்கடி கண்டுபேச வாய்ப்பு இல்லை எனினும், மாதம் ஒரு கடிதம் எழுதி உங்கள் பொன்னான காலத்தை சிறிது கொலை பண்ணலாமே என்று நான் எண்ணுவது உண்டு. ஆனால் இதுவரை அப்படிச் செய்யவில்லை. (இனி செய்தாலும் செய்வேன்!)

செப்டம்பரிலேயே உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்க வேண்டும் செப்.3-ம் தேதி நான் திருப்பூரில் இருந்தேன்.

திருப்பூருக்கு நான் "விஜயம் செய்தது" இது மூன்றாவது தடவை. முதல் முறை 1954 வாக்கில்.

அப்புறம் பத்து வருடங்களுக்குப் பிறகு ஒரு முறை போனேன். இப்ப மூன்றாவது தடவையாகப் போனபோது, எல்லா நகரங்களையும் போல திருப்பூரும் பெரும் வளர்ச்சி பெற்றிருக்கக் கண்டேன்.

திருப்பூர் கலை இலக்கியப் பெருமன்றம் ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தது. நகரப் பள்ளியில், ஒன்றரை மணி நேரம், "இன்றைய தமிழ் இலக்கியம்" பற்றி அளந்தேன். சுமார் 60பேர் வந்திருந்தனர். ரொம்பவும் ரசித்தார்கள்.

தலைமை வகித்த திருப்பூர் நகரசபை தலைவர் கந்தசாமி பி.ஏ., பி.எல் உம், மற்றொரு பேராசிரியரும் எனது பேச்சாற்றலைக் கேட்டு வியந்து பாராட்டினார்கள். என் பேச்சாற்றலின் தன்மை எனக்குத் தெரியும். மற்றவர்கள் அதை பெரிதும் வியந்து பாராட்டுவது தான் எனக்கு வியப்பான விஷயம். எப்பவுமே!

செயலர் பாலகிருஷ்ணன் உங்களை நன்கு தெரியும் என்று சொன்னார். திருப்பூர் இளைஞர்கள் மிகுந்த உற்சாகிகளாகக் காணப்பட்டார்கள். இலக்கிய ஈடுபாடு உடைய அநேகர் வந்து பேசி மகிழ்ந்தார்கள்.

"பொதுவாக இவ்வளவு பேர் நிகழ்ச்சிக்கு வரமாட்டார்கள். உங்களை பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இன்று பலர் வந்திருக்கிறார்கள்" என்று பாலகிருஷ்ணன் என்னிடம் தெரிவித்தார். சந்தோஷமாக இருந்தது.

அன்பு
வ. க.

அன்பு நண்பர் கிருஷ்ணன்,

வணக்கம். புத்தாண்டு தினம் வந்தது. பொங்கல் நாள் வந்தது. எல்லாம் காலப் பாழில் கலந்தும் போயின. வழக்கம் போல் சகல துறைகளிலும் காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

“தினமணி கதிர்” எப்பவாவது தி.க.சி. கொண்டு வந்தால் பார்ப்பேன். இந்த வாரம் பார்க்கக் கிடைத்தது. டிவி நிகழ்ச்சிகளில் புதிய புராணங்கள் பற்றி நீங்கள் எழுதியிருப்பது சரியான சிந்தனை. சுட்டிக் காட்டப்பட வேண்டிய குறைபாடுகள்.

சக்தி தேவிகள் பேராலும், ஐயப்பன் பேராலும், ஏசு பேராலும் புதிய புராணங்கள் தயாரித்து, மக்களின் நம்பிக்கையை ஆதாரமாக்கி தங்கள் பணவசூலை பெருக்கிக் கொள்வதிலேயே கருத்தாக இருக்கிறார்கள் படத் தயாரிப்பாளர்கள். இதை நீங்கள் விரிவாக எடுத்துக்காட்டியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய விஷயம்.

அடுத்து “ஐயப்ப பக்தி” என்று நாடு நெடுகிலும் பரவிவிட்ட போலி பக்திமுறை பற்றியும் சொல்ல வேண்டியதை சொல்லியிருக்கிறீர்கள். விரதம்-ஆசாரம், மது-மாமிசம்-மங்கை தொடாமை என்று 40 நாட்கள் அனுஷ்டித்து விட்டு, எப்படா மலைக்கு போய்விட்டு திரும்புவோம்; மூன்று “ம”களையும் வெறியோடு அனுபவிப்போம் என்று திரிகிற “சாமி”கள் போக்கு. ஒழுக்கம், புலனடக்கம், கட்டுப்பாடு இவற்றுக்காக ஏற்பட்டது ஐயப்ப பூஜை என்றாகுமானால், மலைக்குப் போய் வந்த பிறகும்-வாழ்நாள் முழுவதும்-இவை ஒழுங்காக அனுஷ்டிக்கப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லையே.

“காய்ந்த மாடு கம்புலே விழுந்த மாதிரி” மும்முரமாக ஈடுபடுகிறார்கள். பட்டினி கிடந்ததுக்கு (விரதம் அனுஷ்டித்து நாட்களை வீணாக்கி விட்டதற்கு) பழிவாங்குவது மாதிரி சுகபோகங்களை அனுபவிக்க அலைகிறார்கள்.

இன்னொன்று; ஐயப்ப பக்தியால் சமத்துவம் வளர்கிறது; எந்த சாதியானாலும், ஏழை பணக்காரன் எனினும், பரஸ்பரம் “சாமி” “சாமி” என்று கூறிக்கும்பிட்டுப் பழகுகிறார்கள் என்கிறார்கள்.

இதுவும் ஒரு மண்டல் வேஷ நடவடிக்கை தான். சாதிப் பாகுபாடும், தொழில் முறை ஏமாற்றுகளும், பூஜை நாட்கள் முடிந்தபிறகு ஜாம்ஜாம் என்று பக்தர்கள் மத்தியில் கோலோச்சுகின்றன!

ஆகவே, ஐயப்பன் பக்தி என்பது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிற வியாபாரமாகத் தான் இருக்கிறது. அது ஒரு “ஃபாஷன் ப்ளே” ஆகிவிட்டது.

இவ்விரண்டு விஷயங்கள் குறித்தும் தெளிவான சிந்தனைகளை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. பாராட்டுக்கள்.

அன்பு
வ. க.

## சொ. சுந்தரம் பிள்ளை

ராஜவல்லிபுரம்

அன்பு சகோதரர் அவர்களுக்கு,

வணக்கம். நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் நலம்.

காலம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. நவம்பர் 12ல் எனக்கு எழுபதாவது வயது ஆரம்பமாகியுள்ளது. 69 வருடங்கள் ஓடிப்போய் விட்டன.

எவ்வளவோ செய்ய ஆசைப்பட்டேன். இந்தியா நெடுகிலும் இல்லாது போனாலும், தமிழகம் முழுவதும் சுற்றிப் பார்த்து விட வேண்டும் என்று விரும்பினேன். தாமிரவர்ணி பிறக்கிற இடத்தையும், அந் நதி கடலோடு கலக்கிற இடத்தையும் பார்க்க வேண்டும் என்று எண்ணினேன். கூடிய வரை எத்தனை மலைகள் மீது ஏறிப்பார்க்க இயலுமோ, அத்தனை மலைகளிலும் ஏற வேண்டும் என்று ஆசைகள் வளர்த்தேன்.

செய்தது கொஞ்சம் தான். தமிழ்நாட்டில் கூட இன்னும் பார்க்க வேண்டிய இடங்கள் அதிகம் உள்ளன. ஒருசில மலைகள் மீது ஏறிநின்று இயற்கை வனப்பை கண்டு களித்தேன். தாமிரவர்ணியின் முதலையும் முடிவையும் பார்க்க வசதிப்படவில்லை.

இன்னும் எஞ்சியிருக்கிற காலம் மிகவும் கொஞ்சம் தான். அதில் என்னத்தை செய்துவிட முடியும்? புரிந்து கொள்ள முடியாத ஏதோ ஒரு சக்தியின் இயக்குதலினாலும், காலத்தின் துணையாலும் தான் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கையை வாழ முடிந்திருக்கிறது. அவற்றின் துணையுடன், உடலில் தெம்பும் உள்ளத்தில் உறுதியும் இருக்கிற வரை, என்னால் இயன்றதைச் செய்வேன். அவ்வளவு தான்!

அன்பு
வ. க.

*இரா. மதிவாணன்,*

*கோயம்புத்தூர்.*

*அன்பு நண்பர் அவர்களுக்கு,*

*வணக்கம்,*

*உங்கள் கடிதம் கிடைத்தது.*

*"இந்த தேசத்திற்கு என்று தான் விமோசனம் ஏற்படுமோ?" என்று வருத்தப்பட்டு எழுதியிருக்கிறீர்கள்.*

*இந்த தேசத்துக்கு விமோசனம் என்பது சமீபத்தில் ஏற்படப் போவதில்லை என்றே நாட்டு நடப்புகள் அறிவிக்கின்றன.*

*தாங்களும் தங்கள் கட்சியினருமே பதவியில் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிற அரசியல் தலைவர்கள், தகுதியும் திறமையும் இல்லாத போதும் சுயநலமும் பதவி வெறியும் பிடித்த அரசியல் கட்சிக்காரர்கள், அவர்களைப் போல தாங்களும் பதவியும் அதிகாரமும் அந்தஸ்தும் பெறவேண்டும் என்று தவிக்கிற சினிமா நடிகன்-நடிகைகள்;அவர்கள் புகழைப் பாடி பணம் பண்ண முனைகிற பத்திரிகைக்காரர்கள்; அவர்கள் தயவுக்கு அலைந்து பணமும் புகழும் பெறுவதிலேயே கருத்தாக இருக்கிற எழுத்தாளர்கள்; படித்துப் பட்டம் பெற்றதன் நோக்கமே ஆபிஸ்களில் கவுரவமான உத்தியோகம் பெற்று, கை நிறையச் சம்பளம் வாங்கி, சுகமாக வாழ்க்கை நடத்துவது தான் என நம்புகிற படிப்பாளிகள்.*

*ரசிகர் மன்றம் அமைப்பது-சினிமா பார்ப்பது-கிரிக்கெட் மேட்சுகள் பற்றிப் பேசிப் பொழுதுபோக்குவது- விகார நடனங்கள் ஆடுவது-போதைப் பொருள்கள் நாடுவது என்று அலைகிற இளைஞர்கள்; எந்தக் கட்சி பதவிக்குவந்தாலும் லஞ்சமும் வன்முறையும் பல்வேறு ஊழல்களும் இருக்கத்தான் செய்யும்-அதனாலே யார் பதவிக்கு வந்தால் நமக்கென்ன!-இன்றையப் பாடு கழிந்தால் சரிதான், எப்படியாவது பணம் கிடைத்து வாழ்க்கை ஓட வேண்டும் என்ற மெத்தனப் போக்குடன் இருக்கும் மக்கள் கூட்டம்-இப்படி எல்லாம் இருக்கிற நாட்டுக்கு விமோசனமாவது, விடிவுகாலமாவது!*

*அன்பு*
*வ. க.*

## ரா. சு. கோமதிநாயகம்

புவனேஸ்வர்
27-2-79

அன்பு மிக்க அண்ணா,

வணக்கம். நான் 24 சனியன்று அனுப்பிய கவரும் இன்லண்டும் கிடைத்திருக்கும். சனிக்கிழமை இங்கு திடீரென்ற பருவநிலை மாறுதல் ஏற்பட்டது. மழை பெய்தது. அதனால் குளிர் தலைகாட்டியது.

அன்று மாலை 'தாரித்திரி' என்ற பத்திரிகைக்காரர்கள் பரிசு பெற்றவர்களுக்கு ஒரு வரவேற்பு அளித்தார்கள். கவர்னர் தலைமை வகித்தார். என்னைச் சோத்து மூன்று பேர்தான் பரிசு பெற்றவர்கள். மற்றவர்கள் வரவில்லை. கூட்டம் இருந்தது. அதில் தன்னை தானே அறிமுகப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நானும் இங்கிலீஷில் பேசினேன். சில நிமிஷங்கள். நான் இங்கிலீஷில் கூட்டத்தில் பேசியது இதுதான் முதல் தடவை. வெற்றிகரமாக அமைந்தது. கூட்டம் முடிந்தபோது மணி 8-30. மழை தூற்றிக் கொண்டிருந்தது. இருந்தாலும், நனைந்தவாறே புஷ்பக் ஒட்டலுக்கு நடந்து வந்தோம். 2 மைல் தூரம்.

சனி, ஞாயிறு பிற்பகல் சாப்பாடு அகாடமி ஏற்பாடு செய்திருந்த விருந்தில். ஸ்டேட் கெஸ்ட் ஹவுசில். பிரமாதமான விருந்து. ஞாயிறு மாலை விழா. ரவீந்திர மண்டபத்தில். இது ரூமிலிரு;நது ஒன்றரை மைல் தூரம். தினம் நாங்கள் நடந்து போய் வந்தோம். விழாவில் கூட்டம் நிறைந்திருந்தது. ஹைதராபாதில், போன வருடம், ஆட்கள் ரொம்பவும் குறைவாகவே வந்திருந்தார்களாம். பரிசளிப்பு, பேச்சு எல்லாம் முடிந்த பிறகு, ஒரிஸா நாட்டிய நிகழ்ச்சி நடந்தது. அழகாகவும் அருமையாகவும் இருந்தது. 10 மணிக்கு ரூமுக்கு வந்தோம்.

திங்களன்று அகாடமி ஏற்பாடு செய்திருந்த பஸ்ஸில் 55 பேர் கோனார்க், பூரி-இரண்டு இடங்களுக்கும் போய் வந்தோம். கோனார்க் 'ஸன் டெம்பிள்' பத்திரிகைகளில், படங்களில் பார்த்த போது பாதித்ததை விட, நேரில் பார்க்கிற போது பிரமிக்க வைப்பதாக இருக்கிறது. மாபெரும் மனித சாதனை. காலத்தாலும் மனிதர்களாலும் சிதைக்கப்பட்டுள்ளது. காஜுராஹோ கட்டிடங்களில் இருப்பது போலவே இங்கும் நிறைய காம உறவுச் சிற்பங்கள் உள்ளன.

மத்தியான உணவு பூரி டூரிஸ்ட் ஹவுசில் அகாடமி விருந்து. ஹவுஸ் கடற்கரையில் இருக்கிறது. கடலோரம் ரொம்ப அழகாக உள்ளது.

பூரி கோயில் ரொம்பப் பெரியது. உயரமானது. சாமிகள்-ஜெகன்னாதர் (கிருஷ்ணன்), பலராமர், சுபத்ரா-'கடவுளம்சம்' கொண்ட சிலைகளாக இல்லை. மரத்தில் உருவாக்கப்பட்ட, பூர்வகுடிகள்

செய்த, பூத உருவங்கள். கும்பல் மிகுதி. நன்கு தரிசனம் செய்ய முடிந்தது. 'பண்டா'க்கள் தொல்லை அதிகம் உண்டு. எங்களை அரசு ஆள் அழைத்துச் சென்றதால், அந்தப் புரோகிதர் தொந்தரவு பாதிக்கவில்லை.

இன்று இரவு ரயிலில் கல்கத்தா போகிறோம். நாங்கள் நலம். நேற்று மழை இல்லை. குளிர் உண்டு.

நீங்கள் எல்லோரும் சுகமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நாட்கள் இனிமையாய் கழிந்தன. அதிகம் செலவு இல்லாமலே அருமையான இடங்களை பார்க்க முடிந்தது ஒரு நல்ல வாய்ப்பு.

அன்பு
வ. க.

கல்கத்தா
2-3-79

அன்பு மிக்க அண்ணா,

வணக்கம். புவனேஸ்வரிலிருந்து நான் அனுப்பிய கடிதங்கள் கிடைத்திருக்கும்.

27-2-79 அன்று இரவு பூரிஜகந்நாத் எக்ஸ்பிரசில் புறப்பட்டு, 28 காலை 9 மணிக்கு ஹௌரா ஸ்டேஷன் அடைந்தோம். பிரயாணம் சவுகரியமாக அமைந்தது. ஸ்டேஷனுக்கு 'தமிழ் மன்றம்' செக்ரடரி வந்திருந்தார். ஸ்டேஷனுக்கு வெளியே நீண்ட க்யூவில் நின்று தான் டாக்சி பிடிக்க வேண்டியிருந்தது. கல்கத்தா ஸதர்ன் அவன்யூவில் இருக்கிற நண்பர் E.V. மணி வீட்டுக்கு வந்து சேர்கையில் மணி 10 ஆகிவிட்டது. ஸ்டேஷனிலிருந்து 10கி.மீ தூரம்.

இங்கே சனி, ஞாயிறு இரண்டு நாட்கள் தான் நிகழ்ச்சி. ஆகவே அதுவரை சும்மா இருப்பது தான். கல்கத்தாவில் பகலில் வெயில்; இரவில் பனியும் குளிரும் கடுமை.

ஸதர்ன் அவன்யூ பக்கத்தில் 'ரவீந்திர ஸரோபர்' என்ற பெரிய ஏரி இருக்கிறது. ஒவ்வொரு கரையும் இரண்டு மைல் நீளம். குளுமையான மரங்கள், நடைபாதைகள், பெஞ்சுகள் நிறைந்த இடம். காலையிலும் மாலையிலும் ஏரியை சுற்றி நடக்கிறோம். தேகப்பயிற்சி செய்கிறவர்கள், நடப்பவர்கள், ஓடுகிறவர்கள், உட்கார்ந்திருப்பவர்கள் (ஆண்கள், பெண்கள்) தென்படுவர். ஏரியில் படகு விடுவோர் பலர். அழுக்குத் தண்ணீரில் குளிப்பவர்களும் துணி துவைப்போரும் உண்டு. மாலையில், காதல் பயிலும் ஜோடிகள் அதிகம்.

இன்று பிற்பகலில் ஊரை சுற்றிப் பார்க்கும் திட்டம். Book Fair, Handloom Exhibition நடக்கிறதாம். பார்க்கலாம். துணைக்கு இரண்டு இளைஞர்கள் வந்து வழிகாட்டுவார்கள். சனிக்கிழமை மாலை-பாராட்டு விழா. ஞாயிறு அன்று-தமிழ் நாவல் விழா. 5-ம் தேதி திங்கள் இங்கிருந்து புறப்படுவோம். 'கொரமாண்டல்' எக்ஸ்பிரஸில் ரிசர்வ் பண்ணி டிக்கட் வாங்கியாச்சு. 6-ம் தேதி மாலை 6மணி அளவுக்கு எக்ஸ்பிரஸ் சென்னை சென்ட்ரலை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீங்கள் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். தி.க.சி.க்கும் இன்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்.

புவனேஸ்வரத்தில் டிவி. இல்லை என்று தெரிந்தது. ஆனாலும் சாகித்ய அகாடமி பரிசளிப்பு விழாவை டி.வி. காமிராமேன் வந்து படம் பிடித்துக்கொண்டு போனார். டில்லி அல்லது கல்கத்தாவாசியாக இருக்கலாம். டில்லிக்கு அது அனுப்பபப்பட்டு, இதர இடங்களுக்கும் போகும். சென்னையிலும் ஒரு நாள் நியூஸில் அது காட்டப்பட்டிருக்கும். நியூஸ் பிலிமுக்கும் படம் பிடித்தார்கள்.

'தாரித்திர' என்ற ஒரிஸா பத்திரிகை பேட்டி கண்டது. அது இந்த ஞாயிற்றுக் கிழமை இதழில் பிரசுரம் ஆகும். புவனேஸ்வரில் இங்கிலீஷ் பத்திரிகை கிடையாது.

புவனேஸ்வரில் கோயில்கள் அதிகம். ஒரு காலத்தில் 700 கோயில்கள் இருந்தனவாம். இப்போது 70 இருப்பதாகச் சொல்லப்படுகிறது. லி ங்கேஷ்வர் கோயில், முக்தேஷ்வர் கோயில், ராஜா ராணி கோயில் பெரியவை. முக்தேஷ்வர் கோயிலை மட்டும் நாங்கள் வெளியே இருந்து பார்த்தோம். நலம்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
25-6-79

அன்பு மிக்க அண்ணா,

வணக்கம். எனது 21-ம் தேதி இன்லண்ட் கடிதம் கிடைத்திருக்கும். அதில் தெரிவித்திருந்தது போல, 22 வெள்ளியன்று நான் ஓட்டப்பிடாரம் போனேன்.

முதல்முறையாக, பல வருஷங்களுக்கு முன்பு, ஒரு ஜனவரியில் ஓட்டப்பிடாரம் போனபோது, வழி எல்லாம் பசுமையாய், நெடுக உள்ள

குளங்களில் அலைபாயும் நீரோடு காட்சி தந்த சூழ்நிலை பிறகு ஒவ்வொரு தடவையும் வறட்சியையே படம் பிடித்துக் காட்டியது. இப்போதும் வறட்சி அதிகரித்தே தென்பட்டது. இந்த வட்டாரத்தில் நெடுக மழை பெய்து ரொம்ப காலம் ஆகிவிட்டது.

22 சனியன்று அருணாவோடு எட்டயபுரம் போனேன். ஒரு பஸ் ஏறி 'குறுக்குச் சாலை'யில் இறங்கி, வேறு ரஸ்தாவில் கோவில்பட்டி போகிற பஸ்ஸில் ஏறிப் போகவேண்டும். இந்த வழியில் தான் 'எப்போதும் வென்றான்' ('எப்பகொண்டான்') ஊர் வருகிறது.

எட்டயபுரம் என்றால் எப்போதும் என் நினைவில் எழுவது ஒரு ரோடு, திருப்பத்தில் ஒரு குளம். நீர் நிறைந்த குளத்தில் நிறைய நிறையப் பூத்துச் சிரித்த சிவப்பு அல்லிகள். எனது 5வயது முடிந்து 6வது வயதில், கோவில்பட்டியிலிருந்து வில்வண்டியில் வந்த போது பளிச்செனத் தெரிந்த அந்தக் காட்சி-குளம் நிறைய சிவப்பு அல்லிப் பூக்கள் பூத்திருப்பதை முதல் முறையாகப் பார்த்ததால் - மனசில் இளமையாய் புதுமையாய் பதிந்துள்ளது. எட்டயபுரத்துக்குப் போனால், அந்தக் குளத்தில் இப்போது அல்லி பூத்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும் என்ற ஆசை எனக்கு என்றும் உண்டு. இப்போது தான் அந்த ஊருக்குப் போகமுடிந்தது.

எட்டயபுரம் ஊர் பெரிசுதான். கடைகள், ஹைஸ்கூல், பள்ளிகள், போலீஸ் ஸ்டேஷன், பாரதி மண்டபம், முத்துசாமி தீட்சிதர் சமாதி, பாரதி பிறந்த வீடு எல்லாம் இருக்கின்றன. கோவில்பட்டியிலிருந்து வருகிற ரஸ்தா திரும்புகிற இடத்தில் 'அட்டைக்குளம்' பெரிசாக இருக்கிறது. ஆனால் வறண்டு கிடக்கிறது.

'இதில் தண்ணீர் கிடக்கிற காலத்தில் நிறைய, ரோடைத் தொட்டுக்கொண்டு, அலைகள் படிந்து நன்றாக இருக்கும்' என்று அருணா சொன்னார். என் நினைவின் தேடலை நான் அவரிடம் சொல்லவில்லை.

பாரதி வீட்டின் 'இல்லக் காப்பாளர்' ஆக இளசை மணியன் நியமிக்கப்பட்டிருக்கிறார். சில மாதங்களாச்சு. வீடு வெறுமனே தான் இருக்கிறது. அருணா எழுதிய கவிதைகள் (பாரதி பாடல்கள்) கொண்ட அட்டைகள், படங்கள் பல இடங்களிலும் தொங்கவிடப் பட்டுள்ளன. அவை இல்லாவிட்டால் பாரதிக்கும் அந்த வீட்டுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்காது. பாரதி படங்கள் 2 உள்ளன. ஒரு வேல்கம்பு, தடிகள், கண்ணன் பொம்மை (பாரதியார் உபயோகித்தவை என்று) ஒரு அலமாரி அருகில் உள்ளன. சில புத்தகங்கள் (பாரதி பாடல்கள், கட்டுரைகள் வகையரா; பாரதி பற்றி சிலர் எழுதியவை) அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

மத்தியானம் இளசை மணியன் வீட்டில் சாப்பாடு. பாயசத்தோடு விருந்து.

இந்த மாவட்டத்தில் இப்போது சாரல்காலம். குளுகுளு ஸீசன். நல்ல காற்று. அடிக்கடி சிலுசிலு தூற்றல். எட்டயபுரத்தில் கொஞ்சம் பரும் தூறலாகவே விழுந்தது.

பிறகு பஸ் ஏறி, தூத்துக்குடி போய், அங்கிருந்து வேறு பஸ் பிடித்து ஓட்டப்பிடாரம் வந்து சேர்ந்தோம் - அருணாவும் நானும் 4-15 மணிக்கு.

அன்று இரவு டூரிங் கொட்டகையில் 'பதினாறு வயதினிலே' கலர் படம் பார்த்தோம். அது நல்ல படம், பார்க்க வேண்டும் என்று கூறி அருணா கூட்டிப் போனார். அவர் 5 தடவைகள் பார்த்து விட்டாராம். (பெஞ்சு 50 பைசா, சேர் 75 பைசா. தரைடிக்கட் 30 பைசா) பலர் பல தடவைகள் பார்த்தும், திரும்பவும் பார்க்கிறார்கள். *வித்தியாசமான படம்' என்பதால். கிராமச் சூழ்நிலையில், இயல்பான அமைப்புகளோடு, இனிய முறையில் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சிறு பெண் ரொம்ப சந்தோஷமாக ஓடி ஆடிப்பாடிக் குதித்து, சிரித்து, ரொம்ப ரொம்பச் சிரித்து, ஆடிக்களிப்பது அழகாக இருக்கிறது. குளுகுளு வர்ணங்களில் இவை எல்லாம். காமிரா வேலை அருமை. ஆட்டபாட்டங்கள் குதிப்பு கூத்தாட்டங்கள் நிறைய. பல அபத்தமானவை; அநாவசியமானவை. அதனால் என்ன? பார்ப்பதற்கு இனிமையாய், அழகாய், குஷியாய் இருக்கிறது. ஸ்ரீதேவி சின்னப்பெண்ணாய், கவர்ச்சியாய் இருக்கிறாள். அவள் குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பது ரொம்ப அழகாக இருக்கிறது. ஆகவே, நிறைய நிறையச் சிரிக்கவிட்டிருக்கிறார்கள், படம் நெடுகிலும். கமலஹாசன் இயல்பாக, அருமையாக, நடித்திருக்கிறார்.

படம் ஜனங்களுக்கு ரொம்பவும் பிடித்திருக்கு. ஆகவே, ரொம்ப ரொம்பக் கூட்டம் பார்ப்பதுக்கு.

இரவில் இளசை அருணா வீட்டில் 'அடை' உணவு. அவர் மனைவியும் டீச்சர் தான்.

நான் திங்களன்று ஊர் திரும்புவேன் என்று தான் சொல்லி யிருந்தேன். குருசுவாமி ஞாயிறு அன்று போக விடமாட்டார் என்பதனால். ஆனால், அவரும் அவர் குடும்பத்தினரும், இரண்டாவது மகள் ராணியை (முதல் குழந்தை பெற்றவள்) மாமனார் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வேலை பார்க்கும் ஊருக்கு (ஹைதராபாத்) அனுப்பி வைப்பதற்காக ஞாயிறு அன்று திருநெல்வேலி வரவேண்டியிருந்தது. அதனால், நானும் அவர்களோடு வந்து சேர்ந்தேன்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
27-2-86

அன்பு மிக்க அண்ணா,

வணக்கம். நீங்கள் அனுப்பிய 2 விரிவான கடிதங்களும் ஒன்றாக நேற்று வந்து சேர்ந்தன. எல்லா விஷயங்களையும் விளக்கமாக எழுதியிருப்பது சந்தோஷம் தருகிறது. நன்றி. இமயப் பதிப்பகம் கடிதம் வந்தது. விசேஷமாக ஒன்றும் இல்லை. எனது இலக்கிய அனுபவங்களை இன்னும் அச்சுக்கு எடுக்கவில்லை; அதை 'வல்லிக்கண்ணன் போராட்டங்கள்' என்ற தலைப்பில் வெளியிடலாம் என்று நினைக்கிறேன்; உங்கள் கருத்தை எழுதுங்கள்; பதில் வந்ததும் அச்சுவேலை ஆரம்பித்துவிடுகிறேன் என்று வீரராகவன் எழுதியிருந்தார். உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள் என்று பதில் எழுதினேன்.

சில விஷயங்களை எழுத வேண்டும் என்ற நினைப்பு இருந்த போதிலும், ஒவ்வொரு கடிதத்திலும் வேறு பல விஷயங்கள் இடம்பிடித்து விடுவதால், முன்னவை எழுதப்படாமல் கிடப்பிலேயே கிடந்து போகின்றன. அப்படிப்பட்ட மூன்று விஷயங்கள் - 1. தாழையூத்து ரயிலடிப் பக்கம் ஸென்னக் அன் கம்பெனி என்று நமக்கெல்லாம் அறிமுகமாகியிருந்த - இப்போதையப் பேர்வழிகளுக்கு ஏதோ பழைய கட்டிடம் என்றே தெரிய வருகிற - பாழ்மைத் தோற்றமும் பழுதடைந்த நிலையும் கொண்ட புராதனக் கட்டிடம், அதன் வரலாற்றில் வெவ்வேறு ரக அனுபவங்களைப் பெற்று வருகிறது. முதலில் வெள்ளைக்காரனின் கம்பெனியாய் ராஜரீகமாக வாழ்ந்த கட்டிடம், பிறகு அடைத்துப் போடப்பட்டு, அழுது வழியும் இடம் ஆகி, 1950களில் 'எக்ஸ் சர்வீஸ்மென் தச்சுப் பட்டறை' ஆக விளங்கியது. முன்னாள் போர் வீரர்கள் தொழிற்காரர்களால் சில வருடங்கள் நடமாட உதவிய அது, 1960களில் 'சங்கர் பாலிடெக்னிக்' ஆக மாறியது. புதிய தொழிற்பயிற்சியாளர்கள் உற்பத்தியாக உதவிப் பிறகு மீண்டும் அடைபட்டுக் கிடந்தது. இப்போது, சிலோன் அகதிகள் தங்கும் முகாம் ஆக அது மாறியிருக்கிறது. பிள்ளைகள் மிக நிறைய. விசித்திர உடைகளில் பல வயது, பல பருவ, பெண்கள். லுங்கியும் பனியனும் அணிந்த ஆண்கள். எப்பவும் சோம்பேறிகளாய் நின்றும், உட்கார்ந்தும், உலவியும் காட்சி தரும் இடமாகியுள்ளது. வரிசையாகக் கட்டப்பட்டுள்ள 'கழிப்பறை'கள் புதிய சேர்மானம். வறுமை நிறைந்த தமிழகத்தை மேலும் வறுமையானதாய் காட்டச் சேர்ந்திருக்கும் இது போன்ற நபர்களுக்கு சாப்பாட்டுப் பிரச்னை எப்படித் தீர்கிறதோ!

2. கொக்கிரகுளத்தில், கோர்ட் கட்டிடங்களை ஒட்டி, புதுமையான, நாகரிக மாடல் கட்டிடம் ஒன்று இருப்பது பற்றி முன்பு எழுதினேன். அதன் சரியான பெயர் 'மாவட்ட அறிவியல் மையம்' (District Science

Centre). சுற்றிலும் தோட்டங்கள், பயிர்கள், பூச்செடிகள், ஆராய்ச்சி சாதனங்கள் கொண்டுள்ளது. மத்திய அரசு ஆதரவு பெற்றதாக இருக்கும் போலும்.

3. இங்கு துணைக் கலெக்டராக இருந்த குர்ணிகால் சிங் முரட்டுத் துணிச்சலோடு பல சாதனைகள் செய்தார். முக்கியமான - அதி எடுப்பான - உதாரணம்: பிரதான இடத்தில் ஜாம்ஜாம் என்று நடந்து கொண்டிருந்த 'ராஜ்கபே' ஓட்டலை - இட ஆக்கிரமிப்பு என்று சொல்லி - குளோஸ் பண்ணச் செய்து, அந்தக் கட்டிடத்தையே இடித்துத் தகர்த்தது. இந்துக் கல்லூரி காம்பவுண்டுச் சுவரை இடித்து, உள்ளே தள்ளிக் கட்ட வைத்தது! கறையான் அரிப்பிலிருந்து தப்பியவை பற்றி ராதாவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
26-4-86

அன்பு மிக்க அண்ணா, வணக்கம்.

எனக்கு நீங்கள் திருச்சிக்கு அனுப்பிய 21/4 கடிதம் 23ல் கிடைத்தது. நான் 24 (வியாழன்) திருச்சியிலிருந்து 10 மணிக்கு பஸ்ஸில் புறப்பட்டேன். 4 மணிக்கு திருநெல்வேலி ஜங்ஷன் வந்து சேர்ந்தேன். 16--ம் தேதி போன போது, ஜங்ஷனில் 8 மணிக்குப் புறப்பட்டது பஸ். 3 மணிக்கு திருச்சி சேர்ந்தது. 7மணி நேரம். திரும்பிய போது 6 மணி நேரம்தான். திருச்சியில் 6 நாட்கள் தான் தங்க நேரிடும்; வருகிற போது திண்டுக்கல்லில் இறங்கி, கமலவேலனை பார்த்து விட்டு வரலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால், திருச்சியிலேயே 8 நாட்கள் ஆகிவிட்டன. ஆகவே, நேரே ஊருக்கு வந்துவிட்டேன். திருச்சியில் மனோகரமான, இனிய அனுபவங்கள். இளசை சுந்தரம் வீட்டில் தான் தங்கினேன். ஒரு தனி அறை எனக்குத் தரப்பட்டது. 16-ம் தேதி போய் சேர்ந்த அன்று ம.ந.ரா. வீட்டில் தங்கினேன். அவர் இருக்கிற வீடு வசதியானது; வெளிச்சம் மிகுந்தது. பிறகு 2 இரவுகள் அவர் வீட்டில் தங்கினேன். ம.ந.ரா. காலை 8மணிக்கு ஆபீஸ் போய்விடுவார். மாலை 5½ மணிக்குத் திரும்புவார். வீட்டில் இருக்கிற நேரமெல்லாம் கலர் டிவி. பார்த்துக் கொண்டிருப்பார். இப்போதெல்லாம் படிப்பதில் அவருக்கு அதிகம் ஆர்வம் இல்லை. வெள்ளியன்று டி.வியில் கிரிக்கட் பார்ப்பதற்காக லீவு எடுத்துவிட்டார். அன்று நான் அவர் வீட்டில் இருந்தேன். 'புகழேணி'க்கான பேட்டியை ஞாயிறு அன்று சுந்தரம் பதிவு செய்து கொண்டார். அது ஜுன் 16 திங்கள்

காலை 7முதல் 7-15க்குள் ஒலிபரப்பு ஆகும். 'புகழேணி' ஒலிபரப்பு நேரம் ஒவ்வொரு திங்களும் அதே வேளைதானாம். சுந்தரம் ஒவ்வொருவரிடமும் என்னைப் பற்றிப் பெருமையாகச் சொல்லி வைத்ததால், பலபேர் என்னை பார்க்க ஆசைப்பட்டார்கள். திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம் வெள்ளியன்று இரவு ஒரு ஓட்டலில் 'கலந்துரையாடல்' ஏற்பாடு செய்தது. 12 பேர் வந்தார்கள். கைத்தறி நீளத்துண்டு, Ballpoint பேனா, பவுண்டன் பேனா, சில புத்தகங்கள் தரப்பட்டன. கபிஸ்தலம் ஆசா என்பவர் கைத்தறி இரட்டை வேட்டி தந்தார். ஓட்டலில் டிபன். மறுநாள், 'சோலைக் குயில்கள்' சார்பில் ஒருவர் வீட்டில் சிறு கூட்டம். அவர் வீட்டிலேயே இரவு உணவும்-தங்கலும். ஒருநாள் - மா. ராசமாணிக்கனார் மகன் டாக்டர் கோவன் (அவர் மனைவி டாக்டர் அவ்வை) வீட்டில் சாப்பாடு. வேறொருவர் - PWD இளநிலை என்ஜீனியர். பட்டாபிராமன் பழைய பத்திரிகைகள் சேர்க்கிறார். 1830 முதல் உள்ள பத்திரிகைகள், மலேசியா பத்திரிகைகள் என்று மூவாயிரம் பத்திரிகைகள் வைத்திருக்கிறாராம். ஒரு இரவில் அவர் வீட்டில் உணவு. 'சோலைக் குயில்கள்' நண்பர்கள் பஸ் செலவுக்கு என்று 35ரூ. தந்தார்கள். இளசை சுந்தரம் 55 தந்தார். ரேடியோ 'புகழேணி'க்காக 100 ரூபாய் செக். இவை வரவு. திருச்சிக்கு வரும்போதெல்லாம் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வரவேண்டும் என்ற அன்பு உபசரிப்புகள். நான் அ.வெ.ர.கி. ரெட்டியாரை தேடிப் போய் பார்க்க விரும்பவில்லை. வீரம்மாளை, அவள் பணிநிலையங்களை, தேடிக் காண முயற்சி எடுக்கவுமில்லை. சுந்தரத்துடன் ஒருநாள் 'ஆண்பாவம்' படம் பார்த்தேன். வழக்கமான மசாலாப் படம். ரேவதி இயல்பாக, மிக நன்றாக, நடித்திருக்கிறாள்.

'தாய்' 27/4 இதழில் இரகுராமன் எழுதி வெளியிட்டுள்ள எனது அபிப்ராயங்கள் பார்த்தேன். திருச்சியில் அநேகர் அதைக் குறிப்பிட்டுப் பாராட்டினார்கள். 'தேவி'யில் என் கதை வந்துவிட்டதையும் பார்த்தேன்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
17-9-86

அன்பு மிக்க அண்ணா,

வணக்கம்.

'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்' என்றபடி ஆகிவிட்டது எனது சென்னைப் பயணம். இம்மாதம் புறப்பட இயலாதபடி ஒரு குறுக்கீடு. ராஜபாளையம் அருகே சோழபுரம் என்ற

ஊரில், 'இலக்கியச் சிந்தனை' ப. இலட்சுமணன் நடத்தும் மில் இருக்கிறது. அங்கே தொழிலாளர் பிள்ளைகளுக்காக ஒரு பள்ளியும் நடத்தப்படுகிறதாம். அதில் 11-10-86 சரஸ்வதி பூஜை அன்று இலக்கிய விழா நடக்கும். அதில் நான் கலந்து கொள்ளவேண்டும் என்று, ஆசிரியர்கள் சார்பில் தமிழாசிரியர் இங்கே வந்து கேட்டுக்கொண்டார். இப்படி ஒரு கடிதம் மூலம் வேண்டுதல் வந்திருந்தால், நான் வர இயலவில்லை; வருத்தம் என மறுத்து எழுதியிருப்பேன். ஒரு பள்ளி ஆசிரியர் ராஜவல்லிபுரம் தேடி வந்து சிரமப்பட்ட போது என்னால் மறுக்க இயலவில்லை.

விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு எனக்கு 150ரூ தருவார்கள். ஆகவே, அக்டோபர் 15 வாக்கில்தான் நான் புறப்பட இயலும். இவ் வருடம் நவராத்திரி சமயத்தில் நான் சென்னையில் இருக்கலாம் என்று நினைத்தேன். முடியாமல் போய்விட்டது.

13 சனியன்று நான் மதுரை போனேன். சென்ற முறை தங்கிய 'ஐடியாஸ் நிலைய'த்தில் தான் 'தமிழ்நாடு எழுத்தாளர் உறவு' செயற்குழுக் கூட்டம். 20 பேருக்கு 10 பேர்தான் வந்திருந்தார்கள். கூட்டம் ஞாயிறு அன்று. மாலை மதுரையிலிருந்து புறப்பட்டேன். 4-45 மணிக்கு. திருநெல்வேலி ஜங்ஷன் சேர்கையில் 8-15 ஆகிவிட்டது. ஓட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டு, 9-9.30க்கு பஸ் ஏறி ராஜவல்லிபுரம் சேர்ந்தால், வீட்டில் கதவை தட்டி இசக்கியை எழுப்புவது சிரமம் என்பதால், இரவு-டவுண்-நியூராயல் தியேட்டரில் 'மௌன ராகம்' படம் பார்த்தேன்.

ரேவதி மோகன் நடித்தது. ஜனங்களுக்குப் பிடிக்கிறது. 'பரவால்லே' ரகம் தான். ரேவதி இயல்பாக, நன்றாக, அழகாக நடித்திருக்கிறாள். கதை பழசு. ஆட்டபாட்டங்கள் அநாவசியமாக நிறைய உண்டு.

திருநெல்வேலி தியேட்டர்கள் பலவற்றிலும் இளம் வயசுப் பெண்கள் இரவுக் காட்சியில் படம் பார்க்க அதிகமாகவே செல்கிறார்கள் என்பதை ஒவ்வொரு தியேட்டரிலும் கண்டறிய முடிந்தது.

இரவு 1-30க்கு ஜங்ஷன் ஸ்டேஷன் சேர்ந்து அங்கே தங்கினேன். அதிகாலையில் கொக்கிரகுளம் ஆற்றில் குளித்தேன். இரவில் ஸ்டேஷனில் தங்குவோர் எண்ணிக்கை அதிகம் தான். 7-30க்கு ஊர் வந்து சேர்ந்தேன்.

அன்பு
வ. க.

## சண்முகவடிவு

உடுமலைப்பேட்டை
14-7-79

அன்பு மிக்க சண்முகவடிவு,

நலம். நீயும், அம்மா அப்பா, சங்கரா, ராதா, ரேவதி, சுப்ரமணியன், கணேசன் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

அன்று அன்றையப் பாடங்களை அன்றன்றே நன்றாக, கவனமாகப் படித்து வந்தால்,பரீட்சை சமயத்தில் சிரமப்பட வேண்டியிராது. எல்லோரும் ஒழுங்காகப் படித்து வருவீர்கள் என்று நினைக்கிறேன்.

இங்கே எல்லோரும் சுகம்.

உடுமலைப்பேட்டை அருமையான ஊர். தண்ணீர் வசதி தாராளமாக இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும். மண் வளமானது. தென்னைகளும் இதர மரங்களும் வீட்டுக்கு வீடு செழிப்பாக வளர்ந்து நின்று இனிய காட்சிகளாக விளங்குகின்றன.

சமீப காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் புதிய மாடல்களில், வசீகரமாகவும் வசதியாகவும் அமைந்துள்ளன. ஒரு லட்சம், ஒன்றரை லட்சம் என்று பணம் செலவு பண்ணி வீடுகள் கட்டியிருக்கிறார்கள். ஏகப்பட்ட நிலத்தை வளைத்து, பெரிதாக ஸ்டைலாக கட்டப்பட்டுள்ள சில வீடுகள் இருக்கின்றன. அவை பல லட்சங்களை (ரூபாயைத் தான்) சாப்பிட்டிருக்கும். அப்படிக் கட்டுவதற்கு நிலமும் கிடக்கிறது; பணவளமும் இருக்கிறது இங்கே. அப்படிக் கட்டியிருப்பவர்களில் - கட்டிக் கொண்டிருப்பவர்களில் - வியாபாரிகள் முக்கியமானவர்கள்.

இங்கு தெருக்களில் எந்நேரமும் பெண்கள் காணப்படுவதில்லை. சினிமா காட்சிகள் ஆரம்பமாகக் கூடிய மாலை வேளையில் எல்லா வீதிகளிலும் பெண்கள் சிங்காரித்துக் கொண்டு போவதை காணமுடியும். பெண்கள் - பலதரமான கடைகளிலும் உட்கார்ந்து வியாபாரம் பண்ணுகிறார்கள். இந்த ஊரில் இது ஒரு விசேஷமாகப் படுகிறது.

பலப்பல வீடுகளைச் சுற்றிலும் தோட்டத்தில் பூச்செடிகள் நிறைய. செம்பருத்திப் பூக்கள் மிகுதி. ரோஜாச் செடிகள் அதிகம். பெரிதாக, அழகாக, நிறையப் பூத்துச் சிரிக்கின்றன. ரோஸ் (PINK) நிறம், சிவப்பு, வெளிறிய சிவப்பு-இப்படிப் பல வகைகளில். அவற்றைப் பறித்து வீணடிக்காமல், செடிகளிலேயே சிரிக்க விட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

பூத்துக் குலுங்கும் ரோஜாச் செடிகளைப் பார்க்கும் போதெல்லாம், சென்னையில் ரோஜாச் செடி வாங்க வேண்டும் என்று தீர்மானித்தும், இதுவரை வாங்காமலே நாளோட்டி விட்டது மனசில் உறுத்துகிறது.

சந்தோஷங்களுக்குப் பஞ்சமே இல்லை. சந்தோஷமாக இருங்கள்.

அன்பு
வ. க.

சென்னை
31-12-82

அன்புள்ள சண்முகவடிவு,

நேற்று அப்பா பேருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். கிடைத்திருக்கும். நேற்று ராத்திரி நாங்கள் மூன்று பேர் 'அம்மா' படம் பார்த்தோம். ஒரே அறுவை. அழுகைப் படம்.

படம் பார்த்ததைவிட, தியேட்டருக்கு சைக்கிள் பின்னால் உட்கார்ந்து போய் வந்த அனுபவம் இனிமையானது. அருமையான நிலவு. பௌர்ணமி இரவு. பனிக்குளிர். உலகமே மோகன அழகு பெற்று விளங்கும் நேரம். குளுமையான காட்சிகள். 2 மைல் தூரப் பயணம்.

சிதம்பரம் நடராஜனை பார்க்கவேண்டும் என்ற நினைப்பு எனக்கு இருந்ததில்லை. ஆனால் சிதம்பரம் நடராஜன் என்னை பார்க்க வேண்டும் என்று விருப்பம் கொண்டு, என்னை அவனுடைய இருப்பிடத்துக்கு வரும்படி செய்துவிட்டான். ஏகப்பட்ட நகைகள் அணிந்து, பெரிய தேருக்குள் ஊஞ்சலில் ஆட்டம் கொண்டிருந் தார்கள். அம்மன் தேர் மற்றும் மூன்று தேர்கள். பெரிய கோயில். கோயிலுக்குள் இரண்டு மணி நேரம் செலவு செய்தோம்.

பெரிய வீதிகளைக் கொண்ட பெரிய ஊர் சிதம்பரம். ஆனாலும், பல ஊர்களையும் பார்க்கிற போது, எல்லா ஊர்களும் ஒரே மாதிரி தான் என்று தோன்றும். ஒரே மாதிரியான தெருக்கள் - கடைகள் - வீடுகள் - போர்டுகள் - நோட்டீசுகள் - அசிங்கப் படுத்துதல்கள்.

எங்கும் மழை இல்லாததால், பயிரிட முடியாத நிலைமை. நிலக்கடலை பயிராகவில்லை. நெல் பயிராகவில்லை. இனி வரப்போகிற மாதங்கள் பயங்கர நிலைமைகளைத் தாங்கி நிற்கும். மின்சாரத் தட்டுப்பாடு வேறு.

நெய்வேலியில் தெருக்கள் வெறிச்சோடிக் கிடக்கும். ஆள் நடமாட்டம் அதிகம் இல்லை. பஸ் போக்குவரத்து கம்மி. தூரங்கள் அதிகம். எனவே சைக்கிளை பயன்படுத்துவது மிகுதி. எட்டு வயதுச் சிறுமி முதல் பற்பல வயது-வடிவப் பெண்கள் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருக்கிற காட்சி சர்வ சாதாரணம்.

வடலூரில் ராமலிங்க சுவாமிகளின் திருச்சபை, அவர் அமைத்துவிட்டுப் போன தன்மையில், நாகரிகப்படுத்தப் பெற்று விளங்குகிறது. தரை நெடுக வழுவழு சலவைக் கற்கள். சுவர்களில் அவர் பாடல்கள் பொறிக்கப்பட்ட கறுப்பு 'மார்பிள்' கற்கள். சபைக்குள், அடைத்த கதவுகள். அப்படி ஏழு கதவுகளாம். ஒவ்வொரு கதவை திறந்ததும் ஒவ்வொரு நிற சில்க் திரை. கடைசித் திரை விலகினால், பெரிய கண்ணாடி. ஜோதி. சூடன் கொளுத்திக் காட்டுகிற போது அது அருமையான காட்சியாக ஒளிரும். இந்த நாடகத் தன வேலை 'பூசம்' நாள் மட்டிலுமே உண்டு. தைப்பூசத்தில் சிறப்பு நிகழ்ச்சி. பெரும் கூட்டம் சேரும்.

மற்றபடி சாதாரண நாட்களில் ஒரு திரையைக் காட்டி, அதன் முன் தீபாராதனை காட்டப்படுகிறது. முதலாவது பெரிய கதவைத் திறந்ததும் தென்படுகிற நீலத்திரை அது.

ராமலிங்கர் 135 வருடங்களுக்கு முன்னே ஏற்றி வைத்த அகல்விளக்கு அணையாது எரிந்து கொண்டிருக்கிறது என்று ஒரு இடத்தில் ஒரு விளக்கு இருக்கிறது. அவர் ஏற்றிவைத்த அடுப்பு அணைக்கப்படாமலே எரிக்கப்பட்டு, தினசரி எப்போதும் சாதமும் கஞ்சியும் தயாரிக்கப்பட்டு, பசி என வந்தவருக்கு தானமிடப்படுகிறது என்று அன்னசாலை இருக்கிறது.

சிதம்பரத்தில் கனகசபை மேலே தங்கம் தகதகக்கிறது. விக்கிரகம் திருவீதி உலாவுக்கு வந்தபின் கூட, கனகசபையினுள் போய் வெறும் இடத்தைப் பார்வையிட ஒரு ஆளுக்கு ரூ1-25 என்று டிக்கட் வைத்து, பணம் வசூலிக்கப்படுகிறது. நாங்கள் போய் பார்க்கவில்லை அதை.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
10-2-86

அன்பு மிக்க சண்முகவடிவு,

எனது 5-ம் தேதிக் கடிதம் கிடைத்திருக்கும். இங்கிலீஷ் புத்தகங்கள் பெரும்பாலானவை பாழாகிப் போனது எனக்கு வருத்தம்

தரவில்லை. அவற்றை ஒரு தரம் - சிலவற்றை இரண்டு மூன்று தடவைகள் - படித்தாச்சு. அவற்றைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புகள் இல்லை. நானே சொந்தப் பத்திரிகை நடத்தவும், சொந்தமாகப் புத்தக வெளியீட்டு நிறுவனம் நடத்தவும் வாய்ப்பும் வசதிகளும் இருந்திருக்குமானால், சேகரம் செய்து வைத்திருந்த புத்தகங்கள் ரொம்பவும் பயன்பட்டிருக்கும்.

எனக்குப் பிறகு இந்தப் புத்தகங்கள் என்ன ஆகும் - இவற்றை என்ன செய்வது என்ற பிரச்னை என்னுள் எப்பவும் இருந்துகொண்டேயிருந்தது. சும்மா கொடுத்தால் கூட, யாரும் படிக்க மாட்டார்கள். இன்றைய மாணவர்களுக்கு - படித்துத் தேறியவர்களுக்கு - இவை பிடிக்கமாட்டா; புரியவும் மாட்டா. இந்து கல்லூரிக்கு இலவசமாகக் கொடுக்கலாம். அங்கும் மாணவர்கள் எடுத்துப் படிக்கமாட்டார்கள். போன வருடம் ஒரு பேராசிரியர் எதேச்சையாகச் சொன்னார்: கல்லூரிக்கு இனாமாக நல்ல புத்தகங்கள் கிடைத்தன. அவற்றை நன்கு பராமரிப்பார் இல்லை. வைத்துப் பாதுகாக்க அலமாரி கூட இல்லை. ஒரு அறையில் அப்படி குமிச்சு வச்சிருக்காங்க!... ...* யார் எவ்வளவு நல்ல புத்தகங்களைக் கொடுத்தாலும், அவற்றின் கதி இப்படித் தான் அமையும். கொடுக்கிறவன், அவனே போக்குவரத்துச் செலவு செய்து காலேஜில் கொண்டு சேர்ப்பது மட்டும் போதாது; அப் புத்தகங்களை வைத்துப் பாதுகாப்பதற்குத் தேவைப்படும் அலமாரிகளையும் அவனே கொடுக்கவேண்டும்!

இந்தச் சிரமம் எல்லாம் வேண்டாமே என்று காலமே என் பிரச்னையை தீர்த்துவிட்டது - கறையான்களை அனுப்பி புத்தகங்களை அழித்து ஒழித்து!

தமிழ் புத்தகங்கள் பெரும்பாலானவை பாழாய்ப்போனது என் மனசுக்கு ரொம்பவும் வருத்தம் தருகிறது. நல்லநல்ல புத்தகங்கள் - நிரந்தரமாகப் பயன்படக்கூடியவை - எல்லாம் போச்சு. பாரதியார் பாடல்கள், கதைகள், கட்டுரைகள், டி.கே.சி. நூல்கள், வ.ரா, புதுமைப்பித்தன், நான் எழுதியவை, நீல. பத்மநாபன் நாவல்கள் எல்லாம், ஆதவன் 'காகித மலர்கள்', நாஞ்சில் நாடன் 'தலைகீழ் விகிதம்' - இப்படி பெரிய பெரிய புத்தகங்கள் எல்லாம் போய்விட்டன.

நாசமாய் போயின. அவ்வளவு தான். அதுக்காக வருத்தப்பட்டுப் பயன் இல்லை.

மனிதர்கள் செத்துப் போகிறார்கள். வெள்ளம் வந்து - எரிமலை வெடித்து ஊர்களே நாசமாகிவிடுகின்றன. மனிதர்களின் வெறிச்செயலால் லைபிரரிகள், பெரிய பெரிய கட்டிடங்கள்

பாழாகின்றன. சொத்து, நகைகள், பணம் பாழ்பட்டுப் போகின்றன.

நாசமாய்ப் போவது என்பதும் வாழ்க்கையில் சகஜம்; தவிர்க்க முடியாதது.

நான் சேர்த்து வைத்த புத்தகங்கள் கறையான் பூச்சிகளால் அரித்து அழிக்கப்பட்டதும் இயல்பானது தான்.

இப்படி மனம் தன்னைத் தானே தேற்றிக் கொள்கிறது.

அன்பு
வ. க.

*சனிக்கிழமை இரவு 8-05 மணிக்கு ரேடியோவில் நான் வாசித்த 'வாடாமலர்' கதையை இந்த ஊரில் பலர் கேட்டுவிட்டு, 'ஹிஹி, ரேடியோவில் பேசினீகளே!' என்றார்கள்.

ராஜவல்லிபுரம்
12-3-86

அன்பு மிக்க சண்முகவடிவு,

நான் 5-ம் தேதி அப்பாவுக்கும், உனக்கும் எழுதிய கடிதங்கள் கிடைத்திருக்கும். இன்று அப்பாவுக்கும் தனியாக ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்.

7-ம் தேதி காலை நான் நாகர்கோவில் பஸ்ஸில் பயணம் செய்தேன். பாளையங்கோட்டைக்கு அப்பால், பெருமாள்புரம் தாண்டியதும், புதிய புதிய 'புரம்'களும் 'நகர்'களும் தோன்றியுள்ளன. இன்னும் தோன்றும். மைல் கணக்கிலே பொட்டல் நிலத்தை வாங்கி, வளைத்துப் போட்டு, காங்கிரீட் தூண்கள் நிறுத்தி, 'V.G.பன்னீர்தாஸ் டவுண்' என்று ஏகப்பட்ட பெயர்ப்பலகைகளை நட்டுவைத்திருக்கிறான் அவன். பன்னீர்தாஸ் டவுணில், செல்விநகர், மாத்யூநகர், கே.கேநகர் என்றெல்லாம் பிரிவுகள் வேறு. இப்போது ஒரு கட்டிடம் கூட இல்லை. ஒரு மரம் கூட இல்லை. அவனுடைய கனவு-'டவுண்' இன்னும் பல வருடங்களில் உருவாகிவிடும். காலவேகமும் ஜனப்பெருக்கமும் இதை சாத்தியமாக்கிவிடும். நாகர்கோவிலில் 10-40க்கு புறப்பட்டது திருவனந்தபுரம் பஸ். நாங்குனேரி, வள்ளியூர், பணகுடி போன்ற தமிழ்நாட்டு ஊர்கள் எப்பவும் போல் வறண்டு, புழுதிமயமாய், இனிமையற்றே இருக்கின்றன.

நாகர்கோவிலை நெருங்கநெருங்க சூழ்நிலை குளுமை பெறும். தென்னைகள், வாழைத்தோப்புகள், நெடுகிலும் மலைகள். வயல்கள்

ஊடே ஊடே குட்டைகள். அவற்றில் எல்லாம் பூத்துக் கிடக்கும் செந்தாமரைகள், வெண்தாமரைகள், தோப்புகள், குடிசைகள்.

நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரம் போகிற வழியெல்லாம் மேடுகள், ஏற்ற இறக்கங்கள், மரச் செறிவுகள், தோப்புகள், அவற்றிடையே வீடுகள். பூக்களும் பூச்செடிகளும், பசுமையும் குளுமையும் எங்கும்எங்கும்.

12.45க்கு திருவனந்தபுரம் அடைந்தேன். திருவனந்தபுரத்துக்கு நான் போவது இது ஐந்தாவது தடவை. முதல்முறையாக, 1944ல் நவாப் ராஜமாணிக்கம், நாடகம் பார்ப்பதற்காக, என்னை அழைத்தார். திருச்சி, துறையூரிலிருந்து ராஜவல்லிபுரம் வந்துவிட்டு, திருநெல்வேலியிலிருந்து ரயிலில் திருவனந்தபுரம் போனேன். நவாப் காரில் ஊரையும், ஊரில் பார்க்கவேண்டிய இடங்களையும் காட்டுவதற்கு ஏற்பாடு செய்தார். 2. 1945ல் சிதம்பரம் என்ற நண்பன் கூட்டிச் சென்றான். சில தினங்கள் அவன் வீட்டில் தங்கி, நகரைக் கண்டது உண்டு. 3. 1960களில் ஒரு தடவை தி.க.சி.யும் நானும் நாகர்கோவில் போய், சுந்தரராமசாமியை பார்த்து விட்டு, பஸ்ஸில் திருவனந்தபுரம் போனோம். நீல. பத்மநாபன் வீட்டில் தங்கினோம். அவருடைய மாமனார் காரில் நெடுக-கோவளம், செவ்வறா முதலிய இடங்களுக்கும் - அழைத்துப் போய் காட்டினார். 4. 1975ல் யுனிவர்சிட்டி காலேஜில் ஒரு நிகழ்ச்சி. போனேன். மாணவன் ஒருவனோடு தங்கினேன். சீக்கிரமே போய்விட்டேன். மாதவனையும், மாணவனையும் சந்திப்பதற்கு முன்பாக, நடந்தே நகரின் பல பகுதிகளையும் பார்த்தேன். 5. 1986 மார்ச்சில் 7, 8, 9, 10, 11 தேதிகளில். இம்முறை ஆட்டோவில் நண்பர்களைக் காணவும், டி.வி. நிலையத்துக்கும், போன போதும் திரும்பிய போதும் நகரைப் பரக்கக் காணமுடிந்தது.

என் நண்பர்கள் என்னைப் போல் தான் இருப்பார்கள்!-பாஷன் நகைகள், கோல்டு கவரிங் அணிகள் இதுகள்ளாம் மெட்ராஸ்லே தான் அழகாகவும் புதுமையாகவும் கிடைக்குது. இங்கே நல்ல நகைகள் கிடையாது. விலையும் ஜாஸ்தி. கோல்ட் கவரிங்னு, சும்மா பித்தளையிலே புகைப்பூச்சு பண்ணி ஏமாத்துறானுங்க. விலை ரொம்ப அதிகம். நகைகள் மெட்ராசிலே தான் வாங்கணும் என் மகள்களுக்குக் கூட நான் மெட்ராசிலே தான் வாங்கி வந்தேன். நல்ல டிசைன்களிலே அழகாக அங்கே தான் கிடைக்குது என்று நண்பர் மாதவன் அழுத்தமாகச் சொல்லிப் போட்டார். ஆகவே, நான் எதுவும் வாங்கவில்லை. எல்லோரும் நலம் தானே?

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
26-3-86

அன்புள்ள சண்முகவடிவு,

மார்ச் 24-ம் தேதி எனக்கு முக்கியமான ஒரு நாள். நான் ராஜவல்லிபுரம் வந்த ஐம்பதாவது நாள் அது. அதை விசேஷமாகக் கொண்டாடலாமே என்று நினைத்தேன். என்ன! ஓட்டலில் ஒரு ஸ்பெஷல் ஸ்வீட், காரம், காப்பி சாப்பிடுவது என்று தீர்மானித்தேன்.

ஆனால் அந்த நாள் தன்னைத்தானே அதி விசேஷமானதாக ஆக்கிக் கொள்ளும்படி காலம் உதவியது.

இங்கு வந்து 50 நாட்களாகியும் 'உட்லண்ட்ஸ்' இராமகிருஷ்ணனை ஒரு தடவை கூடப் பார்க்கவில்லையே; இன்று எப்படியும் பார்த்து விடவேண்டும் என்று நினைத்தேன்.

ஒயின்ஷாப்பில் பார்க்க முடிந்தது; 2-30 மணிக்கு. அவர் பழைய சமாச்சாரங்களையே புத்தம் புதிய செய்திகள் மாதிரி என்னிடமே திரும்பவும் சொன்னார். நானும் ரசித்துக் கேட்டேன். கூல்ட்ரிங்க் (ரோஸ்மில்க்) வாங்கித் தந்தார்.

பிறகு ஓட்டலை கவனிக்கப் போனார். என்னையும் வரச் சொன்னார். பேசிக் கொண்டிருந்தோம். 4 மணிக்கு டிபன் உபசாரம் பண்ணினார். ஸ்வீட் (குளோப் ஜாமூன்), வடை, தோசை, வெங்காய பஜ்ஜி, காப்பி சப்ளை. (நானாகக் கொண்டாடியிருந்தால் வெறும் ஸ்வீட், வடை, காபி தான் சாப்பிட்டிருப்பேன்.)

பிறகு பாளையங்கோட்டை போனேன். நடந்துதான். இலந்தைக் குளம் அருகே உள்ள ரோடில், வீட்டில், சிவசுவை பார்க்கலாமே என்று போனேன். எதிரே பாக்கியமுத்துவும் அவர் மனைவி சரோஜினியும் ஆட்டோவில் வந்தார்கள். அவர்கள் `The Way of the Cross' என்றொரு நாடகம் தயாரித்து, சேவியர்ஸ் காலேஜ் அரங்கில் அன்று இரவு நடிக்க ஏற்பாடாகியிருந்தது.

அது புதுமையான நாடகம், நான் கட்டாயம் வந்து பார்க்க வேண்டும்; தமிழ்நாட்டிலேயே இந்த டைப் நாடகம் நடந்ததில்லை என்று. பாக்கியமுத்து எழுதியிருந்தார். அதை பார்ப்பதற்காகத் தான் பாளையங்கோட்டை போனேன். 6 மணிக்கு காலேஜ் வாறேன் என்று சொல்லி அவர்களை அனுப்பினேன்.

சிவசு வீட்டில் அவர் இல்லை. உடனே திரும்பி சில ரோடுகளில் நடந்தேன். 6 மணிக்கு அரங்கம் சேர்ந்தேன். பாக்கியமுத்துவும் மற்றும் 2 பேருமே இருந்தனர். 6-15க்கு மாடியைவிட்டுக் கீழே இறங்கி சும்மா நடந்தேன். கல்லூரி முன்னே சோலையாக

வளர்ந்துள்ளன மரங்கள். குளுகுளு என்றிருந்தது. ஒரு மரத்தடியில், கல் பெஞ்சில், உட்கார்ந்திருந்தேன். அரை மணிநேரம் ஆனந்தமாக இருந்தது 6-45க்கு மீண்டும் மாடிக்குப் போனேன். ஆறு பேர்-பொம்பிளைகளும் ஆண்களும்-இருந்தாாகள். சிறிது சிறிதாக ஹால் நிரம்பியது. பெண்கள் அதிகம். ர.சு. நல்லபெருமாள் வந்தா'. என் பக்கத்தில் உட்கார்ந்து கலகலப்பாகப் பேசினார்.

7-15க்கு நாடகம் ஆரம்பிக்க வேண்டும். 7-30க்கு தான் தொடங்கியது. அரைமணி நேரம் அநேகர் பேசினர். இங்கிலீஷில்தான். சரோஜினி பாக்கியமுத்து நாடகக் கதையை விளக்கினார். 8-10க்கு நாடகம் ஆரம்பித்தது. இடைக்கிடை சர்ச் சங்கீதம் மாதிரி பாடல்களை சிலர் பாடினார்கள் (Choir) This is not a drama. This is meditation. This is worship என்று அழுத்தமாகச் சொன்னார் பாக்கியமுத்து. நாடகக் கதை பிரெஞ்சு நாடகம் ஒன்றிலி ருந்து எடுக்கப்பட்டதாம். 2ஆண்கள் 2 பெண்கள் மட்டுமே நடிப்பார்கள். பலப்பல பாத்திரங்களின் தன்மைகளில் பேசுவார்கள். 'ரிஸைட்டர்' அடிக்கடி விவரக்குறிப்பு கூறுவார். ரசிக்க முடியவில்லை. ரொம்ப ஸ்லோ மூவிங். 8-45க்கு நானும் நல்லபெருமாளும் வெளியேறினோம்.

நாடகம் முடிந்து ஊருக்கு பஸ் கிடைக்காதே என்ற தயக்கம் உங்களுக்கு இருக்கலாம். அப்படித் தயங்க வேண்டாம். எங்கள் வீட்டிலேயே இரவு தங்கலாம் என்று பாக்கியமுத்து எழுதியிருந்தார்.

தங்கலாம் தான். ஆனால் அதிகாலையில் எழுந்து வெளியேற முடியாமல் போகும். அவர்கள் 7மணி வரை தூங்கிக் கொண்டிருப்பார்கள்.

வீட்டில் Guestகள் வந்திருக்கிறார்கள் என்று சொல்லி நல்லபெருமாள் பிரிந்து விட்டார். நான் பஸ்பிடித்து, ஜங்ஷன் வந்தேன்.

9-ம் நம்பர் பஸ் எதுவும் நிற்கவில்லை. ஓட்டலுக்குப் போய் பூரி-காப்பி சாப்பிட்டேன்.

9-15க்கும் பஸ் இல்லை. ராத்திரி வரமாட்டேன் என்று இசக்கியிடம் சொல்லி வந்தேன். 10-30க்குப் போய், கதவைத் தட்டிக் கொண்டு சிரமப்படுவானேன்! இரவுக்காட்சி சினிமா பார்த்து விட்டு, ரயில்வே ஸ்டேஷனிலேயே தங்கலாம் என்று முடிவு செய்தேன்.

'பூரணகலா' பக்கத்தில் இருக்கிறது. அதுக்கே போகலாம் என்று போனேன். 9-25. காட்சி முடியவில்லை. 4-வது காட்சி 10-30க்கு தான். படம் 'தர்மபத்தினி' போஸ்டர்களைப் பார்த்தால், படம் நல்லாயிராது என்று தோன்றியது. 'சிவசக்தி'க்குப் போகலாம் என்று

நடந்தேன். பாலம் ஏறி, மேற்குப் பக்கம் போகவேண்டும். ரோடிலிருந்து ½ மைல்தள்ளி வயல்வெளியில் உள்ளது 'சிவசக்தி' தியேட்டர். படம் முடிந்து கூட்டம் வந்து கொண்டிருந்தது. நல்ல கூட்டம்.

தியேட்டரைப் போய் பார்த்தால், 'தெய்வத்தாய்' - எம்.ஜி.ஆர், சரோஜாதேவி நடித்தது. பழைய படம். ரூபாய் கொடுத்து இதையா பார்ப்பது என்று ரோடுக்குத் திரும்பினேன்.

அடுத்தது, சென்ட்ரல். 'ஆனந்தக் கண்ணீர்' சிவாஜி நடித்தது. அறுவையாகத்தானிருக்கும். வேண்டாம். ரத்னாவில் 'நான் அடிமை இல்லை' - ரஜினிகாந்த் - பார்க்கலாம் என்று நடந்தேன். அதற்குள் அங்கே படம் ஆரம்பமாகியிருந்தது.

'பார்வதி'க்குப் போனேன். 'மைதிலி என்னைக் காதலி' அப்போதுதான் மணி அடித்தது.

டிக்கட் வாங்கிக் கொண்டு போனேன். விளம்பரப் படம் ஓடியது. விளம்பரப் படங்கள் ஜோராக இருந்தன. ஆற்றின் மீது ஓட்ட விளையாட்டு (மிதவைகளில் கங்கை மீது நெடுந்தூரம் போவது) பற்றிய செய்திப் படம் நன்றாக இருந்தது. 'மைதிலி என்னைக் காதலி' - பாடாவதி. அபத்தங்களின் அவியல். கண்ணை அறுக்கும் தோற்றம் உடைய ராஜேந்தர் இடுப்பை, வயிற்றை, மார்பை விகாரமாக ஆட்டி நெளித்து கோரணி பண்ணுகிற ஏகப்பட்ட டான்சுகள்; ஸுப்பர் ஹீரோ என்று பெயர் பண்ணுவதற்கு ராஜேந்திரன் பண்ணுகிற நம்பமுடியாத-மிக அதிகமான-ஸ்டன்ட் வேலைகள் படம் பூராவும். தமிழ் சினிமா உருப்படவே உருப்படாது என்று உறுதி கூறுகிற மற்றொரு படம் இது! படம் 1-30க்கு முடிந்தது. ரயில்வே ஸ்டேஷன் வந்த போது 1-50. மீதி இரவை அங்கே போக்கினேன். நிறைய விளக்குகள்; நிறைய ஆட்கள்.

அன்பு
வ. க.

அன்புள்ள சண்முகவடிவு,

நலம். நீயும் மற்றும் அனைவரும் நலம் தானே? ஆபீஸ் வேலை சுலபமாக இருக்கிறதா? மனசுக்குப் பிடித்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

எந்தக் கடியாரமும் சரியாக மணி காட்டுவதில்லை. இது பொதுவிதி. சில லேட்டாகப் போகும். சில வேகமாக ஓடி Fast ஆக

மணிகாட்டும். உடுமலைப்பேட்டையில் புதுசாக வாங்கிய 'சுவர்க் கடியாரம்' ஒரு நாளுக்கு 2 நிமிடம் லேட் ஆகி வந்தது. ஒருவாரம் பார்த்துவிட்டு, அதை கடையில் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு ஒன்று மாற்றி வந்தார்கள். இந்தக் கடியாரம் ரொம்ப fastஆக நேரம் காட்டுகிறது. தினசரி 2 நிமிஷம் `gain' பண்ணுகிறது.

அட்ஜஸ்ட் பண்ணக் கூடிய ஸ்குரூவை திருக்கி வைத்தும் பயன் இல்லை. fastஆகத் தான் போகிறது. ஆனால், Quartz கடியாரங்கள் என்று விளம்பரப்படுத்தப்படுகிற, பேட்டரி ஸெல்லில் ஓடுகிற - சாவி கொடுக்கப்பட வேண்டாத - கடியாரங்கள் ரொம்ப கரெக்டாக மணி காட்டுகின்றன.

பலரும் சொல்கிறார்கள். பல இடங்களில் நானும் கவனித்தேன். ஒரு நிமிடம் கூடுவதும் இல்லை; குறைவதும் இல்லை. மிகச் சரியாகப் போகின்றன. இந்த ரகக் கடியாரங்கள் - பல டிசைன்களில், வெவ்வேறு சைஸ்களில் கிடைக்கின்றன. அழகு அழகாக இருக்கின்றன. ஒரு தடவை பேட்டரிவைத்தால் ஒரு வருடத்துக்கு மேலேயே சரியாக நேரம் காட்டி ஓடும். ஸெல் வீக் ஆகிவிட்டால், லேட் ஆக நேரம் காட்டும். உடனேயே வேறு ஸெல் வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள்.

ராமச்சந்திரபுரத்தில், வீர. வேலுசாமி வீட்டில் ஒரு கடியாரம். ஸெல்லில் இயங்குவது. அவர் மகள் சடங்கு வீட்டில் ஒருவர் அன்புடன் அளித்தது. 350 ரூபாய் விலை. அழகான தோற்றம். சரியாக மணி காட்டுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூரில சங்கரநாராயணன் ஒரு பெரிய கடியாரம் வைத்திருக்கிறார். சரியாகவே நேரம் காட்டுகிறது.

கோதை கலியாணத்தின் போது, அவள் அப்பா வேலை பார்க்கும் மில் தோழர்கள் அன்பளிப்பாகத் தந்த சிறு கடியாரம் - புத்தகம் மாதிரித் தோற்றம். மேல் பாதியில் அழகிய கடியாரம் (சராசரி டைம்-பீஸ் அளவு). ஒரு வருடம் ஆகியும் ஒழுங்காகவே இயங்குகிறது.

கோயமுத்தூரில், கோதை அப்பா வீட்டில் முந்தியதை விடச் சற்றே பெரிய அளவில்-மேல் பாதியில் கலை ஓவியம்-கீழே கடியாரம்-ஒன்று சுவரில் மாட்டப்பட்டுள்ளது. சரியாகவே மணி காட்டுகிறது.

இப்படிப்பட்ட கடியாரங்களில், இனிமையாக மணி ஓசை எழுப்புகிற ரகங்களும் உண்டு.

ஒன்று அல்லது ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு, பேட்டரி

தீர்ந்து போனதும் இது மாதிரி கடியாரங்களை தூரப் போடவேண்டியது தான்; வேறு தகுந்த ஸெல்கள் கிடைக்காது என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்.

அது எப்படியானாலும், இந்த ரகக் கடியாரங்கள் இயங்குகிற வரை சரியாகவே நேரம் காட்டும் என்பதில் சந்தேகமே இல்லை.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்.
4-8-90

அன்பு மிக்க சண்முகவடிவு,

நலம். உனது 22-7-90 கடிதம் மூலம் அனைத்து விவரங்களும் அறிந்தேன்.

நான் சாயங்காலம் ஆற்றுக்குப் போய் வந்த பிறகு, 5-45 மணிக்கு மேல், இந்தப் பெரிய வீட்டின் தனிமையில், சுகமாக ஈசிச்சேரில் சாய்ந்தபடி என் எண்ணங்களை சஞ்சாரம் செய்ய விடுவது உண்டு. தினந்தோறும், இப்ப சுப்ரமண்யன் வீட்டுக்கு வந்திருப்பான்.... கணேசன் வந்திருப்பான் என்று அவ்வப்போது எண்ணுவது உண்டு. நீ வீடு திரும்ப 7 அல்லது 7-15 ஆகும் என்று நினைப்பேன். 6 மணிக்கு லிங்கி செட்டி தெருவிலிருந்து வந்து, உரிய இடத்தில் பஸ் பிடித்து, நெருக்கடியில் பயணம் செய்து-தினசரி அது சிரமமான அனுபவம்தான்.

வாழ்க்கை சிரமங்கள் நிறைந்ததாகத் தான் இருக்கிறது. அதிர்ஷ்டம் என்று சொல்லப்படுகிற ஒரு வாய்ப்பு சில பேருக்கு உதவுகிறது. பல பேருக்கு உதவுவதே இல்லை.

நான் 5 ஞாயிறு அன்று தி.க.சியுடன் தூத்துக்குடி போவேன்-அவர் மகன் வீட்டுக்கு. அங்கே ஐந்து நாட்கள் தங்க நேரும்.

அங்கிருந்து வந்த பின், சீக்கிரமே இவ்வூரிலிருந்து புறப்படுவேன். திருச்சி போகவேண்டும். ம. ந. ராமசாமியை சந்தித்து, அவருடைய நாவலின் எழுத்துப் பிரதியை அவரிடம் கொடுக்கவேண்டும்.

திருச்சியிலிருந்து நேரே சென்னை வர வேண்டியதுதான். இம்மாதம் 16லிருந்து 20க்குள் என்றாவது ஒரு நாள் நான் அங்கு

வந்து சேரமுடியும் என்று நினைக்கிறேன்.

எல்லோரும் நலமாக இருப்பீர்களென நம்புகிறேன். இங்கே பெருங்காற்று பேய்த்தனம் பெற்று வளர்கிறது. செப்டம்பர் வரை காற்றின் ஆர்ப்பாட்டம் நீடிக்கும்.

அன்பு
வ. க.

## கோ. ராதா

சென்னை
24-5-84

அன்புள்ள ராதா,

நலம். திண்டுக்கல் இன்னும் என்னை விடவில்லை. என்றைக்காவது விட்டுத்தானே ஆகவேண்டும்! இன்னும் ஒன்றிரண்டு நாளில் அது நிகழலாம்.

சனிக்கிழமை தண்ணீர் வந்ததுக்குப் பிறகு நேற்று (புதன்) இரவுதான் வந்தது. தண்ணீர் கஷ்டம் மிகுந்த ஊர் திண்டுக்கல்.

இங்கே ஒரு மலை இருக்கிறது. அதன் மேலே பழங்காலக்கோட்டை ஒன்று.

ஒவ்வொரு தடவையும், கோட்டையை பார்க்க மலைமேலே ஏறுவோம் என்று கமலவேலன் சொல்வது உண்டு. ஆனாலும் போனதில்லை. நேற்று பகல் 10மணிக்கு மேல் நாங்கள் 3பேர் கோட்டையை பார்க்கப் போனோம். கமலவேலன், நானு, இன்னுமொரு 'சார்' (பள்ளி ஆசிரியர்).

கீழே மாரி அம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. அதை பார்த்துவிட்டு, மலை மீது ஏறினோம்.

எந்த மலைமீது நின்று சுற்றிவரப் பார்த்தாலும் காட்சி இனிமையாகத் தான் இருக்கும்.

வெயிலின் சூடு தெரியாது. காற்று ஜிலுஜிலு என்று இருக்கும்.

இங்கே ஒரு கோயில் இருக்கிறது. ஆனால், சாமிகள் இல்லை.

மலைமேலே கூட பார்த்தீனியம் செடிகள் வந்துவிட்டன.

திண்டுக்கல்லில் பெரிய ரோடுகளின் இருபுறங்களிலும், சிறு தெருக்களிலும், பாழ்மனைகளிலும், தோட்டங்களிலும், பாழான குளத்திலும், ஊருக்கு வெளியே போகிற ரோடை ஒட்டிய திறந்த நிலப்பரப்பிலும் பார்த்தீனியம் புதர் புதராக, காடாக, மண்டி வளர்ந்து கிடக்கிறது.

எழுத்தாளர் டி.செல்வராஜ் (வக்கீல்) இவ்வூரில் இருக்கிறார். ஒவ்வொரு தடவையும், வீட்டுக்கு வாங்க என்று அழைப்பார். இம்முறை செவ்வாய் மாலையில், கமலவேலனும் நானும் அவர் வீட்டுக்குப் போனோம். ஒரு மணிநேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

பிறகு ஒரு அன்பர் வீட்டுக்குப் போனோம்.

அந்தக் காலத்துத் தாடிமுனிகளிடம், அந்தக் காலத்துக் குடும்பஸ்தர்கள், 'நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்தது இந்த வீடு செய்த பாக்கியம். நாங்கள் பெற்ற பெரும்பேறு. உங்கள் வருகை எங்களுக்குப் பெருமை' என்று அளப்பார்கள்.

இந்த அன்பரும் அவர் வீட்டினரும் அப்படித்தான் என்னை வரவேற்றார்கள். 'நீங்கள் வந்திருப்பது இந்த வீட்டின் பாக்கியம். எங்களுக்குப் பெருமை. உங்களைப் பார்க்க வேண்டும் என்பது எங்கள் விருப்பம். பார்க்க முடியுமா என்று எண்ணுவோம். நீங்களே வந்திருப்பது, எங்களுக்கு சந்தோஷமும் பெருமையும் தருகிறது' என்றார்கள்.

உடனே கடைக்கு ஆள் அனுப்பி, மிக்ஸ்சர், பிஸ்கட் வாங்கி வரச் செய்து உபசரித்தார்கள். பலர் 'பெருமைப்படுவதும் சந்தோஷப்படுவதும்' என்னை பாதிப்பதில்லை. ஆனால், சாப்பிடும்படி உபசரிப்பது தான் எனக்கு கஷ்டமாகிவிடுகிறது.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
10-2-86

அன்புள்ள ராதா,

நீங்கள் எல்லோரும் வழக்கம் போல் வழக்கமான காரியங்களை செய்து கொண்டிருப்பீர்கள். சந்தோஷம். இந்தப் பக்கம் நெடுகிலும் 'கொடை' நடைபெறுகிற ஸீசன் இது. அங்கங்கே காணப்படுகிற

சுடலைமாடன் பீடங்களுக்கும் (பூடங்கள் என்று சொல்வார்கள்) அம்மன்களுக்கும் ஒன்று அல்லது இரண்டு நாள் விசேஷ கவனிப்பும் ஏக தடபுடலும் கிட்டும். சாமி ஆடுகிறவர்கள் 'ஆ-ஊ' என்று அலறி ஆர்ப்பாட்டம் பண்ணுவார்கள்.

இந்த சாமி வந்து இறங்குவதும், அதனால் ஆடுவதும் சுவாரஸ்யமான விஷயம்தான். இசக்கி மகள் வேலு மேலேகூட திடீர்னு சாமி வந்து இறங்கிவிட்டதாம். அவள் அப்பன் சுப்பையாத் தேவர் (ஒழக்குத் தேவர்) ராஜவல்லிபுரத்தில், ஒரு பூடம் ஏற்படுத்தி பூசை பண்ணி, அவ்வப்போது கொடை கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் செத்த பிறகு வேறு யாரோ கவனித்து வந்தார்கள். அந்த சாமிக்கு, பல வருஷங்களுக்குப் பிறகு, இப்ப அதிருப்தி ஏற்பட்டு விட்டதாம். அது சீவலப் பேரியை தேடிப்போய், வேலம்மாளை ஆட்டிவைத்து, பூசை போடும்படி கேட்டதாம். ஆகவே, போன செவ்வாய் அன்று (4-2-86) வேலு, அவள் புருசன், மணப்பாடு ஊரில் உள்ள வேறொரு பங்காளி எல்லாரும் ராஜவல்லி புரம் வந்து ராத்திரி பூசை பண்ணிவிட்டு, இரவே போய்விட்டார்கள். 200 ரூபாய் செலவு. ஆளுக்கு நூறு ரூபாய் என்று கணக்கு பண்ணிக் கொண்டார்கள்.

இப்படி சாமி, கொடை, நேர்த்திக் கடன் என்று ஆட்கள் ஊர்விட்டு ஊர்போய்க் கொண்டு தான் இருக்கிறார்கள். பணம் பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. கல்யாணம், விசேஷம் என்று போகிறவர்கள் வேறு. மாநாடு, கருத்தரங்கு, சொற்பொழிவு என்று போகிறவர்கள். பிசினஸ் என்று அலைகிறவர்கள் - ஆக, எப்பவும் எங்கும் ரயில்களிலும் பஸ்களிலும் கூட்டம் தான். பார்க்கப்போனால், நாட்டிலே பாதிப்பேர் தினசரி ரயில்கள், பஸ்கள், இதர வாகனங்கள் மூலம் - (நடந்தும் கூட) - பயணம் செய்து கொண்டேயிருக்கிறார்கள். சும்மா சுற்றுகிற சோம்பேறிகள், என்னைப் போல் வேலையற்று விருதாவுக்கு சுற்றுகிற வீணர்கள் - இப்படியாகத்தானே ஊரிலே, நாட்டிலே, உலகத்திலே சுற்றுகிறவர்கள் எண்ணிக்கை ரொம்ப ரொம்பத் தான்.

பொம்பிளைகள் பெரும்பாலும் கல்யாணம் செய்து, பிள்ளைகள் பெற்று, குடும்பம் என்று நடத்தி, திருப்தியோடும், திருப்தி இல்லாமலும் நாளோட்டுவதிலேயே அக்கறை உடையவர்களாக இருக்கிறார்கள். பெண்களுக்கு 18 வயதுக்கு மேல் தான் கல்யாணம் செய்ய வேண்டும் என்று அரசு சொன்னாலும், பொம்பிளைகள் தங்கள் மகள்களுக்கு 15 வயசிலேயே கல்யாணம் நடத்துவதில் அக்கறை கொள்கிறார்கள்.

இவ்வூர் குலசேகரன் - சுந்தரி, மகள் சரசு (அரணாசலவடிவு),

படித்தது போதும் என்று ஏழாங்கிளாசோடு படிப்பை நிறுத்தினார்கள் 1984ல். 1985ம் கல்யாணம் பண்ணி வைத்துவிட்டார்கள். பாளையங்கோட்டையில் மாப்பிள்ளை வீடு என்று சுந்தரி சொன்னாள். இந்த ஊரில் வேணி என்று ஒரு பெண். 24 வயது இருக்கும். கார்காத்தார் தான். காது கேளாதாம். படித்துவிட்டு, டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் வேலை பார்த்தாளாம். திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றினார்கள். பிறகு வீட்டுக்குப் போகச் சொன்னார்கள். ஆட்குறைப்பு காரணம். வீட்டில் அம்மா தொணதொணப்பு. மகளுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை. வேணி கெரசினாயிலை தன் மேலே ஊற்றி, தீ வைத்துக் கொண்டு செத்துப் போனாள். பாவம்!

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
27-2-86

அன்புமிக்க ராதா,

உனது 24-ம் தேதிக் கடிதம் நேற்று வந்தது. சந்தோஷம். நீ எல்லாப் பரீட்சைகளையும் நன்றாக எழுதியிருப்பதை அறிந்து மகிழ்கிறேன். சண்முகவடிவு டைப்ரைட்டிங் ஹையரில் I கிளாசில் பாஸ் ஆகியிருப்பதை அறிய ரொம்ப சந்தோஷம். பாராட்டுக்கள்.

தமிழ்ப் புத்தகங்களில் பழசும் புதுசுமாக ஏகப்பட்டவை நாசமாகிவிட்டன. பீரோவில் வருஷக் கணக்கில் பாதுகாப்பாக இருந்த புத்தகங்கள், பெரும்பாலானவை நாள்பட்டவையான போதிலும், இப்பவும் புதுசு போலவே தோற்றம் காட்டுகிறவை.

தப்பி உள்ள புத்தகங்களை வெளியே தான் வைக்க வேண்டியிருக்கிறது. ஒருநாள் இங்கே வந்த நண்பர் ராஜநாராயணன், ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்து, புத்தகங்களை (1940,50களை சேர்ந்தவை) அப்படியே புதுசா வெச்சிருக்கேளே என்று வியந்து அதிசயித்துப் பாராட்டினார். பீரோ அவ்வளவு பத்திரமான-பாதுகாப்பான-இடமாகத்தான் இருந்தது இதுவரை.

நான் எழுதி வெளிவந்த புத்தகங்கள் எல்லாம் அழிந்து போயின என்று முன்பு எழுதியிருந்தேன். அப்படி நேரவில்லை. எஞ்சியவற்றை

தட்டித் துடைத்து, ஒழுங்குபடுத்திய போது, ஆறுதல் அளிக்கும் நிலை எனது பழங்கால வெளியீடுகள் பாழாகவில்லை. நல்லபடியாக உள்ளன. 'அமரவேதனை' என்ற கவிதைத் தொகுதி 2; நினைவுச்சரம், அலைமோதும் கடல் ஓரத்தில்; புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (முதல்பதிப்பு - எழுத்து பிரசுரம்); 2-ம் பதிப்பு அகரம் வெளியீடு; சரஸ்வதி காலம்; பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை; இருட்டு ராஜா (கதைக்கதிர் மாத இதழில் வந்தது) 2-இவை போய்விட்டன. பரவால்லே. இவை வேறு பிரதிகள் சென்னையில் இருக்கின்றன. 'நினைவுச்சரம்' எழுத்துப் பிரதி (அழகான படங்கள் ஒட்டிய அழகிய டயரி); மற்றும் பல டயரிகள் (கடிதங்கள் எழுதப்பட்டவையும், ரசமான குறிப்புகள் எழுதப்பட்டனவும்) அழிந்து போயின. இதர எழுத்துப் பிரதிகள் பலவும் (இதய ஒலி-அடி.வானம் பகுதிகள்; 'சம்பங்கிபுரத்துப் பொம்பிளைகள்' எழுதப்பட்டவை) தெற்கு அரையில் இரும்பு ஸ்டாண்டில் வைக்கப்பட்டுள்ளன. இவை அப்படியே இருக்கின்றன.

அப்பா எழுதிய புத்தகங்கள் (முழு செட்), அண்ணாதுரை புத்தகங்கள், (27), திக.சி. மொழிபெயர்த்தவை பாழ்படவில்லை.

தெற்கு அறை கட்டையில் தொங்கவிடப் பட்டுள்ள குடை, கீழ அறையில் உயரே பலகை மீது வைத்துள்ள தலையணைகள் - நல்லபடியாக இருக்கின்றன.

ஆகவே, போனவை போக இருப்பவை லாபம்!

இங்கு வந்துபோன இடைசெவல் நண்பர் ராஜநாராயணன் எழுதுகிறார் -

'ஒரு சன்யாசியைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். எனக்குப் பொறாமை தான். எந்த வித அல்லலும் சிக்கலும் இல்லை. இதில் மனநிறைவு மட்டும் ஏற்பட்டு விட்டால் போதும். தேவன் தான் நீங்கள்.' என்னைப் பார்க்கிற போதெல்லாம், நீங்கள் ஒரு டிரான்சிஸ்டர் ரேடியோ வாங்கி வைத்துக்கொள்வது நல்லது என்று அவர் சொல்வார். இந்த முறையும் வலியுறுத்தினார். இந்த ஊருக்கு வந்த நணபர்கள் அவ்வப்போது இதையே சொன்னார்கள். ரேடியோ வாங்கி விடுங்கள் என்று. வாங்கிவிடலாம் என்று இதுவரை எனக்கு தோன்றவில்லை.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
15-3-86

அன்பு மிக்க ராதா,

நீங்கள் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

நேற்று (வெள்ளி) எம்.ஜி.ஆர். திருநெல்வேலிக்கு வந்தார். புதன் முதலே அதற்கான தடபுடல் ஏற்பாடுகள். சங்கர்நகர், கரையிருப்பு, தாராபுரம், தச்சநல்லூர் - இப்படி ஒவ்வொரு ஊரிலும் ரோட்டில் பத்தடிக்கு ஒரு ஆர்ச் என்று ஏகப்பட்ட பந்தல்கள். சிந்துபூந்துறை, ஜங்ஷன் நெடுகப் பெரியபெரிய பந்தல்கள். ஜங்ஷன் மேம்பாலத்திலிருந்து டவுண் முடிய, நெருக்கமாக ஆர்ச்சுகள்; 20க்கும் மேற்பட்ட மிக உயரமான கோபுரங்கள் போன்ற அடுக்குப் பந்தல்கள். அவற்றில் எல்லாம் பல்பு அலங்காரங்கள். எல்லாவற்றிலும் ட்யூப் லைட்டுகள். 'வயல்காட்டுப் பள்ளிக்கூட' மைதானத்தில் அரண்மனை மாதிரி ஒரு பந்தல். அதில்தான் நிகழ்ச்சி. நிகழ்ச்சியை நேரே பார்க்க முடியாதவர்களுக்கு வசதியாக, ரோடில் அங்கங்கே டெலிவிஷன் ஏற்பாடுகள். எங்கும் ரோடுகளின் இருபுறமும் சவுக்குக் கட்டைகள் வைத்துக் கட்டப்பட்ட வேலிகள். எல்லாம் சிறிது நேரம் கூத்துக்காக. புதன் இரவே விளக்குகள்-அலங்கார வெளிச்சங்கள்-எரியவிடப்பட்டன. பார்ப்பதற்கு ஒரே ஒளிமயமாக இருந்திருக்கும். திருவிழாக் கோலமாக. நான் பார்க்கவில்லை.

பேசமுடியாத ஒரு பொம்மை மந்திரி வந்து போவதற்கு இவ்வளவு வீண்செலவுகள், வீணடிப்புகள்! அவருக்கு தங்கவாள் பரிசுவேறு. எந்த நாட்டிலோ-ஸ்வீடனா? - தங்கள் மந்திரியும் தங்களைப் போலவே சகஜமாகப் பழகவேண்டும்; தடபுடல் ஆர்பாட்டங்கள் தேவையில்லை என்று மக்களும் மந்திரியும் கருதுகிறார்களாமே! மடப்பசங்க! இந்த நாட்டுமக்கள் அவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பார்கள் எப்படி வீணத்தனங்களும் வெட்டிவேலைகளும் பணப்பாழாக்குதல்களும், மக்களுக்கு சிரமங்களும் ஏற்படுத்த முடியும் என்று!

இரண்டு நாட்கள் ஜங்ஷன்-டவுண் பஸ் போக்குவரத்து திணறித் திண்டாடியது. பாதைகளை மாற்றி ஓட்ட வேண்டியிருந்தது. தச்சநல்லூரிலிருந்து ஜங்ஷனை அடைய பஸ்கள் ஊர்ந்தும், நெடுநேரம் காத்துக் கிடந்தும் அவதிப்பட வேண்டியதாயிற்று. அறிவு விழிப்பு பெற்றுவிட்டார்களாம் மக்கள்! எங்கே பெற்றிருக்கிறார்கள்?

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
24.3.86

அன்புள்ள ராதா,

உனது 20ம் தேதிக் கடிதம் மிகுந்த மகிழ்ச்சி தந்தது. மோனகன் ஸ்கூலில் வகுப்பில் முதன்மையாக நீ மதிப்பெண்கள் பெற்றதற்காக புத்தகங்கள் பரிசுகளாக வழங்கப்பட்டதை அறிந்து சந்தோஷப்படுகிறேன். பாராட்டுக்கள்.

நீங்கள் எல்லோரும் நலமாக இருப்பதை அறிய மகிழ்ச்சி. நானும் நலம்.

ஹாலி வால் நட்சத்திரத்தை நான் பார்க்கவில்லை. வெறும் கண்களுக்கு அது புலனாகாது என்று சில மாதங்களுக்கு முன்பு சொன்னார்கள். பிப்ரவரியிலிருந்து அந்த நட்சத்திரம் பற்றிய செய்தி எதுவும் எனக்குத் தெரியாது.

தினசரி அதிகாலை 5-30 மணிக்குத் தான் நான் வீட்டை விட்டுப் புறப்படுகிறேன். அப்போதும் நல்ல இருட்டுதான். சில நாள் மூடுபனி புகைப்படலமாய் கவிந்து காணப்படும். விடிந்து வெகுநேரம் வரைகூட. கீழ்வானில் மேகங்கள் திட்டுதிட்டாகப் படிந்து கிடக்கும். நட்சத்திரங்கள் தெரியமாட்டா. மிகப் பிரகாசமாக மிளிரக் கூடிய விடிவெள்ளி கூட மங்கலாகத் தான் தெரியும். இந்தச் சூழ்நிலையில் இயல்பாகவே மங்கலாகத் தெரியும் ஹாலி வால் நட்சத்திரம் பார்வைக்குத் தென்படுவது சாத்தியம் இல்லை.

சூரிய உதயம் கூட ஒவ்வொரு நாளும் பளீரெனத் தெரிவதில்லை. அடிவானத்தை விட்டு மேலே சிறிது உயரம் வந்த பிறகே, மேகங்களுக்கு ஊடாகத் தென்படும். மேகங்கள் படியாத நாட்களில் அடிவானத்தை ஒட்டி செவ்வட்டம் புலனாகும்.

இப்போது 6-30க்குத் தான் சூரியன் மேலே வருகிறது. இனி போகப் போக, 6-25, 6-20, 6-15 என்று சீக்கிரமாகவே உதய நேரம் அமையும். அப்போது 5 மணிக்கெல்லாம் நல்ல வெளிச்சம் வந்துவிடும். இப்போதே வெயில் மிகக் கடுமையாகிவிட்டது.

வயல்கள் பெரும்பாலும் அறுவடையாகி விட்டன. மீதம் கிடப்பவை மார்ச் இறுதிக்குள் அறுப்பாகிவிடும்.

வேறு விசேஷம் இல்லை.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
3-5-86

அன்புள்ள ராதா,

பரீட்சைகள் முடிந்து 'ஹாயாக' இருப்பாய். பொழுது போவதற்குப் பத்திரிகைகளும் புத்தகங்களும் தான் துணை. வேறு என்ன செய்வது! எங்கே போக முடியும்?

ஹாலி வால் நட்சத்திரம் வெறும் கண்ணுக்குப் புலனாகும் என்று சொல்லப்பட்ட போதிலும், அதை பார்த்தவர் எவரையும் இதுவரை நான் சந்தித்ததில்லை. பல ஊர்களிலும் பல பேர்களிடமும் கேட்டு வருகிறேன்.

திருச்சியில் ம.ந.ராமசாமி குடியிருக்கிற வீடு அருமையான இடம் நட்சத்திரத்தைப் பார்ப்பதற்கு. வெட்டவெளி நடுவே தனி வீடு மொட்டைமாடியும் இருக்கிறது. வானக் கூடாரம் கவிந்து முழுமையும் கண்களில் படுகிறது. ஆனாலும், யாரும் ஹாலி வால்நட்சத்திரத்தைப் பார்க்கவில்லை.

'பணிமேகம் எப்பவும் கவிந்திருந்தது நட்சத்திரம் தென்படவேயில்லை. டெலிவிஷனில் ஒவ்வொரு நட்டிலும் எப்படித் தெரிந்தது, -சோவியத் ரஷ்யாவில் தெரிந்தது, அங்கே தெரிந்தது, இங்கே தெரிந்தது என்று பிடித்துக்காட்டிக் கொண்டிருந்தார்கள் நன்றாக இருந்தது' என்று ராமசாமி சொன்னார்.

'ஹாலி வால் நட்சத்திரம் வெறும் கண்களுக்குத் தெரியும் என்று அறிவிக்கப்பட்டது. அது எப்படி எப்படித் தெரிகிறது என்று ரேடியோவில் நேர்முக வர்ணனை கொடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்திருந்தோம், மேக மூட்டம் காரணமாக நட்சத்திரம் பார்வையில் படவேயில்லை. காவலூர் அப்சர்வேட்டரியிலிருந்து தொடர் அறிவிப்பு செய்து கொண்டிருந்தார்கள். நாங்கள் வால் நட்சத்திரத்தை வெறும் கண்களாலேயே பார்க்கிறோம்; இந்த இடத்தில் இப்படி இருக்கிறது; நீங்களும் பார்க்கலாம் என்றார்கள். ஆனால் திருச்சியில் அது தெரியவேயில்லை' என்று இளசை சுந்தரம் தெரிவித்தார்.

கலர் டி.வி.யில் விளம்பரங்களில், விளம்பரங்களுக்கு முன்னாலும் பின்னாலும், டிசைன் டிசைனாக மாறியும் இணைந்தும் பிரிந்தும் விதம்விதமாக ஒளிபரப்பாகிற காட்சி அமைப்புகள் அழகாக இருக்கின்றன. பெரும்பாலும் எல்லாம் இந்தி நிகழ்ச்சிகள் தான். காட்டப்படுகிற இந்தி சினிமாப்படங்கள் அறுவை தான். சீனப் பெண்களின் ஜிம்னாஸ்டிக்ஸ் என்று உடற்பயிற்சி வித்தைகள்-வாரத்துக்கு ஒரு தடவை - மாலை 6 முதல் 6-15 வரை

காட்டப்படுகின்றன. பெண்கள் செய்கிற 'சர்க்கஸ்' வேலைகள் பிரமாதம்! அபாரம்!

திருச்சியில் 'ஆண்பாவம்' சினிமா பார்த்ததுக்குப் பிறகு, ஒருநாள் 'Quartet' என்ற இங்கிலீஷ் படமும் பார்த்தேன். 1927-ம் வருட பாரிஸ் நகர ஓட்டல்களில் நடைபெறுவதாகக் கதை. குடிப்பது, டான்ஸ் ஆடுவது, பெண்கள் செக்சியாக உடல்வெளிச்சம் போடுவது முதலிய காட்சிகள் தான் நிறைய. பழங்கால பாரிஸ் நகரச் சூழ்நிலை மற்றும் டிரஸ்கள் முதலியன சிரத்தையுடன் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

அன்பு
வ. க.

11-6-86

அன்புள்ள ராதா,

உனக்கு கல்லூரி 27-ம் தேதி திறக்கும் என்பதை உன் கடிதம் மூலம் அறிந்தேன். நாட்கள் ஓடிவிட்டன. இன்னும் சில தினங்கள் தானே!

1986லும் ஜுன் மாதமும் பறந்து கொண்டிருக்கிறது. நான் இந்த ஊருக்கு வந்து 4 மாதங்கள் முடிந்து மேலும் சில தினங்கள் ஆகிவிட்டன.

நான் இங்கே வந்த 50வது நாளை கொண்டாடியது பற்றி முன்பு எழுதியிருந்தேன். நூறாவது நாளை மேலும் சிறப்பாகக் கொண்டாடியிருக்க வேண்டும் அல்லவா!

ஆனால் அப்போது நான் இவ்வூரில் இல்லை. அந்த வாரம் பூராவுமே விசேஷ கொண்டாட்டமாகத் தான் கழிந்தது - ஸ்ரீவில்லி புத்தூரிலும் ராமச்சந்திரபுரத்திலும். இப்போது ஏதாவது 'கொண்டாட்டம்' நடத்தலாமா என்று நினைத்தேன். நான் சர்க்கார் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் ஆபீஸ் வேலையை விட்டு 45 வருடங்கள் இந்த ஜுனில் முடிகின்றன என்கிற மாபெரும் விஷயம் நினைவுக்கு வந்தது.

ஆகா, ஆகா, அருமையான விஷயமாச்சே என்று மனம் கும்மாளி போட்டது. சரி, கொண்டாட வேண்டியது தான்; எப்படி கொண்டாடலாம் என்ற எண்ணம் எழுந்தது.

-அல்வா வாங்கி சாப்பிடலாம். அடுத்தபடியாக அப்புறம் யோசிக்கலாம் என்று மனம் பேசியது.

சில விஷயங்களை காலமே தீர்மானித்துச் செயலாக்கி விடுகிறது. சில நினைப்புகள், சுயமுயற்சி இல்லாமலே பிறர் துணையினால் எதிர்பாராத விதத்தில் நிறைவேறிவிடுகின்றன.

இப்பவும் அப்படித்தான் ஆச்சு.

திடீரென்று கோமு வந்தாள். அல்வாவும் மிக்ஸசரும் வாங்கி வந்தாள்.

அடுத்தபடியாக, ஒரு சுற்றுலா மாதிரி ஒரு 'வேனில்' (Van) ஸ்ரீவில்லிபுத்தூர் போய் வருகிற வாய்ப்பு கிடைத்தது. அங்கே கோயில்களுக் கெல்லாம் போக நேரிட்டது. மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டியதாயிற்று.

-இதெல்லாம் விசேஷமானவை தானே! இந்தக் கொண்டாட்டமே போதும்! என்று மனம் சந்தோஷப்பட்டுக் கொண்டது.

மலைகளில் இரவு நேரத்தில் தீ எரிவது சில சமயம் பார்வையில்படும்.

காற்றுக் காலத்தில் இப்படி தீப்பிடித்து எரிவது சகஜமாகவும் நிறையவும் இருக்கும். காற்றில் மூங்கில் மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசி, தீப்பிடித்து எரியும். அது பக்கத்து மரங்களுக்கும் தாவி விடும்; காற்று வேகத்தில் நெடுகப் பரவும் என்று முன்பு பொதுவாகச் சொல்வார்கள்.

சாரல் காலம், குளிர் அதிகம் இருக்கும். அதனாலே மலைப் பளிங்கனுக (மலை மீது வசிக்கிற பூர்வகுடிகள்) தீ வைப்பானுக, குளிருக்குப் பாதுகாப்பாக. காற்று வேகத்திலே அது மரங்களுக்குத் தாவி, எங்கும் பரவி விடும். இப்படி 40-50 வருடங்களுக்கு முன் ஜனங்கள் பேசிக் கொள்வது வழக்கமாக இருந்தது.

பிறகு Forest அதிகாரிகளே, கரி சேகரிப்பதற்காகவும், மண்டி வளரும் புல்பூண்டுகள் செடிகள் புதர்களை அழிப்பதற்காகவும் தீ வைப்பார்கள்; அது பற்றி எரிந்து பெரும் தீயாக வளர்ந்து பரவி விடுகிறது என்று சொல்லலானார்கள் உண்மையான காரணம் என்னவோ! மலை மேலே தீ அடிக்கடி, தொடர்ந்து, எரிவது நடந்து கொண்டே இருக்கிறது.

15-20 வருடங்களுக்கு முன்னாலே, ராஜவல்லிபுரம் வீட்டின் வாசலில் நின்றாலே, மேற்குத் தொடர்ச்சி மலைமீது தீ எரிவது

பளிச்செனப் பார்வையில் படும். பிறகு, ரோட்டு ஓரத்து தோட்டம், வீடுகள் எல்லாவற்றையும் விலைக்கு வாங்கி விட்டவன், கோட்டைச் சுவர் மாதிரி காம்பவுண்டு எழுப்பிப் போட்டான். அதனாலே இந்த வீட்டுத் திண்ணையிலிருந்தால் - வாசலில் நின்றால் - தெரியக் கூடிய காட்சி இனிமைகள் மறைக்கப்பட்டு விட்டன.

வெளியே போனால் தீ எரிவது தெரியும். சில சமயங்களில் தீ மிகப் பெரிதாய், பரவலாக எரியும். அப்போது தென்படுகிற காட்சி பிரமாதமாக இருக்கும். பளிச்சிடும் தீ, அதுக்கு மேலே ரொம்பப் பரவித் தென்படும் செவ்வொளிப் பரப்பு-பளீரென அழகாக இருக்கும்.

மேற்குத் தொடர்ச்சி மலை ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மிகப் பெரிதாய், உரயமாய், கிட்டத்தில் இருப்பதாய் தோற்றம் காட்டி நிற்கிறது. முண்டுமுடிச்சுகள், மேடுகள் பள்ளங்கள் எல்லாம் கருநீலமாய் தெளிவாக, கம்பீரமாக, விளங்கும், பகலில் பார்க்கையில்.

ராமச்சந்திரபுரத்தில் தங்கியிருந்த போது, உயரத்தில் ஒரு இடத்தில் தீ எரிவது தெரிந்தது.

ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து புறப்படுகையில் இருட்டு வந்துவிட்டது. மலைமீது அற்புதம் நிகழ்ந்து கொண்டிருந்தது. மிக அதிக எண்ணிக்கையான தீப்பிடித்தல்கள். வட்டமாகவும், S மாதிரியும், நேர்கோடாகவும், வளைவுகளாகவும், மேடுகளிலும் பள்ளங்களிலும் தீ செக்கச் செவேலென்று சிரித்து மின்னியது. மிக அருகே, அடிவாரத்தக்கு சமீபத்தில் எரிவது போல் தென்பட்டது. மிக உயரத்திலும் தீ எரிந்து கொண்டிருந்தது. பத்துக்கும் மேற்பட்ட தீக்குவியல்கள்; ஒளிமயமாய், அருமையான காட்சி இனிமையாய் - பார்க்கப் பார்க்க இன்னும் பார்க்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டுவதாய் தீத் தொகு;பபுகள் அருகருகே பிரகாசித்தன. நேரம் ஆகஆக அவற்றின் ஒளித்தன்மை அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

அது போன்ற காட்சியை அன்றுதான் நான் முதல்ர தடவையாகப் பார்த்தேன். ஒரு அரிய வாய்ப்பு."

கோயில்களுக்குப் போகிறவர்களில் பெரும்பாலோர் பக்தி உணர்வோடு போகவில்லை. டூரிஸ்ட் பஸ்களிலும், 'வேன்'களிலும் 'சுற்றுலா' என்று கிளம்பி, பல இடங்களையும் பார்ப்பது போல கோயில்களையும் பார்க்கப் போகிறார்கள்.

கோயில்களும் முன்பு மாதிரி புனிதமான திருத்தலங்களாக இல்லை. பணம் பிடுங்க ஆசைப்படுகிற பிசினஸ் கேந்திரங்கள்

மாதிரித் தான் அவையும்-அங்கே இருப்பவர்களும் செயல்படுகிறார்கள்.

சாமிக்கு சூடன்காட்டி, சூடன்தட்டை ஒவ்வொருவர் முன்னும் நீட்டுகிற ஐயன் அதில் காசு போடப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். பத்துப் பைசா, நாலணா என்று போடுகிறவர்கள் போட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள். சிலர் எட்டணா கூட போடுகிறார்கள்.

நான் எந்த ஊர் கோயிலுக்குப் போக நேரிட்டாலும், சூடன் தட்டில் காசு போடுவதில்லை, உண்டியலில் போடுவதுமில்லை.

நலம். நாடுவதும் அதுவே.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
30-6-86

அன்புள்ள ராதா,

உன் கடிதம் மூலம் பல விவரங்களும் அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். கலர் டி.வி. கிடைக்காவிட்டாலும் குடிப்பதற்கு குளுகுளு 'கலர்' பானங்கள் கிடைத்ததும், பவுடரும் சோப்பும் அளிக்கப்பட்டதும் சந்தோஷத்துக்கு உரிய விஷயம்தான்.

உனக்குக் கல்லூரி திறந்து, மீண்டும் படிப்பு வேலை மிகுதி வந்து சேர்ந்திருக்கும். அது ஒருவகையில் இயந்திரத் தன்மையானதாக இருந்தாலும், ஒருவிதத்தில் உற்சாகம் தருவதாகத் தான் இருக்கும்.

நான் மதுரைக்குப் போய் வந்தது பற்றி அப்பாவுக்கு எழுதிய கடிதங்களில் எழுதியுள்ளேன். மதுரை நான் நேசித்த நகரங்களில் ஒன்று. இப்போது அது வெறுப்பு தரும் நகரமாக மாறிவிட்டது.

மதுரை எனக்கு முதன்முதலில் 1937ல் அறிமுகம் ஆயிற்று. அதன் பிறகு வருடம் தோறும் அதைக் கண்டு மகிழும் வாய்ப்பு அநேக வருஷங்களுக்குக் கிடைத்தது.

அப்போதெல்லாம் மதுரை அழகு நகரமாக இருந்தது. ஜனநெருக்கடி, பஸ்-லாரிகள்-மற்றும் வேக வாகனங்கள் போக்குவரத்து மிகக் குறைவாகவே இருந்தது. மத்தியில் கோயில். அதை சுற்றிச் சுற்றி, சதுர அமைப்பாக வீதிகள் என்று நேர்த்தியான

அமைப்பு முறை கொண்டது மதுரை. 1940களில் கூட கோயில் சுத்தமாக, அமைதியாக, அழகிய சூழ்நிலைகளோடு விளங்கியது.

பிறகு ஜனப்பெருக்கம் அதிகமாகி, போக்குவரத்து வேகஇயக்க வாகனங்கள் மிகுந்து, நெருக்கடி மிக அதிகமாகி விட்டது. வீதிகள் குறுகலாகத் தோன்றுகின்றன. வீதிகளின் இருபுறமும் லாரிகள் வகையரா நிற்பது நடப்பவர்களுக்கு இடைஞ்சல். கோயிலில் கடைகள் அதிகமாகி, சுத்தமும் சுகாதாரமும் குறைந்து, கோயிலுக்குள் போவது மனஅமைதியைக் கெடுக்கும் காரியம் என்றாகி விட்டது.

டவுண்ஹால் ரோடு நெரிசலைத் தாங்க இயலாத அளவுக்கு இருக்கிறது. லாட்ஜுகள் நிறைய. கும்பலும் நெருக்கடியும் வெகு அதிகம். எப்பவும் கூட்டமும் மோதலும் தான். 1970களிலேயே இந்த நிலை. இது வரவர அதிகரித்துவிட்டது.

இப்போது மதுரையின் அழகு அமைப்பே தெரியவில்லை. ஜனப்பெருக்கம் மிகுந்த, போக்குவரத்து நெரிசல் அதிகமாகிவிட்ட, அழுக்குகளும் அசிங்கங்களும் பெருத்துப்போன, மற்றுமொரு நாகரிகப் பெருநகரமாகத் தான் அதுவும் தென்படுகிறது.

நகரின் தூரத்துச் சிறு தெருக்களில் கூட லாரி, பஸ், கார்கள் வகையராவின் தொல்லைதரும் ஓட்டங்கள் அதிகரித்து விட்டதனால், அமைதியாக - ஆனந்தமாக நடந்துபோகவே இயலவில்லை.

நாகரிக வளர்ச்சியோடு நகரங்கள் பல வசதிகள் பெற்றிருந்தாலும், அமைதியையும் சந்தோஷத்தையும் சுகாதாரத்தையும் சிதைக்கின்ற சீர்குலைவுகளும் அங்கே வளர்ந்து விடுகின்றன.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
21-7-86

அன்புள்ள ராதா,

உன் கடிதம் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். நீ டைப்ரைட்டிங்கில் I கிளாசில் பாஸ் பண்ணியுள்ளதை அறிய சந்தோஷம். பாராட்டுக்கள்.

புத்தகங்கள் வாங்கி, கல்லூரிப் படிப்பில் உற்சாகமாக ஈடுபட்டுள்ளது சந்தோஷம் தருகிறது.

சென்னையில் எப்போதாவது மழை பெய்கிறது. இந்தப் பக்கம் எல்லாம் மழையே கிடையாது. படு வறட்சி. பெரும் காற்றுத் தான்.

காற்று என்றால் - திருநெல்வேலி ஜில்லாவில் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் விடாது அடிக்கிற பேய்க்காற்று மாதிரியான பெரும்காற்று இதர பகுதிகளில் இராது. மதுரைக்குத் தெற்கே பலத்த மேல் திசைக்காற்று (மேல்காற்று- 'மேகாத்து') ஆக ஆரம்பித்து, இந்தப் பக்கத்தில் வலுப்பெறுகிறது. ஓவ்-ஊவ் என்று இரைச்சலிட்டுக் கொண்டு இரவு பகலாக அடிக்கும்.

தெருவில் போகிறவர்களை, தள்ளிக்கொண்டு போகும். காற்றை எதிர்த்து வருகிறவாகளை சிரமப்படுத்தும். உடைகளை கண்டபடி குலைத்து பெண்களையும் ஆண்களையும் சங்கடப்படுத்தும். ஆடியில் காற்று பலம் பெறுகிறது.

'ஆடிக் காற்றில் அம்மியும் மிதக்கும்' என்பது பழமொழி. சில ஊர்களில், உயரமான குளக்கரை அல்லது மேடுகள் மீது நடந்துபோகிற ஒல்லிநபர்களைத் தூக்கி, கள்ளிப்புதரிலும் கண்டகண்ட இடங்களிலும் தள்ளிப் போடும். ஓலைக்கட்டு, கூடை முதலியன சுமந்து வருகிறவர்கள் மிகவும் சிரமப்படுவார்கள். நேராக நடக்க முடியாது. காற்று வீசுகிற திசைக்கு எதிராகச் சாய்ந்து சரிந்து அவர்கள் நடப்பது, பார்க்கிறவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும். வானத்தில் பறக்கிற காக்கைகள் காற்றில் அல்லாடுவதையும், பருந்துகள் தாழ்ந்தும் தணிந்தும் லாவகமாக Balance பண்ணி பறப்பதையும் சகஜமாகக் காணலாம்.

காற்று எங்கும் புழுதியையும் தூசியையும் கொண்டு சேர்க்கும்.

ஆற்றில் தண்ணீர் குறைவாகத்தான் போகிறது. காலையில் ஜில்-ஜிலீர் என்று குளிர்ந்து கிடக்கிறது. மாலை வேளைகளில் கூட குளிர்ச்சியாகத் தான் இருக்கிறது.

எழும்பூர் ரயில் நிலையம் பற்றி எழுதியிருந்தாய். திருநெல்வேலி ஜங்ஷன் ஸ்டேஷனை நீங்கள் எல்லோரும் 1977ல் பார்த்தது. அதன் பிறகு அந்தக் கட்டிடமும், அதைச் சுற்றியுள்ள இடங்களும் மாபெரும் மாற்றங்களை - புதுமைத் தோற்றங்களை - பெற்றுவிட்டன. ஜங்ஷன் பகுதி புதுநகரம் மாதிரி வளர்ந்துள்ளது. எத்தனை எத்தனை லாட்ஜுகள்! பெரியபெரிய கட்டிடங்கள்!

இந்தப் பக்கத்து மாறுதல்களையும், ஊர்களையும் நீங்கள் எல்லோரும் எந்தக் காலத்தில் பார்க்க முடியப் போகிறதோ! இந்த நினைப்பு என்னுள் என்றும் உண்டு.

நீங்கள் எல்லோரும் நலமாக இருப்பதை அறிய சந்தோஷம்.

அன்பு

வ. க.

உடுமலைப்பேட்டை
25-8-86

அன்புள்ள ராதா,

நீங்கள் எல்லோரும் 'கடலோரக் கவிதைகள்' பார்த்து ரசித்ததை அறிய சந்தோஷம். அந்தப் படம் இங்கு முன்னரே வந்து போய்விட்டதாம். ரொம்ப நாட்கள் ஓடவில்லையாம்.

அப்பா அனுப்பிய கடிதங்கள் கிடைத்தன. கடிதங்கள் மறுநாளே கிடைப்பதில்லை. மூன்றாம் நாள் தான் கிடைக்கின்றன.

நீங்கள் காலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை வேலை செய்வதை அறிந்து - இதுக்கு மகிழ்ச்சி அடைகிறேன் என்று எழுதவா, வருத்தப்படுகிறேன் என்று எழுதவா என்று தெரியவில்லை!

வாழ்க்கை நிலைமைகள் அப்படி இருக்கின்றன. இருந்தபோதிலும், சந்தோஷமாக இருக்கமுடிகிறதே, அதுக்காக மகிழ்ச்சி அடையலாம்.

நான் செப்டம்பர் 5-ம் தேதி ராஜவல்லிபுரம் போவேன்.

14-ம் தேதி 'எழுத்தாளர் உறவு' கூட்டம் மதுரையில். முதலில், புதுக்கோட்டையில் என்று தீர்மானிக்கப்பட்டது. இப்போது, புதுக்கோட்டையில் வேண்டாம்; மதுரையிலேயே கூடலாம் என்று தீர்மானம்.

அது முடிந்ததும், ராஜவல்லிபுரம் போய்விட்டு, செப்டம்பர் கடைசி வாரத்தில் சொன்னை வந்து சேர்வேன்.

ஆகஸ்ட் முடிவுடன், நான் சென்னையை விட்டு வந்து 7 மாதங்கள் ஆகும். இன்னும் இந்தப் பக்கத்திலேயே திரிந்து கொண்டிருப்பது சரியில்லைதான்!

நவராத்திரிக்கு முன்னதாக சென்னை வந்துவிடுவேன். தீபாவளி அக்டோபர் 31 இரவு-நவம்பர் 1-ம் தேதி காலையில்.

வாழ்க பண்டிகைகள்.

அன்பு
வ. க.

# ரேவதி

ராஜவல்லிவுரம்
26-2-86

அன்புள்ள ரேவதி,

வழக்கம்போல் ஊக்கத்தோடு படித்துக் கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன். ஒரு வருஷத்துக்கு முன்பு - 1985 பிப்ரவரியில்-நான் இந்த ஊரைவிட்டுப் புறப்பட்ட போது, இசக்கி உபயோகிப்பதற்கென்று 3 இன்லண்ட் லெட்டர்களில் விலாசம் எழுதிக்கொடுத்து விட்டு வந்தேன். அவற்றில் ஒன்று கவனிக்கப்படாமலே ஒரு அட்டையினுள் இருந்தது. அதை இப்போது நான் உபயோகிக்கிறேன்.

நான் இந்த ஊருக்கு வந்து 24 நாட்கள் ஆகின்றன. இதுவரை 12 நாட்கள் திருநெல்வேலி ஜங்ஷன் - டவுண் போய் வந்தேன் (2 நாட்கள் பாளையங்கோட்டை).

பாளையங்கோட்டை-ஜங்ஷன்-சிந்து பூந்துறை-டவுண் வட்டாரத்தில் எனக்கு நண்பர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் நாலைந்து பேர்தான் இருப்பார்கள். இவர்களில் யாரையும் இதுவரை நான் பார்க்கவில்லை பார்க்கவேண்டும் என்ற விருப்பமும் எனக்கு இல்லை. 'பட்டிக்காட்டுப் பட்டணம்' என்று சொல்வது விசித்திரமானதாக ஒலிக்கும். விநோதமுரண் (பேரடாக்ஸ்-Paradox) ஆகத் தோன்றும். ஆனாலும் திருநெல்வேலி டவுண், பாளையங்கோட்டை போன்ற ஊர்களுக்கு இந்தப் பேர்தான் பொருத்தமாக இருக்கும். இவை நகரங்கள் (டவுண்) என்று பெயர் பண்ணிக் கொண்டாலும், பட்டிக்காட்டுத் தன்மைகளை இழந்துவிடாத நிலையிலேயே காணப்படும். பஜார்கள் என்று சொல்லப்படுகிற நாகரிகச் சூழல்கள் கூட பட்டிக்காட்டுத் தோற்றங்கள் கொண்டதாகவே இருக்கும்.

இந்த ஊர்களை எல்லாம் நீங்கள் நிதானமாகப் பார்க்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். காலமும் வசதிகளும்தான் ஒத்துழைப்பதாயில்லை.

என்னுடைய மிகச் சின்ன வயசில் பாளையங்கோட்டை, திருநெல்வேலிப் பாலம் (பிற்பட்டு அது 'ஜங்ஷன்' என்று ஆகிவிட்டது), திருநெல்வேலி ஆகியவற்றை அந்தக்காலத்து 'பீட்டன்' வண்டியில் உட்கார்ந்து அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எங்கள் பெரிய பெரியப்பா மக ஆவுடையப்ப அண்ணாச்சி ஜங்ஷனில் 'மாட்டு ஆஸ்பத்திரி' (வெட்டரினரி

ஆஸ்பிட்டல்) டாக்டர் ஆக இருந்தார். அந்தக் காலத்தில் ஆஸ்பத்திரியில் பீட்டன் இருந்தது. குதிரை பூட்டிய சொகுசு வண்டி. அதில் எங்களையும் அவருடைய பிள்ளைகளையும் வைத்து, பாளையங்கோட்டை முதல் டவுண் வரை சுற்றிக் காட்டும்படி அண்ணாச்சி ஏற்பாடு செய்தார். காட்பரீஸ் சாக்லெட்டும் நிறையவே வாங்கித் தந்தார். அப்போது எனக்கு 6 அல்லது 7 வயது இருக்கும்.

அந்நாட்களில், பாளையங்கோட்டை- கைலாசபுரம் - மீனாட்சிபுரம் - வீரராகவபுரம் - திருநெல்வேலி எல்லாம் தனித்தனி ஊர்களாகவே இருந்தன. பிறகு-பிறகு கைலாசபுரம், மீனாட்சிபுரம், வீரராகவபுரம் எல்லாம் ஒரே ஊராகி, ஜங்ஷன் ஆகிவிட்டது. போகப்போக, பாளையங்கோட்டையைப் பிரித்து வைத்த தூரம் தோன்றாதபடி, ரோடு நெடுகிலும் பெரிய பெரிய கட்டிடங்கள், வந்து விட்டன. அதுக்கு முந்தி டவுணும் ஜங்ஷனும் இடைவெளி இல்லாத ஊராக ஒன்றிப் போயின. கட்டிடங்கள், கடைகள் பெருத்துப் போயின. சினிமாத் தியேட்டர்கள் புதுசுபுதுசாகத் தலைதூக்கின. இப்படி எத்தனையோ வளர்ச்சி மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் - பட்டிக்காட்டுப் பட்டதாரிகளுக்கும் சென்னைப் பட்டணக் கல்லூரி மாணவர்களுக்கும் வித்தியாசங்கள் இருப்பது போல, இந்த ஊர்களுக்கும் இருக்கின்றன.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
22-3-86

அன்புள்ள ரேவதி,

நான் திருவனந்தபுரம் போவதற்கு முந்தி நீ எழுதிய கடிதத்தில் (2/3/86) நம் வீட்டு மல்லிகைச் செடி 30 பூக்கள் பூத்தது பற்றி எழுதியிருந்தாய். ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

அதன் பிறகு அந்தச் செடியில் பூக்கள் தொடர்ந்து பூத்திருக்கும் என்று நினைக்கிறேன். கோடை காலத்தில் மல்லிகை அதிகம் பூக்கும்.

டிசம்பர் பூச்செடி மஞ்சள் நிறப்பூக்களை பூத்துள்ளது பற்றி அப்பா எழுதிய கடிதம் மூலம் தெரிந்து கொண்டேன்.

பெல்ட் அணிந்த நட்சத்திரக் கூட்டத்தின் பெயர் 'ஓரியன்'. ORION

சிலபேர் தெரியாதவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதி அனுப்புவார்கள். திருநெல்வேலி டவுண் மேலரதவீதியில் ஜவுளிக்கடை வைத்திருக்கும் ந.சு. காந்திமதி நாதபிள்ளை என்பவரும் அப்படிப்பட்டவர்தான். புத்தங்கள் எழுதியுள்ள கவிஞர்கள், புலவர்கள், ஆசிரியர்களுக்குக் கடிதங்கள் எழுதுவார். பாராட்டியும் வாழ்த்தியும். அவர்கள் எழுதுகிற பதில்களை வாங்கி, சேர்த்து வைத்து மகிழ்ந்து போவார். அவர் கடையில் வியாபாரம் கிடையாது. சும்மா உட்கார்ந்திருக்கிற போது எதையாவது எழுதிக் கொண்டிருப்பார். கவிதை என்று. அவர் எழுதுகிறவை கவிதையாகவும் இராது, செய்யுளாகவும் இராது. அவற்றை அவர் பத்திரிகைகளுக்கு அனுப்புவதுமில்லை.

பொழுதுபோக்கக் கடை உண்டு
விழுந்து கிடக்க வீடுண்டு
தொழுதுகும்பிடக் கோயில் உண்டு
அழுது புலம்பிட ஆச்சி உண்டு.

இது அவர் எழுதியுள்ள பாடல்களில் ஒன்று.

நீ பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்றதற்காக புத்தகம் பரிசு பெற்றிருப்பது மகிழ்ச்சி தருகிறது. பாராட்டுக்கள்.

திருநெல்வேலியில் நடிகை நதியாவுக்குக் கூட 'ரசிகர் மன்றம்' அமைத்திருக்கிறார்கள். 'நிலவே மலரே' படம் வெளிவந்ததும் இந்த ரசிகர்கள் நதியாவை வாழ்த்தி நோட்டீஸ்கள் அடித்து ஒட்டி மகிழ்ந்து போனார்கள். 'நதியா அவர்களே, வாழ்க. வளர்ந்து புகழ் பெறுக' எனற தன்மையில். நதியாவை ஒரு தரம்கூட நேரில் பார்க்கிற வாய்ப்பும் கிடைக்காது இவர்களுக்கு. இருந்தாலும் இப்படி ஒரு ஈடுபாடு!

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
7-5-86

அன்புள்ள ரேவதி,

எல்லாப் பரீட்சைகளையும் நன்றாக எழுதியிருப்பாய் என்று நம்புகிறேன்.

4-ம் தேதி முதல் 'அக்கினிநட்சத்திரம்' (சென்னையில் 'கத்திரி') ஆரம்பித்துவிட்டது. வெயில் கடுமை ஏறிக்கொண்டே போகிறது.

சினிமா பார்க்க விரைகிறவர்கள் -ஆண்களும் பெண்களும் - அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. திருநெல்வேலியில் 'உயிரே உனக்காக' என்ற நதியா படம் இன்னும் வெற்றிகரமாக ஓடுகிறது. நதியா மோகத்தைக் கண்ட மற்றுமொரு தியேட்டர்காரன் 'பூவே பூச்சூடவா' படத்தை வரவழைத்திருக்கிறான். ஒரு வாரமாக அதுவும் போகிறது....

கமல் நடித்த 'நானும் ஒரு தொழிலாளி'படம் வந்திருக்கிறது. 'கமல் ரசிகர் மன்றம்'கள் அதுக்காக ஆர்பாட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள். தியேட்டருக்கு முன்னால் 6 அடுக்குப் பந்தல். வரவேற்புப் போஸ்டர்கள்.

ஒவ்வொரு நடிகனுக்கும், ஒவ்வொரு ஊரிலும் அஞ்சாறு ரசிகர் மன்றங்கள். தனித்தனிப் பேர்களோடு. 'விக்ரம்' கமல் ரசிகர் மன்றம்; பாரத் கமல் ரசிகர் மன்றம் - இப்படி.

மடச் சிகாமணிகளாக இருக்கிறார்கள் இளைஞர்கள்!

'மகராஜநகரில் கௌரி வீட்டில் சின்னஞ்சிறு கருநீலப்பூ பூக்கிற படர்செடி ஒன்று பார்த்தேன். அற்புதமான கறும்பூ. வாழ்க்கை முழுவதும், ஆயுள் முழுவதும், அந்தப் பூவைப் பார்த்துக்கொண்டே கழித்துவிடலாம். ஃபைத்தியக்காரத்தனம் தான். ஆனால் என்ன இனிமையான பைத்தியக்காரத்தனமாக அது இருக்கும்?' என்று கல்யாணி (தி.க.சி. மகன்) ஒரு கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

அற்புதமான பூக்கள் அங்கங்கே தென்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. பெயர் தெரியாத, காட்டுச் செடிகள், பல அழகான, புதுப்புது வடிவ அமைப்புள்ள பூக்களைக் காட்டிச் சிரிக்கின்றன.

பூக்கள் அருமையானவை. இனிமையானவை. கண்களுக்கு விருந்தாகி, மனசுக்கு இதம் அளிக்கக் கூடியவை.

மணம் இல்லாத பூக்கள் கூட, பார்ப்பதற்கு வசீகரமாக இருக்கின்றன. பொகெய்ன்வில்லாச் செடிகளின் பளிச்சிடும் பிங்க் நிறப் பூக்கள் பல இடங்களிலும். இந்த இனம் பூக்களில் பலரக வர்ணங்கள் இருக்கின்றன. பிங்க், குங்குமம் போன்ற செந்நிறம், ஆரஞ்சு, கலவையான ஒரு நிறம், வெள்ளை, மஞ்சள் மாதிரி...

வெள்ளை நிறப் பூக்கள் செடியில் மண்டிக் கிடந்தாலும் அழகாக இல்லை. பிங்க் நிறம் தான் ரொம்ப அழகு.

இந்த வட்டாரத்தில், சில்லறை தேவதைகள் (பேய்க்

கோயில்கள்) இருக்கிற இடமெல்லாம் 'கொடை' நடப்பதும் சகஜம். அறுப்பு முடிந்து நெல் கிடைக்கிற காலங்களில், கோயில்கொடைகளும் தடபுடல் படும். ஒவ்வொரு வெள்ளி, செவ்வாயும் எங்காவது கொடை இருந்துகொண்டே இருக்கும்.

கொடை என்றால், 'வில்லு' கண்டிப்பாக உண்டு. ராத்திரி பூராவும் வில்லுப்பாட்டு நடக்கும். இப்போதெல்லாம் எலெக்ட்ரிக் லைட் அலங்காரங்கள் அதிகமாகிவிட்டன. ஒலிபெருக்கியின் கதறல்களும் உண்டு. செலவுக்கு எத்தனையோ வழிகள்! செலவு பண்ணுவதற்கு ஜனங்களுக்குப் பணம் எப்படியோ கிடைத்துக் கொண்டுதான் இருக்கிறது!

இந்தக் கடிதத்தை இதுவரை எழுதி முடித்த போது, தபால்காரன் உனது 3-5-86 கடிதத்தைக் கொண்டு தந்தான். சுப்பிரமணியன் கடிதமும் கிடைத்தது. (8-15 மணிக்கு)

'தேவி'யில் வந்த பாராட்டுக் கடிதத்தை எழுதித் தெரிவித்ததற்காக தேங்க்ஸ்.

'குமுதம்' இதழ் நேற்று வாங்கிப் பார்த்தேன். 'இமயப் பதிப்பகம்' வீரராகவன் கு.ப.ரா. பற்றிய செய்தி அதில் வந்திருப்பதை மட்டும் தான் எழுதினார். புத்தகம் பற்றிய தகவலும், அட்டைத் தோற்றமும் வந்திருப்பது 'குமுதம்' வாங்கிப் பார்த்ததும் தான் தெரிந்தது.

எனக்கு 2 புத்தகங்கள் அனுப்பிவைத்தார் வீரராகவன். அதிகப் பிரதிகள் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்புவதாக எழுதியிருக்கிறார். 'அரும்பு' தபாலில் வந்து சேரவில்லை. இதை அப்பாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தேன்.

சேர்கள், ஸ்டூல் எல்லாவற்றுக்கும் பெயிண்ட் அடித்து விட்டதை அறிந்து மகிழ்கிறேன்.

கேரம் போர்டு வாங்கியிருப்பதும் சந்தோஷத்துக்குரிய விஷயம் தான்.

உடுமலைப்பேட்டைக்கு எப்போது போவது என்று இன்னும் முடிவு பண்ணவில்லை.

ஸ்ரீவில்லிபுத்தூரை அடுத்த ராமச்சந்திரபுரம் வீர. வேலுசாமியும் குடும்பத்தினரும் என்னை அவர்கள் ஊருக்கு அழைத்திருக்கிறார்கள். பயணச் செலவுக்குப் பணம் அனுப்பியிருப்பதாக எழுதியிருக்கிறார். நாளை கிடைக்கலாம். சனியன்று நான் புறப்பட்டுப் போகலாம். திரும்பி வர ஒருவாரம் ஆகலாம்.

அன்பு

11-6-86

அன்புள்ள ரேவதி,

உன் கடிதம் சந்தோஷம் தந்தது. நீ என்ட்ரன்ஸ் எக்ஸாம் எழுதுவதே நல்லது. அதிர்ஷ்டம் இருந்து. ஸீட் கிடைத்தால் நல்லதுதானே. முன்பு மோனகன் ஸ்கூலில் படித்தபோது, டீச்சர் ஒவ்வொருவரையும் மேலே நீ என்ன படிக்கப்போகிறாய் என்ன செய்ய விரும்புகிறாய் என்று கேட்டதாகவும் நீ டாக்டர் ஆக விரும்புவதாகச் சொன்னதும், அவள் சிறிது நேரம் மவுனமாகப் பார்த்துவிட்டு God Bless you என்று கூறியதாகவும் நீ தெரிவித்தது ஞாபகம் இருக்கிறது. உனக்கும் ஞாபகம் இருக்கும்.

அந்த God என்கிற கம்னாட்டிப் பையன் நீ விரும்பியபடி பாலி டெக்னிக்கில் இடம் கிடைப்பதற்கு அருள் புரியாது போனால் நீ ஆசைப்படுகிறபடி மெடிக்கல் காலேஜிலாவது இடம் கிடைக்கத் திருவருள் பாலிக்கிறானா என்று பார்க்கலாமே!

என்டரன்ஸ் எக்ஸாமுக்காக நீ படிக்க ஆரம்பித்திருப்பதை அறிய மகிழ்ச்சி.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலுக்குப் போய் வர எண்ணியிருப்பதாக எழுதியிருந்தாய் இதுக்குள் நீ, ராதா, சங்கரா மூன்று பேரும் கபாலித்தடியனையும் கற்பகாம்பாள் என்கிற குட்டைத்தடிச்சியையும் பார்த்து வந்திருக்கலாம் என்று நினைக்கறேன்.

வாழ்க கடவுள்கள்! வளர்க கோயில்கள் சினிமா தியேட்டர்கள் மாதிரி

இங்கே காற்று பேய்த்தனமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. புழுதி, தூசியை எல்லாம் வீட்டுக்குள்ளே கொண்டு வந்து சேர்ந்து, தொல்லைதருகிறது.

நேற்று இரவு எதிர்பாராதவிதமாக மீனா குமாரியும் (குற்றாலம் பராசக்தி கல்லூரிப் பேராசிரியை) அவள் கணவன் கனகராஜூம் வந்தார்கள் வாறேன் - வாறேன் என்று பல மாதங்களாகச் சொல்லி இப்பதான் வசதிப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள உங்கள் அனைவரது நலனையும் விசாரித்தாள்.

அவள் ரொம்பவும் மெலிந்து காணப்படுகிறாள். இம்மாதம் 25ம் தேதி சென்னைக்கு ஒரு கல்யாணத்துக்காகப் போக இருப்பதாகவும், அப்போது அங்கே வீட்டுக்கு வந்து உங்கள் எல்லோரையும் பார்க்கப் போவதாகவும் (பார்த்து வருஷங்கள் பல ஆச்சு) அந்த அம்மாள்

சொன்னாள். வந்தாலும் வரலாம்; வீட்டுக்கு வர நேரமில்லை; வேறே வேலைகள் வந்துட்டது என்று சொன்னாலும் சொல்லலாம். எதுவும் நடக்கலாம்.

அப்படித்தான் சமுத்திரம் எழுதினார்; ஒரு வார லீவில் சென்னை போகிறேன். அங்கே வீட்டுக்குப் போய் அண்ணாவை சந்திப்பேன் என்று. இப்போ என்ன எழுதுகிறார்? சென்னைக்குப் போனேனா! வீட்டுக்குப் போய் அண்ணாவைக் கண்டு பேசுவேன் என்று சொன்னேனா! நேரமே இல்லாமல் போயிட்டுது. எனது 'ஊருக்குள் ஒரு புரட்சி' நாவலை, 'ஒரு இந்தியக் கனவு' படம் எடுத்தவர்கள், சினிமாவா எடுக்க முன் வந்திருக்காங்க. அது விஷயமா அவங்களைப் பார்க்க அலைந்ததிலேயே நாட்கள் ஓடிவிட்டன என்கிறார். போகட்டும்.

மனித சுபாவங்கள் அப்படி. அவ்வளவுதான்.

அன்பு
வ. க.

ராஜவல்லிபுரம்
30-6-86

அன்பு ரேவதி,

நீங்கள் எல்லோரும் நலமாக இருப்பதை அறிய சந்தோஷம். நான் நலம். இசக்கியும் சுகமாக இருக்கிறாள.

நீ எம்.பி.பி.எஸ். தேர்வுக்காகப் படித்து வருவதையும், பிரில்லியன்ட் டியூட்டோரியல்ஸ் அதிபர் உதவிகள் செய்ததையும் அறிந்து மகிழ்கிறேன். நீ விரும்புகிறபடி மெடிக்கல் காலேஜில் இடம் கிடைத்தால் நல்லதுதான். கிடைக்கவேண்டும். கிடைக்கட்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

ஆனால் மெடிக்கல் காலேஜில் 'சீட்' கிடைப்பது என்பது இதற்கெல்லாம் அப்பால்பட்ட விஷயமாக இருக்கிறது. கல்வி நிறுவனங்கள், பணம் அரிக்கும் ஆசையுள்ள அரசியல்வாதிகளின் சூதாட்டக்களமாக மாறி அநேக வருடங்கள் ஆகிவிட்டன. மெடிக்கல் காலேஜ் சீட் ஒன்றுக்கு மூன்று லட்சம் ரூபாய் வசூலிக்கிறார்கள் என்று போன வருடம் பேசப்பட்டது.

இதை எல்லாம் மீறி 'சீட்' கிடைத்தால் அதை 'அதிர்ஷ்டம்' என்றே கொள்ளலாம்.

எதிராஜ் காலேஜில் பி.எஸ்ஸி. பிசிக்ஸ் இடம் கிடைக்க வேண்டும்; கிடைக்கும் என நம்புகிறேன்.

பரீட்சைகளில் மதிப்பெண்கள் பெறுவது திறமையைப் பொறுத்த விஷயம் இல்லை; படிப்பு அறிவு-பரீட்சை எழுதிய நேர்த்தி இவற்றைப் பொறுத்து அமைவதுமில்லை. பரீட்சைத் தாள்களைத் திருத்துகிற பேராசிரியர்களின் 'மூட்' (மனநிலை)களைப் பொறுத்த விஷயம் என்று இருக்கிறது.

ஆகவே, நன்றாகப் படித்து நன்கு விடை எழுதியவர்கள் உரிய மார்க்குகள் பெறமுடியாமல் போவதும், திறமை குறைந்தவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று விடுவதும் சகஜமாகிவிட்டது. இதையும் அவரவர் அதிர்ஷ்டம் என்று சொல்வதிலும் தப்பு இல்லை.

கடவுள், கடவுள் நம்பிக்கை என்பது பெரிய விஷயம். உண்மையில், ஜனங்கள் நம்புகிறபடி-நம்புகிற உருவங்களில் - கடவுள் எதுவும் கிடையாது. பரமசிவன், பார்வதி, விநாயகர், சுப்பிரமணியன், வெங்கடாசலபதி, மகாவிஷ்ணு என்றெல்லாம் நம்பிக் கும்பிட்டு வருகிற விதங்களில் கடவுளர் இல்லை. மக்களின் மனபயங்களை, குழப்பங்களை, தெளிவின்மைகளை போக்குவதற்காகவே உருவகிக்கப்பட்ட பிம்பங்கள் (images) தான் இவை எல்லாம். ஆனாலும், மனிதருக்கு நம்பிக்கை செலுத்த பற்றுக்கோடுகள் தேவை. அவர்களே உருவாக்கிக்கொண்ட இந்த பிம்பங்கள் பெரும்பாலோருக்கு உதவுகின்றன. அந்த விதத்தில் இவை நல்லவை. ஆகவே இவை இருக்கின்றன என்று மனிதர்கள் நம்புகிறார்கள். அநேகரின் சுயநலத்துக்கும் பேராசைக்கும் பணச்சுரண்டலுக்கும் இவை உதவுகின்றபோது இவை தீமைகளாகி விடுகின்றன. அப்போது இவையும் கோயில்களும் குறைகூறப்பட வேண்டியவை யாகின்றன.

அன்பு
வ. க.

உடுமலைப்பேட்டை
25-8-86

அன்பு ரேவதி,

உன் கடிதம் கண்டு மகிழ்ந்தேன். நீங்கள் எல்லோரும் நலமாக இருப்பதை அறிய சந்தோஷம்.

இங்கும் அனைவரும் சுகம்.

நான் 21-ம் தேதி அனுப்பிய கடிதம் 23-ம் தேதி - உனது கடிதத்தை போஸ்ட் செய்த பிறகு - கிடைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், 25ல் கிடைத்திருக்கலாம்.

அமராவதி அணை, திருமூர்த்திமலை எல்லாம் போய் பார்த்தது பற்றி எழுதியிருந்தேன். 'சம்சாரம் அது மின்சாரம்' என்ற படம் பார்த்ததையும் எழுதினேன். விசு கதை-வசனம் நன்றாக இருக்கிறது. 'உள்ளத்தைத் தொடுவது' 'உருக்கமான கட்டம்' என்றெல்லாம் சொல்வார்களே, அப்படிப்பட்ட இடங்கள் நிறைய இருக்கின்றன. லட்சுமி நடிப்பு ஜீவனோடு விளங்குகிறது. மக்களுக்குப் பிடித்து விட்டது. இந்தப் படம் எல்லா ஊர்களிலும் வெற்றிகரமாக ஓடும்.

'மெடிக்கல் ஸீட்' கிடைக்கவில்லை என்பதுக்காக வருத்தப்பட வேண்டியதில்லை. தொலைஞ்சு போகிறது!

எல்லாம் நன்மைக்கே என்று எதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏமாற்றங்களும் அனுபவங்களே.

நீ தைரியமாக இருக்க வேண்டும். மனசை அதற்குப் பழக்கிக் கொள்ள வேண்டும். நன்றாக, நிறைய, படிப்பது மட்டும் போதாது. தேவையான சமயத்தில், படித்தது மறந்து போகாமலும் இருக்க வேண்டும். தேர்வு நேரத்தில் பரபரப்பும் பதட்டமும் கொள்ளக் கூடாது. நிதானமாக இருக்கப் பழக வேண்டும். தோல்வி, ஏமாற்றம் எதிர்ப்படுகிற போது அழுகை வருவது இயல்பு தான். எதிர்ப்பார்ப்பது கூடி வராத போது ஏமாற்றமும் வருத்தமும் மனசை சங்கடப்படுத்தவே செய்யும்.

ஆனால், இதை எல்லாம் தாங்கிக் கொள்வதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்.

படிக்கிற காலத்தில் நானும், எதுக்கெடுத்தாலும் அழுகிறவனாகத்தான் இருந்தேன். என்ன நேர்ந்தாலும் அழுவது. நேராத போதும் அழுவது. அதனால் 'அழுகுணித் தம்பான்' என்று ஒருவர் எனக்குப் பெயர் வைத்திருந்தார். பிறகு பிறகு, நானாகவே மனசை சரிப்படுத்திக் கொண்டேன்.

வருவது வரட்டும், போவது போகட்டும்; எல்லாம் நன்மைக்கே என்று மனம் தைரியம் கொண்டு விட்டது.

அன்பு

வ.க.

சுப்பிரமணியன்,

ராஜவல்லிபுரம்
9-6-86

அன்புள்ள சுப்பிரமணியன்,

உனது 1-6-86 கடிதம் சந்தோஷம் தந்தது. பள்ளிக்கூடம் திறந்து, உனக்கும் கணேசனுக்கும் புதுப் புத்தகங்கள் வாங்கிவிட்டதை அறிந்து மகிழ்கிறேன்.

புதுப் புத்தகங்களுக்கு தனியாக ஒரு வாசனை உண்டு; ஒரு அழகு உண்டு; ஒரு கவர்ச்சி உண்டு. புதுப்புத்தகங்களைக் கையில் வைத்துக் கொண்டிருப்பதே ஒரு சந்தோஷம் தரும். திருப்பித் திருப்பிப் பார்க்க ஆசை ஏற்படும்.

பள்ளியில் பாடங்கள் ஆரம்பித்து, எழுத்து வேலைகளும் தரத் தொடங்கியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

நீயும் ரேவதியும் கடிதம் எழுதியுள்ளதாக கல்யாணி அண்ணன் எழுதியிருக்கிறான்.

நீங்கள் பழனியப்ப மாமாவின் உற்சாகமான, ஊக்கமான, துணையோடு பல இடங்களையும் சில படங்களையும் கண்டு களிக்க முடிந்தது சந்தோஷத்துக்கு உரியது தான்.

தாராளமாகச் செலவு பண்ண நிறையப் பணம் இருக்கவேண்டும். அல்லது, நிறைய நிறையப் பணம் வந்து கொண்டே இருக்கவேண்டும். அப்ப தான் ஜாலியாக அநேக இடங்களுக்கும் போகலாம்; நினைத்ததைச் செய்யலாம்; ஆசைப்பட்டதை எல்லாம் வாங்கலாம்.

பணம் நிறைய இல்லாவிட்டாலும், இருக்கிறதை வைத்துக் கொண்டு, சந்தோஷங்களை அனுபவிக்க, மனம் வேண்டும்.

சிலருக்குப் பணம் நிறைய இருக்கும். அனுபவிக்க மனம் இராது. தாங்களும் செலவு செய்து சந்தோஷம் அடையமாட்டார்கள்; மற்றவர்களுக்குச் செலவு செய்யவும் மாட்டார்கள்.

பழனியப்ப மாமாவுக்கு, தாராளமாகச் செலவு செய்து, தானும் மற்றவர்களும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிற மனம் இருக்கிறது. இது உயர்ந்தது.

'ஆபூ பென் ஆடம்' (ABU BEN ADAM) என்றொரு கவிதை. அருமையான மனிதன் ஒருவனைப் பற்றிச் சொல்கிறது.

அபூ ஒருநாள் இரவு தனது வீட்டில் படுத்திருந்தான். அந்தச் சின்ன அறையில் திடிரென்று பேரொளி பரவியதை உணர்ந்து அவன் விழித்தான். மூலையில் இருந்த மேசை முன் அமர்ந்து ஒரு ஏஞ்சல் (angel - வான தேவதை) எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

'நீ என்ன எழுதுகிறாய்?' என்று அபூ தேவதையிடம் கேட்டான்.

'கடவுளை நேசிக்கிறவர்களின் பட்டியல் (list) எழுதுகிறேன்' என்று தேவதை சொன்னது.

'அதில் என் பெயர் இருக்கிறதா?' என்று அவன் கேட்டான்.

'இல்லை' என்றது தேவதை.

'பரவாயில்லை. அண்டை அயலில் உள்ள மனிதர்களை நேசிப்பவன் அபூ என்று கடைசியில் எழுதிக்கொள்' என்று கேட்டுக் கொண்டான் அபூ.

தேவதையும் அப்படியே எழுதிக் கொண்டபின் மறைந்து போனது.

அடுத்த நாள் இரவிலும் அபூ கண்விழித்துப் பார்க்கையில், அதே தேவதை மேசை முன் அமர்ந்திருப்பதைக் கண்டான்

'இன்று என்ன எழுதுகிறாய்?' என்று கேட்டான்.

'கடவுளால் நேசிக்கப்படுகிறவர்களின் பட்டியலை எழுதுகிறேன்' என்று தேவதை தெரிவித்தது.

'இதிலாவது என் பெயர் இருக்கிறதா?' என்று அபூ கேட்டான்.

'இதில் முதலாவதாக உன் பெயர் தான் இருக்கிறது' என்று தேவதை கூறியது.

கோயிலுக்குப் போகாமல், கடவுளை நினைக்காமல், சக மனிதர்களை நேசித்து அன்பான காரியங்களைச் செய்து கொண்டிருந்தாலே அன்புக்குப் பாத்திரமானவர்கள் ஆவார்கள்.

பக்தி பண்ணுகிறேன், பூசைகள் செய்கிறேன், சாமிகளைக் கும்பிடுகிறேன் என்று பெயர் பண்ணி, வெளிச்சம் போட்டு, பணம் செலவு செய்துகொண்டு - ஆனால், மற்ற மனிதர்களிடம் பிரியமாக இராது, அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்யாது, குறுகிய நோக்கத்துடன் வாழ்கிறவர்களை கடவுள் நேசிப்பதில்லை.

இது தான் இந்தக் கவிதையின் உயர்ந்த கருத்து.

'பைசைக்கிள் திருடன்' என்றொரு சினிமாப் படம். பழைய படம். இத்தாலிப் படம்.

ஒரு ஏழை மனிதன், தனது பழைய சைக்கிளை ரொம்பவும் நேசித்து வந்தான். அது திருட்டுப் போய்விட்டது. அவன் மிக வருந்தினான். இப்படிக் கதை போகும். தனது தேவைக்காக பழைய சைக்கிளை அவன் திருடினானா? அல்லது, தனது பழைய சைக்கிள் ஒரு சைக்கிள் கடையில் நிற்பதைக் கண்டு, அதை எடுத்து வரவும், திருடன் என்று பிடிபட்டு, போலீசில் அகப்பட்டு, கஷ்டப்படுகிறானா? - எனக்கு நினைவு இல்லை.

கடைசியாக, அவன் ஒரு பார்க்கில் காணப்படுவான். அவனுடைய சிறு மகனின் கையை அன்போடு இறுகப் பற்றிக்கொண்டு நடப்பான். அவனுக்கு ஏதோ சிறிது பணம் கிடைத்திருந்தது.

'Let us Live. Let us live and enjoy at least for a day' என்று தன் மகனிடம் சொல்கிறான்.

வாழ்க்கையில் எப்போதும் சிரமங்களையும், பணத்தட்டுப்பாடையும் அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள், கொஞ்சம் பணம் கிடைத்தாலும், அதை செலவு செய்து சந்தோஷமாக் இருப்போமே என்று எண்ணுவது தான் மனித இயல்பு.

சந்தோஷமாக இருக்கவேண்டும். அதுதான் முக்கிய நோக்கம்.

வாழ்க்கையில் சந்தோஷமாக இருப்பதற்கு உரிய வாய்ப்புகளும் வசதிகளும் எல்லோருக்கும் எப்பவும் கிடைத்துவிடுவது இல்லை.

நான் நலமாக இருக்கிறேன்.

நீயும் கணேசனும், அப்பா அம்மா, ஆச்சி, மற்றும் வேலு, சங்கரா, ராதா, ரேவதி எல்லோரும் நலம் தானே?

அன்பு
வ. க.

## குறிஞ்சிவேலன்

சென்னை - 14
8.1.83

அருமை நண்பர் குறிஞ்சிவேலன் அவர்களுக்கு,

26.12.82 முதல் 6.1.83 முடிய நாட்கள் மிக மனோகரமாக அமைந்திருந்தன. இனிய நாட்கள். இதம் தரும் அருமையான அனுபவங்கள். பசுமையும் குளுமையும் நிறைந்த பல இடங்களை பார்க்கும் வாய்ப்பு கிட்டியது: நண்பர்களின் பிரியமான தொடர்பும் உரையாடலும்: நல்ல புத்தகங்களைப் படித்தது: எல்லாவற்றுக்கும் மேலாக உங்களுடைய, உங்கள் குடும்பத்தினர் அனைவருடைய, அன்பும் பண்பும் நிறைந்த உபசரிப்புகள் - உள்ளத்தில் எண்ணும்தோறும் எண்ணும்தோறும், சிலிர்ப்பும் நெகிழ்ச்சியும் தருபவை. உங்கள் அப்பா, அம்மா, பெரியம்மா, மனைவி அனைவருக்கும் என் நன்றியும் வணக்கமும்.

அன்பு
வ.க

சென்னை
8.9.92

அன்புமிக்க நண்பர் அவர்களுக்கு,

வணக்கம்

மொழி பெயர்ப்பாளர் சங்க அமைப்பு கூட்டம் நடைபெற்று, சங்கம் அமைக்கப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். நல்ல நோக்கம் நல்லதிட்டம். செயலில் வெற்றி பெற வாழ்த்துகிறேன். எனக்கு அழைப்பு அனுப்பியதற்காக நன்றி. இதுவரை எந்த அமைப்பிலும் - சங்கத்திலும் - நான் உறுப்பினன் ஆகச் சேர்ந்து கொண்டதே இல்லை. அதற்கெல்லாம் எனக்கு நேரமும் கிடையாது. மேலும் சங்க நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்கள் விழாக்கள் முதலியவற்றில் கலந்து கொள்ளும் ஆர்வமும் உற்சாகமும் எனக்கு வருவதில்லை. அதனாலேயே எந்த நிகழ்ச்சிக்கும் நான் போவதில்லை. போக்குவரத்து வசதிக்குறைவும் ஒரு கூடுதல் காரணம் ஆகும்.

அன்பு
வ.க

வல்லிக்கண்ணன்

சென்னை

5994

அன்புமிக்க குறிஞ்சிவேலன்,

வணக்கம்.

தங்களின் மொழியாக்கத்தில் வெளிவந்துள்ள 'தகழி' மெதுவாக படித்துக் கொண்டிருக்கிறேன். சிறப்பான விஷயங்களைக் கொண்டிருக்கிறது. மலையாளத்தின் சிறந்த படைப்புகளை தமிழாக்குவதின் மூலம் நீங்கள் போற்றுதலுக்குரிய இலக்கியபணி புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

அன்பு

வ.க

## வல்லிக்கண்ணன் கடிதங்கள்


| | | | |
|---|---|---|---|
| தி.க. சிவசங்கரனுக்கு | ... | ... | 12 |
| கே.பி. கணபதிக்கு | ... | ... | 16 |
| வண்ணதாசனுக்கு | ... | ... | 20 |
| சு. சமுத்திரத்துக்கு | ... | ... | 27 |
| எழிலமுதனுக்கு | ... | ... | 42 |
| கருமலை பழம் நீக்கு | ... | ... | 48 |
| முஸ்தபாவுக்கு | ... | ... | 49 |
| இரெத்தினசுவாமிக்கு | ... | ... | 53 |
| ஆதவனுக்கு | ... | ... | 67 |
| பாரதி சங்கருக்கு | ... | ... | 69 |
| காந்திமதி நாதனுக்கு | .... | ... | 70 |
| பசுபதிக்கு | ... | ... | 73 |
| கவித்துவனுக்கு | ... | ... | 75 |
| இராமலிங்கத்துக்கு | ... | ... | 80 |
| ரவி.கே. தாஸுக்கு | ... | ... | 92 |
| முத்துக்குமரனுக்கு | ... | ... | 93 |
| கமலவேலனுக்கு | ... | ... | 94 |
| நாகரத்தினத்துக்கு | ... | ... | 95 |
| ஏ. தர்மராஜ்க்கு | ... | ... | 102 |
| சுப்பிரமணியனுக்கு | ... | ... | 103 |
| ஸ்ரீதருக்கு | ... | ... | 104 |
| க. ராசேந்திரனுக்கு | ... | ... | 107 |
| நாகசுந்தரத்துக்கு | ... | ... | 108 |
| ந.க. துறைவனுக்கு | ... | ... | 109 |
| இளசை அருணாவுக்கு | ... | ... | 110 |
| பொதியவெற்பனுக்கு | ... | ... | 112 |
| வை. கலியாணசுந்தரத்துக்கு | | ... | 114 |
| ம.ந. ராமசாமிக்கு | ... | ... | 115 |
| குருசுவாமிக்கு | ... | ... | 116 |
| இராமகிருஷ்ணனுக்கு | ... | ... | 117 |
| டி.டி. திருமலைக்கு | ... | ... | 118 |
| திருப்பூர் கிருஷ்ணனுக்கு | ... | ... | 120 |
| சொ. சுந்தரம்பிள்ளைக்கு | | ... | 122 |
| இரா. மதிவாணனுக்கு | ... | ... | 123 |
| ரா.சு. கோமதிநாயகத்துக்கு | | ... | 124 |
| சண்முகவடிவுக்கு | ... | ... | 133 |
| ராதாவுக்கு | ... | ... | 144 |
| ரேவதிக்கு | ... | ... | 159 |
| சுப்பிரமணியனுக்கு | ... | ... | 169 |
| குறிஞ்சிவேலனுக்கு | ... | ... | 171 |

# எமது வெளியீடுகள்

தகழி மலையாள எழுத்தாளர்

தகழி சிவசங்கரபிள்ளையின் -
சிறுகதைகள், குறுநாவல், கட்டுரைகள்,
விமர்சனங்கள்.
தமிழில்: குறிஞ்சி வேலன்
(இரண்டாம் பதிப்பு) அச்சில்

பாரபாஸ் பேர்லாகர்க்விஸ்ட் (ஸ்விடிஷ்)

நோபல் பரிசு பெற்ற நாவலின் மறுபதிப்பு
தமிழில் க. நா. சு ரூ. 35/=

நுண்வெளிக் கிரகணங்கள் (நாவல்)

சு. வேணுகோபால் ரூ. 90/=

கமலாதாஸ் கதைகள்

தமிழில்: நிர்மால்யா ரூ. 50/=

மொழிபெயர்ப்பு வழிகளும் வாய்ப்புகளும்

முனைவர். நா. முகமது செரீபு ரூ. 25/=

யாவர் வீட்டிலும் சிறுகதைகள்

உதயசங்கர் (மறுபதிப்பு)

# விற்பனை உரிமை நூல்கள்

**பட்டுப்பூச்சிகள் உறங்கும் மூன்றாம் ஜாமம்**
*சிறுகதைகள் - கோணங்கி* ரூ. 40/=

**புன்னகைபுரியும் இளவரசி**
*இந்திய மொழிச் சிறுகதைகள்*
*தமிழில் சா. தேவதாஸ்* ரூ. 45/=

**தேடல்**
*வங்க மொழிச் சிறுகதைகள்*
*தமிழில்: சு. கிருஷ்ணமூர்த்தி* ரூ. 50/=

**விதி**
*நாவல்*
தேவகாந்தன் ரூ. 45/=

**பழைய பேப்பர்**
*கட்டுரைகள்*
*ஞாநி* ரூ. 25/=

**மார்க்சியம்-கிழக்கும் மேற்கும்**
*கட்டுரைகள்*
*எஸ். என். நாகராசன்* ரூ. 40/=

**தனை இழக்கும் ருசி**
*கவிதைகள்*
*பா. சத்தியமோகன்* ரூ. 20/=

**காலத்தின் குரல்**
*நாடகம்*
*கரிச்சான் குஞ்சு* ரூ. 6/=

**அழிவின் தத்துவம்**
*நவீன அறிவியல், தொழில்நுட்பம்*
*மார்க்சியக் கண்ணோட்டம்*
*எஸ்.என். நாகராசன்* ரூ. 35/=

*பிரபஞ்ச ரகசியங்கள்*
*மா. கணேசன்*

தமிழின் நவீன இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் வேர்களின் வெளியீடுகள் குறித்து வாசகர்களின் கருத்துக்களை அறிய விரும்புகிறோம்.

புத்தக வெளியீட்டில் வாசகர்களையும் பங்குதாரராக இணைய அழைக்கிறோம்.

வல்லிக்கண்ணன் சென்னை, 8-1-96.

அன்புமிக்க கவித்துவன்,

வணக்கம். உங்கள் கடிதம் 5-ம் தேதி கிடைத்தது. நலம் அறிந்து மகிழ்கிறேன். நாங்கள் அனைவரும் நலம். வாழ்க்கை பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். மனிதருக்கு ஒருமுறைதான் வாழக்கொடுத்திருக்கிறது. அதை நல்ல முறையில் வாழ்ந்து தீர்க்க வேண்டும்.

'நடந்தே கழியணும்
வழி.
கொடுத்தே தீரணும்
கடன்.
செய்தே அழியணும்
வேலை.
அழுதே ஓயணும்
துக்கம்.
வாழ்ந்தே முடியணும்
வாழ்வு.
இதுவே உலகின் நியதி.'

இது வல்லிக்கண்ணன் கவிதை.

வாழ்வதை சந்தோஷமாக வாழ வேண்டும். நல்லவனாக வாழணும். நல்லனவே செய்ய முடியாவிட்டாலும், தீங்குகள் செய்யாமல் இருக்கலாம். வாழ்க்கைப் பாதையில் அடிவைத்த போது, எனக்கு நானே சில நியதிகள் வகுத்துக்கொண்டேன். 'பொருமாதே; பொறாக்காதே' என்பதும் ஒன்று. எத்தர்களும், வல்லடி வழக்கர்களும், வன்முறையாளர்களும் சுயநலமிகளும் பெருத்த உலகில், பொருமல் இருப்பது அனுபவ சாத்தியமில்லை. உலகம் முரண்பாடுகள் மிகுந்தது. மனிதர்கள் மனிதர்களாக வாழவில்லை. வாழ விரும்புவதுமில்லை. இது தான் வேதனைக்கு உரியது.

அன்பு
வ.க.